# அஷ்ஷூறா

## கலந்தாலோசித்தல் பற்றிய
## குர்ஆனிய கோட்பாடு



கலாநிதி அஹ்மத் அல் றைஸூனி

தமிழில்
கலாநிதி பீ.எம்.எம். இர்பான் (நளீமி)

# அஷ்ஷூறா

## கலந்தாலோசித்தல் பற்றிய
## குர்ஆனிய கோட்பாடு

**கலாநிதி அஹ்மத் அல்-றைஸூனி**

தமிழில்:
கலாநிதி பீ. எம். எம். இர்பான் (நளீமி)

Al-Shura
Kalanthalosiththal patriya Qur'aniya Kotpadu

Tamil edition of
Al-Shura
The Qur'anic Principle of Consultation
by
Ahmad al-Raysuni

Translated from the Arabic by
Dr. PMM Irfan (Naleemi)

First published by
The International Institute of Islamic Thought
P.O.Box 669, Herndon, VA 20172, USA
www.iiit.org

London Office
P.O.Box 126, Richmond, Surrey TW9 2UD, UK
www.iiituk.com

ISBN 978-955-8398-25-8

2020 Reprint Published by
*Fuzin Texts*
23/3 Market Road, Dharga Town – 12090, Sri-Lanka
Layout & Cover Design by Azar Wazeer
Printed by Millennium Graphics, Maharagama.
©Abd-al-Jabbar Muhammad Zaneer -2016

# பதிப்புரை

*கலந்தாலோசித்தல் அல்லது அஷ்ஷூறா பற்றிய இந்த அறிவார்ந்த நூலை வெளியிடுவதில்* Fuzin Texts *மிக்க மகிழ்ச்சி யடைகின்றது. ஷெய்க் அஹ்மத் அல் றைஸூனி இந்த சொல் அல்லது கோட்பாடு பற்றி மிக நுணுக்கமாக ஆய்ந்து தெரிவிக்கும் கருத்துகளும் முன்வைக்கும் வாதங்களும் முஸ்லிம் உலகின் புனர்நிர்மாணத்துக்கும் சீர்திருத்தத்துக்கும் அல் ஷூறா எத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதைத் தெளிவுபடுத்து கின்றன.*

*குர்ஆனில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது அஷ்ஷூறா. அல்லாஹ் வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இதனை நடைமுறைப் படுத்தியுள்ளார்கள். அன்னாரின் தோழர்கள் இதனை முன்மாதிரி யாகக் கொண்டு செயல்பட்டு வந்தார்கள். என்றாலும், இன்றைய கால கட்டத்தில் அதன் முக்கியத்துவம் பெரிதும் உணரப்பட்டி ருப்பதாகத் தெரியவில்லை. எவ்வளவுதான் அஷ்ஷூறா குறித்து எழுதவும் பேசவும் பட்டிருந்தாலும் கூட, யதார்த்த இஸ்லாமிய வாழ்வில் அதன் பிரயோகம் எவ்வித வலுவும் அற்றதாக, பெரு மளவில் புறக்கணிப்புச் செய்யப்பட்டதாகவே அமைந்துள்ளது. இத்தகு நிலைமை, முஸ்லிம் உலக அரசியலில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதுடன், சமூக வாழ்விலும் பாதகமான விளைவு களுக்குக் கால் கோளியுள்ளது.*

*கலந்தாலோசித்தல் என்பது அனைத்து முஸ்லிம்களதும் அன்றாட நலன்களைப் பாதுகாக்கக் கூடிய ஓர் அம்சமாக அமைதல் வேண்டும். அதுவே முஸ்லிம்களது சீர்திருந்திய வாழ்வமைப் பினை நெறிப்படுத்தும் கருவியாக அமையும்.*

*அஷ்ஷூறா எனும் கோட்பாடு முஸ்லிம் சமூக வாழ்வில் எவ்வாறு அறிமுகப்படுத்தப்படலாம், நிறுவனமயப்படுத்தப்பட லாம், பிரயோகிக்கப்படலாம் முதலிய விடயங்கள் குறித்தே இந்நூல் பெரிதும் உரையாடுகின்றது. அஹ்மத் அல் றைஸூனி,*

இந்த முயற்சியில் தீட்சண்யமான புதிய நோக்குகளுடன் இதுவரை பெரிதும் உரையாடப்படாத பல அம்சங்கள் மீது வாசகர்களின் கவனத்தை ஈர்த்தெடுக்கின்றார்.

இதில் கொடுக்கப்பட்டிருக்கும் விஷய தானங்கள், எழுப்பப் பட்டிருக்கும் வாதங்கள் என்பன குறித்து வாசகர்கள் அனைவருமே ஒருமித்த கருத்து கொள்ள மாட்டார்கள். அவர்கள் இணக்கம் காணக் கூடியன சில; முரண்படக் கூடியன சில. இவை குறித்த உரையாடல்கள் இடம்பெற வேண்டும். அஷ்ஷூறாவின் எதிர் பார்ப்பும் இத்தகு கருத்துப் பரிமாற்றங்களே. எவ்வாறாயினும், இந்நூலின் கருத்துகளும், ஆராயப்பட்டுள விவகாரங்களும் சாதா ரண வாசகர்களுக்கும், இஸ்லாமிய அறிவுத் தேட்டத்தில் ஈடுபாடு கொண்டோருக்கும் நலன் பயப்பனவாகவே அமையும் என்பது எமது நம்பிக்கை.

மூல நூலின் அடிக்குறிப்புகளும், உசாத்துணை நூல்களின் பட்டியலும் தமிழ் வாசகத்தில் தவிர்க்கப்பட்டுள்ளன. அவை முழுவதும் அறபு மூல நூல்களாகவே அமைந்துள்ளமையால் மேலும் விவரங்கள் வேண்டுவோர், International Institute of Islamic Thought (IIIT) ஜோர்தான் கிளை வெளியிட்ட அறபு மூல நூலை அல்லது லண்டன் கிளை வெளியிட்ட ஆங்கில மொழிபெயர்ப் பைப் பார்க்கவும். முக்கியத்துவமும் தேவையும் கருதி இந்நூல் மீள்பிரசுரம் பெறுகின்றது.

பொருள் வளமும் மொழி நயமும் குன்றாத தமிழில் இதனை எமக்கு ஆக்கித் தந்த கலாநிதி பீ.எம்.எம். இர்பான் (நளீமி) அவர்களுக்கு எமது ஆழ்ந்த நன்றிகள்.

எமது முனைவுகள் மூலம் நன்மைகளே விளைய வல்ல அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக.

அப்த்-அல் ஜப்பார் முஹம்மத் ஸனீர்

*மார்ச் 2020*

Fuzin Texts
23/3, Market Road, Dharga Town - 12090
Sri Lanka.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | i |
| 1. இஸ்லாமிய வாழ்விலும் கட்டுமானப் பணியிலும் அஷ்ஷூறா | 01 |
| - சட்ட வசனங்களுக்கும் நடைமுறைத் தேவைகளுக்கும் மத்தியில் ஷூறாவின் முக்கியத்துவம் | 03 |
| - ஷூறாவின் தொழிற்பாடுகளும் நோக்கங்களும் | 40 |
| 2. ஷூறா செயற்பாட்டின் அடிப்படைப் பிரச்சினைகள் | 65 |
| - ஆலோசனை கேட்கத் தகுதியுடையோர் யாவர்? | 69 |
| - ஷூறா சபைகளில் அங்கம் வகிப்போரது பண்புகளும் அவர்களைத் தெரிவுசெய்யும் முறையும் | 89 |
| - ஷூறாவின் கட்டுப்படுத்தும் இயல்பும் பெரும்பான்மை விவகாரமும் | 103 |
| 3. நபியவர்கள் காலம் தொட்டு வரலாறு நெடுகிலும் இஸ்லாமிய ஷூறா | 147 |
| - ஆரம்ப கால இஸ்லாமிய ஷூறா அனுபவமும் பாடங்களும் | 151 |
| - வரலாற்றில் தொடரும் ஷூறா | 175 |
| 4. சமகாலத்தில் ஷூறா - அதனைக் கட்டியெழுப்புவது எவ்வாறு? அதன் மீது கட்டியெழுப்புவது எவ்வாறு? | 189 |
| - மீள்கட்டுமானத்தையும் முழுமைப்படுத்தலையும் நோக்கி | 191 |
| - சீர்திருத்த - கட்டுமானக் களத்தில் அஷ்ஷூறா | 231 |
| 5. முடிவுரை | 263 |
| - ஷூறாவின் மூலமாக மட்டுமல்ல... | 265 |

**வாசகர் கடன்**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிடப் படும் போதெல்லாம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் (அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அவர் மீது அருளப்படுவதாக) எனவும், அண்ணலாரின் தோழர்கள் யாரும் குறிப்பிடப்படும்போது ரழி யல்லாஹு அன்ஹு (அன்ஹா, அன்ஹும்) (அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக) எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் தவிர்ந்த ஏனைய நபிமார்கள் குறிப்பிடப்படும்போது அலைஹிஸ்ஸலாம் (அவர் மீது அல்லாஹ் நல்லருள்பாலிப்பானாக) எனவும் கூற வேண்டுவது.

# முன்னுரை

அஷ்-ஷூறா (ஆலோசனை) என்ற செயற்பாடு தொடர்பாக கடந்த சில தசாப்தங்களில் இஸ்லாமிய கல்வி-கலாசாரத் துறை நூற்றுக்கணக்கான நூல்களையும் கட்டுரைகளையும் கண்டிருக் கிறது. அந்த வகையில்- இத்தலைப்பு தொடர்பாக இன்னும் கூறக் கூடியதாக என்னதான் எஞ்சியிருக்க முடியும் எனச் சிலர் புருவம் உயர்த்தக் கூடும். அத்தகைய வினாவுக்குத் தலை சாய்த்து நான் வழங்கும் பதில் இதுதான்: ஷூறா தொடர்பாக சொல்லப்பட வேண்டிய விடயங்கள் இன்னும் பல உண்டு. அவற்றுள் சில அடிப்படையானவை; மற்றும் சில உப நிலையில் உள்ளவை. சில விடயங்கள் கல்வி மற்றும் கோட்பாடு சார்ந்தவை; வேறு சில விடயங்கள் செயன்முறை மற்றும் பிரயோகம் சார்ந்தவை.

நிலை இவ்வாறிருக்க- இத்தலைப்பு தொடர்பாக கூறியது கூறலைத் தவிர்ப்பதில் கவனம் செலுத்தியவாறே புதிய -பயனுள்ள அம்சங்களை முனைப்புறுத்தவும் முயன்றுள்ளேன். ஷூறா விவ காரம் தொடர்பான புதிய பிரச்சினைகள், புதிய பரிமாணங்கள், மற்றும் இதுவரை கவனயீர்ப்புப் பெறாத பக்கங்களை இந்த ஆய்வு பிரதானமாக எடுத்தாள்கிறது. இவ்வகைகளுள் அகப்படாத அனைத்து அம்சங்களையும் புறமொதுக்கியுள்ளேன். புதிய பிரச் சினை குறித்து கலந்துரையாடுவதற்கு அடிப்படையாக அவை அமையும் பட்சத்தில் அல்லது அவசியமான சில திருத்தங்களையும் விளக்கங்களையும் வழங்க வேண்டிய தேவை ஏற்படும் பட்சத்தில்

மாத்திரம் சுருக்கமான நினைவூட்டலாக அவை பற்றிய குறிப்பு களைத் தந்திருக்கிறேன்.

இந்த வகையில்தான், வரைவிலக்கணங்கள் தொடர்பாகவோ, கலைச்சொற்களின் மொழியியல் பகுப்பாய்வு தொடர்பாகவோ, தன்னளவில் தெளிவு கொண்ட அம்சங்கள் தொடர்பாகவோ அதிக நேரம் செலவிடுவதை தவிர்த்துள்ளேன். அவசியமான எல் லைகள் என நான் கருதுவதற்கு அப்பால் நீண்ட அறிமுகங்களிலும் வியாக்கியானங்களிலும் ஈடுபடாமலும் தவிர்ந்துள்ளேன்.

இந் நூலின் தலைப்பு சுட்டுகின்ற விவகாரம் தொடர்பாகவே எனது இப்போதைய கவனம் குவிந்திருக்கிறது. அத்தோடு இணைந்த வகையில் ஷூறா நடைமுறையை ஊக்குவிக்கக் கூடியதும் சர்வதேச இஸ்லாமிய சமுகத்தைக் கட்டியெழுப்பும் முனைவுகளுக்கு உதவக் கூடியதுமான சில சமகால விவகாரங்கள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளேன். ஷூறா செயன்முறையை உறக்க நிலையிலிருந்து செயல்திறனான நிலைக்கு -மந்த நிலை யிலிருந்து செயலூக்க நிலைக்கு- எதிர்மறை நிலையிலிருந்து உடன் பாடான நிலைக்கு.. சார்பு மற்றும் அடிபணிதல் நிலையிலிருந்து புத்தாக்க நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதே எனது முழு எதிர்பார்ப்புமாக இருந்து வந்திருக்கிறது.

இவ்வாய்வு நம்பகமான மூலாதாரங்களின் மீது கட்டமைவதை உறுதி செய்வது எனது மற்றோர் அக்கறையாக அமைந்திருந்தது. இதனை எழுதும்போது பல அல்-குர்ஆன் வசனங்களையும், நபியவர்களது வாழ்வியல் நிகழ்வுகளையும், நேர்வழி நடந்த கலீபாக்களின் முன்மாதிரிகளையும் -மூலாதார அடிப்படையிலான ஆய்வு முறையையும் சட்ட விதிகளையும் செறிவாகப் பின்பற்றி- ஆய்ந்தறியக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயம். அதற்கு கைமேல் பலனும் கிடைத்தது.

அறிவார்ந்த தளத்திலும், செயற்பாட்டுத் தளத்திலும் ஷூறா விவகாரத்தை ஒருசேர முன்தள்ளுவதற்கு இவ்வாய்வு -பொது வாகவே- யத்தனித்திருக்கிறது.

அறிவார்ந்த தளத்தில், ஷூறா தொடர்பாக -குறிப்பாக நவீன காலத்தில்- வெளியிடப்பட்டுள்ள பல எழுத்தாக்கங்களுக்கு தரமும் உண்மைத் தன்மையுமும் கொண்ட புதிய சேர்மானங்களை வழங்க அது முயன்றிருக்கிறது. ஷூறா தொடர்பாக -அல்லது இஸ்லாமிய சட்டகத்தினுள் அதன் அந்தஸ்து, தொழிற்பாடு என்பவற்றுடன் தொடர்பாக- முன்னரை விட முழுமையும் ஒத்திசைவும் கொண்ட பிம்பமொன்றை வழங்கும் வகையில் பல துணை அம்சங்களையும் கிளைப் பிரச்சினைகளையும் விளக்கவும் திருத்திய மைக்கவும் கூட அது உழைத்திருக்கிறது.

செயற்பாட்டுத் தளத்தைப் பொறுத்தவரை, இவ்வாய்வு படிப் படியாக அத்திசை வழியாக நகர்ந்து இறுதியில் சில திடமான வடிவ மாதிரிகளிலும் பொறிமுறைகளிலும் சென்று முடிகிறது. இவ்வடிவ மாதிரிகளுக்கும் பொறிமுறைகளுக்கும் ஊடாக சீர் திருத்த முனைவுகளை வலுப்படுத்த ஷூறா செயற்பாட்டினால் முடியுமான நிலையும் தோன்றுகிறது. விளைவாக- சுயகௌரவம், முன்னோடிப் பண்பு, தூதிலும் பணியிலுமான தன்னம்பிக்கை என்பவற்றுடன் இஸ்லாமிய சமூகம் சர்வதேச ரீதியாக மீள்-எழுச்சி பெறும் சாத்தியம் தோன்றுகிறது.

## அத்தியாயம் ஒன்று.
## இஸ்லாமிய வாழ்வில் ஷூறா பெறும் இடம்

இந்த அத்தியாயத்தின் முதல் பகுதி 'இஸ்லாமிய சட்ட வசனங் களுக்கும் நடை முறைத் தேவைகளுக்கும் மத்தியில் ஷூறாவின் முக்கியத்துவம்' குறித்து கவனம் செலுத்துகிறது. இம்முதல் பகுதி யின் முன் அரைப் பாகம் ஷூறா என்ற தலைப்பு தொடர்பாக அல்-குர்ஆன் மற்றும் நபித்துவ நடைமுறை என்பவற்றிலிருந்து பெறப்பட்ட வசனங்கள் (நுஸூஸ்) மீது கவனக் குவிப்பு செய்கிறது. ஆதமின் படைப்பு பற்றியும் பூமியில் அவரது வழித்தோன்றல் களின் எதிர்காலம் பற்றியும் அல்லாஹ் தனது வானவருடன் ஆரம்பித்த கருத்துப் பரிமாற்றம் பற்றி விவரிக்கும் அல்-குர்ஆன் வசனங்களும் இவற்றுள் அடங்கும். இப்பரிமாற்றமும் ஒரு

வகையான ஷூறா செயற்பாடே என பிரபல அறிஞர் முஹம்மத் அல்-தாஹிர் பின் ஆஷூர் கருதுகிறார். வானவர்களை கௌர விக்கவும் அறிவூட்டவும் சமநிலையொன்றை ஊக்குவிக்கவும் இச்செயற்பாட்டை மேற்கொண்டதாக அவர் குறிப்பிடுகிறார். தனிப்பட்ட வாழ்வில் ஷூறாவுக்கான அடிப்படையை ஸ்தாபிக்கும் அல்-குர்ஆன் வசனங்களும் இப்பாகத்தினுள் அடங்குகின்றன.

அந்த வகையில், கணவன்-மனைவிக்கிடையில்.. பெற்றோர்-பிள்ளை களுக்கிடையில் மட்டுமன்றி, மணமுறிவு அல்லது விவா கரத்தின் போது மேற்கொள்ளப்படும் ஷூறா செயற்பாடுகளும் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன. இப்பகுதியின் பின் அரைப் பாகம் ஷூறாவின் பரிபூரணத் தன்மையை, அதாவது அது ஆன்மீகம் -சடவாதம்.. தனிப்பட்ட வாழ்வு-கூட்டு வாழ்வு முதலிய அனைத் துடனும் தொடர்புடையது என்பதை எடுத்துக்காட்ட முயல்கிறது.

இதே அத்தியாயத்தின் இரண்டாம் பகுதியிலும் ஷூறாவின் முக்கியத்துவமும் பரிபூரணத் தன்மையும் எடுத்துக் காட்டப்பட் டுள்ளன. ஷூறாவின் நோக்கங்களையும் பயன்களையும் தெளிவு படுத்துவதற்காக இப்பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கங் களும் பயன்களும் குறிப்பிட்ட இந்தப் பிரச்சினையிலோ அந்தப் பிரச்சினையிலோ மிகச் சரியான கருத்தை எட்டுவதற்கு உதவும் என்பதற்காக மட்டும் இங்கு குறிக்கப் படவில்லை. உண்மையில், ஷூறா செயன்முறையின் மூலமாக எட்டப்பட முடியுமான பத்துக்குக் குறையாத நோக்கங்களும் பயன்களும் இப்பகுதியில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

## அத்தியாயம் இரண்டு:
## ஷூறா செயன்முறையின் அடிப்படையான அம்சங்கள்.

மூன்று கருப்பொருள்களின் பின்புலத்தில் ஷூறா தொடர்பான அம்சங்கள் இங்கு விவாதிக்கப்படுகின்றன. முதலாவது கருப் பொருள், பொது விவகாரங்களுக்கான ஷூறா சம்பந்தப்பட்டது. அத்தகைய ஷூறாவில் ஈடுபட வேண்டியவர் யார்? யாருக்கு அது குறிப்பாக்கப்படுகிறது? இக்கேள்விகளுக்கு நான் முன்வைக்கும்

பதிலானது பொதுமையையும் முழுமை தழுவிய நிலையையும் ஆசித்து நிற்கின்ற இந்த ஆய்வின் முழு மொத்த உந்து விசையுடன் இயைந்து செல்கிறது. முழுமை தழுவிய நிலையும் பொதுமைப் பண்பும் ஷூறா பற்றி விபரிக்கின்ற பாரம்பரிய இஸ்லாமிய வசனங்களில் வெளிப்படுகின்ற கூறுகளாக இருப்பதே இதற்குக் காரணம். அவ்வாறே ஷூறா என்பது பரந்த, மிகப் பொதுமையான பிரயோகம் கொண்டதாகவே கருதப்படுகிறது.

ஷூறா செயற்பாட்டை மேற்கொள்வது கஷ்டமான அல்லது அசாத்தியமான நிலை காணப்படும் போது, அல்லது தேவையான ஆலோசனைச் செயற்பாட்டில் ஒருவரோ பலரோ பிறருக்குப் பகரமாக ஈடுபட்டிருக்கும் நிலை காணப்படும்போது, அல்லது குறித்த பிரச்சினைகள் அவற்றின் துறை சார்ந்த அறிஞர்களால் மாத்திரம் ஆலோசனை வழங்க முடியுமானவையாக காணப்படும் போது மட்டுமே ஷூறாவின் மிகப் பொதுமையான பிரயோக நிலையிலிருந்து விலக்களிக்கப்பட முடியும். 'அனைத்தும் தழுவிய நிலை மற்றும் பொதுமைப் பண்பு' ஆகிய இதே கொள்கையின் ஒளியிலும், ஆலோசனையை வேண்டி நிற்கும் சூழ்நிலைகளில் ஆணும் பெண்ணும் சமமானவர்கள் என்ற உண்மையின் ஒளியிலும் 'பெண்ணும் ஆலோசனையும்' என்ற தலைப்பையும் இப்பகுதி எடுத்தாய்ந்துள்ளது.

இந்த அத்தியாயத்தின் இரண்டாம் பகுதி ஆலோசனை சபையின் அங்கத்துவம் குறித்து ஆராய்கிறது. குறிப்பாக தேசிய அரசாங்க மட்டத்திலும் அதன் குறிப்பிட்ட அதிகார வரம்புப் பகுதிகளிலும் கவனம் செலுத்தும் உரிமை கொண்டோர் பற்றி அது பேசுகிறது. அவ்வாறு சிரேஷ்ட ஆலோசகர்களாக இருக்கத் தக்கவர்கள் யாவர்? அவர்கள் வெளிப்படுத்த வேண்டிய பண்புகள் எவை? அவர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட வேண்டும்?..

அத்தகைய ஆலோசகர்களிடம் காணப்பட வேண்டிய பண்புகள் பற்றி அறிஞர்கள் கூறியிருப்பவை குறித்த கண்ணோட்டம் பின்வரும் மூன்று பண்புகளை எடுத்துக் காட்டுகிறது: நேர்மை, அறிவு, அனுபவம்.

ஆலோசகர்கள் தெரிவு செய்யப்படும் முறைமையைப் பொறுத்த வரை, தேர்தல் மற்றும் நியமனம் என இரு பிரதான வழிமுறைகள் காணப்படுகின்றன. ஒவ்வொன்றும் அதற்கே உரிய தனித்துவமான பண்புகளாலும் மாறா வடிவங்களாலும் அடையாளப் படுத்தப் படுகின்றன. இவ்விரு முறைமைகளும் ஒன்றிணைக்கப்பட முடி யும் எனவும், அந்நிலையில் தேர்தல் முறைக்கே முதன்மை இடம் வழங்கப்பட வேண்டும் எனவும் அல்-குர்ஆன், ஸுன்னா மற்றும் அவற்றின் விளக்கவுரைகள் சுட்டிக் காட்டுகின்றன.

ஷூறாவின் முடிவு கட்டாயம் பின்பற்றப்பட வேண்டியதா? அல்லது அது வெறும் அறிவுறுத்தல் மட்டும்தானா?.. என்பதை இந்த அத்தியாயத்தின் மூன்றாம் பகுதி ஆராய்கிறது. இக்கேள்வி யானது இயல்பாகவும் தவிர்க்க முடியாமலும் மற்றொரு கேள் விக்கும் இட்டுச் செல்கிறது: ஆலோசனை சபைகளின் பெரும் பான்மை அபிப்பிராயத்தையும், பெரும்பான்மையினரது ஆதர வைப் பெற்ற ஷூறா முடிவுகளையும் நாம் எவ்வாறு கையாளப் போகிறோம்?.. என்பதே அந்தக் கேள்வி.

இவ்விவகாரம் முஸ்லிம் அறிஞர்களுக்கும் சிந்தனையாளர் களுக்கும் எழுத்தாளர்களுக்கும் மத்தியில் உண்டுபண்ணியிருக் கும் விவாதங்களையும் முரண்பாடுகளையும் கருத்தில் கொண்டு, அதனை சற்று நீண்ட உரையாடலுக்கு உட்படுத்தியுள்ளேன். எதிரெதிர் கண்ணோட்டங்களுக்குச் சார்பாகவும், எதிராகவும் உள்ள சான்றுகளையும் இதன்போது முன்வைத்துள்ளேன். இச்சான்றுகள் புனித அல்-குர்ஆன், தூதர் (ஸல்) அவர்களது வாழ்வியல், நேர்வழி நடந்த ஃகலீபாக்களின் முன்மாதிரிகள் என்பவற்றிலிருந்து மட்டு மன்றி, இஸ்லாமிய நியாயவியல் அடிப்படைகளை ஆய்வதற்காக தம்மையே அர்ப்பணித்த முஸ்லிம் நியாயவியல் அறிஞர்களாலும் புலமையாளர்களாலும் ஹதீஸ் துறை விற்பன்னர்களாலும் இடப் பட்ட அடிப்படைக் கொள்கைகளிலிருந்தும் பெறப்பட்டவை.

***அத்தியாயம் மூன்று:***

***ஸ்தாபகக் காலம்தொட்டு வரலாறு நெடுகிலும் இஸ்லாமிய ஷூறா.***

*இந்த அத்தியாயத்தின் முதல் பகுதி இஸ்லாமிய சமூகத்தின் ஆரம்ப கால ஷூறா அனுபவங்களை அலசுகிறது. அதாவது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்திலும், நேர்வழி நடந்த ஃகலீபாக்கள் காலத்திலும் ஷூறா நடைமுறை எவ்வாறு அமைந்திருந்தது என்பதை இப்பகுதி ஆராய்கிறது. இவ்விரு அடிப்படைக் கட்டுமானக் காலங்களையும் பரிசோதனைக்குட் படுத்தி அத்தகைய ஆரம்பகால ஷூறா அனுபவங்களையும், இன்று அவை நமக்குத் தர முடியுமான பாடங்களையும், அந்த அனுபவங்களின் சிறப்பம்சங்களையும் அடையாளம் காண முயன்றிருக்கிறேன். அந்த அனுபவங்கள் இன்றியமையாதவை எனினும், முஸ்லிம்களின் பிற வாழ்வியல் கூறுகளின் ஆதரவை யும் இணைப்பையும் அவை வேண்டி நிற்கின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.*

*அத்தியாயத்தின் இரண்டாம் பகுதி, நேர்வழி நடந்த ஃகலீபாக் களது காலத்தைத் தொடர்ந்து ஷூறா செயற்பாட்டில் (நடை முறைச் செயற்பாடு மற்றும் புலமைசார் கொள்கை வகுப்புச் செயற்பாடு ஆகிய இரு தளங்களும் உள்ளடங்கலாக) நிகழ்ந்த மாற்றங்கள் பற்றிய கண்ணோட்டத்தை வழங்குகிறது. இவ்விரு தளங்கள் பற்றிய பரிசோதனையானது அக்காலத்து சமூக வாழ்வில் ஷூறாவின் அந்தஸ்து குறிப்பிடத்தக்களவு பின்னடைவு கண்டி ருந்தமையை விளக்குகிறது. இப்பின்னடைவுக்கு பல அம்சங்கள் காரணமாக இருந்தன. எனினும் ஷூறா செயற்பாடானது -புற நடையான சில சந்தர்பங்களைத் தவிர- எவ்வித அமைப்பாக்கமோ நிறுவன ஒழுங்கோ இன்றி இருந்ததே இதற்கான பிரதான காரண மாக அமைந்தது எனலாம்.*

இஸ்லாமிய சமூகமும் இஸ்லாமிய அரசும் -அனுகூலமாகவும் பிரதிகூலமாகவும்- கண்ட பாரிய மாற்றங்கள், ஒழுங்கமைக்கப் பட்ட செயற்திட்டங்களையும் நிறுவனங்களையும் அமைப்பு களை யும் -ஏறத்தாழ- அனைத்து இஸ்லாமிய வாழ்வுப் பரப்பிலும் உரு வாக்க வேண்டிய கட்டாய நிலையை அப்போது ஏற்படுத்தியிருந்தன.

## அத்தியாயம் நான்கு:
## சமகாலத்தில் ஷூறா – அதனைக் கட்டியெழுப்புவது எவ்வாறு? அதன் மீது கட்டியெழுப்புவது எவ்வாறு?

இந்த அத்தியாயம் தனது தொடக்கப் புள்ளியாக வரலாற்று அனுபவத்திலிருந்து சேகரிக்க முடியுமான பாடங்களை -அவற்றின் குறைகளோடும் நிறைகளோடும்- எடுத்துக் கொள்கிறது. ஷூறா செயற்பாட்டை அதன் கண்ணியமான அந்தஸ்துக்கு மீளக் கொண்டு வருவதும், சித்தாந்த ரீதியாகவும் அமைப்பாக்க ரீதியாகவும் அதனை மீளக் கட்டியெழுப்புவதுமே இதன் நோக்கம். அத்தகைய மீள் கட்டுமானம் ஷூறா செயற்பரப்பில் ஏலவே விடப்பட்ட தவறை நிவர்த்தி செய்யும் பொறுப்பை நம்மிடம் வேண்டி நிற்கி றது என்பது இங்கு எனது முன்மொழிவாகும். நிறுவன ரீதியான வெற்றிடம் என அடையாளம் காணப்படுகின்ற இக்குறைபாடு ஷூறா செயற்பாட்டை ஒழுங்குபடுத்தவும் நிறுவன மயப்படுத்த வும் உழைப்பதனூடாகவே நிவர்த்திக்கப்பட வேண்டும்.

இவ்விலக்கை சாத்தியப் படுத்துவதற்காக இந்த அத்தியாயத்தின் முதல் பகுதி நான்கு சட்டக் கொள்கைகளை முன்வைக்கிறது. இக்கொள்கைகள் போதியளவு இஸ்லாமிய சட்டவசனங்களால் பலம் பெற்றிருக்கும் அதேவேளை, மனித வாழ்வின் புதிய மாற்றங்களுடன் தொடர்புடைய விவகாரங்கள் மீது -ஏறத்தாழ- பிரயோகிக்கத் தக்கனவாகவும் உள்ளன. அவையாவன:

1. மக்களது புதிய வகைக் குற்றங்கள் புதிய வகைத் தீர்ப்புகளை கட்டாயப்படுத்தும்.
2. தீமைக்கு இட்டுச்செல்லும் வழிகளை அடைத்தல் (ஸத்து அல்-தராயிஇ).

3. திறந்த நிலை நலன்கள் (அல்-மஸாலிஹ் அல்-முர்ஸலா).

4. நலனும் பயனும் உள்ளவற்றை பிறரிடமிருந்து இரவல் பெறல்.

இந்த அத்தியாயத்தின் இரண்டாம் பகுதி முதல் பகுதியினதும் அதில் குறிப்பிடப்பட்ட நான்கு கொள்கைகளதும் இயல்பான தொடர்ச்சியாகும். அதிலும் குறிப்பாக, 'பயனுள்ளவற்றை பிறரிடமிருந்து பெறல்' என்ற நான்காவது கொள்கைக்கு இங்கு விசேட முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. தனி நபர்கள், குழுக்கள், நிறுவனங்கள் முதலிய எல்லா மட்டங்களிலும் சீர்திருத்தத்தையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்துவதற்கான வினைத்திறன் மிக்க கருவியாக ஷூறா அமைய முடியுமான பகுதிகளிலிருந்தும் அணுகு முறைகளிலிருந்தும் சில எடுத்துக்காட்டுகள் இங்கு முன்வைக்கப் பட்டுள்ளன.

'பயனுள்ளதை பிறரிடமிருந்து கடன் பெறல்' என்ற கொள்கைக் குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவமானது நவீன ஜனநாயக ஒழுங்குகளைச் சார்ந்து நின்று அவற்றின் அனுபவங்களிலிருந்தும் முறைமைகளிலிருந்தும் கற்றுக் கொள்ளல் என்பது தொடர்பான விவாதத்துக்கு நம்மை இட்டுச் செல்கிறது. உண்மையில் மிகப் பெரும் தேவையாக உள்ள இந்நடைமுறையின் சட்டபூர்வத் தன்மையை நிரூபிக்க நான் பெருமுயற்சி செய்திருக்கிறேன். இத்தகைய பெறுகையானது இயல்பான நடைமுறையாகவே அல் குர்ஆனும் இறைத் தூதர் (ஸல்), நேர்வழி நடந்த கலீபாக்கள், நன்னெறிச் சான்றோர் முதலானவர்களின் முன்மாதிரிகளும் சான் றுப்படுத்துகின்றன.

நமக்கு ஜனநாயகம் தேவைப்படும் அதே அளவுக்கு ஜனநாய கத்துக்கும் நாம் தேவைப்படுகிறோம் என்பதை எடுத்துக்காட்ட -அடுத்து- நான் முயன்றுள்ளேன். யதார்த்தத்தில் நமக்கு ஜனநாயகம் தேவை என்பதை விட ஜனநாயகத்துக்கு நாம் அதிகம் தேவைப் படுகிறோம் என்பதே உண்மையாகும். ஏனெனில், ஜனநாயகமானது வடிவம், அமைப்பாக்கம், நடைமுறை ஆகிய பகுதிகளில் எதனை

வழங்க முடியும் என்பது பற்றிய அறிவும் அனுபவமும் நமக்குத் தேவைப்படும் அதேவேளை, ஜனநாயகத்தின் கட்டமைப்பி னுள்ளே இருக்கும் குறைபாடுகளை நிவர்த்திக்க நாமும் அதற்குத் தேவைப் படுகிறோம்.

இறுதியாக- ஷூறாவின் முக்கியத்துவம் மற்றும் அதனை பயனுள்ள வகையில் மீளச் செயற்படுத்தும் வழிகள் தொடர்பான மேற்குறித்த கலந்துரையாடல்களை முழுமைப்படுத்தும் வகையில் 'ஷூறா மாத்திரம் போதுமானதல்ல' என்ற செய்தியோடு இந்த ஆய்வை முடித்திருக்கிறேன். ஷூறா என்பது இஸ்லாமிய சட்டத் தின் ஒரு பகுதியே என்ற வகையில் அச்சட்டத்தின் பிற பகுதிகளும் அதனுடன் ஒருங்கிணையும் அளவுக்கேற்ப அது வெற்றி பெறும்; விளைவு தரும்; தாக்குப் பிடிக்கும்; விருத்தியடையும்.

அல்லாஹ் எனது சிந்தனையிலும் உணர்விலும் இட்ட கருத்துக் கள் இவையே. இப்பணியை ஏற்றுக் கொள்ளுமாறும், அதன் குறைகளை மன்னிக்குமாறும், அதிலுள்ள தவறுகளை திருத்திக் கொள்ள வழியேற்படுத்தித் தருமாறும் அவனிடம் பிரார்த்திக் கின்றேன்; செவியேற்றுப் பதிலளிப்பவன் அவன் மட்டுமே!

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே; அவனது அருளால்தான் நற்கருமங்கள் நிறைவு பெறுகின்றன!

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே; இப்பணிக்காக நம்மை ஆற்றுப்படுத்தியவன் அவனே! அவனது அருள் இன்றேல் நாம் நேர்வழி பெற்றிருக்க மாட்டோம்!

## அத்தியாயம் ஒன்று:

# இஸ்லாமிய வாழ்விலும் கட்டுமானப் பணியிலும் அஷ்-ஷூறா

*பகுதி ஒன்று:*

# சட்ட வசனங்களுக்கும் நடைமுறைத் தேவைகளுக்கும் மத்தியில் ஷூறாவின் முக்கியத்துவம்

## ஆதிப் படைப்பிலும் ஷூறா இடம் பெற்றது.

ஷூறா பற்றியும் அதனை சான்றுப் படுத்தும் இஸ்லாமிய சட்ட வசனங்கள் பற்றியும் பேசப்படும்போது அறிஞர்களும் எழுத்தாளர்களும் அல்-குர்ஆனிலுள்ள அஷ்-ஷூறா மற்றும் ஆல இம்றான் ஆகிய அத்தியாயங்களின் இரு வசனங்கள் மீதே அனேகமாக கவனயீர்ப்புச் செய்வர். 'ஷூறா' என்ற தலைப்பை எந்த வகையில் கையாண்டாலும் இவ்விரு வசனங்களும் அங்கு மைய முக்கியத்துவம் பெற்றே தீரும் என்ற வகையில் பொருத்தமான சந்தர்ப்பத்தில் அவற்றை கலந்துரையாடலுக்கு உட்படுத்துவேன். எனினும் இங்கு நான் பின்வரும் மறை வசனத்துடன் ஆரம்பிக்கவே விரும்புகிறேன்:

*''நபியே உமது ரட்சகன் வானவர்களை நோக்கி, 'நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை ஏற்படுத்தப்போகிறேன்' என்று கூறிய போது அவர்கள், 'பூமியில் விஷமம் புரிந்து இரத்தம் சிந்தச் செய்யக் கூடியவரையா அதில் ஏற்படுத்தப் போகிறாய்?! நாமோ உன் புகழைத் துதித்து, உன் பரிசுத்தத்தைப் போற்றியவர்களாக இருக்கிறோம் அல்லவா!' என்றனர். அதற்கவன், 'நீங்கள் அறியாத*

*வற்றை நிச்சயமாக நான் அறிவேன்' எனக் கூறினான். பின்னர் ஆதமுக்கு எல்லாப் படைப்புகளதும் பெயர்களைக் கற்றுக் கொடுத்த அவன் வானவர்களுக்கும் அதனை எடுத்துக் காட்டி, 'நீங்கள் சொன்னது உண்மையாக இருந்தால் இவற்றின் பெயர் களை எனக்குக் கூறுங்கள்!' எனக் கேட்டான். அதற்கவர்கள், 'நீ மிகத் தூயவன்; நீ எமக்குக் கற்றுத் தந்தது தவிர வேறு அறிவு எங்களுக்கில்லை. நிச்சயமாக அறிவு மிகுந்தவனும் ஞானம் நிறைந்தவனும் நீயே' என்றனர்.'' (2: 30-32)*

அல்லாஹ்வுக்கும் அவனது வானவர்களுக்கும் இடையிலான இக்கருத்துப் பரிமாற்றமும் ஒரு வகையான ஷூறா செயற்பாடே என பிரபல அறிஞரான முஹம்மத் அல்-தாஹிர் பின் ஆஷூர் -இவ் வசனங்கள் தொடர்பான தனது நுணுக்கமான அவதானமொன் றில்- குறிப்பிடுகிறார். ஆதிப்படைப்பின் போதே ஷூறாவுக்கு இடமளிக்கப்பட்டது மிக ஆரம்பத்திலிருந்தே அது குறித்த வழி காட்டலை மனிதர்களுக்கு வழங்குவதற்குத்தான் என்பது அவரது விளக்கம். அவர் கூறுவதாவது:

''மனித இனம் பற்றி வானவர்களது உள்ளத்தில் இருந்த தப்பபிப்பிராயத்தை நீக்கி, அதன் உயர்வு குறித்து அறிவூட்டு வதாகவே வானவர்களை நோக்கிய அல்லாஹ்வின் உரையாடல் அமைந்திருந்தது. மட்டுமன்றி, அவர்களை கௌரவப்படுத்தும் வகையில் அவர்களுடன் ஆலோசனை செய்வதாகவும் அது அமைந்திருந்தது. ஆயினும் கௌரவிக்கும் வடிவத்தில் அறிவுறுத் தலே அங்கு வழங்கப்படுகிறது. ஆசிரியர் தனது மாணவனுக்கு கேள்வி- பதில் வடிவத்தில் பயனுள்ள தகவலொன்றை வழங்கு வது போன்றதே இதுவன்றி, தனது விவகாரங்களில் ஆலோசனை கேட்பதாக ஒருபோதும் அமையாது. இவ்வழிமுறையூடாக, ஆதமின் படைப்புக்குப் பின்னால் மறைந்திருக்கும் ஆழ்ந்த நோக்கம் எது என்பதை வானவர்களுக்குப் புரிய வைக்க அல்லாஹ் நாடினான். அல்-குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறும் விளக்கம் இதுதான்.

என்னைப் பொறுத்த வரை இந்த ஆலோசனைச் செயற்பாடானது பூமியில் முதல் மனிதனின் உருவாக்கத்துடன் இணைந்ததோர் உண்மையாக அமைந்து, அவரது சந்ததிகளின் சிந்தனையில் ஆழப்பதிய வேண்டும் என்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டதாகத் தோன்றுகிறது. ஏனெனில், ஏதாவதொன்றின் படைப்பும், ஏதாவதொரு சூழமைவும் (அல்லது கருத்தியலும்) ஏக காலத்தில் நிகழும்போது அவ்விரண்டுக்குமிடையில் ஒரு பிணைப்பு உருவாகி விடுகிறது.''

இப்னு ஆஷூர் மற்றும் அவர் சுட்டும் பிற விளக்கவுரையாளர்களது கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, ஷூறா என்பது அல்லாஹ்வால் முன்னுதாரணம் வழங்கப்பட்ட முதல் சமூக செயற்பாடாக அமைகிறது. இந்நிகழ்விலிருந்து நாம் பெறக்கூடிய மற்றுமொரு பாடமும் உள்ளது. அதாவது, முன்னதாகவே தீர்மானிக்கப்பட்ட அல்லது விடை காணப்பட்ட விவகாரங்களில் கூட ஷூறா செயற்பாடு மேற்கொள்ளப்பட முடியும் என்பதே அப்பாடம். ஏனெனில் இவ்வகையிலான ஷூறா செயற்பாட்டுக்கென்று -ஆலோசனை பெறுவதற்கும் அப்பால்- தனியான நோக்கங்களும் பயன்களும் உண்டு. அவற்றுள் சிலவற்றை இப்னு ஆஷூரும் குறிப்பிடுகின்றார். அறிவுறுத்தல், கௌரவித்தல், பிறரிடமிருந்து கற்றுப் பின்பற்றுவதற்கான முன்மாதிரியை வழங்குதல் என்பன அந்த நோக்கங்களில் சிலவாகும்.

நபி இப்றாஹீம் (அலை) அல்லாஹ்விடமிருந்து பெற்ற கட்டளையொன்று தொடர்பாக தனது புதல்வரிடம் ஆலோசனை கேட்டதும் இவ்வகையான ஷூறா செயற்பாட்டினுள் அடங்கக் கூடியதே. அல்-குர்ஆனில் நாம் அதனை பின்வருமாறு காண்கிறோம்:

*''பின்னர், அவருடன் சேர்ந்து உழைக்கும் பருவத்தை புதல்வர் அடைந்தபோது அவர் இவ்வாறு கூறினார்: என் அன்பு மகனே உன்னை அறுத்துப் பலியிடுவதாக நான் கனவில் கண்டேன். இது பற்றி நீ என்ன கருதுகிறாய்?'' (37: 102)*

இப்றாஹீம் (அலை) தனது மகனை அறுத்துப் பலியிட வேண்டும் என்பது தேவ கட்டளை ஒன்றின் மூலம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டாயிற்று. அவ்வாறிருந்தும் அவர் தனது மகனிடம் 'இது பற்றி நீ என்ன கருதுகிறாய்?' என்று கேட்கிறார். அதற்குப் பதிலளிக்கும் மகன் இப்படிச் சொல்கிறார்:

*''அன்புத் தந்தையே! உங்களுக்குக் கட்டளையிடப்பட்டதை நிறைவேற்றுங்கள்; அல்லாஹ்வின் நாட்டப்படி பொறுமை காப்பவராக என்னைக் காண்பீர்கள்.'' (37: 102)*

இது தொடர்பில் அல்-தர்தூஷீ (றஹ்) இவ்வாறு கூறுகிறார்:

''உனது எண்ணத்திலிருப்பதை நிறைவேற்றுவதற்கும் அது சரியானதே என்பதை நிரூபிப்பதற்குமான திடசங்கற்பம் ஆலோசனை கேட்பதை விட்டு உங்களை தடுக்கத் தேவையில்லை. இப்றாஹீம் (அலை) அவரது மகனை அறுத்துப் பலியிடுமாறு விவாதத்துக்கு இடமற்ற கட்டளையொன்றினூடாக அறிவுறுத்துப் பட்டதை நீங்கள் கவனிக்கவில்லையா? அவ்வாறிருந்தும் அவரது தூய ஆன்மீகக் கூருணர்ச்சியும், பிற மனிதர்களது உள்ளங்களில் அவர் பெற்றிருந்த இடமும் இவ்விடயம் குறித்து மகனிடம் ஆலோசனை பெற அவரைத் தூண்டின: ''என் அன்பு மகனே! உன்னை நான் அறுத்துப் பலியிடுவதாக கனவில் கண்டேன். அது பற்றி உனது அபிப்பிராயம் என்ன?''

இதே போன்றதொரு கருத்தைத்தான் நீதிபதி பத்ருத்தீன் பின் ஜமாஆ இவ்வாறு வெளிப்படுத்துகிறார்:

''ஷூறா என்பது நபிமார்களால் கிரமமாக பின்பற்றப்படும் நடைமுறையாக இருந்திருக்கிறது. அல்லாஹ்வின் அன்பு நண்பரான இப்றாஹீம் (அலை) தனது மகனை அறுத்துப் பலியிடும் கண்டிப்பான ஆணையைப் பெற்றிருந்த போதும் அது பற்றி தன் மகனிடம் ஆலோசனை கேட்பதை விட்டு விடவில்லை''.

தெளிவாகப் புலப்படும் விடயங்களில் கூட பிறரிடம் ஆலோசனை செய்து பழக்கப்பட்டவர்கள் தெளிவற்ற விடயங்கள் குறித்த

ஆலோசனை செய்வதை ஒரு போதும் விட்டுவிட மாட்டார்கள். ஆக- ஏலவே தீர்மானிக்கப்பட்ட விவகாரங்கள் தொடர்பில் ஆலோசனை கேட்பதே இவ்வாறு பாராட்டத்தக்க -பயனுள்ள செயற்பாடாக இருக்கும்போது, பல்வேறு முரண்பட்ட அபிப்பிரா யங்கள் நிலவுகின்ற, பன்முகத் தன்மை கொண்ட, சிக்கலான விவகாரங்களில் அது எவ்வளவு தேவையானதாகவும் அதீத முக்கியத்துவம் உடையதாகவும் இருக்க வேண்டும்!

இப்றாஹீம் (அலை) தனது புதல்வருடன் மேற்கொண்ட ஷூறா செயற்பாடானது குடும்ப அலகு மட்டத்தில் மேற்கொள்ளப்படக் கூடிய மற்றோர் ஆலோசனைச் செயற்பாட்டையும் நமது சிந்த னைக்குக் கொண்டு வருகிறது. பின்வரும் அல்-குர்ஆன் வசனங் களில் இந்த வகையிலான ஆலோசனை விவரிக்கப்பட்டுள்ளது:

*''நீங்கள் பெண்களுக்கு விவாகரத்து பெற்றுக் கொடுத்து, பின்னர் அவர்கள் தங்களது 'இத்தா' தவணையையும் பூர்த்தி செய்துவிட் டால் அவர்கள் நல்ல முறையில் பரஸ்பரம் உடன்பட்டு தங்கள் கணவர்களையே (மீண்டும்) திருமணம் செய்வதை விட்டு எவரும் தடுக்க வேண்டாம். உங்களுள் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசம் கொண்டிருப்போருக்கே இந்த உபதேசம் வழங்கப்படுகிறது. இதுவே உங்களுக்கு ஒழுக்கமும் பரிசுத்தமும் மிக்க முறையாகும். (இதனை) அல்லாஹ் அறிவான்; நீங்கள் அறிய மாட்டீர்கள்.*

*(விவாகரத்து வழங்கப்பட்ட) தாய்மார் தமது குழந்தைகளுக்கு - பாலூட்டல் முழுமைப்படுத்தப்பட வேண்டும் என முடிவு செய்யப்படும் பட்சத்தில்- இரு வருடங்கள் பூரணமாக பாலூட்ட முடியும். இதன் போது அப்பெண்களுக்குரிய உணவும் உடையும் முறைப்படி வழங்குவது குழந்தையின் தந்தையின் மீது கடமை யாகும். எந்த ஆத்மாவும் அதன் சக்தி மேல் (எந்தக் கடமைக்கும்) பணிக்கப்படுவதில்லை. ஒரு தாய் தனது குழந்தையின் பெயரா லோ அல்லது ஒரு தந்தை தனது குழந்தையின் பெயராலோ துன்புறுத்தப்படக் கூடாது. தந்தை இறந்துவிட்டால் அவருக்கு*

*வாரிசாக வருபவர் மீதும் இதே பரிபாலனம் கடமையாகும். தாய்-தந்தை இருவரும் பரஸ்பர விருப்பத்தின் மீதும் ஆலோசனையின் மீதும் பாலூட்டலை நிறுத்த விரும்பினால் அவர்கள் மீது அதனால் எந்தக் குற்றமும் இல்லை''. (2: 232-233)*

ஆலோசித்தல் என்பது பிந்திய வசனத்தில் வெளிப்படையாகவும் ('பரஸ்பர விருப்பத்தின் மீதும் ஆலோசனை மீதும்'), முந்திய வசனத்தில் உட்கிடையாகவும் ('அவர்கள் நல்ல முறையில் பரஸ்பரம் உடன்பட்டு') குறிப்பிடப்பட்டுள்ளது. இரு நிலைகளிலும் உண்மையான உடன்பாடு என்பது பரஸ்பர உரையாடலும் ஆலோசனையும் இடம்பெற்ற பிறகே எட்டப்பட முடியும். நன்மை நாட்டம், சமரசம், மதிநுட்பம், நீதி, பரஸ்பர நல்லெண்ணம் என்பவற்றின் அடிப்படையில் அது மேற்கொள்ளப்பட்டிருப்பது அவசியம்.

பிரிந்து விட்ட கணவன்-மனைவி மீண்டும் இணைந்து வாழ்வதற்கு பரஸ்பர புரிதலின் அடிப்படையில் இணங்கினால் அதனை எந்தப் பாதுகாவலரும் தடுக்க முடியாது என்பதை முதல் வசனத்திலிருந்து புரிந்து கொள்கிறோம். அதேபோல் இரு முழு ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ள பாலூட்டல் காலம் பரஸ்பர ஆலோசனை மற்றும் உடன்பாடு என்பவற்றின் பேரில் மாத்திரம் குறைக்கப்பட முடியும் என தொடர்ந்து வரும் வசனத்திலிருந்து புரிந்து கொள்கிறோம்.

வேறு வார்த்தைகளில் சொன்னால் குழந்தைகளுக்குப் பால்குடி மறக்கச் செய்யும் தீர்மானம் அதன் பெற்றோரின் ஒரு தரப்பினால் மாத்திரம் மேற்கொள்ளப்பட முடியாது. இது உணர்த்தும் பொருள் யாதெனில், ஒரு குழந்தையின் விவகாரங்களை நிர்வகித்தல் என்பது தாய்-தந்தை இருவரும் பங்கேற்க வேண்டிய உரிமையும் பொறுப்பும் ஆகும். பரஸ்பர ஆலோசனை உடன்பாடு என்பவற்றின் அடிப்படையிலேயே இதுமேற்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் மேற்கொள்ளப்படும் தெரிவுகள் -முடியுமான வரை- குழந்தையின் நலன்களை பேணுபவையாக அமையும்.

மனைவியே குழந்தையை பராமரிப்பவளாக இருக்கிறாள் என்பது குழந்தைக்கு பால்குடி மறக்கச் செய்யும் தீர்மானத்தையோ பாலூட்டும் காலத்தை நீடிக்கச் செய்யும் தீர்மானத்தையோ ஒருதலைப்பட்சமாக எடுக்கும் அதிகாரத்தை அவளுக்கு வழங்கி விடாது. கணவனின் நிலையும் அப்படித்தான். பொருள் சம்பாதிப்பவனாகவும் குடும்பத் தலைவனாகவும் அவன் இருப்பது குழந்தைகள் தொடர்பான தீர்மானங்களை தன்னிச்சையாக எடுக்கும் அதிகாரத்தை அவனுக்குத் தந்து விடாது. குழந்தையின் விவகாரங்களை நிர்வகிப்பதில் மனைவியும் அவனது பங்காளியாவாள். இதனால் இத்தகைய தீர்மானங்கள் அனைத்தும் ''பரஸ்பர ஆலோசனை மற்றும் உடன்பாடு'' என்ற அடிப்படையிலேயே வெளிவர வேண்டும்; அல்லது அல்-குர்ஆன் வேறோர் இடத்தில் கூறுவது போன்று ''நியாயமான முறையில் பரஸ்பரம் பேசி முடிவெடுங்கள்'' என்ற கட்டளையின் அடிப்படையில் எட்டப்பட வேண்டும்.

''தாய்-தந்தை இருவரும் பரஸ்பர விருப்பத்தின் மீதும் ஆலோசனையின் மீதும் பாலூட்டலை நிறுத்த விரும்பினால் அவர்கள் மீது அதனால் எந்தக் குற்றமும் இல்லை'' என்ற வசனம் தொடர்பாக இப்னு கஸீர் பின்வருமாறு கூறுகிறார்:

''அதாவது, குழந்தையின் பெற்றோர் குழந்தைக்கு நன்மை பயக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இரு வயது பூர்த்தியாக முன்னரே பால்குடி மறக்கச் செய்ய தீர்மானிப்பார்களாயின், அது குறித்து பரஸ்பரம் ஆலோசித்து உடன்பாடு கண்டும் இருப்பார்களாயின், அதற்காக அவர்கள் குற்றம் காணப்பட மாட்டார்கள்.''

ஆக- பெற்றார் இருவருள் ஒருவர் ஒருதலைப்பட்சமாக குழந்தைக்கு பால்குடி மறக்கச் செய்யும் தீர்மானத்தை எடுப்பது போதுமானதன்று என்ற முடிவுக்கு இதன்மூலம் எம்மால் வரமுடிகிறது. ஏனெனில் ஒருவர் தனது கருத்தை அடுத்தவர் மீது திணிப்பதோ அடுத்தவருடன் ஆலோசிக்காமல் தன்னிச்சையாக முடிவெடுப்பதோ ஏற்க முடியாதது. இமாம் தவ்ரீயும் பிறரும் முன்வைக்கும் கண்ணோட்டமும் இதுவே.

குழந்தையின் விவகாரங்களில் விஷேட கவனம் செலுத்துவதை வேண்டி நிற்கும் இந்த ஏற்பாடு குழந்தையை பாதுகாக்க உதவு வதுடன் அல்லாஹ்வின் கருணையையும் அன்பையும் வெளிப் படுத்துவதாயும் உள்ளது. ஏனெனில் பிள்ளை வளர்ப்புப் பணியில் பெற்றோரை அவன் தனித்தனியான பொறுப்பாளர்களாக ஆக்கி யிருப்பதுடன், அவ்விருவருக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் உச்ச பயன் அளிக்கும் அம்சங்களை நோக்கி ஆற்றுப்படுத்தியும் உள்ளான். அத்-தலாக் என்னும் அத்தியாயத்திலும் அல்லாஹ் இதனைப் பிரகடனம் செய்கிறான்:

*‘‘அவர்கள் உங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டினால் அவர் களுக்கான கூலியைக் கொடுத்து விடுங்கள். குழந்தையின் எதிர் காலம் குறித்து ஒருவரோடொருவர் நல்ல முறையில் கலந்தா லோசனையும் செய்து கொள்ளுங்கள்’’. (65: 6)*

இக்கண்ணோட்டத்தின் படி, குழந்தைகளின் கல்வி (அதாவது அதற்கான இடம், அதன் வகை, கால அளவு, அதனைத் தொடர்தல் அல்லது துண்டித்தல்..), அவர்களது ஆரோக்கியம், வசிப்பிடம், பிரயாணம், செயற்பாடுகள் (அதாவது எவற்றை அனுமதிப்பது? எவற்றை அனுமதிக்காதிருப்பது? எவற்றுக்கு உற்சாகம் அளிப்பது? எவற்றுக்கு உற்சாகம் அளிக்காதிருப்பது?), -அவசியம் ஏற்பட் டால்- அவர்களது தொழில் அல்லது திருமணத்துடன் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குவது... முதலியன தொடர்பான அனைத் துத் தீர்மானங்களும் பெற்றோருக்கிடையிலான அல்லது பெற் றோருக்கும் பிள்ளைகளுக்கும் (அவர்கள் உரிய பருவத்தை அடைந்திருக்கும் பட்சத்தில்) இடையிலான கலந்தாலோசனையை வேண்டி நிற்கின்றன. ஷூறா என்பது ஒரு வாழ்க்கை முறை என்ற வகையில், சிறுவர்களையும் அதற்குப் பழக்கப்படுத்தும் நோக் குடன் பெற்றார் அவர்களுடன் கலந்தாலோசனையில் ஈடுபட வேண்டும் எனவும் இங்கு பரிந்துரைக்கப்படுகிறது.

பெற்றோர் தங்களது பெண்பிள்ளைக்கு திருமணம் செய்து வைக்க முன்னர் குறித்த மணமகனை திருமணம் செய்வதற்கான

சம்மதத்தை அவளிடம் கேட்க வேண்டும் என பல நபிமொழிகள் வற்புறுத்துகின்றன. அத்தகையதொரு நபிமொழியை ஆயிஷா (றழி) பின்வருமாறு அறிவிக்கிறார்:

'ஒரு பெண்ணின் உறவினர் அவளுக்கு திருமணம் செய்து வைக்க முற்படும்போது, அது குறித்து அவளது அபிப்பிராயம் பெறப்பட வேண்டுமா இல்லையா?' என நபியவர்களிடம் நான் வினவினேன். அதற்கவர்கள், ''ஆம், பெறப்பட வேண்டும்!'' என பதில் அளித்தார்கள்.

ஆக- திருமணம், குடும்ப விவகாரங்கள், குழந்தை வளர்ப்பு, மோதலுக்கும் முரண்பாட்டுக்கும் ஏதுவான சூழ்நிலைகள் முதலிய அனைத்திலும் ஷூறா செயற்பாடு வேண்டப் படுகிறது. அல்லாஹ் கூறகின்றான்:

*''(கணவன், மனைவி ஆகிய) இருவரும் பிணங்கிப் பிரிந்து விடுவார்கள் என நீங்கள் அஞ்சினால், கணவனின் உறவினரி லிருந்து ஒருவரையும், மனைவியின் உறவினரிலிருந்து ஒருவரை யும் நடுவர்களாக ஆக்குங்கள்...'' (4: 35)*

இம்மறை வசனம் ஷூறா செயற்பாட்டுக்கான உட்கிடையான கட்டளையைக் கொண்டுள்ளது. ஏனெனில், இங்கு இரு நடுவர்கள் இருப்பதால், முரண்பட்ட இரு குழுக்களுக்கிடையிலான கலந்தா லோசனை மற்றும் பரஸ்பர உடன்பாடு என்பவற்றின் ஊடாகவே பிரச்சினை பற்றிய சரியான மதிப்பீடும் சாத்தியமான தீர்வும் எட்டப்பட முடியும்.

திருமணம் தொடர்பாக கலந்தாலோசனை அவசியப்படுவது போலவே மணமுறிவு தொடர்பாகவும் அது அவசியப்படுகிறது. நபியவர்கள் தனக்கும் தனது மனைவியருக்கும் இந்நடைமுறையை எடுத்துக் கொண்டதுடன், முஸ்லிம் சமூகத்திற்கான முன்மாதிரி யாகவும் அதனை அமைத்தார்கள். ஒருமுறை ஆயிஷா (றழி) பற்றி பரப்பப்பட்ட அபாண்டம் தொடர்பாக அவரே பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

*''...அல்லாஹ்விடமிருந்து வேத வெளிப்பாடு வருவது தாமத மாவதைக் கண்ட நபியவர்கள் அலீ பின் அபீ தாலிபையும் உஸாமா பின் ஸெய்தையும் அழைத்து, தமது மனைவியை விவாகரத்து செய்ய வேண்டுமா என ஆலோசனை கேட்டார்கள்.''*

அவ்வாறே- பொருளுதவி வழியில் தங்களுக்கு இன்னும் அதிகமாக வழங்கப்பட வேண்டும் என நபியவர்களது மனைவியர் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்ததால், நபியவர்களுக்கும் மனைவியருக்குமிடையில் அன்யோன்யம் குறையத் தொடங்கி யிருந்தது. எனவே, தன்னுடன் தொடர்ந்து இருப்பதா அல்லது விவாகரத்து வாங்கிக் கொள்வதா என்பது தொடர்பாக தங்கள் தாய்-தந்தையரிடம் ஆலோசனை கேட்குமாறு அன்னார் வலி யுறுத்தலானார்கள். இது தொடர்பில் அல்லாஹ் இவ்வாறு அன் னாருக்குக் கட்டளையிட்டிருந்ததாக அல்-குர்ஆன் குறிப்பிடுகிறது:

*''நபியே உமது மனைவியரிடம் கூறும்: நீங்கள் உலக வாழ்வை யும் அதன் அலங்காரத்தையும் விரும்புவதாயின் வாருங்கள்; உங்களுக்கு வேண்டிய பொருளைத் தந்து நல்ல முறையில் (விவாக) விடுதலை தருகிறேன். அவ்வாறன்றி, நீங்கள் அல்லாஹ் வையும் அவனது தூதரையும் மறுமை நாளையும் விரும்புவ தாயின், நிச்சயமாக உங்களில் நன்மை புரிபவருக்கு அல்லாஹ் மகத்தான கூலியை தயார்படுத்தி வைத்துள்ளான்.'' (33: 28-29)*

இறைத்தூதர் (ஸல்) இவ்வசனங்கள் குறிப்பிட்டுள்ள இரு தெரிவுகளையும் தமது மனைவியின் முன்னால் சமர்ப்பித்தார்கள். ஆயிஷாவிலிருந்து ஆரம்பித்த அன்னார் இவ்வாறு கூறினார்கள்: ''நீ அவசரப்பட வேண்டியதில்லை; முதலில் உனது பெற்றோரிடம் இது குறித்து ஆலோசனை கேள்!''. குறித்த நிகழ்வு தொடர்பான மற்றோர் அறிவிப்பின்படி அன்னார் இவ்வாறு கூறினார்கள்: ''(தீர்மானம் எடுக்க) அவசரப்படாமல், உன் பெற்றோருடன் இது பற்றி நீ கலந்தாலோசிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்!'' இதற்கு ஆயிஷாவின் பதில் இவ்வாறு அமைந்திருந்தது: ''உங் களைப் பற்றி நான் எனது பெற்றோருடன் ஆலோசிப்பதா?

இல்லை; அல்லாஹ்வையும் அவனது தூதரையும் மறுமை வாழ்வையுமே நான் தேர்ந்தெடுக்கிறேன்...''

### ஷூறா: தனிநபர் தளத்திலிருந்து பொதுத்தளத்திற்கு..

தனிப்பட்ட மனிதனது விவகாரங்கள், தனிமனிதனுக்கும் பிற தனிமனிதர்களுக்கும் இடையிலான விவகாரங்கள், கணவன்-மனைவி விவகாரங்கள், பெற்றார்-பிள்ளை விவகாரங்கள் முதலிய தனிப்பட்ட விவகாரங்களில் ஷூறா என்பது அத்தியவசியமான செயற்பாடு எனில், பொது விவகாரங்களிலும் அவற்றில் எழும் முக்கிய பிரச்சினைகளிலும் அது இன்னும் எவ்வளவு முக்கியத்துவம் பெறும்!

பொதுத்தளத்தில் ஷூறாவின் முக்கியத்துவம் அல்குர்ஆனின் இரு வசனங்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அவற்றுள் முதலாவது வசனம், *''தங்களது எல்லா (பொது) விவகாரங்களையும் தங்களுக்கு மத்தியிலான ஷூறா அடிப்படையில் அமைத்துக் கொள்வார்கள்''* என்பது. இது பின்வரும் வசனத் தொகுதியில் இடம் பெறுகிறது:

*''உங்களுக்குத் தரப்பட்டிருப்பதெல்லாம் உலக வாழ்வின் (தற்காலிக) இன்பங்களே. விசுவாசம் கொண்டு தங்கள் ரட்சகனையே முற்றிலும் சார்ந்திருப்பவர்களுக்கு அல்லாஹ்விடம் இருப்பது மிகச் சிறந்ததும் நிலையானதும் ஆகும். பெரும் பாவங்களையும் மானக்கேடான செயல்களையும் அவர்கள் தவிர்ந்திருப்பார்கள்; (எவர் மீதும்) கோபம் ஏற்பட்டாலும் மன்னித்து விடுவார்கள்; தங்கள் ரட்சகனின் கட்டளையை ஏற்று தொழுகையை நிலை நாட்டுவார்கள்; தங்களது (பொது) விவகாரங்களை தங்களுக்கு மத்தியிலான ஆலோசனையின் அடிப்படையில் அமைத்துக் கொள்வார்கள்; அவர்களுக்கு நாம் வழங்கிய வாழ்வாதாரத்திலிருந்து (பிறருக்காக) செலவும் செய்வார்கள்.'' (42: 36-38)*

இரண்டாவது வசனம், *''அனைத்து (பொது) விவகாரங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசிப்பீராக!''* என நபியவர்களுக்கு

அல்லாஹ் விடுத்த கட்டளையைச் சுமந்துள்ளது. பின்வரும் வச னத் தொகுதியில் இக்கட்டளை இடம்பெறுகிறது:

*''அல்லாஹ்வின் கிருபையின் காரணமாகவே நீர் அவர்களுடன் கனிவாக நடந்து கொண்டீர்; கடுகடுப்பானவராகவும் கடின சித்தம் கொண்டவராகவும் நீர் இருந்திருப்பின் உம்மிடமிருந்து அவர்கள் விரண்டோடியிருப்பர். எனவே அவர்களோடு மன்னிப்புடன் நடந்து கொள்வீராக! அவர்களுக்காக பாவமன்னிப்பு கேட்பீராக! சகல விவகாரங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய் வீராக! (அதன் பிரகாரம்) நீர் முடிவொன்றை எட்டி விட்டால், அல்லாஹ்வின் பொறுப்பில் விட்டு கருமம் ஆற்றுவீராக! நிச்சய மாக அல்லாஹ் அவ்வாறு தன்னைச் சார்ந்து நிற்போரை நேசிக் கிறான்''. (3: 159)*

மேலே முதலில் எடுத்தாளப்பட்டுள்ள வசனத் தொகுதி 'அஷ்-ஷூறா' (கலந்தாலோசனை) என பெயரிடப்பட்டுள்ள நாற் பத்து இரண்டாவது அத்தியாயமாகும். அல்-குர்ஆனின் அத்தியாயம் ஒன்றுக்கு இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளமை ஷூறாவின் முக்கி யத்துவத்தை தன்னளவில் சான்றுப்படுத்துவதுடன், இஸ்லாமிய வேத வெளிப்பாட்டில் அதன் அந்தஸ்தையும் எடுத்துக் காட்டுகிறது.

இவ்வசனத்தில், இறை விசுவாசம் கொண்ட முஸ்லிம் சமூகத் தின் அடிப்படைப் பண்புகளுடன் இணைந்த வகையில் கலந்தா லோசனைச் செயற்பாடும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறை விசுவாசத்தில் தொடங்கும் அவர்கள் அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைத்திருப்பவர்கள்; பெரும் பாவங்களையும் மானக்கேடான செயல்களையும் தவிர்ந்திருப்பவர்கள்; அல்லாஹ் வின் கட்டளைக்குப் பணிந்தவர்கள்; தொழுகையை கிரமமாக மேற்கொள்பவர்கள்; பொதுக் கரிசனைக்குரிய விவகாரங்களில் தங்களுக்கு மத்தியில் கலந்தாலோசிப்பவர்கள்; ஸகாத் வழங்குப வர்கள்; அல்லாஹ் தந்ததை பிறருக்காக செலவு செய்பவர்கள். ஆக- முஸ்லிம் சமூகம் பற்றிய இந்த விவரணத்தில், அனைத்து பொது விவகாரங்களிலும் அது தொடர்ச்சியாக கலந்தாலோசனை

செய்யும் பண்பு கொண்டது என குறிக்கப்பட்டுள்ளது. இவ்வசனம் பற்றிய விளக்கவுரையில் அல்-கன்னூஜி பின்வருமாறு எழுதுகிறார்: ''இவ்வசனம் கூறுவது யாதெனில், அவர்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு விவகாரம் தொடர்பாகவும் பிரச்சினை தொடர்பாகவும் தங்களுக்குள் கலந்தாலோசனையில் ஈடுபடுவார்கள். எனவே பிறரைப் புறமொதுக்கி தனி ஒருவரது கருத்தை மாத்திரம் கவனத்தில் எடுக்கும் நிலை இங்கு தோன்றாது''.

ஷூறா செயற்பாடானது இஸ்லாத்தின் அடிப்படைகளாகவும் இன்றியமையாத கூறுகளாகவும் நோக்கப்படுகின்ற பல பண்பு களுடன் பட்டியல் படுத்தப்பட்டுள்ளதால், அது இஸ்லாமிய நடைமுறையின் அடிப்படையான கூறொன்றாகவே கொள்ளப்பட வேண்டும் என அறிஞர்கள் கூறுவர். இந்த வகையில், அல்-ஜஸ்ஸாஸின் கூற்று இவ்வாறு அமைகிறது:

''தங்கள் ரட்சகனின் அழைப்புக்குப் பணிந்து, தொழுகையைப் பேணி, தங்களது எல்லா (பொது) விவகாரங்களையும் தங்களுக்கு மத்தியிலான கலந்தாலோசனையின் படி அமைத்து, தங்களுக்கு வழங்கப்பட்ட வாழ்வாதாரத்தை பிறருக்காக செலவு செய்து... வாழ்வோர் பற்றிய அல்லாஹ்வின் குறிப்பு ஷூறாவின் அதீத முக்கியத்துவத்திற்கு சான்றாக அமைகிறது. அனைத்துக்கும் மேலாக- அல்லாஹ் அதனை இறை விசுவாசத்தோடும் அன்றாடத் தொழுகையோடும் இணைத்துப் பேசுகின்றான். இறை விசுவாசி கள் ஷூறா செயற்பாட்டில் ஈடுபட வேண்டும் என கட்டளை இடப்பட்டிருப்பதை இது சான்றுப் படுத்துகிறது''.

ஷூறா தொடர்பான இரண்டாவது வசனத்தைப் பொறுத்த வரை, அது நபியவர்கள் ஒரு வழிகாட்டியாகவும் ஆசானாகவும் தலைவராகவும் தளபதியாகவும் இறை விசுவாசத்தை நோக்கி அழைப்பவராகவும் இருந்தார்கள் என்ற வகையில் அன்னாரை விளித்துப் பேசுகிறது. இத்தகைய பாத்திரங்கள் பிறர் மீது அன்பும் இரக்கமும் கொண்டவராகவும், அவர்களது தவறுகளை மன் னிப்பவராகவும், அவர்களிடம் ஆலோசனை கேட்பவராகவும்,

அவர்களது கருத்துகளுக்கு மதிப்பளிப்பவராகவும் இருக்குமாறு அன்னாரை வேண்டி நின்றன. மேலும், தனது தோழர்களுடன் கலந்தாலோசனை புரியுமாறு நபியவர்களுக்கு இடப்பட்ட இக் கட்டளை அன்னாரைப் போன்று தலைவர்களாக அல்லது தளபதி களாக பணி புரிவோருக்கும், இஸ்லாத்தின் பால் அழைப்போருக் கும் பொருந்தும். யதார்த்தத்தில், இப்பொறுப்புகளை வகிப்ப வர்களே -நபியவர்களை விட- இக்கட்டளைக்கு அதிகம் பொருத்த மானவர்கள் என்பது அறிஞர்களின் கருத்து; ஏனெனில் அது அவர்களுக்கே அதிகம் தேவை.

அந்த வகையில், இவ்வசனம் இஸ்லாமிய அரசுக்கும், தலை மைத்துவத்துக்கும், ஆட்சியாளர் -ஆளப்படுவோர் தொடர்புகளுக் கும் அவசியமான அடிப்படைக் கொள்கையொன்றாக நோக்கப் படுகிறது.

இவ்வசனம் தொடர்பான இப்னு அதிய்யாவின் ஆணித்தரமான கூற்று இவ்வாறு அமைந்துள்ளது:

''ஷூறா என்பது இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படைகளிலும் கண்டிப்பான கட்டளைகளிலும் ஒன்று. எனவே அறிவும் இறை யச்சமும் கொண்டோருடன் கலந்தாலோசனை செய்யாதவர் பதவி நீக்கப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இட மில்லை''.

### ஷூறா பற்றிய இஸ்லாமிய சட்டத் தீர்ப்பு:

ஷூறா என்பது இஸ்லாமிய சட்டத்தில் கட்டாயக் கடமையா அல்லது பரிந்துரைக்கப்பட்ட ஒன்றா என்ற விடயம் கலந்துரையாட அவசியமற்ற, மிகத் தெளிவான ஒன்றாகத் தோன்றலாம். குறிப்பாக, மேலே நாம் பதிவு செய்த அல்-ஜஸ்ஸாஸ் மற்றும் இப்னு அதிய்யா ஆகிய இருவரது கூற்றுகளின் ஒளியில் நின்று நோக்கும் போது அவ்வாறு தோன்ற முடியும். எனினும், குழப்ப நிலையையும், மிகைப் பொதுமையாக்கத்தையும் தவிர்க்க நாம் விரும்பினால், சில வேறுபாடுகளை ஏற்படுத்துவது அவசியம்.

''அனைத்து பொது விவகாரங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை புரியுங்கள்!'' என்ற கட்டளை பொருந்துகின்ற ஆட்சியாளர்கள், தலைவர்கள் மற்றும் அதிகாரத்தில் இருப்பவர்களைப் பொறுத்த வரையில், ஷூறா செயற்பாடு -கேள்விக்கு இடமின்றி- கட்டாயக் கடமையாகும். அனைத்துக்கும் மேலாக, இறைத்தூதர் (ஸல்) நபித்துவ அந்தஸ்தும் தனிப்பட்ட நல்லொழுக்கமும் கொண்டிருக்கும் நிலையிலேயே ஷூறா செய்யுமாறு வேண்டப் பட்டிருந்தார்கள் எனில், பிறரைப் பொறுத்த வரை அதன் அவசியத் தன்மை மிகத் தெளிவானதும் அழுத்தமானதும் ஆகும்.

நபித்தோழரான அபூ ஹுறைறா ஒருமுறை இவ்வாறு கூறினார்: ''தனது தோழர்களிடம் ஆலோசனை கேட்பதில் இறைத்தூதரை விட அதிக அக்கறை கொண்ட எவரையும் நான் கண்டதில்லை''.

எவ்வாறாயினும், பிறரது ஆலோசனையை வெகு லாவகமாக புறமொதுக்கி விடுவதற்கு இறைத்தூதரை விட தகுமானவர் வேறெவரும் இருந்ததில்லை என நாமறிவோம்; இதற்கு மறுகிடையாக, அன்னாருக்கு தோழர்களது ஆலோசனை தேவைப் பட்டதை விட அதிகமாகவே பிற ஆட்சியாளர்களுக்கும், தலைவர் களுக்கும் அது தவிர்க்க முடியாத தேவை என்பதையும் நாமறி வோம். இந்நிலையில், -சிலர் கூறுவது போன்று- பிறரது ஆலோ சனையைப் பெறுமாறு அல்லாஹ் தனது தூதருக்கு இட்ட கட் டளை அன்னாரைப் பொறுத்த வரை 'விரும்பத்தக்கது' என்ற வகையில்தான் என நாம் கொண்டால், பிறரைப் பொறுத்தவரை அது கட்டாயமானது என்ற முடிவுக்கு வருகின்றோம். அது அன்னாருக்கு கட்டாயமாக்கப்பட்டிருந்தது எனக் கொண்டால், (உண்மையில் அவ்வாறுதான் ஆக்கப்பட்டிருந்தது) பிறரைப் பொறுத்தவரை, அது இன்னும் கட்டாயமானதாகவும், கண்டிப்பான தாகவும் மாறுகிறது. இக்காரணத்தினால்தான் இப்னு அதிய்யா ஷூறா செயற்பாட்டை வெறுமனே கடமையொன்றாக வகைப் படுத்துவதுடன் போதுமாக்கிக் கொள்ளாமல், ''இஸ்லாமிய சட் டத்தின் அடிப்படைகளிலும், கண்டிப்பான கட்டளைகளிலும் ஒன்றாக'' வரிசைப்படுத்துகின்றார். மட்டுமன்றி, அறிவும்

இறையச்சமும் கொண்டோருடன் கலந்தாலோசனை செய்யாத ஆட்சியாளர் அல்லது தலைவர் அப்புறப்படுத்தப்படுவது கேள்விக் கிடமற்ற கடமை எனவும் அவர் கூறுகிறார்.

டியூனிசிய சட்ட நிபுணர் அப்துல்லாஹ் பின் அறஃபா, ஆலோ சனையில் ஈடுபடாத ஆட்சியாளர் அல்லது தலைவர் நீக்கப்பட வேண்டுமென்ற கருத்தை மறுத்துரைக்கிறார். இப்னு அதிய்யாவின் கருத்து ஏற்க முடியாதது என்றும், இதற்கு முன் எவரும் அத்தகைய கருத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும் அவர் வலியுறுத்துகிறார். மாறாக, ஓர் ஆட்சியாளர் அறிவும் இறையச்சமும் கொண்டவர் களுடன் கலந்தாலோசிக்காது இருப்பதை விட பாரிய குற்றம் இழைத்திருந்தாலும், அவர் கட்டாயம் பதவி நீக்கப்பட வேண் டியதில்லை என இஸ்லாமிய அறிஞர்கள் கருதியிருப்பதாக இப்னு அறஃபா கூறுகின்றார்.

எனினும், மற்றொரு டியூனிசிய அறிஞரான இப்னு ஆஷூர், இப்னு அறஃபாவின் கருத்தை மறுப்பதோடு, இப்னு அதிய்யாவின் கூற்றையும் திருத்தியமைக்கிறார்.

இப்னு அறஃபா ஷூறா செயற்பாட்டில் ஈடுபடாதிருத்தலை ஒருவர் ஃபாஸிக் (பாவி) என வகைப்படுத்தப் படுவதற்கு ஏதுவாக அமையும் செயல்களுடன் ஒப்பீடு செய்கிறார். ஓர் ஆட்சியாளர் ஃபாஸிக் என வகைப்படுத்தப் பட்டிருந்தால் கூட கட்டாயம் பதவி நீக்கப்பட வேண்டியதில்லை என்றிருக்கையில், 'ஃபாஸிக்' என்ற தரத்தை எட்டாத 'ஷூறா செய்யாமை' என்ற தவறுக்காக அவர் பதவி நீக்கப்படுவது எங்கனம் என்பது அவரது கருத்து.

ஆனால் இப்னு ஆஷூரின் நோக்கில் இந்த ஒப்புமை ஏற்கத் தக்கதன்று, அவர் கூறுகிறார்:

''இரண்டுக்குமிடையில் (அதாவது ஃபாஸிக் ஆக இருப்பதற் கும், ஷூறாவில் ஈடுபடாது இருப்பதற்கும் இடையில்) கனிசமான வேறுபாடுள்ளது. ஃபாஸிக் என தீர்ப்பு வழங்கப்பட்டவரது செயல் கள் அவருக்கே தீமையாக அமையும்; வேறெவரையும் அது பாதிப்பதில்லை. ஆனால் கலந்தாலோசனை செய்யாத ஒருவரது

அறியாமை, முழு முஸ்லிம் சமூகத்தின் நலன்களையும் அபாயத் துக்கு உட்படுத்தி விடும். மாலிகீ சட்ட மரபின் படி, ஷூறா என்பது கட்டாயக் கடமையாகும். மேலும், இஸ்லாமிய சட்டத் தீர்ப்புகள் பொதுவான பிரயோகங்களுக்கு உரியனவாக நோக்கப்பட வேண்டி யவை என்பதும் -தெளிவான சான்று எதுவுமின்றி- வரையறுக்கப் பட்ட பிரயோகங்களாக அவை கொள்ளப்படக் கூடாது என்பதும் அதன் நிலைப்பாடு.

அவ்வாறே, ''அவர்கள் தங்களது அனைத்து (பொது) விவகாரங் களையும் தங்களுக்கு மத்தியிலான ஆலோசனையின் அடிப்படை யில் அமைத்துக் கொள்வர்'' என்ற இறை வார்த்தைகள், சமூகம் தொடர்பான எந்த விவகாரமும் பரஸ்பர கலந்தாலோசனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமெனவும், எவரும் அதனை தனது சொந்த விவகாரம் போன்று ஆக்கிக் கொள்ளவோ, அது தொடர்பாக ஒருதலைப் பட்சமாக நடந்து கொள்ளவோ உரிமை பெற மாட்டார் எனவும் கூறுகின்றன. அக்கறை, உரிமை, மற்றும் எடுக்கப்படும் தீர்மானங்களால் ஏற்படக் கூடிய சாதக-பாதகங்கள் முதலிய அனைத்திலுமான பொதுப் பங்கேற்பு நிலையே இங்கு ஷூறாவின் அவசியப்பாட்டுக்கான அடிப்படையாக அமைகிறது.

ஏதாவ தொன்று பொதுவான பங்கேற்புக்குரியதாக அல்லது சமூகம் சார்ந்ததாக இருக்குமாயின், அதனை நிர்வகிக்கும் உரிமை யும் கூட பொதுப் பங்கேற்புக்குரியதாகவும் சமூகம் சார்ந்ததாகவும் மாறி விடும். ஆட்சியாளராக இருந்தாலும், வேறெவராக இருந் தாலும் சம்பந்தப்பட்டவர்களது ஆலோசனையை அல்லது அனு மதியைப் பெறாமல், அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. ''...ஒரு விடயத்தின் பயனோ, தீமையோ அனைவரையும் பாதிக்குமாயின் அது குறித்த கலந்தாலோசனைக்கு அனைவரும் ஒன்றிணைக்கப் படுவர்'' என் அல்-குர்துபி இதனைக் குறிப்பிடுகிறார்.

முன்னர் நாம் அவதானித்தது போல், குழந்தை என்பது தாய்-தந்தை இருவரதும் பொது அக்கறைக்குரியது என்ற வகையில்

அதனைப் பராமரிப்பது தொடர்பான பொதுவான கலந்தாலோச னை பற்றி அல்லாஹ் இரு தடவை குறிப்பிட்டுள்ளான். இருவருள் எவருக்கும் மற்றவரை விட அதிக உரிமை அதில் கிடையாது. அந்த வகையில் ஒவ்வொருவருக்கும் அடுத்தவரது உபதேசத் தையும் ஆலோசனையையும் பெறுவதும், குழந்தையைப் பாதிக் கும் அனைத்திலும் பரஸ்பர உடன்பாட்டுக்கு வருவதும் அவசியம். திருமணம் மற்றும் மண முறிவு தொடர்பிலும் நிலை இதுவே. குறித்த பிரச்சினையில் யாரெல்லாம் தொடர்புபடுகிறார்களோ... எந்தெந்தத் தரப்பினரின் உரிமைகள் பாதிப்படைகின்றனவோ... யாருக்கெல்லாம் அது தொடர்பான பொறுப்பு உள்ளதோ... அவர்கள் அனைவரும் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

மறுபுறத்தில்- குறித்த விவகாரம் தனிநபர் உரிமைகளோடும் விவகாரங்களோடும் தொடர்புபட்டிருக்கும்போது, அது தொடர் பாக பிறருடன் ஆலோசிப்பதா, இல்லையா என்ற தீர்மானம் அந்நபருடைய முடிவுக்கே விடப்படுகிறது. பிறருடன் அது குறித்து கலந்தாலோசிப்பதா, இல்லையா என்று தீர்மானிப்பதற்கும், யாருடன் கலந்தாலோசிப்பது என்பதை தீர்மானிப்பதற்கும், அது குறித்து பிறரிடம் ஆலோசனை கேட்பது கட்டாயமானதா, அல்லது வெறுமனே பரிந்துரைக்கப்படும் ஒன்றா என மதிப்பீடு செய்வ தற்கும் அவருக்கு சுதந்திரம் உண்டு. ஒவ்வொரு பிரச்சினை குறித்துமான தனித்தனியான அணுகுமுறையின் அடிப்படை யிலேயே இவ்விடயத்துக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

குறித்த விடயம் எவ்வளவு எளிமையானதாக அல்லது சிக்க லானதாக அமையும்? நிகழச் சாத்தியமான நன்மை அல்லது தீமையின் அளவு என்ன?... என்பன இதன் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், எல்லா விவகாரங் களிலும் பிறரது ஆலோசனையைக் கேட்பதானது அங்கீகரிக்கப் பட்டதாகவும், மெச்சத் தக்கதாகவும், நபியவர்களது முன்மாதிரி யைப் பின்பற்றுவதாகவுமே அமையும். வேறு வார்த்தையில் சொன்னால், அது சாதாரணமாக அலட்சியப்படுத்தி விடக் கூடிய விடயமல்ல; மாறாக, விரும்பத்தக்க நடவடிக்கை.

இதுவே ஷூறா பற்றியும், அதில் ஈடுபடுவோர் பற்றியும், பிறரது ஆலோசனையை பெறுவதன் நல் விளைவுகள் பற்றியும் சிலா கித்துப் பேசுகின்ற வசனங்களதும் கூற்றுகளதும் உள்ளடக்கமாகும். இஸ்லாமிய வழக்குமொழி ஒன்று இப்படிக் கூறுகின்றது: ''தெய் வீக வழிகாட்டலை நாடிப் பிரார்த்தித்தவர் தோல்வி காண மாட்டார்; பிறரிடம் ஆலோசனை கேட்டவர் கைசேதப்பட மாட் டார்'' (மா ஃகாப மன் இஸ்தஃகாற; வமா நதிம மன் இஸ்தஷாற).

### ஷூறாவைப் பிரயோகிக்கத்தக்க பரப்புகள்:

இப்போது நம் முன் உள்ள கேள்வி: தேவை என்ற அடிப் படையிலோ அல்லது பரிந்துரைக்கப்பட்டது என்ற அடிப்படை யிலோ அல்லது விரும்பத்தக்கது என்ற அடிப்படையிலோ ஷூறா என்ற செயற்பாடு மேற்கொள்ளப்படும் பகுதிகளும் அம்சங்களும் எவை? அவ்வாறே, ஷூறா மேற்கொள்ளப் பொருத்தமற்ற பகுதி களும் அம்சங்களும் உள்ளனவா என்ற கேள்வியும் இதனோடு இணைந்த வகையில் எழுப்பப்பட முடியும். இக்கேள்விகளுக்கான பதில், பெரும்பாலும் ஷூறாவின் முக்கியத்துவத்தையும் பரப் பெல்லையையும் தாக்கத்தையும் தெளிவாக எடுத்துக்காட்டி விடும். ஏனெனில், இந்த அடிப்படையிலேயே ஷூறா செயற் பாட்டில் ஈடுபடுவோர் தொடர்பான தீர்மானங்களும் மேற் கொள்ளப்படும்.

### 1. லோகாயத - அரசியல் துறை.

ஷூறா மிகப் பரந்தளவில் அங்கீகாரத்துக்கும் கலந்துரையாட லுக்கும் உட்படுத்தப்பட்டுள்ள பகுதி இதுவாகும். அல்-ஹாஃபிழ் இப்னு ஹஜர் கூறுகிறார்:

''எந்தெந்த விடயங்கள் கலந்தாலோசனைக்கு உரியவை என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. அல்-குர்ஆனிலோ, ஸுன்னா விலோ தெளிவான வசனம் இடம்பெறாத அனைத்து விவகாரங் களிலும் ஷூறா மேற்கொள்ளப்பட வேண்டும் என சிலர் கூறு கின்றனர். வேறு சிலரோ லோகாயத விவகாரங்களில் மட்டுமே

ஷூறா இடம்பெற வேண்டும் என்கின்றனர். வேத வெளிப் பாட்டினால் தெளிவாக வழிகாட்டப்படாத போர் விவகாரங்களில் நபியவர்கள் தமது தோழர்களிடம் ஆலோசனை கேட்கும் வழக் கத்தைக் கொண்டிருந்ததாக, அல்-தாவூதி குறிப்பிடுகிறார்''.

நீதிபதி இப்னு அதிய்யா கூறுவதாவது:

''யுத்தம், தூதுக்குழுக்கள் மற்றும் இவை போன்ற சூழ்நிலை களில் இறைத்தூதர் அவர்கள் பிறரிடம் கலந்தாலோசனை செய்திருக்கிறார்கள். ஹலால் அல்லது ஹறாம் அல்லது குறிப்பிட்ட சில குற்றங்களுக்கான தண்டனைகள் என்பவற்றைப் பொறுத்த வரை, அவை தெய்வீக வழிகாட்டல் வழங்கிய சட்டங்களாக அமைந்திருந்தன''.

பொதுவாக நோக்கும்போது, ஷூறாவுடன் தொடர்பு படுத்திப் பேசப்பட்ட மிக முக்கியமான பகுதிகளுள் இரு பகுதிகள் அரசியல் மற்றும் இராணுவப் பகுதிகளாக உள்ளன. இவ்விரு பகுதிகளும் அவற்றின் சிவில் மற்றும் இராணுவப் பரிமாணங்களை உள்ளடக் கிய வகையில் 'அரசியல் நிர்வாகம்' என்ற தலைப்பின் கீழ் ஒன்றிணைக்கப்பட முடியும். ஃகலீஃபாவை அல்லது பொதுவான அதிகாரிகளைத் தெரிவு செய்தல் தொடர்பான ஷூறா, ஆட்சி யாளர்களும் அரசியல்-இராணுவத் தலைவர்களும் தங்களது ஆலோசகர்களுடனும் உதவியாளர்களுடனும் இணைந்து திட்டங் கள் வரைதல், அவற்றை நடைமுறைப்படுத்தல், பல்வேறு அரசியல் மற்றும் யுத்த சூழ்நிலைகள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கான ஷூறா முதலிய அனைத்தையும் இப்பகுதி உள்ளடக்க முடியும். சமாதான ஒப்பந்தங்கள், உடன்பாடுகள், போர்ப் பிரகடனங்கள் முதலியவற்றின் மீதான கலந்தாலோச னையும் இதனுள் அடங்க முடியும்.

இன்னும் விரிந்த பொருளில் நோக்கினால், ஷூறா என்பது பொதுவாக லோகாயத விவகாரங்களில் பிரயோகிக்க முடியுமான ஒன்றெனக் கூற முடியும். சன்மார்க்கம், மற்றும் அதன் சட்டங்கள் தொடர்பான விவகாரங்களிலும் அது பிரயோகிக்கத்தக்கதே என

சிலர் கூறினாலும், பலர் அக்கருத்தை மறுதலிக்கின்றனர். மேலே நாம் பார்த்தது போல், அரசியல் பரப்பில் ஷூறாவைப் பிரயோகிக்க முடியும் என்பதில் பெரும்பாலும் ஒருமித்த அபிப்பிராயமே நிலவுகிறது. சிவில் மற்றும் ராணுவப் பரப்புகள் இரண்டும் இதனுள் அடங்கும். எவ்வாறிருப்பினும், இஸ்லாமிய வாழ்வின் பிற பகுதிகளிலும் ஷூறா பெறுகின்ற முக்கியத்துவம் குறித்து கவனயீர்ப்பு செய்ய தொடர்ந்து வரும் பகுதியில் முயல்கிறேன்.

## 2. பொதுமைப் படுத்தலுக்கும் குறிப்பிட்டு வரையறுத்தலுக்கும் இடையில் ஷூறா விவகாரங்கள்.

ஷூறா பற்றிய வசனங்களின் -குறிப்பாக நாம் மேலே கலந்துரையாடிய வசனங்களின்- விரிந்த பொதுத் தன்மையை உறுதிப் படுத்துவதும் விளக்குவதுமே இது தொடர்பில் செய்யப்பட வேண்டிய முதல் பணியாக இருக்கும். *''அவர்கள் தங்களது அனைத்து (பொது) விவகாரங்களையும் தங்களுக்கு மத்தியிலான ஷூறாவின் அடிப்படையில் அமைத்துக் கொள்வர்''* என்பது அவற்றில் முதல் வசனம்; *''அனைத்து (பொது) விவகாரங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை புரிவீராக!''* என்பது இரண்டாவது வசனம்.

கலந்தாலோசனையில் ஈடுபடுமாறு இறைத்தூதருக்கு இடப் பட்டுள்ள கட்டளை பொதுவானது; எவ்வகையிலும் கட்டுப்படுத் தப்படவோ, வரையறுக்கப்படவோ முடியாதது. மேலும், அவ் வாறானதொரு பொதுவான கட்டளை வரையறுக்கப்பட்ட அல்லது குறிப்பிட்ட பிரயோகத்துக்கு மாத்திரம் உரியது என நிரூபிக்கப் படாத பட்சத்தில், அது பரந்தளவிலான பிரயோகத்திற்கு உரிய தாகவே கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், குறித்ததொரு கட்டளையின் பிரயோகத் தன்மை சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் கட்டுப்படுத்தப்பட்டதாக நிரூபிக்கப்பட்டாலும், வேறு சூழ்நிலை களில் அது தொடர்ந்தும் பரந்த பிரயோகத்துக்கு உரியதாகவே கொள்ளப்பட வேண்டும்.

*ஆக, -தேவை என்ற அடிப்படையிலாயினும் சரி, பரிந்துரைக் கப்பட்டது என்ற அடிப்படையிலாயினும் சரி- ஷூறா செயற்பாடு பிரயோகிக்கப்பட முடியுமான அம்சங்கள் எல்லாப் பகுதிகளை யும், எல்லா விவகாரங்கைளயும் உள்ளடக்குகின்றன. ஷூறா பற்றிய சரியான புரிதல் இதுவே. அது முடிந்தவரை பரந்தளவில் பிரயோகிக்கப்படுவதற்கு அவசியமான புரிதலும் இதுவே. அதேவேளை இப்பரந்த தன்மை அல்லாஹ்வின் வார்த்தை களாலேயே கட்டுப்படுத்தப் பட்டதாகவும் உள்ளது. ''அல்லாஹ்வும் அவனது தூதரும் ஒரு காரியம் பற்றி தீர்ப் பளித்து விட்டால், விசு வாசம் கொண்ட எந்த ஆணுக்கோ, பெண்ணுக்கோ -அவர்களது விவகாரத்தில்- வேறு தெரிவுச் சுதந்தி ரம் இல்லை''. (33: 36)*

இந்த வகையில், அல்லாஹ்வும் அவனது தூதரும் வழங்கிய எந்த அதிகார பூர்வமான தீர்ப்பும் ஷூறாவுக்கு உட்படுத்தப்பட முடியாது; அதை விடுத்து வேறு தெரிவுக்கு ஒருவர் செல்லவும் முடியாது. ஷூறா செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் வழக்கமாக பல்வேறு தெரிவுகளையும் சாத்தியக் கூறுகளையும் தெரிவுக்குட் படுத்தி, அவற்றுள் ஏற்றமானதைச் செயற்படுத்த முனைவர். எனினும், அத்தகைய ஷூறா செயற்பாடும் தெரிவுகளும் இஸ் லாமிய சட்டம் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தீர்வு தந்திருக்கும் விடயங்களில் அனுமதிக்கப்படுவதில்லை.

### 3. திட்டவட்டமான தீர்ப்புகளைச் செயற்படுத்துதல் தொடர்பான கலந்தாலோசனை.

திட்டவட்டமாக வழங்கப்பட்ட தீர்ப்பொன்று கூட அதன் பிரயோகம், அமுலாக்கம் தொடர்பான விவகாரங்களில் ஷூறா வுக்கு இடம் தர முடியும். இந்தவகையில், குறித்த தீர்ப்பு அமுல்படுத்தப்படும் சூழ்நிலை, வழிமுறை, பிரயோகிக்க உகந்த காலம், பிரயோகத்திற்கு இடையூறாக அமையும் அம்சங்கள் முதலியவை ஷூறாவுக்கு உட்படுத்தப் படலாம். எனவே, திட்ட வட்டமான தீர்ப்பை கேள்விக்குட்படுத்தாமல், மேற்குறித்த பகுதிகள் தொடர்பில் மாத்திரம் கலந்தாலோசனை செய்வது

ஏற்புடையதாகிறது. அப்துல்லாஹ் பின் அல் அஸ்றக் இக்கருத்து தொடர்பாக கவனயீர்ப்புச் செய்கிறார். அவர் கூறுவதாவது:

''ஷூறா மேற்கொள்ள முடியுமான அம்சங்கள் இரு வகை:

1. சரியான நடவடிக்கை எதுவென்று சுயமாகத் தீர்மானிக்கச் சிரமமான லோகாயத விவகாரங்கள்.
2. சன்மார்க்க இலக்கு தெளிவாக அறியப்படாத விவகாரங்கள்; அல்லது -புறக் காரணியொன்றின் தாக்கத்தினால்- செயற் படுத்துதல் தொடர்பாக மயக்கங்கள் காணப்படல்''.

இதனுடன் தொடர்பு பட்டதே ஏலவே சுட்டிக்காட்டப்பட்ட இப்றாஹீம் நபியின் சம்பவமாகும். மகனை அறுத்துப் பலியிடுமாறு அல்லாஹ் கட்டளையிட்டதன் பிறகு, ''உனது அபிப்பிராயம் என்ன?'' என்று அவர் மகனிடம் ஆலோசனை கேட்ட சம்பவம் அது. பல வருடங்களுக்கு முன்னர் அவ்வசனங்களைக் கண்ணுற்ற போது எவ்வாறு நான் குழப்பமடைந்தேன் என்பது இன்னும் எனக்கு நினைவிருக்கிறது. இவ்வளவு தெளிவாகவும், தீர்மான கரமாகவும் வழங்கப்பட்ட இறை கட்டளைக்குப் பிறகும் நபி இப்றாஹீமால் எவ்வாறு மகனின் அபிப்பிராயத்தைக் கோர முடிந்தது என நான் ஆச்சர்யமடைந்தேன். அல்லாஹ்வின் கட் டளை பற்றி மகன் என்ன நினைக்கிறார் என்ற கேள்வியால் இப்றாஹீம் நாடிய பொருள் எதுவாக இருக்கும் என்ற கேள்வியும் எனக்கு எழுந்தது.

எனினும் இந்தக் கலந்தாலோசனை அல்லாஹ்வின் கட்ட ளையை ஏற்பது தொடர்பாக அல்லது நிராகரிப்பது தொடர்பாக எதுவும் செய்து விட முடியாது என்பதையும், குறித்த கட்டளைக்குக் கீழ்ப்படிவதா, இல்லையா என்பது தொடர்பான தீர்மானம் எடுப்பதற்குரிய செயற்பாடு அல்ல அது என்பதையும் பின்னர் புரிந்து கொண்டேன். கட்டளை நிறைவேற்றப்படும் முறை அல்லது நேரம் அல்லது இடம் பற்றிய தீர்மானம் தொடர்பாகவே பெரும்பாலும் அது எதனையும் செய்ய முடியுமாக இருந்தது.

குறித்த விடயத்தை இப்றாஹீம் (அலை) இவ்விதமாக கலந்துரை யாடலுக்குத் திறந்து விட்டதன் மூலமாக, தனது மகன் அல் லாஹ்விடம் கால அவகாசம் ஒன்றை அல்லது பாவமன்னிப்பை கோருவதற்கான சந்தர்ப்பமொன்றை வழங்க விரும்பியிருக்கலாம். அல்லது அந்த ஆணையை ரத்து செய்யுமாறு அல்லது வேறு வகையில் மாற்றியமைக்குமாறு அல்லாஹ்விடம் வேண்டுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த நாடியிருக்கலாம். அல்லாஹ்வினால் கடமை யாக்கப்பட்ட அன்றாட ஐம்பது வேளை தொழுகையை -நபி மூஸாவின் தூண்டுதலால்- இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் குறைக்கக் கோரி ஐவேளைத் தொழுகையாக மாற்றியமைத்ததை நாமறிவோம்.

இவ்வாறுதான் ஜிஹாத், நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல், ஹஜ் யாத்திரை தொடர்பான சட்டங்கள், நோன்பு, ஸகாத் விநியோக முறைமை, ஹுதூத் தண்டனைகளை நிறைவேற்றல் முதலியவை தொடர்பாக ஒருவரோடொருவர் கலந்தாலோசனை புரியவும், சுயாதீனமான (இஜ்திஹாத்) விளக்கங்களைப் பெறவும் வேண்டிய தேவை நமக்கேற்படலாம். இந்த அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் தெளிவான, திட்டவட்டமான தீர்ப்புகள் நம்மிடம் காணப்பட்ட போதிலும், அத்தீர்ப்புகளின் அமுலாக்கம் பல்வேறு சூழமைவுகளாலும் சிக்கல்களாலும் தடைகளாலும் புதிய மாற்றங் களாலும் பாதிக்கப்படலாம். இவை கலந்துரையாடல், தேடல், பல்வேறு போட்டிக் காரணிகளை எடை போடுதல், அறிவார்ந்த நிர்வகிப்பு என்பவற்றை மேற்கொள்ள வேண்டிய தேவையை நமக்கு ஏற்படுத்துகின்றன.

### 4. இஜ்திஹாத் மூலமாகப் பெறப்பட்ட, கருத்து முரண் பாட்டுக்குரிய தீர்ப்புகள் தொடர்பான கலந்தாலோசனை.

நம்மிடமுள்ள சான்றின் பல்வேறு தொடர்புகளையும் சாத்திய மான பொருள்களையும் எடை போடுதல் மற்றும் அனுமானித்தல் என்ற செயல் முறையினூடாக பெறப்பட்ட சட்டத் தீர்ப்புகள் கூட தேடலையும் கலந்துரையாடலையும் கலந்தாலோசனையையும்

வேண்டி நிற்கக் கூடியன. தெளிவான சட்ட வசனங்கள் காணப் படாத அம்சங்கள் தொடர்பிலான தீர்ப்புகள் ஷூறாவை இன்னும் அதிகமாக வேண்டி நிற்கின்ற மற்றொரு பகுதியாகும். இப் பகுதிக்குரிய தீர்ப்புகள் கியாஸ், இஸ்திஹ்ஸான், இஸ்திஸ்லாஹ் என்பவற்றின் அடியாகவே எட்டப்பட வேண்டும்.

மேலே சொன்ன அனைத்துப் பகுதிகளும் இஸ்லாமிய சட்டம் சம்பந்தப் பட்டவை. இருந்த போதிலும் அவை சுயாதீனமான இஜ்திஹாத் செயற்பாட்டில் ஈடுபட்டு, கருத்து தெரிவிக்கும் தகைமை கொண்ட நியாயவியல் அறிஞர்களுக்கிடையிலான ஷூறாவுக்கும் கலந்துரையாடலுக்கும் உட்படக் கூடியவை. நபித் தோழர்களதும், நேர்வழி நடந்த ஃகலீஃபாக்களதும் முன்மாதிரி இதனையே நமக்குக் காட்டுகிறது. யதார்த்தத்தில் இந்நடைமுறை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காட்டிய முன்மாதிரியாகும். அன்னார் ஷூறா செயற்பாட்டைத் தூண்டியது மட்டுமன்றி, தாமே அதனை செய்தும் காட்டினார்கள். அலீ பின் அபீ தாலிப் கூறியதாக, இப்னு அப்தில் பர் பின்வருமாறு அறிவிக்கின்றார்:

''அல்லாஹ்வின் தூதரே! அல்-குர்ஆனிலும் கூறப்படாத, உங்களது ஸுன்னாவிலும் காட்டப் படாத சூழ்நிலைகள் தோன்றும் போது நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?' என நான் வினவிய போது அன்னார் இவ்வாறு பதிலளித்தார்கள்: ''நல்லறிவு கொண்ட மனிதர்களை ஒன்று கூட்டி, குறித்த சூழ்நிலை பற்றிக் கலந்துரையாடுங்கள். ஒரு தனித்த நபரது கருத்தின் அடிப்படையில் மாத்திரம் உங்கள் முடிவுகளை ஆக்கிக் கொள்ளாதீர்கள்.''

தொழுகைக்காக அழைக்கும் (அதான்) முறை எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றிய இப்னு உமரின் அறிவிப்பும் இதனுடன் சம்பந்தப்பட்டதாக அமைகிறது. அதில் வருவதாவது:

''முதன் முதலில் முஸ்லிம்கள் மதீனாவுக்கு வந்த போது, தொழுகைக்காக அழைக்கும் எவரும் இல்லாததால் அதற்கான நேரம் வரும் வரை ஒன்று கூடி எதிர்பார்த்திருக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இந்நிலை குறித்து அவர்கள் ஒருநாள் கலந்துரை

யாடியபோது, ''கிறிஸ்தவர்கள் போன்று நீங்களும் ஏன் மணி யடிக்கும் முறையைப் பின்பற்றக் கூடாது?'' என ஒருவர் கருத்து தெரிவித்தார். அதற்கு மற்றொருவர், ''யூதர்கள் செய்வது போன்று, சங்கு ஊதும் முறையை நீங்கள் ஏன் பின்பற்றக் கூடாது?'' என கேள்வி எழுப்பினார். அப்போது உமர், ''ஏன் ஒரு மனிதரை அனுப்பி தொழுகைக்காக அழைப்பு விடுக்கக் கூடாது?'' என வினவினார். உமரின் இந்த ஆலோசனையைச் செவிமடுத்த இறைத்தூதர் (ஸல்) பிலாலை நோக்கி இவ்வாறு கூறினார்கள்: ''பிலாலே, மேலே ஏறி நின்று தொழுகைக்காக அழைப்பீராக!''

நீதிபதி அபூபக்கர் இப்னுல் அறபீ கூறுகிறார்:

''இந்த ஹதீஸ் இஸ்லாத்தின் அடிப்படைகளுள் மிக முக்கிய மானதோர் அடிப்படைக்குச் சான்றாக அமைகிறது. கியாஸ் மற்றும் இஜ்திஹாத் அடிப்படையில் தீர்வு பெறுதலே அந்த அடிப்படை. இங்கு நபி (ஸல்) அவர்கள் தொழுகைக்கான அழைப்பு தொடர்பாக தமது தோழர்களுடன் கலந்தாலோசனை செய்வதைக் காண்கிறீர் கள் அல்லவா? இதில் அன்னார் அல்லாஹ்விடமிருந்து வேத வெளிப்பாட்டையோ விளக்கத்தையோ எதிர்பார்த்திருக்கவில்லை. மாறாக, தமது தோழர்கள் ஷரீஆவின் அடிப்படைகளிலும் அதன் நோக்கங்களிலும் கொண்டிருக்கும் புரிதலின் அடிப்படையில் ஒரு கருத்தைப் பெறவே அன்னார் விரும்பினார்கள்.''

இப்னுல் அறபீயின் இக்கூற்று, 'அஹ்காமுல் குர்ஆன்' என்ற அவரது நூலில் கூறப்பட்டுள்ள மற்றொரு கூற்றுடன் முரண்படு வதாக உள்ளது:

*''அனைத்து (பொது) விவகாரங்களிலும் அவர்களுடன் கலந்தா லோசனை புரிவீராக'' (3:159)* என்ற வசனம் யுத்தம் தொடர்பான கலந்தாலோசனையையே குறிப்பதாக அறிஞர்கள் கூறியுள்ளனர். அதில் சந்தேகமில்லை. ஏனெனில், சட்டத் தீர்ப்புகள் தொடர்பாக நபித்தோழர்கள் அபிப்பிராயம் கூற எதுவும் இருக்கவில்லை. யதார்த்தத்தில் அவை அல்லாஹ்விடமிருந்தான வேத வெளிப் பாட்டிலிருந்து பெறப்பட்டன; அல்லது (இறைதூதருக்கு சுயாதீன

மான இஜ்திஹாதில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டிருந்தது என்று கூறுவோரது கண்ணோட்டத்தின் படி) வேத வெளிப்பாட்டி லிருந்து அன்னார் சுயமாகப் பெற்ற விளக்கங்களிலிருந்து அவை பெறப்பட்டன''.

''நபியவர்கள் சட்டத் தீர்ப்புகள் தொடர்பாகத் தமது தோழர் களிடம் ஆலோசனை கேட்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள் என்று கூறுபவர், தனது தெளிவான அறியாமையையே வெளிப் படுத்துகிறார். ஏனெனில், கட்டாயமான சட்டத் தீர்ப்புக்களில் அவர்களிடம் அன்னார் ஆலோசனை கேட்கவில்லை என்பது அனைவரும் ஒப்புக் கொண்ட உண்மையாகும்'' என்ற தாவூதியின் கூற்றை எடுத்துக்காட்டும் அல்- ஹாஃபிழ் இப்னு ஹஜர் தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார்:

''நிபந்தனையற்ற பொதுமைப்படுத்தல் கருத்து வேறுபாட்டுக்கு உரியது. பின்வரும் ஹதீஸை அலீ வாயிலாக அறிவிப்புச் செய்யும் திர்மிதீ அதனை 'ஹஸன்' தரத்திலானது எனவும் குறிப்பிடுகிறார். அதேவேளை இப்னு ஹிப்பான் அதனை 'ஸஹீஹ்' தரத்திலானது என்கிறார். அந்த ஹதீஸ் வருமாறு:

''விசுவாசம் கொண்டவர்களே! நீங்கள் தூதருடன் அந்தரங்கமாக ஏதும் கலந்துரையாட முற்பட்டால் அதற்கு முன்னர் ஏதேனும் தர்மமொன்றைச் செய்து கொள்ளுங்கள்; அது உங்களுக்கே நன்மையானதாகவும் பரிசுத்தமானதாகவும் அமையும். அவ்வாறு (தர்மம்) புரிவதற்கு உங்களுக்கு வசதியில்லா விட்டாலும் அல் லாஹ் மிக மன்னிப்பாளனாகவும் கருணை மிகுந்தவனாகவும் இருக்கிறான் (என்பதை நினைவில் கொள்ளுங்கள்)! என்ற இறை வசனம் இறங்கிய போது நபியவர்கள் என்னிடம், ''அந்த தர்மம் எதுவாக இருக்க வேண்டும் என நினைக்கிறாய்? ஒரு தீனார் ஆக இருக்குமா?'' என வினவினார்கள். அதற்கு நான், ''இல்லை, வாற்கோதுமைத் தானியம்!'' என்றேன். அதற்கு அன்னார், ''நீர் கூறுவது மிக அற்பம்'' என்றார்கள். அதற்குப் பின் இவ்வசனங்கள் இறங்கின: ''(தூதருடனான) உங்களது அந்தரங்க உரையாடலுக்கு

முன்னர் ஏதும் தான தர்மம் செய்ய (முடியாமல் போகுமோ என நீங்கள்) அஞ்சுகிறீர்களா? அவ்வாறு நீங்கள் (தர்மம்) செய்ய முடியாது போனாலும் அல்லாஹ் உங்களை மன்னிக்கிறான். எனவே தொழுகையை உரியவாறு நிலை நிறுத்துங்கள்; ஸகாத்தும் கொடுத்து வாருங்கள்; அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் வழிப்படுங்கள். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு அறிந்தே இருக்கிறான்.'' தொடர்ந்து அலீ இவ்வாறு கூறுகிறார்: ''என் மூல மாகவே அல்லாஹ் இந்த சமூகத்தின் சுமையைத் தளர்த்தினான்.'' சில சட்டத் தீர்ப்புகள் தொடர்பாக தூதர் (ஸல்) தமது தோழர் களுடன் கலந்தாலோசனை செய்திருக்கிறார்கள் என்பதற்கு இச் சம்பவம் சான்றாக அமைகிறது.

அபூ ஹுறைரா பின்வருமாறு கூறியதாக இப்னு ஸஅத் தனது 'அத்-தபகாதுல் குப்றா'வில் குறிப்பிடுகிறார்:

நபியவர்கள் உபன்யாசம் புரியும்போது அடிமரக் குற்றியொன்றின் மீது சாய்ந்து நிற்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். இந் நிலையில் ஒருநாள் அன்னார், ''தொடர்ந்து நின்றிருப்பது எனக்குச் சிரமமாக இருக்கிறது!'' என்று கூறிய போது, ''ஷாம் பிரதேசத்தில் செய்வதைப் போன்ற பிரசங்க மேடை ஒன்றை உங்களுக்கு நான் செய்து தரட்டுமா?'' என தமீம் அல்-தாரீ வினவினார். நபியவர்கள் அது பற்றி முஸ்லிம்களிடம் ஆலோசனை கேட்டபோது, அத்தகைய மேடை ஒன்று அமைக்கப் படுவதற்கு அன்னார் அனுமதிக்க வேண்டும் என்பதே அவர்களது அபிப்பிராயமாக இருந்தது...

இறைத்தூதர் (ஸல்) சில சட்டத் தீர்ப்புகளைப் பெறுவதில் தமது தோழர்களிடம் கலந்தாலோசனை செய்யவில்லை எனில், அதற்குக் காரணம் அவை தொடர்பாக அன்னார் வேத வெளிப்பாட்டின் வழிகாட்டலைப் பெற்று வந்ததே. அத்தகைய விடயங்களில் வஹீயே அன்னாரது பிரதான அதிகாரபூர்வ மூலாதாரமாக இருந்தது. எனினும், பின்னால் வரவிருப்போருக்கு முன்மாதிரியாக அமையும் பொருட்டு இத்தகைய விடயங்கள் தொடர்பாகவும் அன்னார் பிறருடன் கலந்தாலோசனை செய்திருக்கிறார்கள்.

எவ்வாறிருப்பினும், இப்பகுதி குறித்த கலந்தாலோசனைக்கான உண்மையான தேவை இறைத்தூதர் மரணித்து, வேத வெளிப்பாடு தடைப்பட்ட பிறகே ஏற்பட்டது. இப்னுல் அறபீ கூறுகிறார்: ''அல்லாஹ் இறைத்தூதரை மரணிக்கச் செய்த பிறகு சட்டத் தீர்ப்புகள் தொடர்பாக நபித் தோழர்கள் பரஸ்பரம் கலந்தாலோசனை செய்பவர்களாகவும், அல்-குர்ஆனிலும் ஸுன்னாவிலும் இருந்து அவற்றைப் பெறுபவர்களாகவும் இருந்தனர்''.

அபூபக்கர் அல்-ஜஸ்ஸாஸும் இவ்விவகாரம் குறித்து விவாதித்துள்ளார். அவரது கருத்துப்படி, ஆன்மீகமாயினும் லௌகீகமாயினும் அல்-குர்ஆனிலோ ஸுன்னாவிலோ தெளிவான வசனம் இடம்பெறாத அனைத்து விடயங்களிலும் ஷூறா மேற்கொள்ளப்பட முடியும். இறைத்தூதர் (ஸல்) மேற்கொண்ட ஷூறா லோகாயத விவகாரங்களுக்கே பொருந்தி வருவதாகக் கூறுவோர் பற்றிக் குறிப்பிடும் அவர், தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார்: ''ஆயினும் அல்லாஹ்வின் வஹீயினால் வழிகாட்டல் வழங்கப்படாத மார்க்க விவகாரங்கள், நிகழ்வுகள், சூழ்நிலைகள் தொடர்பாக தோழர்களது ஆலோசனையைப் பெறுமாறு நபியவர்கள் ஏவப்பட்டிருந்ததாக ஏனையோர் கூறுகின்றனர். அவ்வாறே, லோகாயத விவகாரங்கள் தொடர்பாகவும் அவர்களுடன் கலந்துரையாடி, கருத்துகளைத் திரட்டி, நியாயமானதும் திருப்தியளிக்கக் கூடியதுமான முடிவொன்றைப் பெறுமாறும் அன்னார் ஏவப்பட்டிருந்ததாக அவர்கள் கூறுகின்றனர். பத்ர் யுத்தத்தின் பிறகு அதில் பிடிப்பட்ட கைதிகள் தொடர்பாக அன்னார் தோழர்களுடன் கலந்தாலோசனை செய்ததும் இந்த வகையில்தான். இவ்விவகாரம் கூட ஒரு வகையில் மார்க்க விடயமாகவே கருதப்பட்டது''.

பின்னர் இக்கருத்தை ஆதரித்து அவர் இவ்வாறு கூறுகிறார்: ''தோழர்களுடன் கலந்தாலோசனை செய்யுமாறு அல்லாஹ் தனது தூதருக்கு இட்ட கட்டளையில் சன்மார்க்க விவகாரங்கள், லோகாயத விவகாரங்கள் என்று கூறுபடுத்தவில்லை என்பதால் இரு பரப்புகளிலும் அது சமமாகவே பிரயோகிக்கப்பட வேண்டும்''.

ஃகலீஃபா உமரின் காலத்தில் நபித்தோழர்களுக்கு மத்தியில் ஒரு விடயம் தொடர்பாக கருத்து முரண்பாடு தோன்றியது. உடலுறவினால் ஏற்படும் பெருந் தொடக்கு (ஜனாபத்) பற்றியும், அதன் கடமையான குளிப்பு பற்றியுமான விவாதம் அது. அங்கு எழுந்த கேள்வி இதுதான்: இந்திரியம் வெளியானால்தான் ஒருவர் மீது குளிப்பு கடமையாகுமா? அல்லது இந்திரியம் வெளியாகா விட்டாலும் தம்பதிகளது பிறப்புறுப்புகள் தொடர்பு படுவது மட்டும் குளிப்பைக் கடமையாக்கி விடுமா? சில நபித்தோழர்கள் முதல் கருத்தையும், வேறு சிலர் இரண்டாவது கருத்தையும் சார்ந் திருந்தனர். எனினும் இரு சாராரும் முறையான வரிசைத் தொடர் கொண்ட அறிவிப்புகளையும் நபியவர்களது முன்மாதிரியிலிருந்து சுயாதீனமாகப் பெற்ற புரிதலையுமே தங்களது நிலைபாடுகளுக்கு ஆதாரமாகக் கொண்டிருந்தனர். எனவே, குறித்த விடயம் தொடர் பான அனைத்து அபிப்பிராயங்களும் செவிமடுக்கப்பட்டு உறுதி யானதொரு முடிவு பெறப்படுவதற்காக பரஸ்பரக் கலந்துரை யாடலும் கலந்தாலோசனையும் இடம்பெறுவது அவசியமாக இருந்தது.

இவ்விடயம் தொடர்பாக நபித்தோழர்களுக்கிடையில் நிகழ்ந்த கலந்துரையாடலையும் ஆலோசனைகளையும் எட்டப்பட்ட முடி வையும் இப்னுல் கையிம் தொகுத்தளித்திருக்கிறார். அபூபக்கர் பின் அபீ ஷைபா வாயிலாக அவர் இவ்வாறு பதிவு செய்கிறார்:

தந்தை ரிஃபாஆ பின் றாஃபிஉவிடமிருந்து அவரது மகன் உபைத் கூற, உபைதிடமிருந்து ஸஃப்வானின் மகனின் பணி யாளாகிய முஅம்மர் பின் அபீ ஹபீபா கூற, முஅம்மரிடமிருந்து ஸெய்த் பின் ஹபீபா கூற, ஸெய்திடமிருந்து முஹம்மத் பின் இஸ்ஹாக் கூற, முஹம்மதிடமிருந்து அப்துல் அஃலா எம்மிடம் இவ்வாறு கூறினார்:

ஒரு தடவை நான் உமர் இப்னுல் ஃகத்தாபின் சபையில் இருந்த போது, ஒரு மனிதர் வந்து ''அமீருல் முஃமினீனே! ஒருவர் பெரும் தொடக்கிலிருந்து பரிசுத்தமடைவதற்காக குளிப்பது தொடர்பாக

ஸெய்த் பின் தாபித் மஸ்ஜிதில் அமர்ந்து தனது சொந்த அபிப் பிராயத்தின் அடிப்படையில் மக்களுக்குத் தீர்ப்பு வழங்கிக் கொண்டிருக்கிறார்'' என முறையிட்டார். அதற்கு உமர், ''அவரை இங்கு வரச்சொல் !'' என்றார்.

ஸெய்த் வந்து சேர்ந்ததும் உமர் அவரிடம் இவ்வாறு வினவினார்: ''குறுக்கு நோக்கங்களை அடைய முயல்பவரே! உமது சொந்தக் கருத்தின் அடிப்படையில் மக்களுக்கு சட்டத் தீர்ப்புகளை வழங்கும் நிலையை அடைந்து விட்டீரா?''

அதற்கு ஸெய்த், ''அமீருல் முஃமினீனே! அல்லாஹ்வின் மீது ஆணையாக, அவ்வாறு நான் செய்யவில்லை. நான் ஒரு ஹதீஸை எனது தந்தையின் சகோதரர்கள் வழியாகச் செவி மடுத்தேன். அதனையே பிறருக்கும் அறிவிப்புச் செய்தேன். அந்த ஹதீஸ், அபூ அய்யூப், உபை பின் கஅப், ரிஃபாஆ பின் றாஃபிஉ ஆகியோர் வழியாக அறிவிக்கப் பட்டதாகும்'' எனப் பதிலளித்தார்.

இதனைக் கேட்ட உமர், ''ரிஃபாஆ பின் றாஃபிஉவை என்னிடம் வரச் சொல்லுங்கள்'' எனக் கட்டளையிட்டார். பின்னர் ரிஃபாஆவிடம் உமர் இவ்வாறு வினவினார்:

''ஒருவர் மனைவியுடன் இணைந்து இந்திரியம் வெளியாகாத போதும், அவருக்கு குளிப்பு கடமையாகி விடும் என்பதுவா நீர் கடைப்பிடித்து வந்த நடைமுறை?''

அதற்கு ரிஃபாஆ கூறினார்: ''இறைத்தூதர் (ஸல்) காலத்தில் நாங்கள் பின்பற்றி வந்த நடைமுறை அதுதான். அதனைத் தடுத்து அல்லாஹ்விடமிருந்து எந்தக் கட்டளையும் எங்களுக்கு வரவில் லை; நபியவர்களிடமிருந்தும் எதனையும் நாம் கேட்கவில்லை!''

''அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இது பற்றி அறிந்தி ருந்தார்களா?'' என உமர் வினவியதற்கு, ''எனக்குத் தெரியாது'' என ரிஃபாஆ பதிலளித்தார்.

பிறகு முஹாஜிர்களையும் அன்ஸார்களையம் ஒன்று கூடுமாறு உமர் அறிவுறுத்தல் வழங்கினார். அனைவரும் ஒன்று கூடியதும்,

குறித்த விடயம் தொடர்பாக அவர்களிடம் அபிப்பிராயம் கேட்டார். இந்திரியம் வெளிவரவில்லை எனில் குளிப்பது கடமையில்லை என அவர்கள் தெரிவித்தனர். எனினும் பெண்குறியினுள் ஆண்குறி நுழைந்து விட்டால் குளிக்கவே வேண்டும் என முஆதும் அலியும் கூறினர்.

அப்போது உமர், ''பத்ரில் ஒன்றாக இணைந்து போரிட்ட நீங் களே இவ்வாறான விடயங்களில் முரண்பாடு கொள்கிறீர்கள் எனில், உங்களுக்குப் பின்னால் வரவிருப்போருக்கு மத்தியில் இதனை விட பாரிய முரண்பாடு தோன்றும்'' என்று கூறினார்.

பிறகு அலீ, ''அமீருல் முஃமினீனே! இவ்வாறான விடயங்களில் நபியவர்களது மனைவியரை விட அறிவுள்ளவர்கள் இருக்க முடியாது!'' எனக் கூறினார். அதற்கமைய உமர் ஹஃப்ஸாவுக்கு செய்தியனுப்பினார். எனினும் அது தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என அவர் பதிலனுப்பி விட்டார். பிறகு ஆயிஷாவுக்கு செய்தியனுப்பியதும், ''பெண் குறியினுள் ஆண்குறி நுழைந்திருந் தால் குளிப்பது கடமை'' என அவர் பதிலனுப்பினார்.

அப்போது உமர், ''இதன் பிறகும் ஒருவர் இவ்வாறான செயலில் ஈடுபடுவதாக நான் கேள்விப்பட்டால், அவரைச் சாட்டையால் அடிப்பேன்'' என பிரகடனம் செய்தார்.

மேற்குறித்த அவதானங்களின் விளைவாகவே, -சொல்லிலும் செயலிலும் இறைத்தூதரது முன்மாதிரியைப் பின்பற்றும் வகை யில்- கணவன்-மனைவியின் பிறப்புறுப்புகள் சந்தித்துக் கொண் டால், இந்திரியம் வெளியேறா விட்டாலும், குளிப்பது கடமை என தீர்மானம் செய்யப்பட்டது. இந்த வகையில்- கிடைக்கப் பெறும் சான்றின் அடிப்படையில், அல்லது முஸ்லிம்களுக்கு மத்தியிலான ஏகோபித்த முடிவின் அடிப்படையில், அல்லது அதற்கு நெருங்கிய நிலையின் அடிப்படையில் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடவும், கூட்டு ஆய்வில் ஈடுபடவும் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சி நன்றிக்குரியதாகிறது.

ஷூறா செயற்பாட்டை அரசியல் மற்றும் இதர உலக விவகாரங்களுடன் மட்டுப்படுத்திக் கொண்டு, சன்மார்க்க விவகாரங்களையும் அவை தொடர்பான சட்டங்களையும் தனிப்பட்ட நியாயவியலாளர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் நீதிபதிகளுக்கும் விட்டு விடுவோர் முன்னையவற்றை மகிமைப்படுத்தி, பின்னையவற்றைத் தரம் தாழ்த்தும் கருமத்தையே செய்கின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக- கலந்துரையாடலிலும் விவாதத்திலும் ஷூறாவிலும் ஈடுபட்டு தீர்மானம் பெறக்கூடிய ஒரு குழுவினரிடம் விவகாரங்களை ஒப்படைப்பதானது, சில தனிநபர்களது விருப்பங்களுக்கும் விளக்கங்களுக்கும் அவை விடப்படுவதை விட அதிக புனிதத் தன்மையும் உயர் அந்தஸ்தும் பெறுவதோடு, விவேகம் மிக்க செயற்பாட்டை நோக்கி மக்களை வழிநடாத்தும் ஆற்றலையும் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

## 5. நீதித்துறையில் ஷூறா.

நீதிபதியாக இருப்பவர் செல்வம், இரத்தம், உயிர், மானம் மற்றும் அனைத்து வகை நலன்கள், முறையீடுகள், மோதல்கள் என்பவை தொடர்பாக தீர்ப்பு வழங்கக் கூடியவர். தனிநபர்களையும் குழுக்களையும் மட்டுமன்றி சிலபோது தேசங்களையும் அரசுகளையும் கூட அவரது தீர்ப்பு கட்டுப்படுத்தும். ஒரு நியாயவியல் அறிஞர் (அல்-ஃபகீஹ்) அல்லது மார்க்கத் தீர்ப்பு வழங்குபவர் (அல்-முஃப்தி) சட்டத் தீர்ப்பை அதற்குரிய அடிப்படை மூலாதாரங்களிலிருந்து பெறுவதற்கு புலமை சார் யத்தனத்தை மேற்கொள்கிறார் எனில், நீதிபதியும் (அல்-காழீ) அதே பணியைத்தான் செய்கிறார். எனினும், தனக்கு முன்னால் ஒரு வழக்கு கொண்டுவரப் படும் போது, அது தொடர்பில் மீண்டுமொரு முறை அவர் புலமைசார் யத்தனத்தில் ஈடுபட வேண்டியவர் ஆகிறார்; குறித்த வழக்கின் இரு தரப்புச் சான்றுகளையும், அவற்றின் பின்னால் மறைந்திருக்கும் பல்வேறு பரிமாணங்களையம் சூழமைவுகளையும் ஆய்வுக்குட்படுத்த வேண்டியவராகிறார். இந்தவகையில் அவர் இருமுறை இஜ்திஹாத் செயற்பாட்டில் ஈடுபடுகிறார். எனவே அவர் பெறும்

தீர்ப்பு தொடர்பாகக் கலந்தாலோசனை மேற்கொள்வது நியாய வியல் அறிஞர் தனது மார்க்கத் தீர்ப்பை (ஃபத்வா) வழங்க முற்படும்போது செய்ய வேண்டிய கலந்தாலோசனையை விட அதிக முக்கியத்துவம் பெறுகிறது. குறிப்பாக, சிக்கலான பெரிய வழக்குகளில் அது அதிக முக்கியத்துவம் பெறுகிறது. ஆக- அல்-குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ வழிகாட்டல் வழங்கப்படாத புதிய சூழ்நிலைகள் தொடர்பான கலந்தாலோசனை செய்தல் பற்றி வந்துள்ள ஹதீஸ்களும் சான்றுகளும் ஃகலீஃபாக்களிடமும், பிற நபித்தோழர்களிடமும் தீர்ப்புக் கேட்டு வந்த வழக்குகளைத் தீர்ப்பதற்கும் முற்றுமுழுதாக பொருத்தமாகவே அமைந்திருந்தன. மட்டுமன்றி, மக்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்கும் பணியில் ஈடுபடும் அனைவருக்கும் அவை பொருத்தமாகவே அமைந்தி ருக்கின்றன.

அபூபக்கர் (றழி) யிடம் ஒருவர் வழக்கொன்றைக் கொண்டு வந்தால், அது பற்றி அல்-குர்ஆனில் தேடிப் பார்ப்பார். தீர்ப்பளிக்கக் கூடிய எதையாவது அதில் கண்டால், அதனைக் கொண்டு தீர்ப்பு வழங்குவார். அல்-குர்ஆனில் தீர்ப்புக் கிடைக்கவில்லையெனில், நபியவர்களது ஸுன்னாவில் ஏதும் உள்ளதா என்று தேடிப் பார்ப்பார். உள்ளதாகக் கண்டு கொண்டால், அதனைக் கொண்டு தீர்ப்பு வழங்குவார். அங்கும் எதுவும் கிடக்கவில்லையெனில், வெளியே வந்து மக்களிடம் விசாரிப்பார். அது முடியாது போனால், முஸ்லிம் தலைவர்களையும் அறிஞர்களையும் வரவழைத்து ஆலோசனை கேட்பார். அவர்கள் கருத்தொருமைப்பட்டு வழங் கும் முடிவை தீர்ப்பாக வழங்குவார்.

அஷ்-ஷஅபீ பின்வருமாறு கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது: ‘‘ஆரோக்கியமான சட்டத்தீர்ப்பு நடைமுறையொன்றை எடுத் துக் கொள்ள விரும்புபவர் உமரின் நடைமுறையை பின்பற்றட்டும்; அவர் பிறரிடம் ஆலோசனை கேட்பவராக இருந்தார்’’.

உமர் பின் அப்துல் அஸீஸ் ஒருமுறை இவ்வாறு கூறினார்: ‘‘ஐந்து பண்புகள் இல்லாதவர் நீதிபதியாக இருக்க முடியாது.

கற்புள்ளவராகவும், பொறுமையும் மென்மையும் கொண்டவ ராகவும், இறந்த காலம் பற்றிய அறிவுள்ளவராகவும், தகைசான் றோரிடம் ஆலோசனை கேட்பவராகவும், பிறரது கண்டனத்தைப் பொருட்படுத்தாதவராகவும் அவர் இருக்க வேண்டும்''.

உமர் இப்னு அப்துல் அஸீஸ் ஒருமுறை உர்வாவுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்: ''மக்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்குவது பற்றி என்னிடம் கேட்டு கடிதம் எழுதியிருந்தீர். நிச்சயமாக நியாயத் தீர்ப்பில் தலையாயது அல்லாஹ்வின் வேதத்தில் உள்ளதைப் பின்பற்றுவதாகும். அதற்கடுத்து, இறைத்தூதர் (ஸல்) அவர்களது ஸுன்னாவைக் கொண்டு தீர்ப்பளிப்பதாகும். அதற்கடுத்து, நேர்வழியில் நிற்கும் இமாம்களது தீர்ப்பினைப் பின்பற்றுவதாகும். அதற்கடுத்து, தகைசால் புலமையாளர்களுடன் கலந்தாலோசனை செய்வதாகும்''.

நீதிபதி கலந்தாலோசனையில் ஈடுபடுவதை சில நியாயவியல் அறிஞர்கள் கடமையாக அன்றி விரும்பத் தக்கதாக மட்டும் ஆக்கியிருந்தாலும், அது சாதாரண, தெளிவான, திரும்பத் திரும்ப ஏற்படுகின்ற பிரச்சினையில் மாத்திரமே ஏற்கக் கூடியதாகும். பாரிய, சிக்கலான பிரச்சினைகளைப் பொறுத்தவரை, அவற்றில் நீதிபதி கலந்தாலோசனை புரிவது கட்டாயமானது எனக் கூறுவதே சரியான நிலைப்பாடாகும். பெரும்பான்மை நியாயவியல் அறிஞர் களது அபிப்பிராயமும் அதுவே. அபூ உமர் இப்னு அப்தில் பர் கூறுகிறார்: ''ஒரு நீதிபதி அறிஞராகவும், தனக்குத் தெளிவற்ற விடயங்களில் பிறரிடம் ஆலோசனை கேட்பவராகவும் இல்லாமல் நீதியோ தீர்ப்போ வழங்க முற்படக் கூடாது. இதுவே முழுக்கவும் மாலிக் மற்றும் பிற முஸ்லிம் நியாயவியலாளர்களது மரபாகவும் இருந்திருக்கிறது. நீதிபதியும் மார்க்கத் தீர்ப்பு வழங்குபவரும் இப்பண்புகளைப் பெறாமல் இருக்க முடியாதென அவர்கள் நிபந்தனை விதிக்கின்றனர்''.

இவ்வாறு நீதிபதிகள் ஆலோசனை கேட்பவர்களாக இருக்க வேண்டும் என நிபந்தனை விதிப்பதும், அதனை அவர்களுக்கு

கட்டாயப் படுத்துவதும் தற்செயலானதோ, இடையில் ஏற்பட்ட தோ, வெறுமனே கடந்து செல்லும் விவகாரமோ அன்று. கலாநிதி கஹ்தான் அல்- தூரீயின் கூற்று இதனையே சுட்டிக் காட்டுகிறது:

''மட்டுமன்றி, நியாயவியல் அறிஞர்கள் ஷூறா என்ற கொள் கையினாலும், அதன் முக்கியத்துவத்தினாலும் தாக்கமடைந்ததன் காரணமாக நீதித் துறையினுள்ளும் அதனைக் கொண்டு வந்தனர். நீதிபதி தனது தீர்ப்பை வெளியிட முன்னர் கலந்தாலோசனை செய்வது கடமையானது அல்லது விரும்பத் தக்கது என அவர்கள் கூறினர்''.

பரவலாக நிலவும் ஆழ்ந்த நம்பிக்கையொன்றிலிருந்தே இது உருவாகிறது. ஷூறா என்பது ஓர் அரசியல் விவகாரம்; சட்டவாக்க மற்றும் நிறைவேற்றுத் துறைகள் சார்ந்த அரசியல் அதிகாரத்தி னாலேயே அது செயற்படுத்தப் படுகிறது என்பதுதான் அந்த நம்பிக்கை. இந்த நம்பிக்கையின் படி, ஷூறா என்பது நேரடியாக ஆலோசனை சபையுடனும், தேசத் தலைவருடனும், அவருடன் சம்பந்தப்பட்டோருடனும் மாத்திரமே தொடர்புடையது. இதுவே இந்த ஆய்வின் ஓட்டத்தில் நான் திருத்தியமைக்க விரும்பும் நம்பிக்கையாகும்.

### 6. ஷூறாவை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கான ஷூறா.

இஸ்லாமே, ஷூறா என்ற கொள்கையை ஸ்திரப்படுத்தி, அதற் குத் தூண்டுதலளித்து, அதில் ஈடுபடுமாறு ஏவி, அதன் சிறப்பையும், முக்கியத்துவத்தையம் எடுத்துக் காட்டியது என்பது தெளிவான, அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். எனினும், அக்கொள்கையின் நடைமுறைப் பிரயோகத்தையும் ஒழுங்கமைப் பையும் அது திறந்த நிலையிலேயே விட்டிருக்கிறது. கால தேச வர்த்தமானங்களுக்கும், துறைகளுக்கும், சூழமைவுக்கும் ஏற்ப அமையத்தக்கவாறு இஜ்திஹாதுக்கும் திட்டமிடலுக்குமாக அது திறந்து விடப்பட்டுள்ளது. இந்த வகையில்தான், ஷூறாவின் விரிவான அம்சங்களும் பிரயோக வடிவங்களும் கூட கலந்தாலோச னைக்குரிய துறைகளுள் அடங்கக் கூடியவை என எம்மால் கூற

முடிகிறது. தேசத்தினதும் சமூகத்தினதும் குழுக்களதும் நிறுவன மற்றும் நிர்வாக ரீதியான அனைத்து விவகாரங்களும் கூட அவ்வாறானவையே. இந்த அனைத்தும் ''அவர்களது விவகாரங்கள் அனைத்தும் அவர்களுக்கு மத்தியிலான ஷூறாவின் அடிப்படை யிலேயே அமைந்திருக்கும்'' என்ற வசனத்திற்கு உட்படுபவையே. ஏனெனில், இவையனைத்தும் நமக்கு மத்தியிலான ஷூறாவின் அடிப்படையில் ஒழுங்கமைக்கவும், திருத்தியமைக்கவும், தீர் மானம் பெறவும் நம்மிடம் வேண்டப்பட்ட அம்சங்களாக உள்ளன. இது பற்றி பின்னரும் நாம் விளக்கவுள்ளோம்- இன்ஷா அல்லாஹ்!

மொத்தத்தில்- இடம்பாட்டுக்கும் மயக்கத்துக்கும் உட்படக் கூடிய அனைத்தும்... மனித யத்தனம் தொடர்புபடும் அனைத்தும்... வழக்கமாக முரண்பாட்டையும் மோதலையும் ஏற்படுத்தும் அனைத்தும்... வேத வெளிப்பாடு எதுவும் கூறாது விட்ட அனைத்தும்... மனிதர்களுக்குப் பொதுவான கடமைகள், உரிமை கள், நலன்கள் அனைத்தும்... ஷூறாவுக்கு இடமளிக்கக் கூடிய வையே. ஒவ்வொரு பிரச்சினையினதும் முக்கியத்துவம், மனிதர்கள் மீதும், அவர்களது சன்மார்க்க-உலக விவகாரங்கள் மீதும், அவர் களுக்கிடையிலான தொடர்புகள் மீதும் அது ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் பருமன் என்பவற்றுக்கேற்ப அந்த ஷூறா கடமை யானதாகவோ அல்லது விரும்பத் தக்கதாகவோ அமையும்.

*பகுதி இரண்டு:*

## ஷூறாவின் தொழிற்பாடுகளும் நோக்கங்களும்

### *ஷூறாவின் நோக்கங்களும் பயன்களும்:*

*ஷூறாவினால் சாதிக்க முடியுமான -அது கடமையாக்கப்படுவதற்குக் காரணமான- தொழிற்பாடுகளையும் நோக்கங்களையும் பற்றி வழக்கமாக அறிஞர்களும் நூல்களும் சுருக்கமான சில வார்த்தைகளிலும் வசனங்களிலும் மாத்திரமே குறிப்பிடுவதுண்டு. அவ்வார்த்தைகளும் வசனங்களும் கூட வழக்கமாக ஒரேயொரு நோக்கத்தை மாத்திரம் சுற்றியதாகவே அமைந்திருக்கும். சரியான கருத்தை வெளிக் கொணர்தலும் சீரிய திட்டமிடலுமே அந்த நோக்கம். இது ஷூறாவின் நோக்கங்களையும் தொழிற்பாடுகளையும் சுருக்கி விடுவதுடன், அதன் பிரயோகத் தளங்களையும் துறைகளையும் குறுக்கி விடுகிறது. எனவேதான் ஷூறாவின் நோக்கங்களையும் தொழிற்பாடுகளையும் -அதன் பெறுமானமும் முக்கியத்துவமும் மேலும் தெளிவாகும் வகையில்- விரிவாக எடுத்துக் காட்ட எண்ணினேன்.*

*ஆரம்பத்தில்- கண்ணியமிக்க சில அறிஞர்களது கூற்றுகளை இங்கு குறிப்பிடுதல் பொருந்தும். அக்கூற்றுகள் ஷூறாவின் இலக்குகளையும் பயன்களையும் பற்றி விரிவாகப் பேசும்*

நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லையாயினும், அவை பற்றிய சற்று விரிவான குறிப்புகளைக் கொண்டிருக்கின்றன.

அவற்றுள் முதலாவதாக, ஹனஃபீ நியாயவியல் மரபைச் சேர்ந்த அபூபக்கர் அல்-ஜஸ்ஸாஸின் கூற்றினைக் குறிப்பிடலாம். ''அனைத்து (பொது) விவகாரங்களிலும் அவர்களோடு கலந்தாலோசனை புரிவீராக!'' என்ற இறைவசனம் தொடர்பாக அவர் இவ்வாறு கூறினார்:

''இதில் பல்வேறு பயன்கள் உள்ளன:

ஒன்று: சட்ட வசனங்கள் இடம்பெறாத நிகழ்வுகள் தொடர்பான தீர்ப்பைப் பெறுவதற்கான வழி இஜ்திஹாதும் பெரும்பான்மை அபிப்பிராயமுமே என்பதை மக்களுக்கு தெரியப் படுத்துதல்.

இரண்டு: நபித்தோழர்களது அந்தஸ்தையும், அவர்கள் 'இஜ்திஹாத்' மேற்கொள்ளத் தகுதியுடையவர்கள் என்பதையும், அவர்களது அபிப்பிராயங்களைப் பின்பற்றுவது ஆகுமானது என்பதையும் உணர்த்துதல். ஏனெனில், அவர்கள் இங்கு நபி (ஸல்) அவர்களே ஆலோசனை கேட்கக்கூடிய அளவுக்கு உயர்த்திக் கூறப்பட்டுள்ளனர். அவர்களது இஜ்திஹாதிலும், அல்லாஹ்வினால் அருளப்பட்ட சட்டங்களுடன் இயைந்து செல்வதில் அவர்கள் கொண்டிருந்த அக்கறையிலும் அன்னார் திருப்தி காணக் கூடிய நிலை இருந்தது.

மூன்று: அவர்களது அந்தரங்க மனச்சாட்சியில் அல்லாஹ் திருப்தி கண்டிருந்தான். இல்லையெனில், அவர்களுடன் கலந்தாலோசனை புரியுமாறு அவன் ஏவியிருக்க மாட்டான். இது அவர்களது திட உறுதியையும், சரியான இறை விசுவாசத்தையும், அந்த அறிவில் அவர்கள் பெற்றிருந்த அந்தஸ்தையும் எடுத்துக் காட்டுகிறது. அவ்வாறே, இறைத்தூதர் (ஸல்) அவர்களது மறைவுக்குப் பின்னரும் அல்-குர்ஆனிலோ ஸுன்னாவிலோ குறிப்பெதுவும் காணப்படாத விடயங்கள் தொடர்பாக முஸ்லிம் சமூகம் பின்பற்றத்தகுந்த சட்டங்களைப் பெறுவதற்காக இஜ்திஹாத் செய்வதற்கான அனுமதியையும் இது எடுத்துக் காட்டுகிறது''.

இரண்டாவதாக, மாலிகீ சட்ட மரபைச் சேர்ந்த நியாய வியலாளரான அபூபக்கர் இப்னுல் அறபீயின் கூற்று இடம் பெறுகிறது. முதலாவது கூற்றினைப் பூரணப் படுத்தும் வகையில் இது அமைந்துள்ளது. (அல்-ஜிஹாத் பற்றிய அத்தியாயங்கள், மற்றும் ஆலோசனை செய்தல் தொடர்பான அத்தியாயம் என்ப வற்றில்) திர்மிதீ மீதான விளக்கவுரையின் போது அவர் இவ்வாறு கூறுகிறார்:

''ஆலோசனை செய்வதில் பல அருட்பாக்கியங்கள் உள்ளன. அவற்றுள் சில:

- ஒன்றைப்பற்றித் தெரிந்து கொண்ட பிறகு அதனைச் செய்தல் (அதாவது அதனைப் பற்றித் தெளிவாகப் புரிந்து உறுதிப் படுத்திக் கொண்ட பின்னர் அதில் ஈடுபடல்).
- மனக் கிடக்கைகளின் இடம்பாடுகளிலிருந்து உண்மையைப் பிரித்தெடுத்தல்.
- மனிதர்களது பகுத்தறிவுத் திறன்களை வெளிக் கொணர்தல்.
- உள்ளங்களை செயற்பாட்டின் மீது ஒன்றிணைத்தல்.

நபி (ஸல்) அவர்கள் பத்ர் நிகழ்வின் போது இப்படித்தான் இருமுறை செய்தார்கள்..''

குறித்த விடயம் தொடர்பாக மற்றோர் இடத்திலும் சுருக்கமாக அவர் இவ்வாறு கூறியுள்ளார்:

''ஷூறா என்பது சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தும்; மனிதர்களின் அறிவாற்றலை வெளிப்படுத்தும்; சரியான கருத்துக்கு இட்டுச் செல்லும். எந்த சமூகம் கலந்தாலோசனை செய்கிறதோ, அது சரியான பாதையிலேயே செல்லும்''.

மூன்றாவது கூற்று நீதிபதி அபூபக்கர் அல்-முறாதீ தெரிவித் திருப்பது. அவர் கூறுகிறார்:

''நான்கு வகைகளில் கலந்தாலோசனை அவசியப்படுகிறது:

ஒன்று: ஆலோசனை கேட்பவர் தனது விவகாரங்கள் பற்றிய குறை மதி கொண்டவராக இருத்தல்.

இரண்டு: குறை மதி கொண்டவராக இல்லா விட்டாலும், தனது அனுமானங்களில் தவறு நேரலாம் என்ற அச்சம் கொண்டவராக இருத்தல்.

மூன்று: சில போது அன்பும் வெறுப்பும் அதீத புத்திசாலியின் அறிவைக் கூட உண்மையின் சில பக்கங்களைக் காணாமலும், தீர யோசிக்காமலும் தடுத்து விடலாம். அதனால் சரியான கருத்தைச் சென்றடைய அவரால் முடியாது போகலாம். எனவே- மனோ இச்சையால் தாக்கமடையாத, பல்வேறு அபிப்பிராயங்களையும் ஆய்ந்து நோக்கக் கூடிய மனிதர்களது ஆலோசனையை அவர் பெறுவது அவசியம்.

நான்கு: ஆலோசனை கேட்கப்படுபவர் உண்மையிலேயே சம்பந்தப்பட்ட செயற்பாட்டில் பங்காளராக அல்லது உதவியாளராக இருக்கலாம். இந்நிலையில், அவரிடம் ஆலோசனை பெறப்படும் போது அவரை மேலும் நெருக்கமாக்கிக் கொள்ளவும், இன்னும் அதிகமாக ஒத்துழைக்கச் செய்யவும் அது வழி வகுக்கும்''.

இக்கூற்றுகளின் ஒளியிலும், ஷூறா பற்றிய இப்பகுதியை இன்னும் துலக்கும் முனைப்பிலும், ஷூறா கொண்டிருக்கும் நோக்கங்களையும் பயன்களையும் இயன்ற வரை கண்டறிய முற்பட்டேன். அவற்றைப் பின்வருமாறு பத்தாக வரிசைப் படுத்தியுள்ளேன்:

### 1- சரியானதற்கும் மிகச் சரியானதற்கும் சென்றடைதல்.

ஷூறாவின் மிக அடிப்படையான நோக்கம் இதுவே என்பதில் ஐயமில்லை. ஷூறா பற்றியும், அதன் நோக்கம் பற்றியும், அதன் பெறுபேறு பற்றியும் குறிப்பிடுவோர் கூறும் ஒரே நோக்கம் -அல்லது அழுத்திக் கூறும் நோக்கம்- இதுவே. ஏனெனில் ஷூறா என்பது வழக்கமாக பல்வேறு இடம்பாடுகளுக்கும் சிக்கல்களுக்கும் வழிமுறைகளுக்கும் தெரிவுகளுக்கும் உரிய விவகாரங்களிலேயே மேற்கொள்ளப் படுகிறது. எனவே, குறித்த விடயம் தொடர்பான சரியான கருத்தையும், சீரிய வழிமுறையையும் அறியும் தேவை ஆலோசனை கேட்போருக்கு ஏற்படவே செய்யும்.

*சிலபோது பிழையானதிலிருந்து சரியானதைப் பிரித்தறிவதற் கும், தீயதிலிருந்து நல்லதைப் பிரித்தறிவதற்கும் ஷூறா அவசி யப்படுவதை விட அதிகமாக மிகச் சரியானதையும் மிகச் சிறந்த தையும் கண்டறிவதற்கு அது அவசியப்படுவதுண்டு. எனவேதான் இவ்வாறு கூறுவர்: ''தீயதிலிருந்து நல்லதைப் பிரித்தறிபவன் புத்திசாலியல்ல; இரு நன்மைகளில் மிகச் சிறந்ததையும், இரு தீமைகளில் மிகத் தீயதையும் கண்டறிபவனே புத்திசாலி!''.*

*ஏனெனில், சரியானது-தவறானது... அழகானது -அவலட்சண மானது... பயனுள்ளது-தீங்கானது... என்பவற்றைப் பிரித்தறிவதில் குழப்பமும் மயக்கமும் ஏற்படுவதை விட அதிகமாக சரியானதற் கும் மிகச் சரியானதற்கும்... அழகானதற்கும் மிக அழகானதற்கும்... பயனுள்ளதற்கும் மிகப் பயனுள்ளதற்கும்... இடையில் ஏற்படும் மயக்கமும் குழப்பமுமே அதிகம். மிக அழகானதைப் பின்பற்று மாறே ஷரீஆ நம்மை ஏவியுள்ளது:*

*''மிக அழகானதைக் கொண்டு (அவர்களுடன்) தர்க்கம் புரிவீராக!'' (41: 34)*

*''மிக அழகானதையே பேசுமாறு எனது அடியார்களுக்கு (நபியே!) கூறுவீராக!'' (17: 53)*

*''உரைகளைக் கேட்டு, அவற்றுள் மிக அழகானதைப் பின்பற்று வோரை'' (39: 18)* அது மெச்சுகிறது.

*சத்தியத்தைக் கண்டறிவதற்கு -வேத வெளிப்பாட்டுக்கு அடுத்த நிலையில் இருக்கின்ற- மிக உத்தரவாதமான, சீரிய வழியாக இருப்பது ஷூறாவே என்பது விவாதத்துக்கோ விளக்கத்துக்கோ அவசியமற்ற உண்மை. ஷூறா செயற்பாடானது அநேகமாக தவறைத் தவிர்ப்பதற்கும், சரியானதை பற்றிப் பிடிப்பதற்கும், சரியானதிலிருந்து மிகச் சரியானதை நோக்கி முன்னேறுவதற்கும் காரணமாக இருக்கும் போது... ஷூறா என்பது -முன்னர் குறிப் பிட்டது போல்- அனைத்து சன்மார்க்க, உலக, தனிப்பட்ட, குடும்ப, சமூகத் துறைகளிலும் சம்பந்தப்படுவதாக இருக்கும்*

போது... அதன் பயன் எவ்வளவு என நாம் சிந்தித்துப் பார்க்க முடிகிறது. அது நம் முழு வாழ்விலும் பரவி, நமது தீர்மானங் களையும் புலமை சார் யத்தனங்களையும் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் சீர்படுத்தும் போது நாம் எவ்வளவு லாபமும் நன்மையும் அடைவோம் என்பதையும் புரிந்து கொள்ள முடி கின்றது.

அவ்வாறே- அது நம் வாழ்வையும் நமது விவகாரங்களையும் விட்டு மறைந்து, அந்த இடத்தில் தனியாதிக்கமும் அடக்கு முறையும் சுயநலமும் தனிநபர் நோக்கும் இடம் பிடித்துக் கொண்டால், எவ்வளவு நஷ்டத்துக்கும் துன்பத்துக்கும் இழப் புக்கும் உள்ளாவோம் என்பதையும் உணர முடிகிறது.

ஷூறா செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதனூடாக இவ் வாறு நாம் எண்ணிறந்த நலன்களையும் பயன்களையும் லாபங் களையும், அதனைப் புறக்கணிப்பதனூடாக பல சீர்கேடுகளையும் துன்பங்களையும் நஷ்டங்களையும் அடைகிறோமெனில், ஆகக் குறைந்தது இவை அனைத்தினதும் பிரமாண்டத் தன்மை பற்றியும், வரலாறு நெடுகிலும் இவற்றின் ஒட்டுமொத்த விளைவுகள் பற்றியும் நாம் மனக் கண்ணில் நிறுத்தி சிந்தித்துப் பார்க்க கடமைப் பட்டிருக்கிறோம். அப்போதுதான் சமூகங்களின் வாழ்வில் ஏற்படக் கூடிய எழுச்சிக்கு அல்லது வீழ்ச்சிக்குப் பின்னாலுள்ள கார ணங்களை பெருமளவு நாம் புரிந்து கொள்ள முடியும். *''உங்களில் விரும்பியவர் முன்னேற முடியும்; அல்லது பின்னடைய முடியும்'' (74: 37)* என அல்-குர்ஆன் இது குறித்த எச்சரிக்கையை விடுக்கிறது. நீதிபதி இப்னு அதிய்யா கூறுவது போல், ''சரியாக உற்றுக் கவனிக்கும் ஒருவர் சத்தியத்தினதும் நேர்வழியினதும் திசையில் செல்வார்; மறுபுறம், அசிரத்தையாலும் பிழையான நோக்கினாலும் பின் னடைவைச் சந்திப்பார்... என்பதே இவ்வசனம் தரும் செய்தி''.

தனிநபர்களாகவும் சமூகங்களாகவும் தேசங்களாகவும் நாம் கண்ட பின்னடைவுக்கும் வீழ்ச்சிக்குமான மிகப் பிரதானமான காரணங்களுள் ஒன்றாக அமைந்தது, நீண்ட பல நூற்றாண்டுகளாக

நமது பொது வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் ஷூறா செயற்பாடு பரந்தளவில் செயலிழந்து போயிருந்தமையே என நாம் உறுதியாகக் கூறலாம்.

## 2- மனோ இச்சைகளிலிருந்தும் அகத் தாக்கக் காரணிகளிலிருந்தும் விடுபடல்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் -சொற்பமாகவோ அதிகமாக வோ- மனோஇச்சைக்கு ஒரு பங்குண்டு. ஒவ்வொருவரும் தனிப் பட்ட மன நிலைகளாலும் ஆசா பாசங்களாலும் அலைக்கழிக்கப் படுவதுண்டு. ஒவ்வொருவருக்கும் என -ஊக்கிகளாகவோ தடை களாகவோ- அகநிலைப்பட்ட பரிசீலனைகள் இருப்பதுண்டு. மனிதன் சிந்திக்கும் போதும் அனுமானிக்கும் போதும் இந்த அனைத்துக் காரணிகளும் அவனது பகுத்தறிவில் -சரியாகவோ பிழையாகவோ- தாக்கம் செலுத்தவே செய்கின்றன. குறிப்பாக, பல்வேறு பரிசீலனைகளதும் அப்பிராயங்களதும் இழுபறிக்கு உட்படக் கூடிய சிக்கலான விவகாரங்களின் போது இது அதிகம் நிகழ்கிறது. மட்டுமன்றி- அன்பு, வெறுப்பு, அச்சம், மரியாதை, பேராசை போன்ற உணர்வு நிலைகளுடன் தொடர்புடைய விவகாரங்களைக் கையாளும் போது மனிதப் பகுத்தறிவிலும் சிந்தனையிலும் இக்காரணிகள் அதிக தாக்கத்தையும் அழுத் தத்தையும் ஏற்படுத்துகின்றன. எனவே, இவ்வாறான விவகாரங் களை பரிபூரண நீதியோடும், பொதுநிலைத் தன்மையோடும், இக்காரணிகளின் தாக்கத்திலிருந்து முற்றாக விடுபட்ட நிலையிலும் அணுகுவதும் மதிப்பீடு செய்வதும் மனிதனுக்குச் சிரமமானது. ''ஒன்றின் மீதான அன்பு உன்னை குருடாகவும் செவிடாகவும் ஆக்கி விடும்'' என்பர் முன்னோர்.

ஷூறாவே இந்நிலையிலிருந்து விடுபடுவதற்கான மார்க்க மாகும். அந்த வகையில், வேறுபட்ட சிந்தனைகளும் உணர்வுகளும் அறிவும் அனுபவமும் கொண்ட மனிதர்கள் இதய சுத்தியுடன் குறித்த பிரச்சினையை நோக்கி, அது பற்றிக் கலந்தாலோசனை செய்யும்போது, அதன் பெறுபேறானது மேற்சொன்ன காரணி

களதும், மனதளவிலான பாரபட்சங்களதும் தாக்கத்திலிருந்து பெரு மளவு விடுபட்டதாகவே இருக்கும். மட்டுமன்றி, சத்தியத்துக்கும் நீதிக்கும் சரியான முடிவுக்கும் மிக அண்டியதாகவும் அது இருக் கும். இப்னுல் அறபி ஷூறாவின் பயன்கள் பற்றிக் கூறும் போது, ''மனக் கிடக்கைகளின் இடம்பாடுகளிலிருந்து உண்மையைப் பிரித்தெடுத்தல்'' எனக் குறிப்பிட்டது இதனைத்தான் போலும்!

### 3. எதேச்சாதிகாரத்தையும் அத்துமீறலையும் தடுத்தல்.

இது ஷூறாவின் மகத்தான நோக்கங்களிலும் பயன்களிலும் ஒன்று. ஏனெனில், ஷூறா என்பது எதேச்சாதிகாரத்துக்கு எதிரானது. எங்கு ஷூறா இருக்கிறதோ அங்கு எதேச்சாதிகாரம் மறைந்து விடும். எங்கு ஷூறா மறைகிறதோ அங்கு எதேச்சாதிகாரம் தோன்றி விடும். எதேச்சாதிகாரம் நிலைபெற்றுத் தொடருமாயின், அது அத்துமீறலாக மாறி விடும்; எண்ணற்ற சீர்கேடுகளாகவும் அநி யாயங்களாகவும் பிறழ்வுகளாகவும் மாறிவிடும்.

பல எதேச்சாதிகாரிகளிடம் -ஆரம்பத்தில்- எதேச்சாதிகாரம் புரியும் நாட்டமோ எண்ணமோ விருப்பமோ இருப்பதில்லை. எனினும், அதிகாரத்தில் இருக்கும் ஒருவர் கடிவாளமற்று விடப்படும் போது அவரிடம் எதேச்சாதிகாரம் முளை விட்டுப் படிப்படியாக வளர ஆரம்பிக்கிறது. தனியாகச் சிந்தித்து, தனியாகத் தீர்மானித்து, தனியாக ஏவி, தனியாகத் தடுப்பவராக அவர் மாறுகிறார். அவரது தீர்ப்பை மறுப்பவர் இல்லை; ஆலோசனை சொல்பவர் இல்லை; உபதேசிப்பவர் இல்லை; மறுதலிப்பவர் இல்லை; எதிர்ப்பவர் இல்லை. அவர் ஆலோசனை கேட்க முற்பட்டால் கூட ''நீங்களே அறிவும் ஞானமும் மிக்கவர். நீங்களே முதன்மையானவர். கருத்தென்றால் அது உங்களது கருத்துத்தான். வார்ததையென்றால் அது உங்களது வார்த்தைதான். முடிவு உங்களுடையதே!'' என்று கூறுவோர்தான் எப்போதும் அவர் முன் இருக்கிறார்கள். ஆயின், இத்தகைய நிலையிலுள்ள மனிதரிடம் நாம் எதிர்பார்க்கக் கூடியது என்ன? எல்லா நிலையிலும் அவர் ஒரு மனிதர்தானே!. ''நிச்சயமாக மனிதன் தன்னை சுய நிறைவு

*கொண்டவனாகக் கருதும் போது, வரம்பு மீறுகிறான்''. (96: 6-7)* எனவே இத்தகைய மனிதரிடம் அடக்குமுறையையும் சர்வாதி காரத்தையும் எதேச்சாதிகாரத்தையும் தவிர எதைத்தான் எதிர்பார்க்க முடியும்?! ஃபிர்அவ்னை அந்த நிலைக்குக் கொண்டு சேர்த்ததும், ஆட்சிக்கான அடிப்படை விதியாக எதேச்சாதிகாரத்தை எடுத்துக் கொள்ளச் செய்ததும் இதுவல்லவா? *''நான் (உண்மை எனக்) காண்பதையே உங்களுக்கும் காண்பிக்கிறேன்; நேரிய பாதையை நோக்கியே உங்களைச் செலுத்துகிறேன்'' (40: 29)* என அவனை பிரகடனம் செய்ய வைத்ததும் இதுவல்லவா?

எந்த அடக்குமுறையாளனும் இந்த விதியையே எடுத்துக் கொள்கிறான். அதனை அவன் வெளிப்படையாக ஏற்றுக் கொண்டாலும் சரி; ஏற்றுக் கொள்ளா விட்டாலும் சரி!

ஷூறா செயற்பாடானது, சமூகங்களை ஆட்சியாளர்களது எதேச்சாதிகாரங்களிலிருந்து பாதுகாப்பது போலவே, அதே ஆட்சியாளர்களை அவர்களது உள்ளார்ந்த சர்வாதிகார நாட்டத்தி லிருந்தும், அதற்கான ஏற்பு நிலையிலிருந்தும் பாதுகாக்கிறது.

*''(இவ்வாறாக ஃபிர்அவ்ன்) தனது மக்களை அற்பமாகக் கருதி அலட்சியம் செய்தான். அவர்களும் அவனுக்கு வழிபட்டார்கள். நிச்சயமாக, அவர்கள் பாவிகளாகவே இருந்தனர்'' (43: 54)* என்ற மறை வசனத்தை வாசிக்கும்போது, நாம் இவ்வாறு கேள்வி எழுப்ப வேண்டும்: ஃபிர்அவ்ன் தனது சமூகத்தினரை அலட்சியம் செய்தபோது அவர்கள் அவனுக்குக் கீழ்ப்படிய மறுத்திருந்தால், தனது அடக்குமுறையிலும் சர்வாதிகாரத்திலும் அவன் பிடிவாத மாக இருந்திருப்பானா? நிச்சயமாக இல்லை! அவர்கள் அவனைத் தடுத்திருந்தால், அவன் தவிர்ந்திருப்பான். ஆரம்பம் முதலே அவனது அதிகாரத்தின் மீது நிபந்தனைகளையும் வரம்புகளையும் ஏற்படுத்துவோர் இருந்திருந்தால், அவன் புத்தி தெளிந்திருப்பான். சமூகத்தின் நன்னிலைக்கும் சீர்கேட்டுக்கும் ஆட்சியாளன் பொறுப்பாக இருப்பது போல், ஆட்சியாளனின் நன்னிலைக்கும் சீர்கேட்டுக்கும் சமூகமே பொறுப்பு.

எனினும், எதேச்சாதிகாரம் என்பது ஆட்சியாளர்களோடும் தலைவர்களோடும் மாத்திரம் சுருங்குவதல்ல. அடக்குமுறை கொண்ட கணவன் உண்டு. அடக்குமுறை கொண்ட தந்தை உண்டு. அடக்குமுறை கொண்ட நீதிபதி உண்டு. அரசியல், அல்லது நிர்வாக, அல்லது அறிவியல், அல்லது சமூக அதிகாரம் கொண்ட ஒவ்வொருவரும் எதேச்சாதிகாரியாக மாற இடமுள்ளது.

ஷூறா இன்றி தன்னிச்சையாகச் செயற்பட விடப்படும் எவரும் தனது அதிகாரத்துக்கும் சக்திக்கும் ஏற்ப எதேச்சாதிகாரம் செலுத் தவே முற்படுவார்.

ஆக எதேச்சாதிகாரம் என்பது நோய்; ஷூறா என்பது அதற்கு நிவாரணி.

### 4- பணிவை கற்றுக் கொடுத்தல்.

எதேச்சாதிகாரம் வரம்பு மீறலையும் சர்வாதிகாரத்தையும் கற்றுக் கொடுக்கிறதெனில், ஷூறா பணிவை கற்றுக் கொடுக்கிறது; அப் பண்பைப் பெறுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் பயிற்சி யளிக்கிறது.

எதேச்சாதிகாரப் பண்பு பிறர் மீதான தேவையை புறக்கணிக்கச் செய்கின்றது. அந்தவகையில், இப்பண்பு கொண்டவர் பிறரது கருத்தைப் புறமொதுக்கி தனது கருத்துடன் போதுமாக்கிக் கொள் வார். பிறரது அறிவையும் மதிப்பீடுகளையும் புறக்கணித்து, தனது அறிவையும் மதிப்பீடுகளையும் மாத்திரம் எடுத்துக் கொள்வார். அல்-குர்ஆன் பிறரைப் புறக்கணிக்கும் பண்புள்ள எதேச்சாதி காரத்துக்கும் வரம்பு மீறும் பண்புக்கும் இடையில் தொடர்பிருப்ப தாகவும், பின்னையது தோன்ற முன்னையது காரணமாக இருப்ப தாகவும் எச்சரிக்கிறது. ஏனெனில், ''மனிதன் தனக்கு எவரது உதவியும் தேவையில்லை என்று எண்ணிக் கொள்ளும் போது நிச்சயமாக வரம்பு மீறுகிறான்''.

ஷூறா என்பது -இதற்கு மாறாக- பிறரது உதவியும் சேவையும் மனிதனுக்குத் தேவை என்பதை கற்றுக் கொடுக்கிறது. அவனது

அறிவு எந்த உயர் நிலையை அடைந்தாலும் பிறரது அறிவை அவனால் புறக்கணிக்க முடியாது என்பதையும், அவனது கருத்து எத்துணை உயர்ந்ததாக இருந்தாலும் பிறரது கருத்துகளை அவன் புறம் தள்ள முடியாது என்பதையும் அது சொல்லித் தருகிறது. இந்தவகையில், ஷூறாவானது சுயநிறைவு, பெருமை, பிறரது ஆலோசனையை மதிக்காமை, பிறரிடம் செவிமடுத்துப் பயன் பெறாத நிலை என்பவற்றைத் தகர்த்தெறிகிறது.

பிற மனிதர்களிடம் ஆலோசனை கேட்பது குறையோ இழுக்கோ அன்று. அதனை தவிர்த்துக் கொள்வதே குறையும் இழுக்குமாகும். நபித் தோழர்கள் நபியை விடக் குறைந்த அந்தஸ்துடையவர்களாக இருந்த போதிலும், அவர்களுடன் கலந்தாலோசனை புரியுமாறு அன்னாருக்கு அல்லாஹ் கட்டளையிட்ட நோக்கத்தின் ஒரு பகுதியாக இந்த உண்மையை வலியுறுத்துவதும் அமைந்திருந்தது. ஸுஃப்யான் இப்னு உயைனா இதனை இவ்வாறு கூறுகிறார்: ''பின் தோன்றும் சமுதாயம் கலந்தாலோசனை புரிவதை ஒரு குறையாகக் கருதாமல் அதில் ஈடுபட வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் நபியவர்களுக்கு அதனை ஏவினான்; அவர்களது விவகாரங்கள் அனைத்தும் அவர்களுக்கு மத்தியிலான ஷூறாவின் அடிப்படை யில் அமைந்திருக்கும் எனவும் மெச்சினான்''.

## 5. ஒவ்வொருவருக்கும் அவருக்குத் தகுமானதை வழங்குதல்

இப்பயன் -குறிப்பாக- பிறரது உரிமையுடன் தொடர்புபடும் ஷூறாவுடன் பொருந்துகிறது. பொது விவகாரங்கள் தொடர்பான ஷூறா இதில் முன்னிலை வகிக்கிறது. ''*அவர்களது அனைத்து விவகாரங்களும் அவர்களுக்கு மத்தியிலான ஆலோசனையின் அடிப்படையில் அமைந்திருக்கும்*'' என்ற இறைவசனத்தினுள் இப்பொது விவகாரங்கள் அடங்குகின்றன. அந்தவகையில், ''அவர் களது விவகாரங்கள்'' என்பதனுள் அடங்கத்தக்க அனைத்தும் அவர்கள் அனைவரது பங்களிப்புக்கும் திட்டமிடலுக்கும் உரியவை யாகின்றன. எனவே, அவர்கள் அனைவரதும் ஆலோசனையின் அடிப்படையிலேயே அவை கையாளப்பட வேண்டும். அவர்

களைத் தவிர்த்து எவரும் அவற்றில் தனியுரிமையோ ஏதேச்சதி காரமோ எடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில், அதனால் தோன்றும் அனைத்து விளைவுகளும் அவர்கள் அனைவரையும் பாதிக்கும்.

அந்த வகையில், எந்தவொரு விடயத்துக்கும் உரியவர்களிடம் அல்லது அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களிடம் அது பற்றிக்கலந்தாலோசனைசெய்வதும், அவர்களதுஅபிப்பிராயத்துக்கு மதிப்பு வழங்குவதுமே அவர்களுக்கு நியாயம் வழங்குவதாகவும் உரிமை வழங்குவதாகவும் அமையும். ஏனெனில், மக்களது உரி மைகள் தொடர்பான நடவடிக்கை அவர்களது உடன்பாடு அல்லது அனுமதி அல்லது பொறுப்புச் சாட்டல் என்று நிபந்தனைக்கு உட்பட்டதாகும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் 'கத்ஃபான்' கோத்திரத்தினருடன் ஒப்பந்தம் செய்ய முயன்ற நிகழ்வை கவனித்துப் பாருங்கள்.

அஹ்ஸாப் போரின் போது மதீனாவை முற்றுகையிட்டிருந்த இணை வைப்பாளர்களதும் யூதர்களதும் கூட்டிலிருந்து விலகி விடுவதற்குப் பகரமாக மதீனாவின் பேரீத்தம் பழ விளைச்சலில் மூன்றிலொரு பங்கை அக்கோத்திரத்துக்கு வழங்குவதற்கு அன்னார் முன் வந்தார்கள். எனினும், அது குறித்து மதீனாவின் தலைவர் களிடம் ஆலோசனை கேட்காமல் அன்னார் முடிவெடுக்கவில்லை. அது பற்றி அவர்களிடம் இறைத்தூதர் கேட்ட போது, அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

''அல்லாஹ்வின் தூதரே! இது வானத்திலிருந்து வந்த வேத வெளிப்பாடா? அவ்வாறாயின், இதற்கு நாம் உடன்பட்டு அல் லாஹ்வின் கட்டளைக்கு முழுமையாக அடி பணிவோம்! அல்லது இது உங்களது அபிப்பிராயமும் விருப்பமும் மட்டுமா? அவ் வாறாயின், இதற்கு உடன்படுவது உங்களது தனிப்பட்ட விருப் பத்தை நாம் பின்பற்றியதாகி விடும். எங்களது உயிர்களைப் பாதுகாப்பதே உங்கள் விருப்பமாயின், -அல்லாஹ்வின் மீதாணை யாக!- நாங்களும் அவர்களும் சமமே என்பதை நீங்கள் அறிவீர்கள்.

எமது விளைச்சலிலிருந்து அவர்கள் வாங்காமல் அல்லது விருந்துபசாரமாக அவர்களுக்கு நாம் கொடுக்காமல் எதனையும் அவர்களால் பெற்றுக் கொள்ள முடியாது''.

இவ்வார்த்தைகளைச் செவிமடுத்த இறைத்தூதர் (ஸல்) தமது கருத்திலிருந்து விலகி அம்மனிதர்களது அபிப்பிராயத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

இதே போன்றுதான் ஹுனைன் யுத்த வேளையில், ஹவாஸின் கோத்திரத்தினருக்கு உபகாரம் செய்யும் வகையில் அவர்களிலிருந்து பிடிக்கப்பட்ட கைதிகளை திருப்பி ஒப்படைக்க நபியவர்கள் விரும்பிய போதிலும், அவ்விவகாரம் தொடர்பில் உரிமை கொண்டிருந்தோரை அழைத்து இவ்வாறு கூறினார்கள்:

''உங்களது சகோதரர்களாகிய இவர்கள் (அதாவது ஹவாஸின்கள்) தங்கள் தவறு குறித்து வருந்திய நிலையில் எம்மிடம் வந்திருக்கின்றனர். அவர்களிடமிருந்து பிடிக்கப்பட்ட கைதிகளை அவர்களிடமே திருப்பி ஒப்படைத்து விடலாமென்று எனக்குத் தோன்றுகிறது. எனவே, எவர் பூரண சம்மதத்துடன் அவ்வாறு செய்ய விரும்புகின்றாரோ, அவ்வாறு செய்து கொள்ளட்டும்! எவர் அதற்குப் பதிலாக எமது அடுத்த 'ஃபைஉ' வருமானத்தில் நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறாரோ, அவர் அது வரை தனது பங்கினை தன்னுடனே வைத்துக் கொள்ளட்டும்''. அதற்கு அம்மனிதர்கள், ''நாங்கள் மனம் விரும்பிக் கொடுத்து விடுகிறோம் அல்லாஹ்வின் தூதரே!'' என்றனர்.

அப்போது நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ''இது குறித்து உங்களில் எவருக்கு அனுமதியுண்டு, எவருக்கு அனுமதியில்லை என்பதை நாம் அறியோம். எனவே திரும்பிச் சென்று உங்களது தலைவர்களை வந்து இது குறித்து பேசச் சொல்லுங்கள்!''. அதற்கிணங்க திரும்பிச் சென்ற அவர்கள், தங்கள் தலைவர்களுடன் கலந்துரையாடினர். பிறகு திரும்பி வந்து, தலைவர்கள் அது குறித்து திருப்தி கொள்வதாகவும் அனுமதிப்பதாகவும் தெரிவித்தனர்''.

## 6. சுயாதீனமான முன்மொழிவுக்கான சூழமைவை விருத்தி செய்தல்.

ஷூறா என்பது -அனைத்துக்கும் முன்பு- சிந்திப்பதற்கும் உண்மையான கருத்து வெளிப்பாட்டுக்குமான சுதந்திரமாகும். சிந்தித்து கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் அற்ற ஷூறா வெறும் கேலிக் கூத்தாகி விடும்; அல்லது ஷூறா என்ற பெயர் தாங்கிய சூழ்ச்சியாகி விடும். அதாவது, வெளிப்படையில் அது கலந்தாலோசனை என்ற பெயரையும் வடிவத்தையும் பெற்றிருந்தாலும், இறுதியில் வெறும் தந்திரமாகவே அமையும்.

இந்த வகையில்தான், சிந்தனைச் சுதந்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் ஷூறா ஏற்கப் படுவதற்கான நிபந்தனைகளுள் ஒன்றாகிறது. அது ஷூறாவின் முன் நிபந்தனை மட்டுமன்றி, உடன் வர வேண்டிய நிபந்தனையும் கூட. ஆக- உண்மையான ஷூறா இடம்பெற வேண்டும் என நாம் விரும்பினால், அதற்கு முன்னரும் சுதந்திரம் இருக்க வேண்டும்; அது இடம்பெறும் போதும் சுதந்திரம் இருக்க வேண்டும். இந்த அடிப்படையில் ஷூறா என்பது சிந்தனை மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான நடைமுறை வடிவமாக மாறுகிறது; அதன் பணியாளனாகவும், அதனை பலப்படுத்தும் சாதனமாகவும், அதன் உறுதியான நிலைபேற்றுக்கான உத்தரவாதமாகவும் அமைகிறது.

சுதந்திரமும் உண்மைத் தன்மையும் கொண்ட கலந்தாலோசனைப் பண்பை ஒரு சமூகத்தில் நாம் பரப்பும் போது, அதிலுள்ள தனி மனிதர்களது மனநிலை, கலந்தாலோசனையில் பங்கேற்கவும் இதோபதேசம் வழங்கவும் விரும்புகின்ற மனநிலையாக மாற்றம் பெறுவதோடு, வாய்மையும் வெளிப்படைத் தன்மையும் கொண்டதாகவும் அமையும். இந்நிலையில், -ஆலோசனை கேட்கப்பட்டாலும் கேட்கப்படா விட்டாலும்- மனிதர்கள் தாமாகவே ஆலோசனை வழங்க முன்வருவர். இதற்கு மறுகிடையாக ஷூறாவும் அதற்கான சூழமைவும் இல்லாது போகுமாயின், அல்லது போலியான ஷூறா மேற்கொள்ளப்படுமாயின் மக்கள் ஆலோசனைச்

செயற்பாட்டை நிச்சயம் புறக்கணிப்பர். மட்டுமன்றி வஞ்சப் புகழ்ச்சியாளர்கள் தங்களது உள்நோக்கங்களை அடைந்து கொள்ளும் எண்ணத்துடன் அந்த இடத்துக்கு வந்து விடுவர்.

*''(நபியே) உமது இரட்சகன் வானவர்களை நோக்கி, 'நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை ஏற்படுத்தப் போகிறேன்' என்று கூறியபோது அவர்கள், 'பூமியில் விஷமம் புரிந்து இரத்தம் சிந்தக் கூடியோரையா அதில் ஏற்படுத்தப் போகிறாய்? நாமோ உன் புகழைத் துதித்து, உன் பரிசுத்தத்தைப் போற்றியவர்களாக இருக் கிறோம்!' என்று கூறினர்...'' (2: 30)*

என்று தொடங்கும் வசனங்களை இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் பதிவு செய்தோம். அல்லாஹ் இவ்வாறு தனது வான வர்களிடம் கூறியமையும், அதனைத் தொடர்ந்த உரையாடலும் கற்பித்தல் மற்றும் கௌரவித்தல் பாணியிலான ஒரு ஷூறா செயற்பாடே என இப்னு ஆஷூர் கருதுகிறார்.

அல்லாஹ்வுக்கும் வானவர்களுக்கும் இடையிலான இந்த உரையாடலில் நான் வேறொரு பாடத்தையும் காண்கிறேன். சிந்த னைச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் என்ற பாடம் அது. ஏனெனில், வானவர்கள் கேள்வி எழுப்பும் வடிவத்தி லான தங்களது வியப்பையும் ஐயுறவையும் வெளிப்படுத்துவதற்கு எந்த வகையிலும் சங்கடப்படவில்லை. மனிதப் படைப்பு குறித்த அவர்களது எச்சரிக்கை உணர்வு குறித்து அல்லாஹ்வும் கண்டிக் கவோ கடிந்து கொள்ளவோ இல்லை. மாற்றமாக- அவர்களுடன் உரையாடிய அல்லாஹ் உண்மையை அவர்களுக்கு விளக்கி ஐயத்தை நீக்கினான். இறுதியில் வானவர்கள் கூறினர்: *''நீ மிகத் தூயவன். நீ கற்றுத் தந்தது தவிர வேறு அறிவு எங்களுக்கில்லை. நிச்சயமாக அறிவு மிக்கவனும் ஞானம் நிறைந்தவனும் நீயே!'' (2: 32)*

ஒருமுறை ஒரு பெண் இறைத்தூதரிடம் வந்து தனது கணவன் தன்னை 'ளிஹார்' என்ற பெயரில் விலக்கி வைத்திருப்பது தொடர்பாக முறையிட்ட சம்பவத்தை நாமறிவோம். அந்த முறை யீடு ஒரு கட்டத்தில் எல்லை தாண்டி, நபி (ஸல்) அவர்களுடன் தர்க்கிக்கும் அளவுக்குச் சென்று விட்டது. இந்நிலையில்தான்,

அப்பெண்மணி குறித்து இறைவசனங்கள் இறங்கின. நபியவர்களுடன் தர்க்கித்தமைக்காக அவ்வசனங்கள் அவளைக் கண்டிக்கவில்லை; கடிந்து கொள்ளவும் இல்லை. அவளுக்கு நீதி வழங்கும் வகையிலும், அவளது செயற்பாட்டை ஏற்கும் வகையிலுமே அவை இறங்கின.

*''(நபியே) தனது கணவர் தொடர்பாக உம்முடன் தர்க்கித்து அல்லாஹ்விடம் முறையீடு செய்கின்ற பெண்ணின் பேச்சை அல்லாஹ் செவிமடுத்தான். உங்கள் இருவரதும் உரையாடலை அல்லாஹ் செவியேற்கிறான். நிச்சயமாக அல்லாஹ் நன்கு செவியுறுபவனாகவும், உற்று நோக்குபவனாகவும் இருக்கிறான்.'' (58:1)*

நபித்தோழர்கள் -ஆண்களாயினும் பெண்களாயினும்- தங்களது அபிப்பிராயங்களையும் தயக்கங்களையும் மறுப்புகளையும் எவ்வித அச்சமுமின்றி இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் முன்வைத்திருப்பதைப் பார்க்கிறோம். இதற்காக அத்தோழர்கள் -கடுமையாகவோ மென்மையாகவோ- எந்தக் கண்டனத்தையும் எதிர்கொண்டதில்லை. இறைத்தூதருடன் உரையாடும்போது மரியாதை மற்றும் ஒழுங்கு முறை சார்ந்த சில வரம்புமீறல்கள் நிகழ்ந்திருந்தாலும், அவ்வாறான சந்தர்ப்பத்தில் பேணப்பட வேண்டிய ஒழுங்குகள் குறித்து அல்-குர்ஆனே கவனயீர்ப்புச் செய்தது:

*''விசுவாசம் கொண்டவர்களே! நபியின் குரலுக்கு மேல் உங்கள் குரல்களை உயர்த்தாதீர்கள். நீங்கள் ஒருவரோடொருவர் சப்தமிட்டுப் பேசுவது போல் அவருடன் பேசாதீர்கள்!'' (49: 2)*

இவை வெறுமனே உரையாடும் முறைமையோடு சம்பந்தப்பட்ட ஒழுங்குகள் மட்டுமே. நபியவர்களது சபையிலும், அன்னாரது சில நடவடிக்கைகள் தொடர்பிலும் அன்னாரின் இறுதி நாட்கள் வரை தோழர்கள் பெற்று வந்த கருத்து வெளியீட்டுச் சுதந்திரத்தை அடக்குவதாகவோ கட்டுப்படுத்துவதாகவோ அவை இருக்கவில்லை. இருபது வயதையும் எட்டியிராத உஸாமா பின் ஸெய்தை அன்னார் படைத் தளபதியாக நியமித்தமை தொடர்பாக தோழர்கள் தங்கள் தயக்கத்தை வெளியிட்டபோது கூட அவர்களது

தவறை விளக்கி, உஸாமா படைத் தலைமைக்குத் தகுதியானவரே என்றும் தனது தீர்மானம் சரியானதே என்றும் புரிய வைத்ததைத் தவிர அன்னார் வேறெதையும் செய்யவில்லை. அது தொடர்பாக அன்னார் கூறியது இதுதான்:

''இவரைத் தலைவராக நியமிப்பதில் நீங்கள் குற்றம் காண்பது போலத்தான், இவரது தந்தை தலைவராக நியமிக்கப்பட்ட போதும் முன்னர் குற்றம் கண்டீர்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! அவரும் தலைமைக்கு மிகப் பொருத்தமானவராகவே இருந்தார். அவர் எனக்கு மிக விருப்பத்துக்குரியவராக இருந்தது போன்றே -அவருக்குப் பின்னர்- இவரும் எனக்கு மிக விருப்பத்துக்குரியவராக இருக்கிறார்''.

தோழர்கள் தெரிவிக்கும் கருத்துகள் சரியானவை எனக் காணும் பட்சத்தில், அவை தனது கருத்துக்கு எதிராக இருந்த போதிலும், நபியவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஹதீஸ் மற்றும் ஸீரா நூல்களில் இதற்கான உதாரணங்கள் ஏராளம். முஸ்லிம் கிரந்தத்தில் இடம் பெற்றுள்ள பின்வரும் அறிவிப்பு அத்தகைய ஒன்றே:

தபூக் படையெடுப்பு வேளையில் மக்களை பஞ்சம் பீடித் திருந்தது. அப்போது சில நபித்தோழர்கள், ''அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் அனுமதிப்பீர்களாயின் எங்களது ஒட்டகங்களை அறுத்துச் சாப்பிட முடியும். அதன் கொழுப்பைக் கொண்டு நாம் எண்ணெய் தடவிக் கொள்ளவும் முடியும்'' என்றனர். இதனைச் செவியுற்ற உமர் வந்து, ''அல்லாஹ்வின் தூதரே! அவ்வாறு செய்தால் நாம் பயணிப்பதற்கான வாகனங்கள் குறைந்து விடும். அதற்குப் பதிலாக அவர்களது கையிருப்பில் எஞ்சியுள்ள அனைத்து உணவுகளையும் கொண்டு வரச் செய்யுங்கள்; பின்னர் அவற்றில் விருத்தியைத் தருமாறு அல்லாஹ்வைப் பிரார்த்தியுங்கள்; அதன் மூலமாக அல்லாஹ் அவற்றில் அதிகரிப்பை ஏற்படுத்தலாம்!'' என ஆலோ சனை கூறினார். அதற்கு, ''ஆம்!'' எனக் கூறிய இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அவ்வாறே பிரார்த்தித்தார்கள்.

ஷூறாவும் சுதந்திரமும் ஒன்றையொன்று பலப்படுத்தும் இணை பிரியாத அம்சங்கள் என்பதே இங்கு நாம் கூற விரும்புவதாகும்.

இவை ஒவ்வொன்றும் மற்றையதில் தங்கி நிற்பவை. இரண்டிற்கும் இடையில் கருத்துகளிலும் ஒழுங்கு முறைகளிலும் தவறுகள் நிகழுமாயினும் அதனால் பாதிப்பெதுவும் இல்லை. ஏனெனில் அவற்றுக்கான நிவாரணியும் கூட ஷூறாவிலும் சுதந்திரத்திலும்தான் உள்ளது.

### 7. சிந்திப்பதற்கும் திட்டமிடுவதற்குமான ஆற்றலை விருத்தி செய்தல்.

ஷூறா என்பது கல்விக்கும் பயிற்றுவிப்புக்குமான தளம். மேற் குறித்த இலக்குகளுக்கும் பயன்களுக்கும் மேலதிகமாக- ஆலோசனை கேட்போர், வழங்குவோர் முதலிய அனைவருக்கும் அவர்களது சிந்தனா ஆற்றல்களையும் கள அனுபவங்களையும் விருத்தி செய்வதற்கான நடைமுறை வாய்ப்புகளையும், பாடங்களையும் அது வழங்குகின்றது. அந்த வகையில், பரஸ்பர கலந்துரையாடலானது ஓர் ஆய்வாகவும் கற்றலாகவும் புரிதலாகவும் அனுபவப் பெறுகையாகவும் உள்ளதெனலாம். ஷூறா செயற்பாட்டில் ஈடுபடுபவரை அது பல விடயங்கள் குறித்துச் சிந்திக்க வைக்கிறது. ஷூறா இல்லையெனில், அவ்விடயங்கள் பற்றி அவர் முன்பு சிந்தித்திருக்க மாட்டார்; அல்லது சிந்திக்கத் துணிந்திருக்க மாட்டார். அவை பற்றி அவர் தனியாகச் சிந்தித்திருந்தால் அல்லது தனியாகக் கையாண்டிருந்தால், முடிவு வேறு வகையிலும், கலந்தாலோசனையால் தோன்றும் நிலையை விட மாறுபட்டதாகவும் அமைந்திருக்கும்.

நபி (ஸல்) அவர்கள் இவ்வகையில் பல விடயங்கள் குறித்து தோழர்களிடம் ஆலோசனை கேட்டிருக்கிறார்கள். அவ்விடயங்கள் பற்றிய தெளிவு தன்னிடமிருந்த போதிலும் அவற்றின் மூலமாக அன்னார் தோழர்களது சிந்தனையைக் கிளறி விட்டார்கள்; புரிதலிலும் மதிப்பிடுவதிலும் உயர்ந்த நிலைக்கு அவர்களைக் கொண்டு சென்றார்கள். அல்லது தோழர்களுக்குக் கல்வியூட்டி அவர்களது புரிதலை விசாலித்து உயர்த்தினார்கள் என்றும் இதனைச் சொல்லலாம். அபுல் வலீத் அல்-பாஜீ குறிப்பிடும் இந்த உதாரணம் அவ்வகை சார்ந்ததாகும்:

விபச்சாரத்துக்கும் திருட்டுக்குமான தண்டனை குறித்து நபி (ஸல்) அவர்கள் தோழர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அதற்குத் தோழர்கள், ''அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்க றிந்தவர்கள்'' எனக் கூறினர். அப்போது நபியவர்கள், ''இவை மானக்கேடான செயல்கள். இவற்றுக்குத் தண்டனை உண்டு!'' எனப் பகன்றார்கள்.

அல்-பாஜீ தொடர்ந்து கூறுகிறார்: ''சட்ட வசனம் அருளப்படாத நிகழ்வுகள் குறித்து இஜ்திஹாத் மேற்கொள்ளுமாறு நபியவர்களும் தோழர்களும் ஏவப்பட்டிருக்கவில்லை எனில், தண்டனை பற்றிய வசனம் இறக்கப்படாத குற்றத்தைச் செய்தவருக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை எதுவென்று கலந்தாலோசனை செய்வதற்கு இடமிருந்திருக்காது...''

இவ்வாறுதான்- திரும்பத் திரும்ப ஷூறா நிகழ்ந்து, அதன் சிந்தனா மற்றும் அறிவியல் பயன்கள் தனிநபர்களிடம் பெருகி, சமூக அணிகளிலும் வாழ்வியல் துறைகளிலும் பரவும் போது, விடயங்களை நன்கு புரிந்து கவனம் செலுத்தக் கூடிய பெரும் எண்ணிக்கையினர் இறுதியில் தோன்றுவர்; பிரச்சினைகள், சவால் கள், வாழ்வின் தேவைகள் என்பவற்றை நன்கு புரிந்து திட்டமிட்டுக் கையாளக் கூடிய பல திறமைசாலிகள் உருவாகுவர்.

அல்லாஹ் மனிதனுக்கு அவனது அறிவு சார் யத்தனத்தின் ஊடாக சன்மார்க்க விவகாரங்களில் தீர்வு பெறக் கூடிய பரந்த தளங்களை விட்டு வைத்திருக்கிறான். உலக வாழ்வியல் பிரச்சி னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அதனை விடப் பரந்த தளங் களையும் விட்டு வைத்திருக்கிறான். இத்தகைய மனித யத்தனத்தின் மிக உயர்ந்த வடிவமாகவும் சீரிய வழிமுறையாகவும் இருப்பது ஷூறாவை அடிப்படையாகக் கொண்ட உழைப்பாகும். மட்டு மன்றி, சீரிய சிந்தனையினதும் அறிவார்ந்த உழைப்பினதும் பல்வேறு படித்தரங்களில் மனிதப் பகுத்தறிவைப் பயிற்று விப்பதற்கும் முன்னேற்றுவதற்குமான மிகச் சிறந்த வழியாக இருப்பது ஷூறா அடிப்படையிலான கள ரீதியான முயற்சியே!

இது இவ்வாறிருக்க- நமது முதுபெரும் அறிஞர்கள் கூட வாழ்வு பற்றிய அறிவையும், யதார்த்தம் பற்றிய அறிவையும், புதிது புதிதாகத் தோன்றும் உண்மையான வாழ்வியல் பிரச்சினைகள் பற்றிய அறிவையும் பெற்றுக் கொள்ளவில்லை எனில், மிகவும் அப்பாவித் தனமும் அறியாமையும் சிந்தனா ரீதியான பலவீனமும் கொண்டவர்களாகவே இருப்பர். இத்தகையோர் பயன் பெறவும், பிறருக்கு தங்களது அறிவுப் பெட்டகத்திலிருந்து பயனளிக்கவும், தங்களது காலம் மற்றும் சமூகம் தொடர்பான விவகாரங்கள் பற்றிய கலந்துரையாடல்களில் ஈடுபடுவது அவசியம். அவர்கள் ஷூறா செயற்பாட்டிலும், அது சார்ந்த அமைப்புகளிலும் ஈடுபடுவதானது இதனைச் சாத்தியப் படுத்துவதற்கு மிகச் சிறந்த நுழை வாயிலாகும். இது பிற மனிதர்களுக்கும் -அவரவர் அந்தஸ்துக்கும் துறைக்கும் ஏற்ப- பொருந்தலாம்.

## 8. செயற்படுத்தலுக்கும் ஆதரவளித்தலுக்குமான தயார் நிலையை பலப்படுத்தல்.

பரஸ்பர கலந்தாலோசனை, திருப்தி, சமநிலை, பொதுநிலைத் தன்மை என்பனவற்றின் அடியாகத் தோன்றும் தீர்மானங்களும் பொறுப்புகளும் திட்டங்களும் மக்களால் உற்சாகமாக வரவேற்கப் படுகின்றன. அவற்றைச் செயற்படுத்துவதிலும் வெற்றியடையச் செய்வதிலும் அவசியமான பொறுப்புகளைச் சுமப்பதிலும் அவர் கள் ஆர்வம் காட்டுகின்றனர். ஏனெனில், இந்நிலையில் அவை சட்டபூர்வ அங்கீகாரத்தையும் நம்பகத் தன்மையையும் பெற்றிருக் கின்றன. அவை தங்களிலிருந்து தங்களுக்காகவே தோன்றியவை என அவர்கள் உணர்கின்றனர். தங்களது ஆலோசனையிலிருந்து அல்லது தங்களைப் பிரதிநிதித்துவம் செய்வோரது ஆலோசனை யிலிருந்து அவை பிறந்திருப்பதாக உணர்கின்றனர். எனவே, நடை முறைப்படுத்தும் பொறுப்பு வழங்கப் படாதவர்கள் கூட அவற் றைப் பாதுகாப்பதிலும் ஆதரிப்பதிலும் ஈடுபாடு காட்டுகின்றனர்.

ஒருதலைப் பட்சமாக, அல்லது எதேச்சாதிகாரமாக எடுக்கப் படும் தீர்மானங்களையும் பொறுப்புகளையும் திட்டங்களையும்

பொறுத்தவரையிலோ, அவை அதிகபட்சமாக அலட்சிய மனப் பாங்குடனேயே மக்களால் எதிர்கொள்ளப்படும். சிலபோது மக்கள் அவற்றைத் தவிர்க்கவோ அல்லது எதிர்க்கவோ அல்லது சாட வோ கூட முற்படலாம். அவற்றை நடைமுறைப் படுத்துமாறு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டாலும், மிக மந்தமாகவும் மோச மாகவுமே நடைமுறைப்படுத்துவர்.

## 9. ஒற்றுமையும் ஐக்கியமும்.

முன்னர் கூறியது போன்று, ஷூறா செயற்பாடானது பொதுத் தலைமைகளுக்கும் அவற்றைப் பொறுப்பேற்போருக்கும் அவர் களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கும் தீர்மானங்களுக்கும் மிக உயர்ந்த சட்ட அங்கீகாரத்தையும் நம்பகத் தன்மையையும் பெற்றுக் கொடுக்கிறது. இதனால் மிகத் திருப்தியுடன் மக்கள் அவற்றை ஏற்றுக் கட்டுப்படும் நிலை உருவாகிறது. ''அவர்கள் இருவருக்குமிடையிலான பரஸ்பர திருப்தி மற்றும் கலந்தாலோ சனை என்பனவற்றின் அடிப்படையில்'' என்ற வசனத்தில் அல்லாஹ் கலந்தாலோசனையையும் பரஸ்பர திருப்தியையும் இணைத்துக் கூறியுள்ளான். ''ஏனெனில், கலந்தாலோசனை மூல மாக சரியான கருத்து வெளிப்படுகிறது; பரஸ்பர திருப்தியும் ஏற்படுகிறது'' என அல்லாமா இப்னு ஆஷூர் இது பற்றிக் குறிப் பிடுகிறார். ஷூறா என்பது சமூகத்துக்கு மத்தியில் பிணைப்பை ஏற்படுத்துகிறது என்ற இப்னுல் அறபீயின் கூற்றை முன்னரும் தந்துள்ளோம்.

ஆல இம்றான் அத்தியாயத்திலும் இக்கருத்தே இடம்பெற்றுள் ளது. நபியவர்கள் கடுகடுப்பானவராகவும் கடின சித்தம் கொண்ட வராகவும் இருந்தால் மக்கள் அன்னாரை விட்டு விரண்டோடி விடக் கூடிய நிலையும், அதற்கு மாற்றமாக இருந்தால் ஏற்படக் கூடிய நிலையும் இங்கு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது. அவர்களை மன்னித்தல், அவர்களுக்காக பாவமன்னிப்பு கோரல், அவர்களுடன் கலந்தாலோசனை செய்தல் என்பனவே அந்த மாற்றமான நிலை யாகும். ஆக- கடின சித்தமும் கடுகடுப்பும் மனிதர்களைப் பிரிந்து

விரண்டோடச் செய்கிறது; மன்னிப்பும் பரஸ்பர ஆலோசனையும் அவர்களைப் பிணைக்கிறது.

*''அனைத்து (பொது) விவகாரங்களிலும் அவர்களுடன் கலந்தா லோசனை செய்வீராக!''* என்ற கட்டளை மக்களது மனதில் திருப்தியை உண்டு பண்ணுவதற்கும், அவர்களது அந்தஸ்தை உயர்த்துவதற்குமாகவே நபியவர்களுக்கு இடப்பட்டது என ஸலஃப் அறிஞர் ஒருவர் கூறியதாக அறிவிக்கப்படுகிறது. இதனை பலமாக மறுத்துரைக்கும் அல்-ஜஸ்ஸாஸ் இவ்வாறு கூறுகிறார்:

அவர்களுக்கு மனத்திருப்தியை வழங்கும் வகையிலும், அவர் களது அந்தஸ்தை உயர்த்தும் வகையிலுமே கலந்தாலோசனை செய்யுமாறு நபியவர்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது என்றும், அதில் முஸ்லிம் சமூகம் அன்னாரை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்றும் கூறுவது ஏற்கப்பட முடியாதது. ஏனெனில், ஆலோசனை கேட்கப்பட்ட விடயத்தில் சரியான கருத்தைப் பெறுவதற்காக அவர்களது முழு யத்தனத்தையும் செல விடுமாறு வேண்டப்பட்டதன் பிறகு அக்கருத்து செயற்படுத்தப் படுவதில்லை என்றோ, எவ்வகையிலும் ஏற்கப் படுவதில்லை என்றோ அவர்களுக்குத் தெரிய வருமாயின் அது மனத்திருப்தியை கொடுக்கப் போவதுமில்லை; அவர்களது அந்தஸ்தை உயர்த்தப் போவதும் இல்லை. மட்டுமன்றி, தங்களது கருத்துகள் ஏற்கப் படாததன் மூலமாக, தாங்கள் இழிவுபடுத்தப் பட்டதாகவே அவர்கள் உணர்வர். எனவே இது எவ்வகையிலும் ஏற்க முடியாத அர்த்தமற்ற வியாக்கியானமாகும்''.

என்னைப் பொறுத்த வரை, உள்ளங்களை திருப்திப்படுத்து வதும், அவற்றுக்கிடையில் பிணைப்பை ஏற்படுத்துவதும் ஷூறா வின் சரியான நோக்கமொன்றாகவும் விளைவொன்றாகவும் உள்ளது என்றே தோன்றுகிறது. ஏனெனில், அது முதன்மையான, அடிப்படையான நோக்கத்தை செயலிழக்கச் செய்து விடாது. சரியான கருத்து வெளிப்படவும், செயற்படுத்தப்படவும் வேண்டும் என்பதே அந்த அடிப்படையான நோக்கம். இந்த வகையில், மனத்

திருப்தியை ஏற்படுத்துவதும், உள்ளங்களுக்கிடையில் பிணைப்பை ஏற்படுத்துவதும் மேற்சொன்ன அடிப்படையான நோக்கத்தைத் தொடர்ந்ததாகவும், அதன் விளைவுகளில் ஒன்றாகவுமே கருதப்பட வேண்டும்.

மனிதர்களது விவகாரங்கள் அவர்களுக்கு மத்தியிலான ஷூறா வின் அடிப்படையில் அமைந்திருக்குமாயின்... அவர்களுக்குப் பொறுப்பானவர்கள் அவர்களிடம் கலந்தாலோசித்து அபிப்பிராயங் களை கவனத்தில் கொள்வார்களாயின்... பிணைப்பும் ஒருமைப் பாடும் ஒற்றுமையும் ஏற்படுவதற்கான மகத்தான வழியாக அது அமையும். இந்நிலை இல்லாது போகும் போதே பிரிவும் முரண் பாடும் ஏற்படத் தொடங்கும். பலப்பிரயோகத்தின் மூலமும், நிர்ப்பந்தத்தின் மூலமும், வேறு வழிமுறைகள் ஊடாகவும் ஒற்றுமையைச் சாதிக்க முடியுமாயினும், அது பரஸ்பர திருப்தியும் பிணைப்பும் அற்ற ஒற்றுமையாகவே இருக்கும். காலம் கடந்தாவது அந்த ஒற்றுமை பிரிவினையாகவும் பிளவாகவும் கிளர்ச்சியாகவும் மாறுவது நிச்சயம்.

### 10- மோசமான விளைவுகளை சகித்துக் கொள்ளல்.

குறித்ததொரு தீர்மானத்தினால் அல்லது திட்டத்தினால் தோன் றக் கூடிய மோசமான அல்லது பயங்கரமான அல்லது தீங்கு தரக்கூடிய பின்விளைவுகளையே இங்கு நான் கருத்தில் கொள் கிறேன். எடுக்கப்பட்ட தீர்மானத்தில், அல்லது அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தில் ஏற்பட்ட தவறினால் இவ்விளைவுகள் தோன்ற முடியும். அவ்வாறே- தீர்மானத்துக்கு அப்பாற்பட்ட அல்லது எதிர்பாராத காரணங்களால், அல்லது தீர்மானத்தை எடுத்தவர் களதும் திட்டமிட்டவர்களதும் நாட்டத்துக்கு அப்பாற்பட்ட கார ணங்களால் கூட அவை ஏற்பட்டிருக்க முடியும்.

எவ்வாறிருப்பினும், குறித்த தீர்மானம் ஒருதலைப் பட்சமாக அல்லது எதேச்சாதிகாரமாக எடுக்கப் பட்டிருந்தால், மக்கள் அதன் விளைவுகளை ஏற்காமல் நழுவி விடுவார்கள்; அவற்றுக்கு தாம் பொறுப்பில்லை என்று விலகிக் கொள்வார்கள். அதனை

மேற்கொண்டவர் மீதே அவற்றைச் சுமத்துவார்கள். மட்டுமன்றி, அவர் மீதான அவர்களது மனக்கசப்பு இன்னும் அதிகரிக்கும். மக்களது மன நிலையிலும், குறித்த தீர்மானத்துக்கும் செயற் படுத்தலுக்கும் பொறுப்பாக இருந்த அதிகாரிகளுடனான அவர் களது தொடர்பிலும் எதிர்மறையான விளைவுகளே தோன்றும்.

இதற்கு மறுகிடையாக, அத்தீர்மானம் ஷூறா அடிப்படை யிலும் கூட்டுத் திட்டமிடலின் அடிப்படையிலும் எடுக்கப் பட்டிருக்குமாயின், பொறுப்பாளரும் அவரோடிருப்போரும் அப் போது தாங்கள் செய்ய வேண்டியதைச் செய்திருப்பார்கள்; கவனிக்க வேண்டியதை கவனித்திருப்பார்கள்; அந்தந்தத் துறைகள் சார்ந்தோரை தங்களுடன் சேர்த்துக் கொண்டிருப்பார்கள்; தமக்கும் தமது சமூகத்தினருக்கும் தேவையான முன்னெச்சரிக்கை நட வடிக்கையை எடுத்திருப்பார்கள். இதன் மூலமாக, குறித்த தீர் மானத்தை எடுப்பதில் ஏதோவொரு வகையில் தாங்களும் பங்கெடுத்திருப்பதாக மக்கள் உணர்வதுடன், தாம் அனைவரும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்றும் உணர்வர். எனவே பொறுப்புகளைச் சுமப்பதிலும், அவற்றின் மானசீக மற்றும் பௌதீகச் செலவுகளை பிரித்தெடுத்துக் கொள்வதிலும் மனமுவந்து அவர்கள் ஈடுபடுவர். இக்கருத்திலேயே கலாநிதி முஹம்மத் அப்துல் காதிர் அபூ ஃபாரிஸ் இவ்வாறு கூறுகிறார்:

''ஷூறா என்பது பொறுப்பை பகிர்ந்தளிக்கும் செயற்பாடு. அந்த வகையில் அதன் விளைவு ஒருவரது தோளில் மாத்திரம் சுமத்தப் படாமல், அதன் இனிமையும் கசப்பும் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும். இந்நிலையில், ஷூறாவின் விளைவு விரும் பத்தகாததாக இருந்தாலும், மனிதர்கள் அதற்காக ஒருவரையொருவர் கடிந்து கொள்வதும், ஒருவருக்கெதிராக மற்றவர் சதித் திட்டம் தீட்டுவதும், ஒருவரோடொருவர் பிணக்குறுவதும் தவிர்க்கப் படும்''.

# அத்தியாயம் இரண்டு:

## ஷூறா செயற்பாட்டின் அடிப்படைப் பிரச்சினைகள்

## ஷூறா செயற்பாட்டின் அடிப்படைப் பிரச்சினைகள்

இஸ்லாம் 'ஷூறா' என்ற கொள்கையை ஏற்படுத்தி, முஸ்லிமின் ஆளுமையிலும் நடத்தையிலும் ஓர் அடிப்படையான பண்பாகவும் மனிதர்களுக்கிடையிலான பொது விவகாரங்களையும் நலன்களையும் திட்டமிடுவதில் மிகப் பெரும் அடிப்படையொன்றாகவும் அதனை ஆக்கிய போதிலும் அச்செயற்பாடு மேற்கொள்ளப் படுவதற்கான வரையறுக்கப்பட்ட முறையொன்றையோ மாதிரியொன்றையோ இட்டு வைக்கவில்லை; அதற்கென்று எந்த நிபந்தனையையும் கூட அது ஏற்படுத்தவில்லை. மாறாக, மனிதர்களது அனுமானத்திற்கும் தேர்வுக்குமே அதனை இஸ்லாம் விட்டு வைத்துள்ளது; அல்லது அவர்களது கலந்தாலோசனைக்கும் பரஸ்பர உடன்பாட்டுக்கும் விட்டுள்ளது.

தனி மனிதர்களது தனிப்பட்ட -குடும்ப விவகாரங்கள் தொடர்பான ஷூறாவைப் பொறுத்தவரை அது ஓர் எளிமையான விடயம். அநேக சந்தர்ப்பங்களில் அது விரும்பத்தக்க அம்சமேயன்றி கடமையானதல்ல. எனவே அது மேற்கொள்ளப்பட வேண்டிய முறை மற்றும் அதன் விரிவான விளக்கங்கள் குறித்து பேசவே வேண்டியதில்லை.

இத்தகைய விவகாரங்களில் ஷூறா என்பது ஒரு சுமையான செயற்பாடாக அல்லது பயன்குறைந்த சிரமமாக மாறி விடாதபடி

மிக இலகுவாக அமைய வேண்டும் என்பதே அடிப்படையில் வேண்டப்படுவதாகும். அந்தவகையில் ஒவ்வொருவரும் தான் விரும்பியவருடன் விரும்பியவாறு கலந்தாலோசனை செய்து கொள்ள முடியும்.

ஆக- இப்போதைக்கு நமது கவனத்துக்கு உட்படுவது பொது வான ஷூறா அல்லது பொது விவகாரங்களிலான ஷூறாவே. தேசங்கள், சமூகங்கள், குழுமங்கள் என்பவற்றின் விவகாரங் களைத் திட்டமிடுவதற்கும் நடாத்திச் செல்வதற்குமான ஷூறா அது. பலவாறு பல்கிப் பெருகும் நிறுவன மற்றும் நிறைவேற்று முறைமை சார்ந்த விரிவான விளக்கங்களை வேண்டி நிற்கும் ஷூறாவும் அதுவே. அதற்கே ஓர் ஒழுங்கமைப்பும் விரிவான சட்ட நியமங்களும் அவசியப்படுகின்றன.

இந்த ஒழுங்கு அல்லது ஷூறாவை மேற்கொள்வதற்கு அவ சியமான இவ்விரிவான சட்ட நியமமே இஸ்லாமிய சட்ட அடிப்படைகளின் சட்டகத்தினுள் நின்று ‘இஜ்திஹாத்’ மேற்கொள் ளப் படுவதற்கென ஷரீஆ விட்டு வைத்த பகுதியாகும். இது பற்றி நாம் பின்னர் ஓர் அத்தியாயத்தில் பேசவுள்ளோம் - இன்ஷா அல்லாஹ்! இப்போது நாம் கலந்துரையாட விரும்புவது பொது விவகாரங்களிலும் அவற்றுக்கான கூட்டுத் திட்டமிடலிலும் ஷூறாவை நிலைநாட்டுவதற்கும் செயற்படுத்துவதற்குமான சில அடிப்படைகள் அல்லது ஒழுங்குமுறை சார்ந்த முழுமொத்த அம் சங்கள் பற்றியாகும். இவை பற்றிக் கூட வெளிப்படையாக அல்லது குறிப்பாக எங்கும்சட்ட வசனங்களில் சொல்லப்படவில்லை. ஆயி னும், ஷரீஆவின் வசனங்கள் மீதான ஆழ்ந்த வாசிப்பு மற்றும் நபித்துவக் காலத்திலும், நேர்வழி நின்ற ஃகலீபாக்கள் காலத்திலும் பின்பற்றப்பட்ட ஷூறா நடைமுறை என்பவற்றிலிருந்து அவை சாராம்சமாகத் திரட்டப்பட முடியும்.

*பகுதி ஒன்று:*

## ஆலோசனை கேட்கத் தகுதியுடையோர் யாவர்?

*ஷூறாவின் அந்தஸ்து, அதன் செயற்பாடுகள், துறைகள் என்பவற்றைக் குறுகிய வட்டத்தினுள் வைத்து நோக்கும் நிலைப்பாடுகள் குறித்து முன்னர் நாம் விளக்கியிருப்பதுடன் அவற்றுக்கான மறுப்பையும் தந்தோம். இவ்வாறான நிலைப்பாடுகள் ஷூறாவில் ஈடுபடுத்தப்பட முடியுமானோரின் வட்டத்தையும் சுருக்கி நோக்கும் நிலைப்பாட்டுக்கு இட்டுச் சென்றிருப்பதையும் இங்கு நாம் குறிப்பிட வேண்டும். எந்தளவுக்கெனில், ''அனைத்து (பொது) விவகாரங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்வீராக!'' என்று அல்லாஹ் நபியவர்களுக்கு இட்ட கட்டளை மூலமாகக் குறிக்கப்படுவது அபூபக்கரும் உமருமே என சிலர் விளக்கமளித்துள்ளனர். அல்-ஹாபிழ் இப்னு ஹஜர் கூறுகிறார்: ''இங்கு கலந்தாலோசனை விடயத்தில் குறிப்பாக்கப் பட்டிருப்பது அபூபக்கரும் உமருமே என இப்னு அப்பாஸ் கூறியதாக அஸ்- ஸுஹைலி வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது''. தொடர்ந்து அவர் இவ்வாறு கூறுகிறார்:*

*''இதனைப் பலப்படுத்த தொடர்வரிசை ஒன்றினை 'ஃபழாயிலுஸ் ஸஹாபா'வில் அஸத் பின் மூஸா வாயிலாகவும், 'அல்-மஃரிபா'வில் யஅகூப் பின் ஸுஃப்யான் வாயிலாகவும்*

கண்டறிந்தேன்... அதில் நபி (ஸல்) அவர்கள் அபூபக்கரையும் உமரையும் நோக்கி இவ்வாறு கூறுகிறார்கள்: ''நீங்கள் இருவரும் ஒரு விடயத்தில் உடன்படுகிறீர்கள் எனில், நீங்கள் தரும் ஆலோசனைகளுக்கு நான் மாறாக நடக்கவே மாட்டேன்''

இதற்குப் பிறகு அல்-ஹாபிழ் இவ்வாறு குறிப்பிடுகிறார்: ''எனினும் வரையறுக்கப் படுவதற்கான சான்றெதுவும் இதில் இல்லை'' அதாவது, நபி (ஸல்) அவர்களது கலந்தாலோசனைக்கு அபூபக்கரும் உமரும் மாத்திரம் குறிப்பாக்கப் படுவதற்கான எந்த ஆதாரமும் இவ்வறிவிப்பில் கிடையாது.

அல்-காழீ இப்னுல் அறபியோ இவ்விடயம் தொடர்பாக தீர்மானகரமாக இவ்வாறு கூறுகிறார்: *''அனைத்துப் பொது விவகாரங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசிப்பீராக!''* என்ற இறைவாக்கின் மூலம் நாடப்படுவது எல்லா நபித் தோழர்களும்தான்!''

பின்னர், ''இங்கு குறிக்கப்படுவோர் அபூபக்கரும் உமருமே!'' எனக் கூறுவோரின் நிலைப்பாடு குறித்து அவர் இவ்வாறு மறுப்பு வழங்குகிறார்:

''அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் இதற்குப் பொருத்தமானவர்களும் மிகத் தகுதியானவர்களும்தான். எனினும், இது அவர்களை மாத்திரம் வரையறுத்துக் கூறவில்லை. அவ்வாறு அவர்களை மாத்திரமே வரையறுப்பதாகக் கூறுவது ஆதாரமற்ற விடயமாகும். ஏனெனில், ''வீட்டைப் பொறுத்து எனக்கு ஆலோசனை வழங்குங்கள்...'' என நபியவர்கள் தமது தோழர்களை நோக்கிக் கூறியதாக நம்பத்தகுந்த அறிப்புகள் அன்னாரது வரலாற்றில் வந்துள்ளன.

உண்மையில் இப்னுல் அறபி தந்துள்ள இந்த உதாரணம் மட்டுமே நம்மிடம் இருந்தால் கூட, அபூபக்கரும் உமரும் மட்டும்தான் நபியவர்களது கலந்தாலோசனைக்குத் தகுமானவர்களாக இருந்தனர் என்ற வாதத்தை முறியடிப்பதற்கும், பொதுவான தோழர்களிடமும் நபியவர்கள் ஆலோசனை செய்திருக்கிறார்கள்

என்பதை உறுதிப்படுத்துவதற்கும் அது போதுமானது. அதாவது நபி (ஸல்) அவர்களது கலந்தாலோசனைச் செயற்பாடு அபூபக்கர் மற்றும் உமருடன் அல்லது அவர்களுடன் வேறு சில தோழர்களுடன் மாத்திரம் மட்டுப் பட்டிருக்கவில்லை. -இப்னுல் அறபீ சொல்வது போல்- அனைத்து நபித் தோழர்களையும் இச்செயற்பாடு உள்ளடக்கியிருந்தது.

நபி(ஸல்) அவர்கள் எண்ணற்ற நபித் தோழர்களிடம் ஆலோசனை செய்திருக்கிறார்கள்; சிலபோது பிரசங்க மேடையில் இருந்தவாறு நூற்றுக் கணக்கானோரிடம் ஆலோசனை செய்திருக்கிறார்கள்; தனித்தனி நபர்களாக, இருவராக, மூவராக, நால்வராக உள்ள நிலையிலும் கலந்தாலோசனை நடாத்தியிருக்கிறார்கள். ''மனிதர்களே! எனக்கு ஆலோசனை தாருங்கள்!'' என நபியவர்கள் கூறும் அல்லது அதனையொத்த பொதுவான அமைப்பிலான வசனங்களைக் கொண்ட எத்தனை அறிவிப்புக்கள்தான் வந்திருக்கின்றன! பிரபலாமான அத்தகைய கலந்துரையாடல் செயற்பாடுகள் ஹதீஸ் மற்றும் ஸீறா நூல்களில் விரவிக் காணப்படுகின்றன. இந்த ஆய்வின் இடையிடையேயும் அவற்றுள் சில குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே அவற்றைத் திரும்பத் திரும்பக் கொண்டு வந்து ஆய்வை நீளச் செய்வதற்கு எந்த அவசியமும் இல்லை.

மட்டுமன்றி, *''அனைத்துப் பொது விவகாரங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யுங்கள்''* என்ற வசனமும், *''அவர்களது அனைத்து (பொது) விவகாரங்களும் அவர்களுக்கு மத்தியிலான ஷூறாவின் அடிப்படையில் அமைந்திருக்கும்''* என்ற வசனமும் ஷூறா செயற்பாட்டின் பொதுமைக்கு அடிப்படையாக அமைகின்றன.

இவற்றுள் முதல் வசனத்தின் போக்கினை -நினைவூட்டலுக்காக- இங்கு மீண்டும் தருகிறோம்:

*''அல்லாஹ்வின் கிருபை காரணமாகவே நீர் அவர்களுடன் மென்மையாக நடந்து கொண்டீர். கடுகடுப்பானவராகவும் கடின சித்தம் கொண்டவராகவும் நீர் இருந்திருந்தால் அவர்கள் உம்மை*

*விட்டு விலகியோடியிருப்பர். எனவே அவர்களை மன்னிப்பீராக! அவர்களுக்காக பாவமன்னிப்புக் கேட்பீராக! அனைத்துப் (பொது) விவகாரங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்வீராக!''*

இங்கு வசனத்தின் ஆரம்பத்திலிருந்து சுட்டப்படும் அதே மனிதர்கள்தான் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கலந்தாலோசனை புரிய வேண்டும் என்ற ஏவலில் சுட்டப்பட்டவர்களும் என்பதில் எந்தக் கருத்து வேறுபாட்டுக்கும் இடமில்லை. அல்லாஹ்வின் கிருபையால் நபியவர்கள் மென்மையாக நடந்து கொண்ட மனிதர்கள் அவர்கள்தான். அந்த மென்மை இல்லையெனில் அன்னாரை விட்டு அவர்கள் வெருண்டோடி இருப்பர். அவர்களை மன்னிக்குமாறும், அவர்களுக்காக பாவ மன்னிப்புக் கேட்கு மாறும்தான் அல்லாஹ் நபியவர்களுக்குக் கட்டளை இட்டான். ஆக- இங்கு இடம்பெறும் பிரதிப்பெயர்ச் சொல்லும், அது சுட்டும் நபர்களும் ஒரே வகையான நபர்களே. நபித்தோழர்களே அவர்கள்; இறைத்தூதர் (ஸல்) அவர்களை விசுவாசம் கொண்டவர்களே அவர்கள்.

முதல் வசனம் தொடர்பான நமது இக்கூற்று இரண்டாவது வசனத்துக்கும் பொருந்தும். அந்தவகையில், தங்களது அனைத்துப் பொது விவகாரங்களையும் ஷூறாவின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளும் அவர்களே அல்லாஹ்வை விசுவாசம் கொண்டவர்கள்; தங்கள் ரட்சகனிடம் பொறுப்புச் சாட்டுபவர்கள்; பெரும் பாவங் களையும் மானக்கேடான செயல்களையும் தவிர்ந்திருப்பவர்கள்; தங்களது ரட்சகனின் அழைப்பை ஏற்று தொழுகையை நிலை நாட்டுபவர்கள்; அல்லாஹ் வழங்கிய செல்வத்திலிருந்து பிறருக்கு வழங்குபவர்கள். ஏனெனில், இவ்வசனத் தொடரில் ஒரு பகுதி பொதுவான விசுவாசிகள் சமூகத்தைக் குறிப்பதாகவும், மற்றும் ஒரு பகுதி இன்ன இன்ன நபர்களை அல்லது குறிப்பிட்ட ஒரு தொகுதி நபர்களை மாத்திரம் குறிப்பதாகவும் கொள்ளப்படுவது பொருளற்றது. பொதுவாகக் கூறப்பட்ட எந்த விடயமும் அது குறிப்பாக அல்லது வரையறுக்கப்பட்டதாகக் கொள்ளப்படுவதற் கான உறுதியான சான்று தோன்றும் வரை பொதுவாகவே கொள்ளப்பட வேண்டும்.

### ஷூறா செயற்பாட்டில் ஆணும் பெண்ணும் சமம்:

ஷூறா செயற்பாடு பொதுவானது என்ற இந்த நிலைப்பாட்டி னுள் ஆண்களும் பெண்களும் அடங்குவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அந்தவகையில், ஷூறா என்ற சொல்லாடலில் ஆண்களின் இடத்தை விட பெண்களின் இடம் எவ்வகையிலும் மாறுபட்டதல்ல. மட்டுமன்றி, ஷரீஆவின் அனைத்துப் பொதுவான சொல்லாடலிலும் -குறிப்பான சான்றுகள் மூலமாக விதிவிலக்காக நோக்கப்படும் நிலைகளைத் தவிர- பின்பற்றப்படுகின்ற அடிப் படையும் இதுவே.

பொதுவான ஷூறா களத்தில் பெண்களின் பிரசன்னத்தை ஏற்க மறுக்கின்ற அல்லது அது குறித்து தயக்கம் காட்டுகின்ற பலர் இன்னும் காணப்படும் நிலை இல்லையெனில், இவ்விடயத்தை இங்கு நாம் கலந்துரையாடலுக்கு எடுக்காது விட்டிருக்கலாம். பெண்கள் மீது நீண்ட பல நூற்றாண்டுகளாக திரட்சியடைந்து வந்த பாரபட்சமான நிலைப்பாடுகளும், சில ஷரீஆ வசனங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் வழங்கப்பட்ட கண்மூடித்தனமான-தீவிர வியாக்கியானங்களுமே இந்நிலை தோன்றக் காரணமாகியது.

இங்கு நாம் முதலில் நினைவூட்டவும் உறுதிப்படுத்தவும் வேண்டிய உண்மையொன்று உள்ளது. அதாவது ஷரீஆவின் அனைத்துக் கட்டளைகளும் ஆண்களைப்போல பெண்களையும் விளித்துப் பேசும் வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. குறித்த வசனப் பிரயோகம் -ஒருமையிலோ பன்மையிலோ- ஆண்பால் அமைப்பில் வந்திருந்தாலும் அது பெண்களையும் உள்ளடக்கு வதாகவே கொள்ளப்பட வேண்டும். அதேபோல், ஆண்களில் அனைத்துப் பிரிவினரும் பெண்களில் அனைத்துப் பிரிவினரும் இதனுள் அடங்குவர். விதிவிலக்காக எவரும் நோக்கப்படுவதாயின், அதற்கான சான்று காணப்பட வேண்டும். 'இல்முல் கலாம்' சார்ந்த சிலரது கோட்பாட்டுத் தாக்கத்தைத் தவிர்த்து நோக்கினால், பெரும்பான்மை இஸ்லாமிய அறிஞர்களால் பொதுவாக ஏற்றுப் பின்பற்றப்படும் நடைமுறை இதுவே.

இவ்விவகாரத்தை அழகிய முறையில் அணுகி, தீர்க்ககரமான முடிவை முன்வைத்தவராக 'ளாஹிரீ' சட்ட சிந்தனை மரபைச் சேர்ந்தவரான இமாம் இப்னு ஹஸ்ம் கொள்ளப்பட முடியும். இது குறித்த அவரது சொல்லாடலில் ஒரு பகுதி வருமாறு:

'செய்யுங்கள்' என்ற பன்மைச் சொற்பிரயோகம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரியது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஆண் களுக்கும் பெண்களுக்கும் சமமாகவே அனுப்பப்பட்டார்கள். ஆண்களையும் பெண்களையும் நோக்கிய அன்னாரது விளிப்பு ஒன்றாகவே அமைந்திருந்தது. எனவே தெளிவான வசனம் எதுவுமின்றி அல்லது ஏகோபித்த அபிப்பிராயம் (இஜ்மாஃ) எதுவுமின்றி ஒரு விடயத்தில் பெண்களைத் தவிர்த்து ஆண்களை மாத்திரம் குறிப்பாக்குவது ஆகுமானதன்று.''

மாற்றுக் கருத்துடையவர்களின் அனைத்து வாதங்களையும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தும் இமாம் இப்னு ஹஸ்ம், வெறும் எடுகோளான வாதங்களுக்குக் கூட இவ்வாறு பதிலளிக்கிறார்:

''அவ்வாறாயின் சன்மார்க்கத்துக்காக போராடுவதும் நன்மை யை ஏவி தீமையை விலக்குவதும் பெண்களுக்குக் கடமை யாக்கப்பட வேண்டியிருக்கும்' என அவர்கள் கூறுவதாயின், அதற்கும் -அல்லாஹ்வின் உதவியால்- நாம் கூறுவது இதுதான்: ஆம்; அவையும் கூட ஆண்களைப் போன்று பெண்களுக்கும் கடமையானதே''.

இறுதியாக அவர் தீர்க்கமாக இவ்வாறு கூறுகிறார்: ''இறைத்தூதர் (ஸல்) ஆண்களைப் போல் பெண்களுக்கும் சேர்த்தே அனுப் பப்பட்டார்கள் என்பதையும் இஸ்லாம் என்ற ஷரீஆ ஆண்களைப் போல் பெண்களுக்கும் பொதுவானது என்பதையும் நாம் அறிந்து கொண்டோம். இதற்கு மாற்றமான கருத்தைக் கொள்வதாயின், ஆண்களைக் குறிப்பாக்கி அல்லது பெண்களைக் குறிப்பாக்கி சான்றெதுவும் வந்திருக்க வேண்டும். அந்தவகையில், ஷரீஆ வசன மொன்றின் மூலமாக அல்லது 'இஜ்மாஉ' மூலமாக -குறிப்பாக்கப் படாமல்- அனைவருக்கும் பொதுவாக வந்த ஒன்றை பெண்களை

*விடுத்து ஆண்கள் மட்டும் தனியாக எடுத்துக் கொள்ளக் கூடாது என இந்த அனைத்தும் கட்டாயப்படுத்துகின்றன.''*

*இப்னு ஹஸ்மின் இக்கூற்றுக்கு சான்று தருவதாக ஆயிஷா (ரழி) அறிவிக்கும் பின்வரும் ஹதீஸ் அமைந்துள்ளது:*

*'ஓர் ஆண் (தூங்கியெழும் போது) பிறப்புறுப்புப் பகுதியில் ஈரலிப்பை அவதானித்தால், அதற்காக குளிக்க வேண்டுமா?' என இறைத்தூதரிடம் ஒருமுறை வினவப்பட்டது. அதற்கு அன்னார், ''அவர் அதற்காகக் குளிக்க வேண்டியதில்லை'' என பதிலளித் தார்கள். இதனைச் செவியுற்ற உம்மு ஸுலைம், 'பெண் அவ்வாறு கண்டாலுமா?' என வினவினார். அதற்கு நபியவர்கள், ''ஆம்; நிச்சயமாக பெண்கள் ஆண்களின் சரி பாதிகளாவர்'' எனக் கூறினார்கள்.*

*இந்த ஹதீஸுக்கான விளக்கத்தில் அல்-ஃகத்தாபீ கூறுகிறார்:*

*''இதில் ஒப்புமை நியாயவியலுக்கும் (அல்-கியாஸ்), ஒன்றின் தீர்ப்பை அதனைப் போன்ற இன்னொன்றிற்கு வழங்குவதற்குமான சான்று கிடைக்கிறது. விளிப்புச் சொல் இலக்கண ரீதியாக ஆண் களைக் குறிப்பதாக அமைந்தாலும், அது பெண்களுக்கான விளிப்பாகவும் கொள்ளப்பட வேண்டும் என்பதை இது காட்டு கிறது. குறிப்பாகப் பொருளுணர்த்தும் சான்றுகள் காணப்படுகின்ற இடங்கள் மட்டுமே குறிப்புப் பொருளில் நோக்கப்படும்.''*

*''ஆண் தனது குடும்பம், செல்வம், அயலவர் முதலிய கார ணங்களால் பாவம் செய்ய நேரிட்டால் தொழுகை, தர்மம், நன்மையை ஏவி தீமையை விலக்கல் முதலிய செயற்பாடுகள் அதனைப் போக்கி விடும்'' என்ற -ஹுதைஃபா அறிவிக்கும்- நபிமொழி விளக்கவுரையில் இப்னுஅபீ ஜம்றாவின் பின்வரும் கூற்றை இப்னு ஹஜர் கொண்டு வருகிறார்: : ''இங்கு ஆண் குறிப்பாக கூறப்படக் காரணம் பெரும்பாலும் அவனே தனது வீட்டையும் குடும்பத்தையும் ஆளுகை செய்பவனாக இருப்ப தாகும். எவ்வாறாயினும் பெண்களும் இத்தீர்ப்பில் ஆண்களின் சரி பாதியானவர்களே!''*

ஷூறா செயற்பாட்டில் - அது பொதுவானதாயினும் குறிப்பான தாயினும்- ஆண்களும் பெண்களும் சமமானவர்கள் என்று கருதப் படுவதற்கு மேற்குறித்த சான்றுகளும் பொதுவிதிகளும் மாத்திரமே நம்மிடம் இருந்தால் கூட போதுமாகும். இது இவ்வாறிருக்க- இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் மேற்கொண்ட ஏராளமான கலந்தாலோசனை நிகழ்வுகளை நாம் காண முடிகிறது. சிலவேளைகளில் அவை பெண்களுக்கு மாத்திரம் உரியனவாக வும்; வேறு சில வேளைகளில் ஆண்களையும் பெண்களையும் சேர்த்தனவாகவும் அமைந்திருந்தன. இறைத்தூதர் (ஸல்) தனது மனைவியான உம்மு ஸலமாவுடன் மேற்கொண்ட கலந்தாலோச னை அவற்றுள் மிகப் பிரபல்யமானதாக அமைய முடியும். அது ஒரு வரலாற்று முக்கியத்துவம் கொண்ட கலந்தாலோசனை. அருள் நிறைந்த அக்கலந்தாலோசனையின் மூலமாகவே ஓர் அபாயகர மான நெருக்கடி தீர்க்கப்பட்டு அப்பால் தாண்டிச் செல்ல முடியு மான சுமுகமான நிலை ஏற்பட்டது. அது நிகழ்ந்தது 'ஹுதைபிய்யா' உடன்படிக்கையின் பின்னராகும். பொதுவாக நபித்தோழர்கள் அந்த உடன்படிக்கையை விரும்பியிருக்கவில்லை. மட்டுமன்றி, குறைஷிய இணை வைப்பாளர்களுக்கு முன்னால் தங்களுக்கும் தங்களது சன்மார்க்கத்துக்கும் ஏற்பட்ட மிக மோசமான தோல்வி யாகவும், விட்டுக் கொடுப்பாகவும் அதனை அவர்கள் கருதி யிருந்தனர். உடன்படிக்கை எழுதப்பட்டதன் பிறகு, நபியவர்கள் தமது தோழர்களுக்கு 'இஹ்ராம்' உடையைக் களையுமாறும், தங்களது குர்பானிகளை அறுத்துப் பலியிடுமாறும் தலைமுடியை மழித்துக் கொள்ளுமாறும் கட்டளையிட்ட போதிலும் எந்த நபித் தோழரும் அதற்குச் செவி சாய்க்கவில்லை. நபியவர்கள் பலமுறை கூறியும் எவரும் அதனை நிறைவேற்ற முன்வரவில்லை. அது பற்றி உமர் (ரழி) கூறியதாக 'ஸஹீஹுல் புஹாரி'யில் இவ்வாறு இடம்பெற்றுள்ளது:

''... உடன்படிக்கை விவகாரம் முற்றுப் பெற்றதும் இறைத்தூதர் தமது தோழர்களை நோக்கி, 'எழுந்து குர்பானிகளை அறுத்து, தலைமுடியை இறக்கிக் கொள்ளுங்கள்!' எனக் கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! அன்னார் மூன்று முறை கூறியும் எவரும் அதனைச் செய்ய முன்வரவில்லை. எவரும் அதற்கு முன்வராததைக் கண்ட நபியவர்கள் உம்மு ஸலமா இருக்குமிடம் சென்று, மக்கள் நடந்து கொண்ட முறையை அவருக்கு விவரித் தார்கள். அதனைக் கேட்ட உம்மு ஸலமா (ரழி) இவ்வாறு கூறினார்: ''அல்லாஹ்வின் நபியே! அது செய்யப்பட வேண்டும் என்பதுதான் உங்கள் விருப்பமா? அவ்வாறாயின், வெளியேறிச் சென்று எவருட னும் பேசாமல் உங்கள் குர்பானியை பலியிடுங்கள்; உங்களுக்கு தலை மழிப்பவரை அழைத்து மழித்துக் கொள்ளுங்கள்!'' அவ் வாறே நபியவர்கள் வெளியேறி வந்தார்கள்; எவருடனும் பேசா மல் குர்பானியை அறுத்துப் பலியிட்டு, தலையையும் மழித்துக் கொண்டார்கள். ஏனையோரும் அது போலவே செய்யலாயினர்; ஒருவருக்கொருவர் தலை மழித்துக் கொண்டனர்; கடுமையான கவலையால் ஒருவரை ஒருவர் கொல்லக்கூடப் பார்த்தனர்...''

ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரழி) வின் அறிப்பாக புஹாரியில் இடம்பெற்றுள்ள பின்வரும் நிகழ்வு அருள் நிறைந்த பெண்கள் ஆலோசனைகளுக்கான மற்றோர் எடுத்துக் காட்டாகிறது: நபி (ஸல்) அவர்கள் ஜுமுஆ தினங்களில் ஒரு பேரீச்ச மரக் குற்றியில் அல்லது வேறொரு மரத்தில் சாய்ந்து நின்றவாறு உரையாற்றும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். அப்போது அன்ஸாரிகளைச் சேர்ந்த ஒரு பெண் -அல்லது ஆண்-, 'அல்லாஹ்வின் தூதரே! உங்க ளுக்கு நாம் பிரசங்க மேடையொன்றை அமைத்துத் தரட்டுமா?' எனக் கேட்டார். அதற்கு அன்னார், ''நீங்கள் விரும்புவதாயின் (அமைக்கலாம்)!'' எனப் பதிலளித்தார்கள். அதன் பிரகாரம் அன் னாருக்காக பிரசங்க மேடையொன்று அமைக்கப்பட்டது.

'அன்ஸாரிகளைச் சேர்ந்த ஒரு பெண் -அல்லது ஆண்'- என்ற அறிவிப்பாளர் கொண்டிருந்த சந்தேகம் ஸஹீஹ் அல்-புஹாரியில் வரும் மற்றொரு அறிவிப்பின் மூலமாக சுவடு தெரியாமல் மறைந்து விடுகிறது. நபி (ஸல்) அவர்கள் தச்சு வேலை செய்யக் கூடிய அடிமையொன்றை வைத்திருந்த பெண்ணொருவரிடம்

பிரசங்க மேடையொன்றைத் தயாரிப்பதற்கு பணித்திருந்தார்கள்' என அந்த அறிவிப்பில் வந்துள்ளது. இந்த வகையில்தான், பிரசங்க மேடை அமைக்கும் யோசனையை ஒரு பெண்ணே வழங்கினார் என அல்-ஹாபிழ் இப்னு ஹஜர் கூறுகிறார். அதனைச் செய்து இறைத்தூதரிடம் கொண்டு வரும் பொறுப்பையும் அப்பெண் மணியே ஏற்றிருந்தார்.

இந்த யோசனையை அப்பெண் முதலில் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் முன்வைத்ததாகவும், பின்னர் நபியவர்கள் அதனை நிறைவேற்றித் தருமாறு செய்தியனுப்பியதாகவும் -இந்த அறிவிப் புக்களுக்கிடையில் இணக்கம் காணும் வகையில்- இமாம் நவவி விளக்குகிறார். குறித்த ஆலோசனையை முன்வைத்தவரும், அதனை நிறைவேற்றித் தருமாறு பணிக்கப் பட்டவரும் இப் பெண்மணி மட்டுமே என்பது இதன் பொருளன்று. ஏனெனில், இதே அபிப்பிராயத்தை வேறு நபித்தோழர்களும் கொண்டிருந்த தாக நம்பத்தகுந்த அறிவிப்பு உண்டு. தமீம்அத்-தாரீயும் அவர் களுள் ஒருவர்.

பெண் பிறரிடம் ஆலோசனை கேட்டல், பெண் பிறருக்கு ஆலோசனை வழங்குதல் முதலிய இரு நிலைகளை அல்-குர்ஆன் நமக்கு விவரிக்கிறது. இரு நிலைகளையும் அங்கீகரிக்கும் வகை யிலும், விதந்துரைக்கும் வகையிலுமே அது எடுத்துக் காட்டுகிறது.

### ஸபஉ நாட்டரசி பற்றிய விவரணம் அவற்றுள் முதல் நிலையாகும்:

*''(அவ்வரசி) கூறினாள்: 'பிரதானிகளே! கண்ணியமான நிருப மொன்று எனக்கு வந்திருக்கிறது. ஸுலைமானிடமிருந்து அது வந்திருக்கிறது. 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' எனத் துவங்கி, 'என்னிடம் நீங்கள் பெருமையடிக்காமல் முற்றிலும் (அல்லாஹ் வுக்கு) வழிப்பட்டு வந்து விடுங்கள்!' (என அதில் எழுதப் பட்டுள்ளது). பிரமுகர்களே! எனது இவ்விவகாரத்தில் ஆலோச னை தாருங்கள்; நீங்கள் எனக்கு நேரிடையாக அபிப்பிராயம் தெரிவிக்காமல் நான் எந்த முடிவையும் எடுத்ததில்லை!'. அதற்கு*

*அவர்கள், 'நாங்களோ பெரும் பலசாலிகளாகவும், போர்த்திறம் கொண்டவர்களாகவும் இருக்கிறோம். முடிவு உங்களிடமே உள்ளது. என்ன கட்டளை பிறப்பிப்பது என்பது பற்றி நீங்களே சிந்தித்து முடிவு செய்யுங்கள்' என்று கூறினார்கள். அப்போது அவள் இவ்வாறு கூறினாள்: 'நிச்சயமாக அரசர்கள் ஒரு நகரத்தினுள் (படை கொண்டு) நுழைந்தால், அதனைச் சீரழித்து, அதிலுள்ள கண்ணியவான்களை சிறுமைப்படுத்தி விடுவார்கள். இவர்கள் செய்யப் போவதும் அதுதான்! எனவே நான் அவர்களுக்கு ஓர் அன்பளிப்பை அனுப்பி, தூதர்கள் என்ன செய்தி கொண்டு வருகிறார்கள் என்பதை பார்க்கப் போகிறேன்!'' (27: 29-35)*

இரண்டாவது நிலை, மூஸா (அலை) பற்றி இரு சகோதரிகளுள் ஒருவர் கூறிய கருத்தில் வெளிப்படுகிறது:

*''இருவருள் ஒரு பெண் கூறினாள்: அன்புத் தந்தையே! இவரைக் கூலிக்கு அமர்த்துங்கள்; நிச்சயமாக (இவரைப் போன்ற) பலமும் நாணயமும் மிக்கவரே நீங்கள் கூலிக்கு அமர்த்தக் கூடியவர்களுள் மிகச் சிறந்தவர்.'' (28: 26)*

இந்த சீரிய ஆலோசனையால் பின்னர் பல நன்மைகள் விளைந்தன.

எவ்வாறிருப்பினும், பொதுவான 'ஷூறா' சபைகளில் (அதாவது பாராளுமன்றங்களில்) பெண்ணின் அங்கத்துவத்தை எதிர்ப்ப வர்கள், அவள் பொதுவான ஆட்சிப் பொறுப்புக்களை ஏற்பது ஆகுமானதல்ல என்ற கருத்தை மிகவும் பற்றிப் பிடித்திருக்கின்றனர். ஏனெனில், இச்சபைகளே இன்று அரச மற்றும் சமூக விவகாரங் களில் அதிகாரம் கொண்டவையாகக் காணப்படுகின்றன. ஆனால் இந்நிலைப்பாடு சரியானதல்ல -அல்லது குறைந்த பட்சம் ஆரோக் கியமானதல்ல!

பெண் எத்தகைய பொதுப் பொறுப்பையும் ஏற்பது ஆகாது என்ற நிலைப்பாட்டைப் பொறுத்தவரை அதனை இவ்வாறு மிகப் பொதுவாக எடுத்துக் கொள்வதற்குச் சார்பாக எந்த ஆதாரமும்

இல்லை. இது விடயத்தில் அதிகபட்சம் பற்றித் தொங்க முடியுமான ஆதாரம் அபூபக்கர் (ரழி) அறிவித்த பின்வரும் ஹதீஸாகும்: பாரசீகர்கள் தங்களது ஆட்சிக்கு 'கிஸ்ரா'வின் மகளை அரசியாக்கிய செய்தி நபி (ஸல்) அவர்களுக்குக் கிடைத்த போது இவ்வாறு கூறினார்கள்: ''தங்கள் பொது விவகாரங்களை ஒரு பெண்ணிடம் ஒப்படைத்த சமூகம் வெற்றி பெறாது!''

ஒரு பெண்ணை தங்களுக்கு அரசியாக்கி, தங்களது பொது அரச விவகாரங்களை, - அதாவது தேசத்தின் முழுமையான தலைமைப் பொறுப்பை -அவளிடம் ஒப்படைத்து, அவளுக்கு மேலாக எவரும் அற்ற நிலையை உருவாக்கிக் கொண்ட ஒரு சமூகம் பற்றியே இந்த நபிமொழி பேசுகிறது என்பது தெளிவு. இங்கு மறுக்கப்பட்டுள்ள வெற்றி அதிகார மற்றும் அரசியல் ராணுவ வெற்றியே. அதாவது இத்தகைய நிலைகளில் பெண் கொண்டிருக்கக் கூடிய இயல்பான பலவீனம் காரணமாகவும், குடிமக்கள் அவளுக்குக் கீழ்ப்படிவதில் ஏற்படக்கூடிய தளர்வு நிலை காரணமாகவும் தேசம் சிதைந்து பலவீனத்துக்கும் தோல்விக்கும் உட்படும் என்பதே இதன் பொருள். ஆனால் இஸ்லாமியப் பொருளிலான வெற்றியைப் பொறுத்தவரையிலோ, -அவர்கள் ஆணை நியமித்தாலும் பெண்ணை நியமித்தாலும்- அது அவர்களுக்கு கிட்டப் போவதில்லை.

எவ்வாறிருப்பினும், குறித்த ஹதீஸ் -அது கூறப்பட்ட சந்தர்ப்பத்தையும் சூழலையும் வைத்துப் பார்க்கும்போது- தேசத்தின் அரசியல் மற்றும் ராணுவ தலைமைத்துவம் பற்றியே பேசுகிறது. அதாவது இன்று அழைக்கப்படுவது போல், 'நிறைவேற்று அதிகாரம்' மீதான தலைமைத்துவத்தையே குறிக்கிறது. இத்தகைய சுமை நிறைந்த, பாரதூரமான பொறுப்புக்கு முன்னால் பெண் பொதுவாக பலவீனமானவளாகவே இருப்பாள் என்பதில் ஐயமில்லை.

ஆனால் ஆலோசனை சபைகளைப் பொறுத்த வரை, அவை பல்வேறு தலைப்புகள் மற்றும் துறைகள் சார்ந்த கருத்துகளுக்கும் சிந்தனைகளுக்கும் உரிய சபைகள்; பகுப்பாய்வுக்கும் மதிப்பீட்

டுக்குமான சபைகள்; ‘இஜ்திஹாத்’களுக்கும் கொள்கைத் தீர் மானங்களுக்கும் உரிய சபைகள். இத்தகைய சபைகளை பொது வான பொறுப்புக்குரிய அல்லது பொதுவான அதிகாரத்துக்குரிய வடிவங்களாக எவராவது சித்தரிக்க விரும்பினால் -பரிபாஷை அடிப்படையில்- அதற்குத் தடையேதும் இல்லை. எனினும், இவற்றுக்கும் உண்மையான நிறைவேற்று அதிகார தலைமைத் துவத்திற்கும் இடையில் எவரும் குழப்பிக் கொள்ளக் கூடாது. ஏனெனில் உண்மையான நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைமைத்துவத்தை மேற்கொள்வதும் அதில் வெற்றி பெறுவதும் எளிதன்று. கடின உழைப்பு, உறுதி, தீர்க்கமான நிலைப்பாடு, பொறுமை, சாணக்கியம், சாதுரியம், போராட்டம் என்பவை அதற்கு -உள்ளும் புறமும்- தேவைப்படும்.

மறுபுறத்தில், ஷூறா சபைகள் வழக்கமாக ஏராளமான அங் கத்தவர்களைக் கொண்டிருக்கும். அங்கு தனியொருவர் -ஆணா யினும் பெண்ணாயினும்- அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும் நிலை இருப்பதில்லை. அதிகாரமும் தலைமைப் பொறுப்பும் முழுச் சபைக்கும் உரியதாகவே இருக்கும். உதாரணமாக ஒரு சபையில் நூறு அங்கத்தவர்கள் இருப்பதாக வைத்துக் கொண்டால் அதில் அங்கம் வகிக்கும் தனி ஒரு பெண் நூறில் ஒரு பங்கையே பிர திநிதித்துவம் செய்கிறாள். ஆனால் இஸ்லாமிய நியாயவியலில் அச்சம் காட்டப்படும் பொதுத் தலைமைப் பொறுப்பைப் பொறுத்த வரை, அது தனியான ஒரு பெண்ணிடம் ஒப்படைக்கப்படும் முழு மையான தலைமைப் பதவியாகும். நூற்றுக்கணக்கான அங்கத்த வர்களைக் கொண்ட சபையொன்றில் வெறுமெனே ஓர் அங்கத்த வராக அவள் இருப்பதை அது குறிக்காது. ஏனெனில் அத்தகைய சபையின் பொறுப்பு இஜ்திஹாத் அடிப்படையிலான சட்டவாக்கம் மட்டுமே. உண்மையான அதிகாரத்தின் செயற்பாட்டைப் பூரணப் படுத்துவதாயும் மதிப்பீடு செய்வதாயும் மட்டுமே அது இருக்கும்.

*‘‘விசுவாசம் கொண்ட ஆண்களும் விசுவாசம் கொண்ட பெண் களும் ஒருவருக்கொருவர் பொறுப்பாளர்கள். அவர்கள் நன்மையை ஏவி தீமையைத் தடுப்பார்கள்; தொழுகையை நிலைநிறுத்தி*

*ஸகாத்தும் கொடுப்பார்கள்; அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக் கும் கட்டுப்படுவார்கள். அத்தகையோருக்குஅல்லாஹ் கிருபை புரி வான். நிச்சயமாக அல்லாஹ் சர்வ வல்லமையும் ஞானமும் மிக்கவன்'' (9: 71)*

என்ற இறைவசனம் விசுவாசம் கொண்ட ஆண்களைப் போலவே விசுவாசம் கொண்ட பெண்களுக்கும் மார்க்க விவகாரங்களில் பொதுவான பொறுப்பு இருப்பதாக உறுதிப்படுத்துகின்றது என அல்லாமா உஸ்தாத் அல்லால் அல்-ஃபாஸீ கருதுகிறார். பிற விசு வாசிகளுக்கு உதவி புரிதல், மஸ்ஜிதுகளுக்கும் பிற சபைகளுக்கும் சமூகமளித்தல், போராட்டக் களங்களிலும் நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் செயற்பாடுகளிலும் பங்கேற்றல் முதலிய அனைத்தும் இதில் அடங்கும் என்பது அவரது அபிப் பிராயமாகும்.

தொடர்ந்து அவர் இவ்வாறு கூறுகிறார்:

குடும்ப விவகாரங்களில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான கலந்தாலோசனை பற்றி அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது: *''அவர்கள் இருவரும் பரஸ்பரத் திருப்தியின் அடிப் படையிலும் கலந்தாலோசனையின் அடிப்படையிலும் குழந்தைக்கு பால்குடி மறக்கச் செய்ய விரும்பினால் அவர்கள் மீது குற்ற மில்லை''. (2: 233)*

குடும்ப விவகாரத்திலேயே இவ்வளவு தூரம் 'ஷூறா' வேண் டப்படுகிறது எனில், தேசம் மற்றும் சமூகம் என்ற விரிந்த குடும்ப விவகாரத்தில் அது எவ்வளவு தூரம் வேண்டப்பட்டதாக இருக்கும்! குடும்பத்தின் அரைப் பாகமாகிய பெண்ணிடமிருந்து ஷரீஆ 'கலந்தாலோசனை' என்ற உரிமையைப் பறிக்கவில்லை எனில் சமூகத்தின் அரைப் பாகமாகிய பெண்ணிடமிருந்து அந்த உரிமையைப் பறிப்பது பொருத்தமற்றது.

இமாம் அல்-ஜுவைனி ஓர் இடத்தில் இவ்வாறு கூறுகிறார்: *''சன்மார்க்க மற்றும் அரசியல் ரீதியான தலைமைத்துவத்தை தெரிவு செய்வதிலோ தலைமைத்துவப் பொறுப்புக்கான ஆணை யைப் பெறுவதிலோ பெண்ணுக்கு எந்தத் தலையீடும் இல்லை''.*

மற்றொரு இடத்தில் இவ்வாறு கூறுகிறார்: ''பெண்கள் என் போர் தங்களது விவகாரங்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஆண் களிடம் ஒப்படைத்து விட்டு, தங்கள் வாழ்விடங்களில் மறைந் திருப்போர்; பொது விவகாரங்களை கையாளும் பழக்கமற்றவர் கள்; பிரச்சினைகளை -ஆண்களைப் போன்று- வெளிப்படையாக நின்று எதிர்கொள்ளாதவர்கள்; தீர்மானங்களையும் அபிப்பிராயங் களையும் உறுதிப்படுத்துதல் தொடர்பாகப் பேசுவதற்கு அவர் களிடம் பெரிதாக எதுவும் இருப்பதில்லை...''.

அப்போது பெரும்பாலும் நிலவிய யதார்த்தத்தை விவரிப்பதே இக்கூற்றின் நோக்கம் எனில், அது சரியானது; அல்லது ஓரளவு சரியானது. அவ்வாறன்றி, இத்தகைய செயற்பாடுகளை விட்டு பெண்களை மொத்தமாகவே விலக்கும் நோக்கத்தை இக்கூற்று கொண்டிருக்குமாயின், அது ஏற்கத் தக்கதன்று. இஸ்லாமிய அரச உருவாக்கத்துக்கு அடிப்படையாக அமைந்த இரண்டாவது 'அகபா' உடன்படிக்கையில் இரு பெண்களும் பங்கேற்றிருந்தனர் என்ற உண்மை இவ்விடத்தில் நாம் சுட்டிக்காட்டப் போதுமானது. உம்மு அம்மாறா நஸீபா பின்த் கஅப், அஸ்மாஉ பின்த் அம்ர் பின் உதை ஆகிய இருவருமே அவர்கள்.

உஸ்மானுக்கு ஆட்சிக்கான 'பைஅத்' நிகழ்ந்த வேளையில், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் திரைச்சேலைக்குப் பின்னால் மறைந்திருந்த பெண்களிடம் கூட ஆலோசனை கேட்டமை பற்றிய குறிப்பு பின்னால் இடம்பெறும்.

### தனிப்பட்ட விவகாரங்கள் தொடர்பான ஷூறா:

ஷரீஆ வசனங்களில் 'ஷூறா' பற்றி வந்துள்ள கூற்றுக்கள் அடிப்படையில் கலந்தாலோசனைக்கு உட்படுத்தப்படும் விவகாரத் துடன் தொடர்புபட்ட அனைவருக்கும் போதுமானவை; *''அவர் களது அனைத்து (பொது) விவகாரங்களும் அவர்களுக்கு மத்தி யிலான கலந்துரையாடலின் அடிப்படையில் அமைந்திருக்கும்''.* எனினும், சிலபோது 'ஷூறா' செயற்பாடானது -வேண்டுமென்றோ தற்செயலாகவோ- குறிப்பிட்ட சிலருக்குரியதாக மாத்திரம்

வரையறுக்கப்படும் சாத்தியப்பாட்டை இது மறுதலிக்காது. ஷரீஆ வில் பொதுவாகக் கூறப்பட்டுள்ள அம்சங்களுள் அதிகமானவை பல்வேறு சான்றுகளதும் சூழமைவுகளதும் அடிப்படையில் விதிவிலக்குகளையும் குறிப்புப் பொருள்களையும் இயல்பாகவே கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக ஷூறா செயற்பாடு பதிலீடுகளையும் பிரதிநிதித்துவ செயற்பாட்டையும் ஏற்கக் கூடியது. சிலபோது அது மனிதர்களில் சிலருக்குப் பதிலாக வேறு சிலர் மேற்கொள்ளும் 'ஃபர்ழு கிஃபாயா' வகை சார்ந்த பொறுப் பாகவும் அமையக் கூடியது. அந்த வகையில், அது போதியளவு நிறைவேறி விட்டால் மேலதிகமாக மேற்கொள்ளப்பட வேண்டிய கடப்பாடு இல்லை. 'ஃபர்ழு கிஃபாயா' வகை சார்ந்த அனைத்துக் கடமைகளிலும் நிலை இதுவே. அவை அடிப்படையில் பொதுவாக சுமத்தப்படும் பொறுப்பாகும். எனினும் ஒரு சாராரினால் அது போதியளவு நிறைவேறி விட்டால் பிறர் மீதிருந்து அப்பொறுப்பு நீங்கிவிடும். அதற்கப்பால், - விரும்பயவர்கள் தன்னார்வ அடிப் படையில் அதில் ஈடுபட முடியும்.

அவ்வாறே- - குறிப்பிட்ட சில நிலைமைகளிலும் விவகாரங் களிலும் குறிப்பிட்ட சில பண்புகளையும் தராதரங்களையும் கொண்ட நபர்களே ஷூறா செயற்பாட்டுக்குப் பொருத்தமானவர் களாயும் பயனுடையோராயும் இருப்பர். எனவே அங்கு பொது மக்களுக்கு மொத்தமாகவே இடமிருக்காது.

இந்தஅனைத்தும் -பலநிலைகளில்- ஷூறா செயற்பாட்டை பொதுவான நிலையிலிருந்து குறிப்பான நிலைக்கு நகர்த்தும் காரணங்களாக அமைந்து விடுகின்றன.

ஷூறா என்பது அடிப்படையில் அனைத்து முஸ்லிம்களுக்கும் பொதுவானது என்பதையும் பல்வேறு காரணங்களாலும் சான்று களாலும் அதில் விதிவிலக்கான நிலைகளும் குறிப்பான நிலை களும் உள் நுழைய முடியும் என்பதையும் உறுதிப்படுத்துவதே இங்கு நமக்கு முக்கியமானது. இந்த நிலைகள் அனைத்தும் தேவைக்கேற்ற அளவில் மதிப்பீடு செய்யப்பட முடியும்.

ஆக- போதியளவு ஷூறா மேற்கொள்ளப்பட்டு, ஷூறாவின் மூலமாக நாடப்பட்ட நோக்கம் நிறைவேறி விட்டால், தொடர்ந்து அதில் ஈடுபடவோ அதன் வட்டத்தை அகலிக்கவோ வேண்டிய தேவை இல்லை. ஏனெனில், அனைத்து விவகாரங்களும் அவற் றின் நோக்கத்தைப் பொறுத்தவை. எதிர்பார்க்கப்பட்ட வகையிலும் சாத்தியமான வகையிலும் நோக்கங்கள் பூரணமாகி விட்டால், அதன் பிறகும் தொடர்ந்து ஆலோசனை செய்து கொண்டிருப்பது வெறும் கேலிக்கூத்து போன்று ஆகிவிடும்.

அவ்வாறான நிலையில் குறித்த விவகாரம் தொடர்பாக கறாரான தீர்மானத்தை எடுத்து, நிறைவேற்றுக் கட்டத்தை நோக்கி நகர்வதே கடமையாகும். அல்லாஹுதஆலாவும் இதனையே கூறுகின்றான்: *''அவர்களுடன் அனைத்து (பொது) விவகாரங்களிலும் கலந்தா லோசனை புரிவீராக! நீர் முடிவு செய்து விட்டால், அல்லாஹ்வின் மீது பொறுப்புச் சாட்டி (செயற்பாட்டில் இறங்கி) விடுவீராக!''*

சிலரை விடுத்து சிலருடன் மாத்திரம் ஷூறா செயற்பாட்டை சுருக்கிக் கொள்வதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அனை வரையும் ஒன்று சேர்ப்பதிலுள்ள பாரிய சிரமமும் செலவினமுமே அக்காரணம். குறித்த 'விவகாரம்' தொடர்பான குழு ஒட்டுமொத்த உம்மாவாக அல்லது அதன் ஒரு பிராந்தியமாக, அல்லது பெரும் எண்ணிக்கையிலான நபர்களாக அமைந்திருக்குமாயின், அவர்கள் அனைவரும் அல்லது அவர்களுள் பெரும்பாலானோர் அல்லது பாரிய குழுவொன்று ஒன்றுகூடி கலந்துரையாடுவது மிகக் கடின மானது.

இந்நிலையில், குறித்த செயற்பாடு சாத்தியமான, இலகுவான கட்டமொன்றுக்கு நகர்த்தப்படும். அந்தவகையில், அவர்களுக்கு மத்தியில் அறியப்பட்ட அல்லது உடன்பாடு காணப்பட்ட வடிவ மொன்றுக்கு ஏற்ப, சமூகமளிக்காதவர்களது இடத்தை சமூக மளித்தவர்கள் நிரப்புவோராக இருப்பர். பதிலீட்டு முறையும் பாராளுமன்ற பிரதிநிதித்துவ சிந்தனையும் தோன்றியது இங்கி ருந்துதான்.

ஷூறாவில் ஈடுபடுவோர் வரையறுக்கப் படுவதற்கும் மட்டுப் படுத்தப் படுவதற்கும் மூன்றாவதாகவும் ஒரு காரணம் உள்ளது. குறித்த விவகாரங்கள் துறை சார்ந்தவையாகவும், துறை சார்ந்த வர்களால் மட்டுமே புரிந்து கொள்ளவும், கருத்துக் கூறவும் முடியுமானவையாகவும் அமைந்திருப்பதே அக்காரணம். சட்டம் சார்ந்த அல்லது சாராத அறிவியல் விவகாரங்கள், நீதித் தீர்ப்பு, கைத்தொழில், பொருளாதார, ராணுவ திட்டமிடல்கள் முதலிய வற்றை இங்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். வாழ்வியல் முன்னேற்றமானது எப்போதும் துறைசார் பகுப்பையும் அறிவியல் மற்றும் செயல்சார் சிறப்புத் துறைகளையும் நோக்கிச் சென்று கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே.

ஷூறா என்பது வெறும் உரையாடலையும், பொதுவான சிந்த னைகளையும், யூகங்களின் அடிப்படையிலான ஆலோசனை களையும், மேலோட்டமான தீர்வுகளையும் பரிமாறிக் கொள்ளுதல் என்ற நிலை தாண்டி, கருத்து, அறிவு, அனுபவம், அனுமானம், திட்டமிடல் என்பவற்றை எடுத்தாள்வதைக் குறிப்பதாகும். அந்த வகையில்- ஷூறாவுக்கு உட்படும் பல விவகாரங்கள் அவ்வத்துறை சார்ந்தோருக்கு உரியவையாகவே இனி அமையப் போகின்றன. இவ்விவகாரங்களில் பாமர பொதுமக்களை பங்கேற்கச் செய்வ தானது சீர்கேடான நிலைக்கும், விவகாரங்களை அவற்றுக்குத் தொடர்பற்றவர்களிடம் ஒப்படைப்பதற்குமே வழிவகுக்கும். இந் நிலை தோன்றுமாயின், ஷரீஆ என்ன நோக்கத்தையும் நலனையும் சாதிப்பதற்கு அருளப்பட்டதோ அது கைநழுவிப் போய் விடும்.

அவ்வாறே எல்லா விடயங்களிலும் ஒட்டுமொத்தமாக ஆலோச னை வழங்கத் தகுந்த நபர்கள் அல்லது ஆலோசனை சபைகள் கிடையாது என்பதையும் இது நமக்கு குறித்துக் காட்டுகிறது. பழைய காலங்களில் அது பொருத்தமாக அமைந்திருந்தாலும் தற்காலத்தில் சாத்தியமானதோ பொருத்தமானதோ அன்று. பழைய காலங்களில் கூட ஆலோசகர்கள் அவர்களது துறைகளுக்கும் அனுபவங்களுக்கும் ஏற்ப வகைப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை நோக்கி நமது பல அறிஞர்கள் சென்றிருப்பதைக்

காண முடிகிறது. மாலிகீ நியாயவியல் அறிஞரான இப்னு ஃகுவையிஸ் மிந்தாத் அவர்களது பின்வரும் கூற்றிலிருந்து இதற்கான மாதிரி தெளிவாக வெளிப்படுகிறது: ''ஆட்சியாளர்கள் தங்களுக்குத் தெரியாத விடயங்களிலும், தெளிவற்ற சன்மார்க்க விவகாரங்களிலும் அறிஞர்களுடன் கலந்தாலோசனை செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள். யுத்தம் தொடர்பான விடயங்களில் படைத் தலைவர்களோடும், பொதுநலன்கள் தொடர்பாக சமூகத் தலைவர்களோடும், நாட்டு நலன் மற்றும் அதன் அபிவிருத்தி தொடர்பாக எழுத்தாளர்கள், அமைச்சர்கள், தொழிலாளர்கள் முதலியோருடனும் அவர்கள் கலந்தாலோசனை செய்ய வேண்டும்''.

இதற்கான அடிப்படை அல்குர்ஆனிலும் இடம்பெற்றுள்ளது. அல்லாஹ் கூறுகிறான்:

*''(இதுபற்றி) நீங்கள் இன்னும் அறிந்திருக்கவில்லையாயின் (முன்னைய) வேதக்காரர்களை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.'' (16: 43) மேலும் பார்க்க: (21: 7)*

*''மேலும், பாதுகாப்பு மற்றும் அச்சம் பற்றிய செய்தி அவர்களுக்கு எட்டினால் உடனே அதனைப் பரப்பி விடுவார்கள். (அவ்வாறன்றி) அதனை அவர்கள் இறைத்தூதரிடமும் அவர்களிலுள்ள அதிகாரிகளிடமும் தெரிவிப்பார்களாயின் அதுபற்றி ஆய்ந்தறியக் கூடியவர்கள் அறிந்து கொள்வார்கள்.'' (4: 83)*

சில விவகாரங்களிலும் புதிய பிரச்சினைகளிலும் அவை பற்றி ஆலோசனை கேட்கத் தகுந்த துறை சார்ந்தவர்களும் அறிஞர்களும் அனுபவசாலிகளும் இருப்பதை இவ்வசனங்கள் விளக்குகின்றன. எனவே அவர்களிடமே அவை பற்றிக் கேட்கப்படவும் ஆலோசிக்கப்படவும் வேண்டும்.

எவ்வாறாயினும், -பல்வேறு நிலைமைகளில்- ஷூறா செயற்பாடு குறிப்பிட்ட சில குழுமங்களுக்குள் மட்டுப்படுத்தப்படும் இந்நிலையானது நாம் ஏலவே சுட்டிக் காட்டிய அடிப்படையை எவ்வகையிலும் ரத்துச் செய்து விடப் போவதில்லை. ஷூறா

செயற்பாடானது இலகுவாகவும் பயனுள்ளதாகவும் பொருத்தமான தாகவும் இருக்கும் காலம் வரை - பல்வேறு வரையறுக்கப்படாத தரங்களிலும் வடிவங்களிலும்- பொதுமைப்படுத்தப் பட்டதாக இருக்கும் என்பதை இது குறிக்கிறது.

ஷூறாவின் இப்பொதுப்படைத் தன்மை நபி (ஸல்) அவர்கள் எடுத்துக் கொண்டது போன்ற வடிவங்களையும் எடுக்க முடியும். தமது சபையில் சமூகமளித்திருக்கும் அனைவரையும் நோக்கி அன்னார், ''மனிதர்களே! எனக்கு ஆலோசனை தாருங்கள்!'' எனக் கூறும் வழக்கமுடையவராக இருந்தார்கள். நேர்வழிநின்ற ஃகலீ பாக்களிடமும் இவ்வழக்கம் காணப்பட்டது. அல்லது இதனை விடப் பரந்தளவிலும் அதிகம் ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலும் கூட அது இடம்பெற முடியும். பொதுத் தேர்தல்கள், பொதுமக்கள் ஆலோசனைகள், அபிப்பிராய வாக்கெடுப்பு முதலியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

அவ்வாறே, வரையறுக்கப்பட்ட மக்கள் குழுமங்களை உள் ளடக்கிய வகையிலான பரிபூரணமான பொது ஆலோசனைச் செயற்பாடாகவும் அது அமையலாம். ஒரு கிராமத்தவர் அல்லது ஒரு பிரதேசத்தவர் அல்லது ஒரே மஸ்ஜித்வாசிகள் அல்லது ஒரே தொழிலை மேற்கொள்வோர் அல்லது ஒரே கம்பனி/தொழிற் சாலை ஊழியர்கள் அல்லது ஒரே கல்வி நிறுவன மாணவர்கள்... என பல எடுத்துக் காட்டுக்களை இங்கு தர முடியும். இத்தகைய குழுமங்களுக்கு மத்தியில் அவற்றுக்கேயுரிய தனித்துவமான பிரச்சி னைகளும் விவகாரங்களும் காணப்படும் போது ஷூறா என்பது அங்கு தவிர்க்க முடியாத அடிப்படை ஆகிறது. குறித்த விவகாரங் களைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனையில் அவர்கள் அனைவருக்கும் பங்குண்டு. அந்தவகையில் அவர்கள் அனை வருமோ அல்லது முடிந்தளவு அதிக தொகையினரோ அச்செயற் பாட்டில் ஈடுபடுவர்.

*பகுதி இரண்டு:*

## ஷூறா சபைகளில் அங்கம் வகிப்போரது பண்புகளும் அவர்களைத் தெரிவு செய்யும் முறையும்

### *கலந்தாலோசனைக்கு உரியோரது பண்புகள்:*

'கலந்தாலோசனைக்கு உரியோர்' என்பது எவரிடம் ஆலோசனை பெறப்பட வேண்டுமோ அவர்களையே இங்கு குறிக்கிறது. குறிப்பிட்ட பண்புகளால் அல்லது நிபந்தனைகளால் அதற்குத் தகைமை பெற்றவர்களாய் அவர்கள் இருப்பர்; அல்லது தனிப்பட்ட முறையில் பெயர் குறிக்கப்பட்டவர்களாய் இருப்பர். அதாவது, தலைவர்களும் பொது விவகாரங்களுக்குப் பொறுப்பானவர்களும் இவர்களிடமே ஆலோசனை கேட்கக் கடமைப்பட்டிருப்பர்.

இவ்வாறு கூறும்போது நாட்டுத் தலைவருக்கும் அவரது அரசாங்கத்துக்கும் அண்மித்துக் காணப்படும் ஆலோசனை சபையே (மஜ்லிஸுஷ் ஷூறா) பிரதானமாக நமது சிந்தனைக்கு வருகிறது. இச்சபை நமது இஸ்லாமியப் பாரம்பர்யத்தில் 'அஹ்லுல் ஹல்வல் அக்த்' என அறியப்படுகிறது. சிரேஷ்ட ஆலோசகர்களை வேண்டி நிற்கும் அனைத்து உயர் ஆலோசனை அமைப்புகளும் இதனுள் அடங்கும்.

நாட்டுக்கு நாடு, அமைப்புக்கு அமைப்பு இச்சபைகள் பெறும் பெயர்களும் அதிகார எல்லைகளும் வேறுபட்ட போதிலும், பெரும்பாலான உலக நாடுகளிலும் முஸ்லிம் நாடுகளிலும் காணப் படுகின்ற பிரதான நிறுவனங்களுள் ஒரு பகுதியாக இவையும் மாறியிருக்கின்றன.

இப்பிரதான பொதுச் சபைகளுடன் இணைந்த வகையில் ஒவ்வொரு தேசத்துக்கும் என வேறு அதி சிறப்புத்துறை ஆலோ சனை சபைகளும் நிறுவனங்களும் கூட இன்று தவிர்க்க முடியாத தேவையாக உள்ளது. இச்சபைகளும் நிறுவனங்களும் சிலபோது விரைவாகக் கூடி விவகாரங்களுக்குத் தீர்வு காண்பவையாகவும் உள்ளன.

ஆக- இத்தகைய சபைகளில் அங்கம் வகிக்கத் தகுந்த அந்த 'சிரேஷ்ட ஆலோசகர்கள்' யாவர்? அவர்களது பண்புகளும் நிபந்த னைகளும் என்ன?

இது நிலைமைகளுக்கும், சூழமைவுகளுக்கும், குறித்த சபை களின் இயல்புக்கும், அவற்றின் சிறப்புத் துறைகளுக்கும் ஏற்ப ஆய்ந்து, அனுமானித்து, நியமப்படுத்தப் படுவதற்கு விடப்பட்ட விடயம் என்பதில் ஐயமில்லை.

எனினும் சில பொதுவான பண்புகளும் நிபந்தனைகளும் எல்லா நிலைகளிலும் காணப்பட வேண்டும் என்பதை இங்கு மறுப்பதற்கில்லை. சமூகத்தின் பொது விவகாரங்கள் குறித்து ஆய்ந்து, கலந்தாலோசித்து முடிவு காணும் பொறுப்பை ஏற்றுக் கொண்டோரிடம் அவை காணப்படுவதும் கவனத்தில் கொள்ளப் படுவதும் அவசியம்.

மிக நுணுக்கமாக ஆராயும் நியாயவியல் அறிஞர்களது வழியில் சென்ற அபூ அப்துல்லாஹ் இப்னுல் அஸ்ரக் ஓர் ஆலோசகரிடம் பின்வரும் பன்னிரண்டு நிபந்தனைகள் காணப்பட வேண்டும் என்கிறார்:

ஒன்று: நீண்ட அனுபவம், விவேகம், புத்திக்கூர்மை என்பவற்றுடனான முழு அறிவாற்றல்.

இரண்டு: சன்மார்க்கமும் இறையச்சமும்.

மூன்று: தூயமுறையில் இதோபதேசம் (நஸீஹத்) செய்யத் தூண்டும் அன்பு - (அதாவது ஆலோசனை வழங்குப வர் ஆலோசனை கேட்பவரை நேசிப்பவராகவும், அவருடன் இதய சுத்தியாக நடப்பவராகவும் இருத்தல்).

நான்கு: சிந்தனைக் கலங்கங்களிலிருந்து விடுபட்டிருத்தல்.

ஐந்து: ஆலோசனை கேட்கப்படும் விவகாரம் தொடர்பாக சுயலாப நோக்கும் மனோ இச்சையும் அற்றிருத்தல்.

ஆறு: ஆலோசனை கேட்கப்படும் விவகாரத்தில் அறிவை யும் நடைமுறையையும் இணைத்தல்.

ஏழு: ஆலோசனை கேட்பவரது சம வர்க்கத்தவராய் இருத்தல்.

எட்டு: ரகசியம் பேணுதல்.

ஒன்பது: பொறாமையுணர்வு அற்றிருத்தல்.

பத்து: சொல்லப்படும் ஆலோசனையினால் தனக்கோ தனக்கு வேண்டப்பட்ட ஒருவருக்கோ தீங்கு நேரும் என அஞ்சாதிருத்தல்.

பதினொன்று: அவசியமான ஆலோசனையை வழங்க முடியாத போது, அதற்கான காரணத்தை ஆலோசனை கேட்ப வருக்கு தெரியப்படுத்தல்.

பன்னிரெண்டு: மிகை மகிழ்ச்சிக்கோ மோசமான மனச்சோர் வுக்கோ ஆளாகாதவராய் இருத்தல்.

நுணுக்கமாகவும் விரிவாகவும் நிபந்தனைகளை வரிசைப் படுத்தும் இந்த அணுகுமுறையினால் -ஆலோசனை எடுத்துக் கொள்ளும் விவகாரம் தொடர்பான அனைத்து அம்சங்களையும் முடிந்தளவு கவனத்தில் எடுத்துக் கொள்ளுதல் என்ற- பயன் காணப்பட்ட போதிலும், சிலபோது அவை ஒரு வகையான

பாசாங்குத் தனத்துக்கும் கடும் போக்குக்கும் கூறியது கூறலுக்கும் இட்டுச் செல்வதைக் காண முடிகிறது.

உதாரணமாக, 'ஆலோசனை கேட்கப்படுபவர் ஆலோசனை கேட்பவரது சம வர்க்கத்தவராய் இருத்தல்' என்ற நிபந்தனை அடிப்படையற்றது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நபித்தோழர் களிடம் -குறிப்பாகவும் பொதுவாகவும்- ஆலோசனை கேட்டிருப் பதே இதற்குப் போதுமான சான்றாகிறது. ஏனெனில், ஆலோசனை கேட்கப்பட்ட நபித் தோழர்கள் அனைவரும் ஆலோசனை கேட்ட நபி(ஸல்) அவர்களது சம வர்க்கத்தினராக இருக்கவில்லை என்பது மட்டுமன்றி, நபித் தோழர்கள் கூட தங்களுக்குள் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தோராய் இருக்கவில்லை.

ஆக- ஆலோசனை கேட்கப்படுபவரின் வர்க்கத் தராதரம் கேட்பவரது தராதரத்தை விட குறைந்ததாய் இருப்பது உயர்ந்த வர்க்கத்தவரிடம் இல்லாத அறிவோ, அனுபவமோ, குறித்த விவகாரம் பற்றிய கவனமோ தாழ்ந்த வர்க்கத்தவரிடம் இருப்பதை மறுதலிக்காது. 'ஆற்றில் இல்லாதது கிணற்றில் இருக்கும்; கடலில் இல்லாதது ஆற்றில் இருக்கும்' என இதனைத்தான் பழங்காலத்தில் சொல்லி வைத்தார்கள். சங்கையான நபியாகவும் மகத்தான மன்ன ராகவும் இருந்த ஸுலைமான் (அலை), ''நீர் அறிந்திராததை நான் அறிந்து கொண்டேன்...'' என ஒரு சிறு பறவை கூறுவதை காது தாழ்த்திக் கேட்பதில் எந்த இழுக்கும் இருப்பதாகக் கருதாதது இதானல்தான்.

'பொறாமையுணர்வு அற்றிருத்தல்' என்ற நிபந்தனை கூட 'சுயலாப நோக்கும் மனோ இச்சையும் அற்றிருத்தல்' என்ற ஐந்தா வது நிபந்தனையுள் அடங்கக் கூடியதாகும். அவ்வாறே 'தனக்கோ தனக்கு வேண்டப் பட்டவருக்கோ தீங்கு நேரும் என அஞ்சாதி ருத்தல்' என்ற நிபந்தனையும் ஐந்தாவது நிபந்தனை இருக்கும் போது அவசியமற்றது.

மொத்தத்தில்- இந்த நிபந்தனைகளையும் பிறவற்றையும் சில பிரதான அடிப்படைகளுக்குள் அடக்க முடியும்: அறிவு, நம்பிக்கை, அனுபவம் என்பனவே அவை.

‘அறிவு’ எனும் போது அதில் முதலில் இடம் பெறுவது சன் மார்க்கம் பற்றிய அறிவாகும். ஏனெனில் ஒரு முஸ்லிமிடமிருந்து பிறக்கும் சிந்தனை, கருத்து, மதிப்பீடு, திட்டமிடல், தெரிவு முதலிய அனைத்திலும் அதிகார பூர்வச் சட்டமாக கருதப்படுவது சன்மார்க்க அறிவே. இது தவிர, பொதுவாக ஒருவர் பெற்றிருக்கக் கூடிய அறிவியல் சார்ந்த தகவல்களும் இந்த அறிவினுள் அடங்கும். ஏனெனில், ஆலோசகர் அல்லது ஆலோசனையில் பங்கேற்றவரது அறிவு மற்றும் தகவல் பரப்பு விசாலிக்கும் அளவுக்கு அவரும், அவரிடம் ஆலோசனை கேட்போரும் பயனடைவர்.

‘குறித்ததொரு பிரச்சினை தொடர்பாக அல்குர்ஆனிலோ ஸுன்னா விலோ எதுவும் கூறப்படவில்லை எனில் என்ன செய் வது?’ என்ற கேள்விக்கு, ‘‘அறிவுடையோரை ஒன்றுகூட்டி அது பற்றி ஆலோ சனை செய்யுங்கள்; தனியொருவரது கருத்தை மாத்திரம் அடிப் படையாகக் கொண்டு உங்கள் முடிவை அமைக்க வேண்டாம்!’’ என நபியவர்கள் பதிலளித்தது பற்றி முன்னரும் குறிப்பிட்டோம்.

ஸஹீஹுல் புஹாரியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

‘‘(அல்-குர்ராஉ எனப்படும்) அறிஞர்களே உமரின் ஆலோசகர் களாக இருந்தனர். அவர்கள் முதியவர்களாயினும் சரி; இளைஞர் களாயினும் சரி!’’

‘நன்னம்பிக்கை’ (அமானத்) என்ற பண்பினுள் இப்னுல் அஸ்றக் குறிப்பிட்டுள்ள சன்மார்க்கம், இறையச்சம், தூய இதோப தேசம், சுயலாப நோக்கும் மனோ இச்சையும் அற்றிருத்தல், பொறாமைக் குணம் இல்லாதிருத்தல், தனக்கு நெருக்கமானவரது அல்லது நேசத்திற்குரியவரது நலனை கவனத்தில் கொள்ளாதிருத் தல், ரகசியம் பேணல் முதலிய அனைத்தும் அடங்கி விடுகின்றன.

நன்னம்பிக்கை (அல்லது நாணயம்) என்ற பண்பினை இழந்த மனிதன் தனது அறிவால் பயன் தருவதை விட அதிகமாக தீமை விளைவித்து விட முடியும்; நன்மை அல்லது இதோபதேசம் என்ற போர்வையில் வழிகெடுப்பவராக அமைந்து விட முடியும். ஆதமுக்கும் அவரது மனைவிக்கும் இப்லீஸ் வழங்கிய ‘நஸீஹத்’ அவ்வாறுதான் அமைந்திருந்தது:

*''எனினும் அவ்விருவருக்குள் மறைந்திருந்த அவர்களது அபங்களை வெளிப்படுத்திக் காட்டும் நோக்கத்துடன் ஷெய்த்தான் தவறான எண்ணங்களை (அவர்களிடம்) ஏற்படுத்தினான்; (அவர்களை நோக்கி) '(இம்மரத்தின் கனியை உண்டால்) நீங்கள் வானவர்களாகி விடுவீர்கள்; அல்லது நிலையான வாழ்வைப் பெற்று விடுவீர்கள் என்பதற்காகவே உங்கள் ரட்சகன் இதனை விட்டு உங்களை விலக்கி வைத்தான்' என அவன் கூறினான். 'நிச்சயமாக நான் உங்களுக்கு இதோபதேசம் செய்பவனாகவே இருக்கிறேன்' என்றும் கூறினான். இவ்வாறுதான் அவன் அவ்விருவரையும் மயக்கி (அவர்களது நிலையிலிருந்து) கீழிறங்கச் செய்தான். அவ்விருவரும் அம்மரத்தினைச் சுவைத்த போது அவர்களது அபங்கள் அவர்களுக்கு வெளியாயின. (எனவே) சுனத்தில் இலைகளால் தங்களை மறைத்துக் கொள்ள முயன்றனர். (அவ்வேளை) அவர்களை அழைத்த அவர்களது ரட்சகன், 'அம்மரத்தை விட்டு உங்களை நான் தடுத்திருக்கவில்லையா?! நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்குத் தெளிவான விரோதியாக இருக்கிறான் என்றும் கூறிவல்லையா?!'' எனக்கேட்டான்...'' (7: 20-22)*

திர்மிதி, அபூதாவூத், இப்னு மாஜா ஆகியோர் அறிவிக்கும் ஹதீஸ் ஒன்றில் இறைத்தூதர் (ஸல்) இவ்வாறு கூறுகிறார்கள்: ''ஆலோசகர் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்''.

'அனுபவம்' என்பதன் மூலமாக கள ரீதியான நடைமுறை அறிவையே இங்கு நாம் குறிக்கிறோம். யதார்த்தம், நிகழ்வுகள், அவை தொடர்பான உண்மைகள், மனிதர்கள், அவர்களது பல்வேறு நிலைமைகள், பிரச்சினைகள், தீர்வுகள், நோய்கள், மருந்துகள்... முதலியவை பற்றிய அனுபவ அறிவு இதிலடங்கும். இப்னுல் அஸ்றக் குறிப்பிட்ட 'நீண்ட அனுபவம், விவேகம், புத்திக் கூர்மை என்பவற்றுடனான அறிவாற்றல்' என்ற முதல் நிபந்தனைக்கு நெருக்கமானதாக இது உள்ளது.

ஏனெனில், ஷூறா என்பது யதார்த்தம் தொடர்பாகவும், அதில் தோன்றும் நிகழ்வுகள், பிரச்சினைகள், தேவைகள் என்பன

தொடர்பாகவும் இடம் பெறுவதே அன்றி, அது ஒரு சிந்தனைக் கலந்துரையாடலோ அறிவியல் ஆய்வோ அல்ல. எனவே அங்கு கோட்பாட்டு அறிவு மாத்திரம் போதுமானதன்று. நடைமுறை வாழ்வியல் நிகழ்வுகள் பற்றிய சரியான, நுணுக்கமான புரிதலில் அந்த அறிவு ஏற்றப்படவேண்டும்.

ஆக- - ஆலோசனை வழங்குபவர் கோட்பாட்டு அறிவையும் நடைமுறை சார்ந்த அனுபவத்தையும் ஒருசேரப் பெற்றிருக்க வேண்டும் என்பதே அடிப்படையாகும். அதிலும் குறிப்பாக, அவர் ஒரு தனிநபராக மாத்திரம் இருக்கும் போது இது இன்னும் வலியுறுத்தப் படுகிறது.

ஆயினும்- (அறிவு என்ற) முதல் நிபந்தனையையும், (அனுபவம் என்ற) மூன்றாவது நிபந்தனையும் ஒன்றோடொன்று கலந்தவை யாகவும் ஒன்றையொன்று முழுமைப் படுத்துபவையாகவும் இருப்பதால், அனுபவத் தேர்ச்சி குறைந்த அறிஞர்களும், அறிவுத் துறையில் நன்கு பரிச்சயமற்ற அனுபவசாலிகளும் ஒரே சபையில் அங்கத்துவம் பெற்றிருப்பதில் தவறில்லை. ஏனெனில். இவ்விரு சாராரும் ஒருவரையொருவர் முழுமைப் படுத்துபவர்கள்; ஒருவ ரிடத்திலிருந்து ஒருவர் எடுத்துக் கொள்பவர்கள்.

இந்தவகையில்தான், அறிவுத் துறை சார்ந்தோருக்கும் அரசியல் துறை சார்ந்தோருக்கும் இடையில் ஒரு கலப்பும் ஒத்துழைப்பும் காணப்பட வேண்டும் என சீர்திருத்த சிந்தனையாளர் ஃகய்ருத்தீன் அத்-தூனிஸி அழைப்பு விடுத்தார். ஏனெனில், இவ்விரு சாராரில் ஒருவர் இன்றி மற்றவரால் விவகாரங்களை சீர்படுத்த முடியாது. அவர் கூறுகிறார்:

நாம் வலியுறுத்தும் இம்முடிவை நீங்கள் புரிந்து கொண்டால், ‘உம்மா’வின் நலன்களைச் சாதித்தல் என்ற நோக்கத்துக்காக ஒருவரை ஒருவர் பலப்படுத்தும் பொருட்டு அரசியல் ஆளுமை களுடன் அறிஞர்கள் கலந்துறவாடுவது ஷரீஆ ரீதியான அதி முக்கிய கடமைகளுள் ஒன்று என்பதைத் தெரிந்து கொள்வீர்கள். ஷரீஆவின் சட்டங்களை நிர்வகிப்பதானது சட்ட வசனங்கள்

பற்றிய அறிவில் தங்கியிருப்பது போல அவ்வசனங்களைப் பிரயோகிக்கும் சூழ்நிலைகள் பற்றிய அறிவிலும் தங்கியிருக்கிறது என்பதே இதன் பொருளாகும். எனவே, ஓர் அறிஞர் தனிமையையும் அரசியல்வாதிகளை விட்டு ஒதுங்கிய வாழ்வையும் தேர்ந்தெடுப் பாராயின், அவர் மேற்குறிப்பிட்ட நிலைமைகள் பற்றிய அறிவின் வாயில்களை தன்னை விட்டும் மூடிக்கொள்வார்''.

ஆக- (அறிவு, நேர்மை, அனுபவம் ஆகிய) இம்மூன்று பண்பு களும் பொது-உலகியல் விவகாரங்கள் தொடர்பான ஆய்விலும் ஆலோசனையிலும் ஈடுபடுவோரிடம் இருக்க வேண்டிய அடிப் படை நிபந்தனைகளாகின்றன. இப்பண்புகளை இமாம் புஹாரி தனது பின்வரும் கூற்றில் ஒன்றிணைத்துக் கூறுகிறார்:

''நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னர் ஆட்சியாளர்கள் நம்பிக்கை க்குரிய அறிஞர்களிடம் ஆலோசனை கேட்பவர்களாக இருந்த னர்''. அறிஞர்கள் அன்று செயற்பாட்டாளர்களாகவும் கள அனுப வம் கொண்டவர்களாகவும் இருந்தனர் என்பதே இதற்கான அடிப்படையாகும். இப்னு ஜமாஆவின் பின்வரும் கூற்றிலும் இப்பண்புகள் உள்ளடங்கி நிற்கின்றன:

''அவ்வாறே- செயற்படும் பண்பும், அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் இறை விசுவாசிகளுக்கும் தூய்மையாக நடந்து கொள் ளும் தன்மையும் கொண்ட அறிஞர்களுடன் ஆட்சியாளர்கள் கலந்தாலோசனை செய்வது அவசியம்''.

## கலந்தாலோசனைக்கு உரியோரை தெரிவு செய்தல்

கலந்தாலோசனைக்கு உரியோரை அல்லது 'ஷூறா' சபை களுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு இரு பிரதான வழிமுறைகள் உள்ளன:

1. நியமன முறை: அதாவது ஆட்சியாளர் -அல்லது அவரது அந்தஸ்தில் இருப்பவர்கள்- ஆலோசகர்களைத் தெரிவு செய்தலும், நியமித்தலும், ஆலோசகர் என்ற பதவியை அல்லது ஆலோசனை சபை உறுப்பினர் என்ற பதவியை வழங்குதலும்.

2. தேர்தல் முறை: பொதுவாக மக்கள் அல்லது அவர்களுள் ஒரு பிரிவு அல்லது குழு ஆலோசகர்களைத் தெரிவு செய்வதை இது குறிக்கிறது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஆலோசகர்களை ஏற்று, அவர்களுடன் இணைந்து செயல்புரிவது தலைவரது கடமையாகும்.

இவ்விரு முறைகளின் கீழும் பல்வேறுபட்ட விரிவான தேர்வு மாதிரிகள் காணப்படுகின்றன. சில சூழ்நிலைகளில் பயனை கருத்தில் கொண்டு இரு முறைமைகளையும் ஒன்றாகப் பின்பற்ற வேண்டியும் ஏற்படுவதுண்டு. அதன்படி ஆலோசகர்களில் ஒரு தொகையினர் முதலாவது முறைமை மூலமும், மற்றொரு தொகையினர் இரண்டாவது முறைமை மூலமும் தெரிவு செய்யப் படுவர்.

பொதுத் தேர்தல் முறையைப் பொறுத்தவரை, அங்கு தெரிவு செய்யும் பொறிமுறையில் பொதுமக்கள் பங்குகொள்ள அனு மதிக்கப் படுவர். மட்டுமன்றி இம்முறையினூடாக தெரிவு செய் யப் படுவோர் பொதுமக்களின் பிரதிநிதிகளாகவும், அவர்களது அபிப்பிராயங்களையும் நலன்களையும் வெளிப்படுத்துவோராகவும் இருப்பர். மேலும், இத்தேர்தல் முறை -சுதந்திரமாகவும் நேர்மை யாகவும் இடம் பெறுமானால்- அதிக பொதுநிலைத் தன்மையும் சமநிலைப் பண்பும் கொண்டு அமைவதோடு, காய்தல்-உவத்தல் களுக்கும் தனிப்பட்ட பரிசீலனைகளுக்கும் அப்பாற்பட்டவை யாக இருக்கும்.

நியமன முறையானது, மக்களுக்கு அறிமுகமற்ற அல்லது மக்களால் சரியாக மதிப்பீடு செய்யப்படாத தகுதி வாய்ந்த நபர் களை முன் கொண்டு வர உதவுவது அதன் பயன்களுள் ஒன்றாகும்.

அவ்வாறே, தேர்தல் முறையானது -பல்வேறு காரணங்களால்- மிகத் தகுதியும் சிறப்பும் வாய்ந்த நபர்களை விடுத்து குறைந்த தகுதியுடையோரைக் கொண்டு வர வாய்ப்புள்ளது. அதேவேளை நியமன முறையானது -மொத்தமாகவோ பகுதியளவிலோ- தனி நபர் கட்டுப்பாட்டுக்கு உரியதாகவும், சுயாதீனமாக கருத்துத்

தெரிவிக்கும் உரிமை வழங்கப்படாத ஆலோசகர்களை நியமித்து வைத்துக் கொள்ளும் நிலைமைக்கு இட்டுச் செல்வதாகவும் மாறிவிட முடியும். சிலபோது அவர்களைத் தெரிவு செய்வதற்கு அவசியமான தகைமை அளவீடுகளில் கூட கோளாறு தோன்ற முடியும்.

இவ்வாறு இரு முறைமைகளிலும் பயன்களும் குறைபாடுகளும் காணப்பட்ட போதிலும், பொதுத்தேர்தல் முறையே மிகச் சிறந்ததும், பயனுள்ளதும், பாதுகாப்பானதும், உத்தரவாதம் மிக்கதும் என்பதில் ஐயமில்லை. எனவேதான் அதற்கு முதன்மை இடம் வழங்கப்பட வேண்டும் என நான் கருதுகிறேன். அதேவேளை நியமன முறைக்கு -வரையறுக்கப்பட்ட அளவில்- இரண்டாம் தர முக்கியத்துவம் வழங்கப்பட முடியும்.

தேர்தல் முறையே அடிப்படையானதும் முதன்மை பெற வேண்டியதும் என்பதை நபியவர்களது ஸீறாவும் நேர்வழி நின்ற ஃகலீபாக்களது வரலாறும் உறுதிப் படுத்துகின்றன. முன்மாதிரியான அவ்வரலாற்றுக் கட்டத்தில் காணப்பட்ட சமூகத் தலைவர்களும் பிரதானிகளும் ஆலோசகர்களும் அந்தந்த சமூகங்களைச் சேர்ந்தவர்களாகவும் அந்தந்த சமூகங்களாலும் கோத்திரங்களாலும் நகரங்களாலும் கிராமங்களாலும் இயல்பாகவே தேர்ந்தெடுத்து முன்னிலைப்படுத்தப் படுபவர்களாகவும் இருந்தனர். பொதுமக்களது சுயாதீனமான நன்மதிப்பை பெறுபவர்களாகவும் அவர்கள் இருந்தனர். பொதுமக்களால் அவர்கள் திருப்தியோடு தேர்ந்தெடுக்கப் பட்டமையே இதற்குக் காரணமாகும். நபி (ஸல்) அவர்களும் அவ்வாறு அந்தந்த சமூகங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் திருப்தியுடன் முன்னிலை பெற்ற தலைவர்களோடும் பிரதானிகளோடும் குழு முதல்வர்களோடுமே தங்களது செயற்பாடுகளை அமைத்துக் கொண்டார்கள்.

இரண்டாம் 'அகபா' உடன்படிக்கையின் போது நபி (ஸல்) அவர்கள் அவ்ஸ் மற்றும் ஃகஸ்ரஜ் கோத்திரத்தவரை நோக்கிக் கூறினார்கள்: ''உங்கள் சமூகத்துக்குப் பொறுப்பு வகிக்கத் தகுந்த பன்னிரு தலைவர்களை ('நகீப்'களை) எனக்கு தெரிவு செய்து

தாருங்கள்; அவர்களுள் ஒன்பது பேர் கஸ்ரஜிலிருந்தும், மூவர் அவ்ஸிலிருந்தும் அமைய வேண்டும்''.

ஹுனைன் யுத்த வேளையில், நபி (ஸல்) அவர்கள் ஹவாஸின் கோத்திரத்தவருக்கு கருணை காட்டி அவர்களிலிருந்து பிடிபட்ட கைதிகளை திருப்பி ஒப்படைக்க விரும்பிய போது தமது போராளித் தோழர்களை அழைத்து இவ்வாறு கூறினார்கள்:

''உங்களது சகோதரர்களாகிய இவர்கள் (அதாவது ஹவாஸின் கள்) தங்கள் தவறு குறித்து வருந்திய நிலையில் எம்மிடம் வந்திருக்கின்றனர். அவர்களிடமிருந்து பிடிக்கப்பட்ட கைதிகளை அவர்களிடமே திருப்பி ஒப்படைத்து விடலாமென்று எனக்குத் தோன்றுகிறது. எனவே, எவர் பூரண சம்மதத்துடன் அவ்வாறு செய்ய விரும்புகின்றாரோ, அவர் அவ்வாறு செய்து கொள்ளட்டும். எவர் அதற்குப் பதிலாக எமது அடுத்த 'ஃபைஉ' வருமானத்தில் நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறாரோ, அவர் அது வரை தனது பங்கினை தன்னுடனே வைத்துக் கொள்ளட்டும்''. அதற்கு அம்மனிதர்கள் ''நாங்கள் மனம் விரும்பி கொடுத்து விடுகிறோம், அல்லாஹ்வின் தூதரே!'' என்றனர். அப்போது நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ''இது குறித்து உங்களில் எவருக்கு அனுமதியுண்டு... எவருக்கு அனுமதியில்லை என்பதை நாம் அறியோம். எனவே திரும்பிச் சென்று உங்களது தலைவர் களை வந்து இது குறித்து பேசச் சொல்லுங்கள்!''. அதற்கிணங்க திரும்பிச் சென்றவர்கள், தங்கள் தலைவர்களுடன் கலந்துரை யாடினர். பிறகு திரும்பி வந்து, தலைவர்கள் அது குறித்து திருப்தி கொள்வதாகவும், அனுமதிப்பதாகவும் தெரிவித்தனர்.

'ஃபத்ஹுல் பாரி'யில் இவ்வாறு விளக்கப்படுகிறது:

'' 'அல்-உறஃபாஉ' என்பது 'அரீஃப்' (அறிமுகமானவர்) என் பதன் பன்மை வடிவம். ஒரு மக்கள் குழுமத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பவரை இது குறிக்கிறது. அவர்களது விவ காரங்களை அறிந்து -தேவையின்போது- தனக்கு மேலிருப்பவருக்கு அறியத் தருவதால் அவருக்கு இப்பெயர் வழங்கப்பட்டது''.

'நகீப்' என்பவர் சமூகத்தில் சிரேஷ்டமானவரைக் குறிக்கும் பதமாகும். சமூக அங்கத்தவர்களது விவகாரங்களையும் நலன் களையும் ஆய்ந்து நிர்வகிப்பவராக அவர் இருப்பார்.

அந்த 'நகீப்'களும் 'அரீஃப்'களும் சுயாதீனமான சமூகத் தெரி வின் விளைவாக வந்தவர்கள் என்பதே இங்கு நமது கவனத்திற் குரிய விடயமாகும். ஒருபுறம் அவர்கள் கொண்டிருந்த அந்தஸ்து, தகுதி என்பவற்றாலும் மறுபுறம் மக்கள் அவர்கள் மீது கொண் டிருந்த திருப்தியாலுமே அந்த இடத்திற்கு அவர்கள் வந்தனர். எவரும் அவர்களை அந்தக் குழுமங்களுக்கு அனுப்பவும் இல்லை; திணிக்கவும் இல்லை. தம்மிலிருந்து தாமாகத்தான் அவர்களை அவை வெளிக் கொணர்ந்தன.

நேர்வழி நின்ற ஃகலீபாக்களின் வழிமுறையும் நபித்துவ வழிமுறைக்கு இயைபாகவே அமைந்திருந்தது. அந்த ஃகலீபாக்கள் ஒரு சன்மார்க்க விடயம் தொடர்பாக அல்லது உலக விவகாரம் தொடர்பாக ஆலோசனை பெற விரும்பினால் மக்களிலுள்ள தலை வர்களையும் பிரதானிகளையும்ஒன்று கூட்டுவார்கள். மைமூன் பின் முஹ்ரான் மற்றும் அபூ உபைத் வாயிலாக இமாம் அல்-பஅவீ 'கிதாப் அல்- கழா'வில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

''அபூபக்கர் ஏதாவதொரு பிரச்சினை தொடர்பாக அல்-குர் ஆனிலோ, ஸுன்னாவிலோ தீர்வு கிடைக்கவில்லை எனில் மக்க ளின் தலைவர்களையும் பிரதானிகளையும் ஒன்றுகூட்டி அவர் களிடம் ஆலோசனை கேட்பார். அவர்கள் அனைவரும் உடன்பாடு காணும் கருத்தை நடைமுறைப் படுத்துவார். உமர் (ரழி) கூட இவ்வாறே செயற்படுபவராக இருந்தார். குறித்ததொரு விடயம் தொடர்பாக அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ தீர்வு கிடைக்காத பட்சத்தில், அபூபக்கர் அது தொடர்பாக ஏதும் தீர்ப்புக் கூறி யிருக்கிறாரா என அவர் தேடிப் பார்ப்பார். அவ்வாறு அபூபக்கர் ஏதும் தீர்ப்புக் கூறியிருந்தால் அதையே தானும் ஏற்று நடைமுறைப் படுத்துவார். எதுவும் கிடைக்கவில்லை எனில், முஸ்லிம் தலை வர்களை வரவழைப்பார்; அவர்கள் ஒன்றுபடும் தீர்ப்பை நடைமுறைப் படுத்துவார்''.

'நிளாமுல் ஹுகூமதின் நபவிய்யா' (நபியவர்களது அரசாங்க ஒழுங்கு) என்ற நூலின் ஆசிரியர் குறிப்பிடுகின்ற பின்வரும் நிகழ்வும் இவ்வகை சார்ந்ததே: ''இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மரணித்ததும் அன்னாரைக் குளிப்பாட்ட முற்பட்ட வேளையில் அன்ஸாரிகள் வீட்டு வாயிலருகில் வந்து நின்று, 'நாங்கள் அன்னாரது மாமன் முறை கொண்டவர்கள். எனவே எங்களில் சிலரும் குளிப்பாட்டும் இடத்திற்கு சமூகமளிக்கட்டுமே!' எனக் கேட்டனர். அப்போது, 'நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒருவரைத் தெரிவு செய்யுங்கள்!' என அவர்களுக்குக் கூறப்பட்டது. எனவே அனைவரும் சேர்ந்து அவ்ஸ் பின் ஃகவ்லீயை தெரிவு செய்தனர். பின்னர் இறைத்தூதர் (ஸல்) அவர்களைக் குளிப்பாட்டுவதிலும் நல்லடக்கம் செய்வதிலும் அன்னாரது குடும்பத்தினருடன் அவரும் கலந்து கொண்டார்''.

எவ்வாறாயினும்- பொது மக்கள் தேர்தல் முறையானது -அது எழுந்தமானமாக இருந்தாலும் சரி; தற்கால தேர்தல்கள் போன்று ஒழுங்கமைக்கப் பட்டதாக இருந்தாலும் சரி- எப்போதும் எல்லா பொதுமக்களும் பங்கேற்கும் தேர்தல் என்ற பொருளைத் தராது. சிலபோது அது சிறிய, வரையறுக்கப்பட்ட அமைப்பிலும் இடம் பெற முடியும். அந்தவகையில் அறிஞர்கள், நியாயவில் துறை சார்ந்தோர், விஞ்ஞானத் துறை சார்ந்தோர், தொழில் துறை சார்ந்தோர் முதலியோர் தங்களுக்கு மத்தியிலிருந்து சிலரை தெரிவு செய்வதாகவும் அது அமைய முடியும். இந்த அனைத்தும் பொதுத்தேர்தல் என நாம் குறிக்கும் பிரயோகத்தினுள் அடங்கக் கூடியதே. அதாவது, பொதுமக்கள், அல்லது ஒரு பிரிவினர், அல்லது ஒரு குழுமம் தங்களது தலைவர்களையும் பொறுப்பாளர்களையும் தங்கள் பெயரால் தெரிவு செய்வதை இது குறிக்கும். இவ்வாறு தெரிவு செய்யப் படுவோர் தங்கள் சமூகத்தின் அல்லது குழுமத்தின் விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குபவர்களாகவும் தீர்மானம் எடுப்பவர்களாகவும் செயற்படுவர்.

இவ்வழிமுறையை நான் முதன்மைப் படுத்துவதும் அடிப்படை முறைமையாக எடுத்துக் கொள்வதும், அடுத்த வழிமுறையான

நியமன முறையை தடுப்பதாக அமைந்து விடக் கூடாது. ஏனெனில் அம்முறையானது முதல் வழிமுறையால் விடப்படும் குறைபாடுகளை நிவர்த்திக்க உதவியாக அமையும். இந்த நியமன முறை கூட அடக்கு முறைக்கும் தனிமனித ஆதிக்கத்திற்கும் இட்டுச் செல்லாத வகையிலும், அதன் மூலம் கிட்டக் கூடிய பயனை சாதித்துக் கொள்ளும் வகையிலும் குறிப்பிட்ட சில வரையறைகளுக்குள்ளும் நியமங்களுக்குள்ளும் நின்று செயற்படுத்தப்பட முடியும். மட்டுமன்றி, சில நிலைமைகளில் நியமன முறையே ஆரோக்கியமான, சிறந்த முறையாகவும் அமைந்து விட வாய்ப்புள்ளது. சில சிறப்புத்துறை ஆலோசனை சபைகளுக்கான அதி சிறப்புத் தேர்ச்சி கொண்ட ஆலோசகர்களைத் தெரிவு செய்யும் நிலையை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். பாதுகாப்பு அல்லது ராணுவ அல்லது பொருளாதார அல்லது வேறு வகையான அதிசிறப்புத் துறைகளில் இத்தகைய நியமன முறை அதிகம் பயனளிக்க முடியும்.

*பகுதி மூன்று :*

# ‘ஷூறா’வின் கட்டுப்படுத்தும் இயல்பும் பெரும்பான்மை விவகாரமும்

## *‘ஷூறா’வின் முடிவுகள் கட்டுப்படுத்துபவையா அல்லது வெறும் ஆலோசனைகளா?*

‘ஷூறா’வின் பெறுபேறுகள் கட்டுப்படுத்துபவையா அல்லது வெறும் ஆலோசனைகளாக கொள்ளப்படுபவையா என்பது தொடர்பாக நமது சமகாலத்தில் மிகப் பரந்த விவாதமொன்று நடைபெற்றிருக்கிறது. அதாவது, ‘ஆலோசகர்கள் முன்வைக்கும் ஆலோசனையும் அபிப்பிராயங்களும் அவர்களிடம் ஆலோசனை கேட்கும் தலைவர் கட்டாயம் எடுத்துப் பின்பற்ற வேண்டியவையா? அல்லது அவர் அவர்களிடம் தெளிவும் ஆலோசனையும் பெற்றுக் கொண்டு, பிறகு தனக்குத் தோன்றும் நிலைப்பாட்டை -அது அவர்களது அபிப்பிராயத்துடன் உடன்பாட்டாலும் முரண்பட்டாலும்- செயற்படுத்த முடியுமா?’ என்பதே இக்கேள்வியாகும்.

முன்னைய - நியாயவியல் மற்றும் விளக்கவுரை- அறிஞர்களது கூற்றுகளிலிருந்து பொதுவாக பெறப்படும் கருத்து யாதெனில், தலைவர் தனது ஆலோசகர்களிடம் கலந்தாலோசித்த பிறகு தனக்கு எது சரியானது என்று கருதுகிறாரோ அதனையே செயற்படுத்துவார். அந்த வகையில், இறுதித் தீர்மானம் தலைவரது அபிப்பிராயத்துக்கும்

மதிப்பீட்டுக்கும் உரியதாகும். இதுவே 'ஷூறாவின் முடிவுகள் வெறும் ஆலோசனைகளாகக் கொள்ளப்படுபவை' என்பதன் பொருள். ஆனால், நவீனகால பெரும்பான்மை அறிஞர்களதும் சிந்தனையாளர்களதும் அபிப்பிராயப் படி, ஆலோசகர்கள் ஒன்று பட்டுக் கூறும் அபிப்பிராயத்தை ஆலோசனைகளைக் கேட்கும் தலைவர் அவசியம் ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும். 'ஷூறா வின் பெறுபேறுகள் கட்டுப்படுத்துபவை' என்பதன் பொருள் இதுதான்.

சிலர் சற்று விரிவாகச் சென்று, 'ஷூறா' என்பது சில நிலைமை களில் கட்டுப்படுத்துபவையாகவும், வேறு சில நிலைமைகளில் கட்டுப்படுத்தாதவையாகவும் அமையும் என்கின்றனர். கலாநிதி கஹ்தான் அத்-தவ்ரீ இக்கருத்தையே கூறுகிறார். அவரது அபிப் பிராயப் படி, சட்ட வசனம் இடம்பெறாத, இஜ்திஹாதுக்கு உட்பட்ட ஒரு விடயம் தொடர்பாக ஆட்சிக் தலைவருக்கும் 'ஷூறா' சபைக்கும் இடையில் அபிப்பிராய பேதம் ஏற்படுமாயின், தலைவர் ஒரு முஜ்தஹிதாக இருக்கும் பட்சத்தில்- அவரது கருத்து பெரும்பான்மையினரின் கருத்துடன் உடன்பட்டாலும், முரண் பட்டாலும் அவரது கருத்தே முற்படுத்தப் படும். அந்த வகையில் -சட்ட வசனம் இடம்பெறாத பகுதிகளில்- சட்டங்களை ஏற் படுத்துதல், அவற்றில் திருத்தம் செய்தல், அவற்றை ரத்துச் செய்தல் என்பவற்றுக்கான உரிமை 'முஜ்தஹித்' தரத்திலுள்ள தலைவரின் வசமே இருக்கும்.

ஆட்சித் தலைவர் ஒரு முஜ்தஹிதாக இல்லாத பட்சத்தில் அல்லது அவர் ஒரு முஜ்தஹிதாக இருந்தும் எந்த அபிப்பிராயமும் கூறாமல் குறித்த விடயத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பை 'ஷூறா' சபைக்கு விடுவாராயின், அதன் பிறகு சபை அங்கத்தவர்களுக்கு மத்தியில் அபிப்பிராய பேதம் தோன்றும்போது சபையின் பெரும் பான்மை அங்கத்தவர்களது கருத்தே ஏற்று நடைமுறைப் படுத்தப் படும்.

உண்மை என்னவெனில், -நியாயவியல் மற்றும் விளக்கவுரை சார்- அறிஞர்கள் இவ்விவகாரம் தொடர்பாக சரியான வகையில்

விவாதிக்கவோ, ஷூறாவின் பெறுபேறுகள் ஆட்சியாளரைக் கட்டுப்படுத்துபவையா இல்லையா என்பது பற்றிய சான்றுகளை எடுத்தாராயவோ இல்லை. அவர்கள் பேசியிருப்பதெல்லாம் நபி யவர்கள் காலத்து 'ஷூறா' பற்றி மட்டுமே. அந்த வகையில்தான், 'நபி(ஸல்) அவர்கள் அடிப்படையிலேயே பிறரது ஆலோசனை களுக்கோ அபிப்பிராயங்களுக்கோ தேவை அற்றவராக இருந்தி ருக்கும்போது, பிறரது கருத்துக்கள் அன்னாரைக் கட்டுப்படுத்து பவையாக எவ்வாறு அமையும்?' என அவர்களுள் சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

எவ்வாறாயினும், இவ்வறிஞர்களைத் தாண்டி இவர்களுக்கும் முன்னர் வாழ்ந்தவர்களை -அதாவது நபியவர்களது ஸீறாவையும், ஃகலீபாக்களது வழிமுறையையும், பொதுவாக நபித் தோழர்களது வழிமுறையையும்- நாம் அவதானித்தால், ஆலோசகர்கள் கருத் தொருமைப்பட்ட அல்லது அவர்களுள் பெரும்பான்மையினர் கருத்தொருமைப்பட்ட முடிவையே அவர்கள் செயற்படுத்தி யிருப்பதைக் காண முடிகிறது.

ஷூறாவின் பெறுபேறுகள் தலைவரைக் கட்டுப்படுத்துதல் என்ற விவகாரம் 'பெரும்பான்மையினரின் முடிவு' என்ற விவ காரத்துடன் மிக நெருங்கிய தொடர்பும் பொருத்தமும் கொண்டது என்ற வகையில், இவ்விரண்டுக்கும் பொதுவான சான்றுகளை 'பெரும்பான்மையின் முடிவு' தொடர்பாக கலந்துரையாடும் போது நாம் எடுத்துக் காட்ட உள்ளோம்.

இப்போது நாம் ஷூறாவின் முடிவே ஏற்கப்பட வேண்டும் என விதிக்கும் கொள்கைக்கான சான்றுகளைக் குறிப்பதோடு மாத்திரம் போதுமாக்கிக் கொள்வோம். அந்த முடிவு ஏகோபித்துப் பெறப் பட்டதாகவும் இருக்க முடியும்; பெரும்பான்மை அடிப்படையில் பெறப்பட்டதாகவும் இருக்க முடியும்.

அல்-குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ தீர்வு காணப்படாத பிரச் சினை ஒன்று தோன்றும் போது அது தொடர்பாக எவ்வாறு தீர்வு பெறப்பட வேண்டும் என நபியவர்கள் கூறியதாக முன்னர் நாம்

குறிப்பிட்ட நபிமொழி இத்தகைய சான்றுகளுள் ஒன்றாக அமைகிறது:

''...அதை உங்களுக்கு மத்தியிலான ஷூறாவாக அமைத்துக் கொள்ளுங்கள். தனியொருவரது அபிப்பிராயத்தை மட்டும் வைத்து தீர்ப்புக் கூறாதீர்கள்!''

குழுக் கருத்தே பின்பற்றப்பட வேண்டும்; தனிநபர் அபிப் பிராயம் தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்கான வழிகாட்டல் இங்கு தெளிவாக வழங்கப் பட்டுள்ளது. ஏனெனில், நபியவர்கள் 'அது பற்றி கலந்தாலோசனை செய்யுங்கள்; பின்னர் உங்கள் தலைவரே இறுதி முடிவை எடுப்பார்' என்று இங்கு கூறவில்லை. குறித்த விவகாரத்தை ஒரு தனிநபர் கையாளுவதை அன்னார் தடுத்திருக்கிறார்கள்.

அபூபக்கரையும் உமரையும் நோக்கி அன்னார், ''நீங்கள் இரு வரும் ஓர் ஆலோசனையில் கருத்தொருமைப் படுவீர்கள் எனில், உங்களுடன் நான் மாறுபட மாட்டேன்'' எனக் கூறியதும் இவ்வகையானதே. இதனைக் கூறியவர் இறைத்தூதர் (ஸல்) அவர் களாகவும், கூறப்பட்டவர்கள் அன்னாரது இரு மாணாக்கராகவும் இருக்குமாயின், -பெரும்பாலும் தனது வர்க்கத்தைச் சேர்ந்த- ஒரு குழுவினரிடம் ஆலோசனை கேட்பவரது நிலை என்ன?!

அப்துல்லாஹ் பின் அப்துர் ரஹ்மான் பின் அபூ ஹுஸைன் வாயிலாக அபூதாவூத் 'அல்-மறாஸீல்' என்ற நூலில் பின்வருமாறு பதிவு செய்கிறார்: ஒரு மனிதர் 'அல்லாஹ்வின் தூதரே! மதி நுட்பம் என்பது என்ன?' என வினவினார். அதற்கு அன்னார், ''அறிவுடைய ஒருவரிடம் ஆலோசனை கேட்டு அதற்கு கட்டுப்படுவது!'' எனப் பதிலளித்தார்கள்.

அபிப்பிராயம் கூறத்தக்க ஒரேயொரு நபரிடம் ஆலோசனை கேட்பவரே இவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமாயின், 'உம்மா'வின் தலைசிறந்த அறிஞர் குழுவொன்றிடம் ஆலோசனை கேட்பவர் இவ்வாறு நடந்து கொள்வது அதிகப் பொருத்தமானதும் அவசியமானதுமாகும். நேர்வழி நின்ற ஃகலீபாக்களின் -குறிப்பாக

அபூபக்கர் மற்றும் உமர் ஆகியோரின்- கலந்தாலோசனைச் செயற் பாடுகள் இதனையே எடுத்துக் காட்டுகின்றன. அவற்றுள் சில வற்றை முன்னர் தந்துள்ளோம். அபூபக்கருக்கு ஃகாலித் இப்னுல் வலீத் செய்தி அனுப்பியபோது, ''அவர்களுடன் கலந்தாலோ சிப்பீராக; அவர்களுடன் முரண்படாதிருப்பீராக!'' என அபூபக்கர் அம்ர் இப்னுல் ஆஸுக்கு கூறியதும் இவ்வாறானதே.

நேர்வழி நின்ற ஃகலீபாவாகிய உமர் பின் அப்துல் அஸீஸ் மதீனாவின் கவர்னர் பொறுப்பை ஏற்றபோது, அதில் வாழ்ந்த பத்து நியாயவியல் அறிஞர்களை வரவழைத்தார்... அவர்களிடம் இவ்வாறு கூறினார்:

''உங்களை நான் ஒரு விடயத்துக்காக அழைத்திருக்கிறேன். அதற்காக உங்களுக்கு நற்கூலி கிடைக்கும். அதில் சத்தியத்தைச் செயற்படுத்த எனக்கு நீங்கள் உதவ வேண்டும். எந்த ஒரு விவகாரத்தையும் உங்கள் அபிப்பிராயத்தை வைத்து அல்லது உங்களில் சமூகமளித்திருப்போரது அபிப்பிராயத்தை வைத்தே நான் தீர்மானிப்பேன்''.

ஆட்சித் தலைவர் 'முஜ்தஹித்' தரமுடையவராக இருந்தால், அவரது முடிவே -அது ஆலோசனை சபையின் கருத்துக்கு முரணாக இருந்தாலும்- பின்பற்றப்பட வேண்டும் என்றும், சட்ட வசனம் இடம்பெறாத பகுதிகளில் அவரது முடிவே ஏற்கப்பட வேண்டும் என்றும் கலாநிதி கஹ்தான் அல் - தவ்ரீ கொண்டிருந்த கருத்தை சற்று முன் குறிப்பிட்டோம். இக்கருத்தை அவர் 'உஸூல்' துறை அறிஞர்கள் கூறும், ''முஜ்தஹித் தரத்தில் இருப்பவர் பிற முஜ்தஹித் களை பின்பற்ற மாட்டார்; தனது இஜ்திஹாத் முடிவையே பின்பற்றுவார்'' என்ற கருத்தின் அடிப்படையிலேயே அமைந் திருக்க வேண்டும். ஆனால் இது முழுக்கவும் அறிவியல் ரீதியான இஜ்திஹாதுக்கே பொருந்தும். அத்தகைய இஜ்திஹாதில் ஒவ்வோர் அறிஞரும் தனது சிறப்புத் துறைக்கேற்ப செயற்படுவார். அங்கு பொதுமக்களைக் கட்டுப்படுத்துதல் என்ற பண்பு கிடையாது. ஒவ்வொருவரும் தனது இஜ்திஹாத் தரும் முடிவை பின்பற்றவும், பிறருக்கு அதனைத் தீர்ப்பு (ஃபத்வா) வடிவில் வழங்கவும் உரிமை

பெற்றிருப்பார்; அம்முடிவையே பற்றிப் பிடித்திருக்கவும் அதற்காக வாதாடவும் கூட அவருக்கு உரிமை இருக்கும். விரும்பியோர் அவரது கருத்தைப் பின்பற்ற முடியும்; அல்லது பிறரது கருத்தைப் பின்பற்றவும் முடியும்.

ஆனால் நாம் இங்கு பேசிக் கொண்டிருப்பது வேறொரு விடயம். மக்கள் மீது பொதுவான சட்டவாக்கமாக மாறி நடை முறைப்படுத்தப்படுகின்ற கருத்துப் பற்றியும், மக்களின் விவகா ரங்களையும் நலன்களையும் திட்டமிடுவதோடு தொடர்புபட்டு ஆட்சியாளரது கட்டளைப்படி அவர்கள் மீது கட்டாயமாக்கப்படும் கருத்துப் பற்றியுமே இங்கு நாம் பேசுகிறோம். எனவே இது ஒரு முஜ்தஹித் மற்றொருவரை பின்பற்றுவதா இல்லையா என்ற பிரச்சி னைக்கு சம்பந்தமற்றது. அக்கோட்பாட்டை இங்கும் நடைமுறைப் படுத்தத்தான் வேண்டும் என எவராவது விரும்பினால் நாம் கூறுவது இதுதான்: முஜ்தஹித் தரத்திலான ஆட்சித் தலைவர் ஆலோசகர்களுக்கு முரணாக தான் கொண்டிருக்கும் கருத்தை பற்றிப் பிடித்திருக்கும் உரிமை பெற்றிருப்பார்; அதுவே சரியான தென்று நம்பவும், அறிவு பூர்வமாக அதனை விளக்கவும், அதற்காக தொடர்ந்து வாதாடவும் அவருக்கு உரிமை இருக்கும். இதன் மூலமாக அவர் பிறரை -தனிநபராயினும் குழுவாயினும்- பின் பற்றாதவராக இருப்பார். ஆனால் -யதார்த்தத்தில்- சமூகத்தின் மீது நடைமுறைப் படுத்துவதற்காக தத்தெடுக்கப்படும் கருத்து இந்த நிலையிலிருந்து வேறுபட்டது. அது குறித்தே இங்கு நாம் விளக்க முனைகிறோம்.

## பெரும்பான்மை விவகாரம்

ஷூறாவின் முடிவுகள் கட்டுப்படுத்துபவை என்ற சொல்லாடல் உண்மையில் ‘பெரும்பான்மைக் கொள்கை’ பற்றிய சொல் லாடலே. ஏனெனில் ஷூறாவின் கட்டுப்படுத்தும் தன்மை என்பது -இறுதியில்- ஆலோசகர்களது பெரும்பான்மைக் கருத்தை ஏற் பதையே குறிக்கிறது. அதாவது, குறித்ததொரு விவகாரம் தொடர்பாக கலந்தாலோசனை நிகழும்போது அநேகமாக நாம் இரு நிலைகளுக்கு முன்னால் நிற்கிறோம்:

ஒன்று: ஆலோசகர்கள் ஒரே கருத்தின் மீது ஏகோபித்து உடன் படுவது. இந்நிலை விளக்கத்துக்கு அவசியமற்றது. ஏனெனில் இதில் கிட்டும் முடிவு மிகத் தெளிவானது.

இரண்டாவது: ஆலோசகர்கள் பிரிந்து நின்று இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அபிப்பிராயங்களை பிரதிநிதித்துவம் செய் வது. இந்நிலையில்- அதிகளவு ஆலோசகர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயம் பெரும்பான்மை அபிப்பிராயமாகவும், சிறு தொகை யினர் கொண்டிருக்கும் அபிப்பிராயம் சிறுபான்மை அபிப்பிராய மாகவும் கொள்ளப்படும். எல்லா ஆலோசகர்களும் ஒரு கருத்தில் உடன்பட்டு, தலைவர் மாத்திரம் மாற்றுக் கருத்துக் கொண்டி ருந்தாலும் அங்கு கூட நாம் பெரும்பான்மை அபிப்பிராயம், சிறு பான்மை அபிப்பிராயம் என்ற இரு நிலைகளுக்கு முன்னால்தான் நிற்கிறோம். எனினும் இவ்வாறு நிகழ்வதும் அபூர்வமானது.

ஆக- ஆலோசனைச் செயற்பாடுகளில் அநேகமாக ஏற்படும் நிலைகள் இரண்டு: ஒன்றில், சிக்கலுக்கு இடமற்ற ஏகோபித்த முடிவு; அல்லது, பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை என இரு அபிப்பிராயம் காணப்படும் நிலை. இந்த இரண்டாவது நிலையே அதிகமாக ஏற்படுவதும், பிரச்சினைகளுக்கு உரியதும் ஆகும். இங்கு நாம் சொல்லாடலுக்கு எடுத்துக் கொண்டிருக்கும் விடயமும் அதுவே.

இதில் -எந்தத் தயக்கமும் இன்றி- நாம் கூறும் அபிப்பிராயம் இதுதான்: 'தீர்மானிக்கும் அதிகாரம் கொண்ட ஆலோசனை சபை களிலும் அமைப்புகளிலும் பெரும்பான்மை அபிப்பிராயமே முடிவாக எடுக்கப்பட வேண்டும்!'

(கட்டுப்படுத்தும் தன்மை மற்றும் பெரும்பான்மையை ஏற்றல்) ஆகிய இரு பகுதிகளையும் உள்ளிட்ட இவ்விவகாரமே ஷூறாவின் செல்வழியையும் முடிவையும் வரையறுக்கின்ற மிகப்பெரும் காரணி என்ற வகையில் அது பற்றி விரிவாகப் பேசுவதும், போதிய சான்றுகளை முன்வைப்பதும் அவசியமாகும்.

### *(1). அல்-குர்ஆனில் ஒரு பார்வை:*

இவ்விவகாரம் தொடர்பாக அல்-குர்ஆனில் எந்தவொரு குறிப்போ, தெளிவான தீர்ப்போ இடம்பெறவில்லை என்பது ஐயத்துக்கிடமற்றது. ஆயினும், பெரும்பான்மை என்ற கருத்தியலை செல்லுபடியற்றதாக்க சமகால புலமைவாதிகள் சிலர் முயன்றுள்ளனர். மனிதர்களில் அதிக எண்ணிக்கையினர் அல்லது பெரும்பான்மையினர் அல்-குர்ஆனில் இகழ்ந்துரைக்கப்பட்டுள்ளதை இவர்கள் தங்களுக்கு ஆதாரமாகக் கொள்கின்றனர். கலாநிதி ஹஸன் ஹுவைதியும் இவர்களுள் ஒருவர். பெரும்பான்மைக் கொள்கையை தான் எதிர்ப்பதற்கான காரணத்தை அவர் இவ்வாறு விளக்குகிறார்: ''ஏனெனில் அல்-குர்ஆனின் பல வசனங்கள் பொதுவாகவே பெரும்பான்மையை இகழ்ந்தும் சிறுபான்மையைப் புகழ்ந்தும் வந்திருக்கின்றன. அல்லாஹ் கூறுகின்றான்:

*''பூமியிலுள்ள அநேகருக்கு நீர் கட்டுப் படுவீராயின் அவர்கள் உம்மை வழிகெடுத்து விடுவர்.'' (6: 117)*

*''மனிதர்களில் அநேகர் -நீர் மிக அக்கறை செலுத்தினாலும்- விசுவாசிகளல்லர்.'' (12: 103)*

*''நரகத்துக்காக நாம் ஜின்களிலும் மனிதர்களிலும் ஏராளமானோரை படைத்துள்ளோம்.'' (7: 179)*

*''அவர்களுள் அநேகர் சத்தியத்தை வெறுப்பவர்களாகவே உள்ளனர்.'' (23: 70)*

*''(நபியே) தீயவை அதிகமாக இருப்பது உமக்கு ஆச்சர்யமூட்டினாலும் தீயதும் நல்லதும் சமமாவதில்லை.'' (5: 100)*

*''எனது அடியார்களுள் நன்றி பாராட்டுவோர் மிகச் சொற்பமே.'' (34: 13)*

*''அத்தகையோர் மிகச் சொற்பமே!'' ... (38: 24)*

இப்படித்தான் விசுவாசிகளை நிராகரிப்பாளர்களுடன் ஒப்பிடும் போதும், விசுவாசிகளை ஒருவரோடு ஒருவர் ஒப்பிடும் போதும்

நல்லவர்கள் சொற்பமாக இருப்பதைக் காண்கிறோம். சிறப்புக் கொண்ட சிறு தொகைக்கு முன்னால் எண்ணிக்கையால் பெருந் தொகை எம்மாத்திரம்?!...''

கலாநிதி அஹ்மத் ரஹ்மானியும் இத்தகையோருள் ஒருவர். 'பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை பிரச்சினையின் அடிப்படை உண்மை - தலைப்பு வாரியான அல்-குர்ஆன் விரிவுரை மீதான ஓர் ஆய்வு' என்ற பாரிய நூலொன்றையே இது தொடர்பாக அவர் எழுதியுள்ளார். சிறுபான்மைக்கு ஆதரவு சேர்ப்பதிலும் பெரும் பான்மையை மட்டம் தட்டுவதிலும் இவர் கொண்டிருந்த கடும் உத்வேகம் காரணமாக -சில விதிவிலக்கான நிலைமைகளை அவர் ஒப்புக் கொண்ட போதிலும்- பல தவறுகளிலும் பொதுமைப் படுத்தல்களிலும் எளிமைப் படுத்தல்களிலும் விழுந்திருக்கிறார்.

தனது நூலின் பெறுபேறை பின்வருமாறு அவர் சுருக்கிக் கூறுகிறார்:

''இது -நுணுக்கமான ஆய்வின் பின்னர்- ஓர் அடிப்படையான முடிவை வந்தடைந்துள்ளது. மனித வரலாறு நெடுகிலும் பெரும் பான்மை (அதாவது மக்கள் திரள்) என்பது எப்போதும் எதிர்மறை நிலைப்பாட்டிலும், அறிவார்ந்த சிறுபான்மையே நேர்மறை நிலைப்பாட்டிலும் இருந்து வந்தள்ளன என்பதுதான் அந்த அடிப்படையான முடிவு. இச் சிறுபான்மையையே இஸ்லாமிய பரிபாஷை 'அறிஞர் குழாம்' (ஜூம்ஹூர் அல்-உலமா) எனக் குறிக்கிறது''.

நூலாசிரியர் பின்வரும் கருத்தையும் வலியுறுத்துகிறார்:

''இஸ்லாமிய நாடுகளில் கூட இஸ்லாமிய தஃவாவை மேற் கொள்வோர் எதிர்க்கப்படுவதையும், பெரும்பான்மையினர் அல் லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் எதிராக போர்ப் பிரகடனம் செய்து பூமியில் விஷமம் புரிவதையும் நாம் அவதானிக்கிறோம். பொரும்பான்மை இவ்வாறு எப்போதும் எதிர்ப் புறத்திலும், சிறு பான்மை மட்டுமே நேர்ப் புறத்திலும் நிற்பதற்குக் காரணம்,

மனிதனது பூரணத்துவமும் நேர்வழியும் ஆய்வுக்கும் அறிவுக்கும் உழைப்புக்கும் செயற்பாட்டுக்குமான அவனது பரிபூரண ஆற்றலில் மறைந்து நிற்பதே...''

ஆய்வாளர் தனது நூலை இவ்வாறு நிறைவு செய்கிறார்:

''ஆக- நாம் வினைமையுடன் சிந்தித்து, நமது பகுத்தறிவுக்கு மீண்டு, தகைசான்ற சிறுபான்மையிடம் தலைமைத்துவத்தை வழங்குவோமா? அறிஞர் குழாமும், அவர்கள் வழியில் சென்ற நபிமார்களுமே அந்தச் சிறுபான்மையினர்!''

'பெரும்பான்மை எப்போதும் எதிர்மறைப் பக்கத்தில்' இருக்குமானால், பகுத்தறிவை நோக்கி மீள்வதற்கும் தகைசான்ற சிறுபான்மையிடம் தலைமைத்துவத்தை ஒப்படைப்பதற்குமாக அப்பெரும்பான்மையையே அழைப்பதனால் விழையும் பயன் என்ன என்று புரியவில்லை; ஏனெனில், அப்பெரும்பான்மையிடம் 'ஆய்வுக்கும் அறிவுக்கும் உழைப்புக்கும் செயற்பாட்டுக்குமான சக்தி' கிடையாதல்லவா!.

எவ்வாறாயினும், அல்-குர்ஆனில் பெரும்பான்மை குறித்த இகழ்ச்சி இடம்பெறும் சூழலையும் சட்டகத்தையும் புரிந்து கொள்ளாமையே பெரும்பான்மை குறித்த இத்தகைய புரிதலைக் கொண்டிருப்போர் பிரதானமாக சறுக்குகின்ற இடமாகும். ஏனெனில், 'அதிகமானோரை' இகழ்ந்துரைக்கும் வசனங்கள் வழக்கமாக நிராகரிப்பாளர்களைப் பற்றியும், இணை வைப்பாளர்களைப் பற்றியும், பெருமையடிப்போரைப் பற்றியும், நயவஞ்சகர்களைப் பற்றியும், வேதக்காரர்களைப் பற்றியுமே பேசுகின்றன. அவர்களது பெருமை, மறைவான உண்மைகளை நிராகரித்தல், அதன் விளைவாக மறுமை வாழ்வையும் மறுமை சார்ந்த பெறுமானங்களையும் செயல்களையும் உதாசீனப்படுத்தல்... என்பனவே அவர்கள் இகழ்ந்துரைக்கப்படுவதற்கான காரணமாகவும் அமைந்துள்ளன.

உண்மையில் இவ்விவகாரங்கள் அனைத்திற்கும் வேத வெளிப்பாடே (வஹீ) அடிப்படையாக அமைகின்றன. எனவே இவை

குறித்த தகவலில் வஹீயை மூலாதாரமாகக் கொள்ளாதவர்கள் வழிகேட்டுக்கே சென்றடைவர். அவர்கள் பொதுமக்களாயினும் சரி; பெரும்பான்மையாயினும் சரி; தங்களை அறிஞர்களாகக் காட்டி பெருமையடிக்கும் சிறு குழுவாக இருப்பினும் சரி! இந்த வகையில், வழிகேடும், அல்-குர்ஆன் அதனை இகழ்ந்துரைப்பதும் பெரும்பான்மைக்கும் சிறுபான்மைக்கும் ஒன்றுதான். பெரும் பான்மைக்கே இந்த இகழ்ச்சி என்றும், சிறுபான்மைக்கு அதற்கான சந்தர்ப்பம் குறைவு என்றும் எவரும் கூறி விட முடியாது. அது ஆளும் வர்க்கமாயினும் சரி; அறிஞராக கூறிக் கொள்ளும் வர்க்க மாயினும் சரி!

பல மெய்யியலாளர்களும் சிந்தனையாளர்களும் புலமையாளர் களும் பெரும் வழிகேடர்களாகவும் வழிகெடுப்போராகவும் இருந்திருப்பதைக் காண்கிறோம். நீண்ட பல தலைமுறைகளில் அவர்கள் பெரும்பான்மையாக இருந்தனரா அல்லது சிறு பான்மையாக இருந்தனார? அல்லது சிறுபான்மையில் பெரும் பான்மையாகஇருந்தனரா?அல்லதுஅவர்களேபெரும்பான்மையை வழிநடாத்தும் சிறுபான்மையாக இருந்தனரா?

அல் குர்ஆன் தனது சில வசனங்களில் பெரும்பான்மையை அல்லது சில பெரும்பான்மைகளை இகழ்ந்துரைத்துள்ளதெனில், வேறு பல வசனங்களில் 'அல்-மலஉ' (என்னும் சிறுபான்மை மேல்தட்டு) வர்க்கத்தினரையும் இகழ்ந்துரைத்திருப்பதைக் காண்கி றோம். அவர்களை வழிகேடர்களாகவும் வழிகெடுப்போராகவும் அது சித்தரிப்பதுடன், நபிமார்களது பிரச்சாரங்களை முன்னணியில் நின்று எதிர்ப்போராகவும் பொதுமக்கள் அவற்றுக்குச் செவிசாய்ப் பதை தடுப்போராகவும் அவர்கள் இருந்ததாக சொல்லிக் காட்டு கிறது.

நூஹ் (அலை) அவர்களது காலம் தொட்டு இதனை நாம் காண்கிறோம்: *''அவரது சமூகத்திலிருந்த மேட்டுக் குடியினர், 'நிச்சயமாக நாங்கள் உம்மை பகிரங்க வழிகேட்டில் இருப்பதாகவே காண்கிறோம்' எனக் கூறினர்...'' (7: 60)*

*''அவரது சமூகத்தில் (அவரை) நிராகரித்திருந்த மேட்டுக் குடியினர் கூறினர்: எங்களைப் போன்ற ஒரு (சாதாரண) மனித ராகவே உம்மை நாம் காண்கிறோம்; எங்களுள்ளிருக்கும் ஆழ்ந்த சிந்தனையற்ற, இழிந்த மனிதர்களே உம்மைப் பின்பற்றுவதையும் பார்க்கிறோம். எங்களை விட மேலாக உங்களுக்கு எந்தச் சிறப்பும் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை. மட்டுமன்றி, உங்களைப் பொய்யர்கள் என்றே நாம் எண்ணுகிறோம்''. (11: 27)*

முஹம்மத் (ஸல்) அவர்கள் வரை இந்நிலை தொடர்வதைப் பார்க்கிறோம்:

*'' 'சென்று விடுங்கள்! உங்கள் தெய்வங்களை பொறுமையுடன் அண்டியிருங்கள்; நிச்சயமாக இ(வரது பிரசங்கத்)தில் ஏதோ உள் நோக்கம் இருக்கிறது!' என அந்த மேட்டுக்குடித் தலைவர்கள் கூறிச் சென்றனர்...'' (38: 6)*

இடையில் வந்து போன அனைத்து நபிமார்களும் தூதர்களும் தங்கள் சமூகங்களுடன் எதிர்கொண்ட நிலையும் இதுவே. அங்கிருந்த அதிகார வர்க்கம் நபிமார்களது பிரச்சாரங்களிலிருந்து மக்களைத் தடுப்பதற்காக அனைத்து சாத்தியமான வழிமுறை களையும் பயன்படுத்தினர்:

*''அவரது சமூகத்தில் இருந்த பெருமை பிடித்த அதிகார வர்க்கத்தினர் கூறினர்: 'ஷுஐபே! உம்மையும் உம்மோடு விசுவாசம் கொண்டிருப்போரையும் எமது நகரத்திலிருந்து நிச்சயமாக நாம் வெளியேற்றுவோம்; அல்லது நீங்கள் எமது மதத்துக்கு மீண்டு வர வேண்டும்'. அதற்கவர், '(அதனை) நாம் வெறுத்து விட்ட பிறகுமா?' என வினவினார்''. (7: 88)*

*''அவரது சமூகத்தில் நிராகரித்திருந்த அதிகார வர்க்கத்தினர் (இறை விசுவாசிகளைப் பார்த்து) கூறினர்: ஷுஐபை பின்பற்றிச் சென்றால் நிச்சயமாக நஷ்டமடைபவர்கள் நீங்களே!'' (7: 90)*

இஸ்லாமிய சமூகத்தில் கூட -அறிஞர்கள், ஆட்சியாளர்கள் முதலிய- தலைமைப் பொறுப்பு வகிப்போரினால் நேரக்கூடிய சீர்கேடு குறித்து எச்சரிக்கும் பல ஹதீஸ்களும் சான்றோர் கூற்று

களும் அறிவிக்கப்பட்டுள்ளன. அத்தகையோர் சீர்கெட்டால் சமூகமும் சீர் கெட்டு விடும்; சீரடைந்தால் சமூகமும் சீர்பெற்று விடும் என அவை தெரிவிக்கின்றன.

உமர் இப்னுல் ஃகத்தாபின் கீழ்வரும் கூற்று நபித்துவ ஒளியிலிருந்து கிளைத்த அத்தகையதொன்றே:

''அறிந்து கொள்ளுங்கள்: மக்களின் தலைவர்களும் வழி காட்டிகளும் நேர்வழியில் நிற்கும் வரை மக்களும் நேர்வழியில் நிலைத்திருப்பர்!''

பொதுவான நெறிபிறழ்வு தலைவர்களதும் வழிகாட்டிகளதும் நெறிபிறழ்வின் காரணமாகவே ஏற்படும் என்ற எச்சரிக்கையை இக்கூற்று விடுக்கிறது.

உமரின் இக்கூற்று அபூபக்கர் ஸித்தீக் (றழி) கூறிய பின்வரும் கூற்றை மீளவும் உறுதிப்படுத்துவது போல் அமைந்துள்ளது:

அஹ்மஸ் கோத்திரத்தைச் சேர்ந்த ஸெய்னப் எனப்படும் பெண் மணியை அபூபக்கர் காணச் சென்றார். அப்பெண்மணி எதுவும் பேசாது மௌனமாய் இருப்பதைக் கண்ட அவர், அதற்கான காரணத்தை வினவினார். அப்போது அங்கிருந்தவர்கள், அப்பெண் மௌனமாகவே ஹஜ் கடமையையும் மேற்கொண்டதாக தெரி வித்தனர். அதற்கு அபூபக்கர், 'பெண்ணே பேசு; இவ்வாறு மௌன விரதம் காப்பது ஆகுமானதல்ல; அது அறியாமைக் கால செயற்பாடு!' எனக் கூறினார். அப்போது பேச ஆரம்பித்த பெண், 'நீங்கள் யார்!' என வினவினார். 'நான் முஹாஜிர்களுள் ஒருவர்' என அபூபக்கர் பதிலளித்ததும், 'முஹாஜிர்களுள் யார்?' என மீண்டும் வினவினார். அவர், 'குறைஷிகளைச் சேர்ந்தவர்' எனக் கூறியபோது, 'குறைஷியருள் யார்?' என திரும்பவும் அப்பெண் கேட்டார். 'நீர் நிறையக் கேள்வி கேட்கிறீரே!' எனக் கூறிய அபூபக்கர், 'நான் அபூபக்கர்!' என்றார். அப்போது அப்பெண் கேட்டார்: 'மௌட்டீகக் காலத்தின் பிறகு அல்லாஹ் எங்களுக்குத் தந்த இந்த நன்னிலையில் நாம் எதுவரை நிலைத்திருப்போம்?'. அதற்கு அபூபக்கர் கூறினார்: 'உங்கள் தலைவர்கள் இதில் நிலைத்

திருக்கும் வரை நீங்களும் நிலைத்திருப்பீர்கள்!'. அதற்கு அப்பெண், 'தலைவர்கள் என்றால் யார்?' எனக் கேட்க, 'உமது சமூகத்தினர் எடுத்து நடக்கும் படியான கட்டளைகளைப் பிறப்பிக்கின்ற தலைவர்களும் பிரதானிகளும் உமது சமூகத்தில் இருக்கவில்லையா?!' என அபூபக்கர் திருப்பிக் கேட்டார். 'இருக்கத்தான் செய்தார்கள்!' என அப்பெண் பதிலளித்த போது அபூபக்கர் கூறினார்: 'அவ்வாறு மக்களுக்கு மேல் இருப்போரே அவர்கள்'.

அல்-ஹாபிழ் இப்னு ஹஜர் கூறுகிறார்: ''நன்னிலை' (அல்-அம்ர் அஸ்-ஸாலிஹ்) என்பது இஸ்லாம் மார்க்கமும், அது உள்ளடக்கியிருக்கும் நீதி, கருத்தொற்றுமை, அநியாயம் இழைக்கப்பட்டவருக்கு உதவுதல், ஒவ்வொன்றையும் அதற்குரிய அந்தஸ்தில் வைத்தல் என்பனவாகும்''. தொடர்ந்து, அபூபக்கரின் கூற்றை அவர் இவ்வாறு விளக்குகிறார்: '' 'உங்கள் தலைவர்கள்' என அவர் கூறியதற்குக் காரணம், மக்கள் அவர்களது ஆட்சியாளர்களது மதத்தைப் பின்பற்றுவோராக இருப்பதாகும். ஆட்சியாளர்கள் நேர்வழியிலிருந்து புரளும்போது தங்களோடு பிறரையும் புரளச் செய்து விடுகிறார்கள்''.

சிலர் பெரும்பான்மையை பெரும்பான்மை என்பதற்காகவே தரம் குறைக்கவும் கேவலப்படுத்தவும் முற்பட்டுள்ளனர். பின்வரும் சங்கை மிக்க வசனத்தையும் தங்களுக்கு சான்றாகக் கொண்டுள்ளனர். *''(நபியே) கூறும்: கெட்டவை அதிகமாகக் காணப்படுவது உமக்கு ஆச்சர்யமூட்டினாலும் கெட்டதும் நல்லதும் சமமாவதில்லை. எனவே சிந்திக்கக் கூடியவர்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்; அதனால் நீங்கள் வெற்றி அடைவீர்கள்!'' (5: 100)*

ஆயினும் இவ்வசனம் பெரும்பான்மையை குறைத்து மதிப்பிடவோ, பெரும்பான்மையை விட சிறுபான்மையை உயர்த்திக் காட்டவோ இல்லை. தீயதையே அது -அதிகமாகக் காணப்பட்டாலும்- இகழ்ந்துரைக்கிறது; அதிகமாக இருக்கும் தீயதை விட சொற்பமாக இருக்கும் நல்லது சிறந்தது என உறுதி செய்கிறது. ஆக, இங்கு ஒப்பீடும் ஏற்றத்தாழ்வும் அதிகமானதற்கும்

சொற்பமானதற்கும் இடையிலன்றி, நல்லதற்கும் கெட்டதற்கும் இடையிலேயே உள்ளது. மட்டுமன்றி, அதிகமாக இருத்தலானது தன்னளவிலேயே நல்லதும் புகழத்தக்கதும் ஆகும். அது அல்லாஹ் தனது அடியார்களுக்கு வழங்கும் அருளாகவும் உள்ளது: *''நீங்கள் சொற்பமானோராய் இருந்த போது அல்லாஹ் உங்களை அதிகப் படுத்தியதை நினைத்துப் பாருங்கள்; விஷமக்காரர்களின் முடிவு எப்படியாயிற்று என்பதையும் கவனித்துப் பாருங்கள்!''. (7: 86)*

உண்மையில், நல்லதோடும் கெட்டதோடும் தொடர்புபட்ட இந்த ஒப்பீட்டினுள் முஸ்லிம்களை அனாவசியமாக உள்ளிழுத்து அவர்களுள் அதிக எண்ணிக்கையினரை தீயதில் அதிக எண் ணிக்கையுடன் ஒப்பீடு செய்வதே கண்டிக்கத்தக்க செயலாகும். மட்டுமன்றி, 'தீயது' என்பதன் மூலம் குறித்த வசனத்தில் நாடப்படுவது இணை வைப்பும், இறை நிராகரிப்பும், நயவஞ்ச கத்தனமும், தடுக்கப்பட்ட சம்பாத்தியமும், இன்ன பிற அம்ச ங்களும் என்பது இங்கு கவனத்துக்குரியது!

முஸ்லிம்களும் முஃமின்களும் பொதுவாகவே நல்லவர்கள். நல்லது அதிகமாக இருப்பது -சந்தேகமின்றி- குறைவாக இருப்பதை விட சிறந்தது. அவ்வாறே, கெட்டதில் கொஞ்சமாக இருப்பது அதில் அதிகமாக இருப்பதை விட சிறந்தது. ஏனெனில், நல்ல வற்றில் ஏற்படும் தொகை ரீதியான அதிகரிப்பு நன்மையின் அதிகரிப்பாகவே அமையும். இந்த உண்மை பொதுவான முஸ்லிம் களுக்கே பொருந்தும் போது, அவர்களுள் அறிஞர்களாகவும் ஆலோசகர்களாகவும் தீர்மானிப்போராகவும் இருப்போருக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்க வேண்டும்?

இது குறித்து இப்னு அறஃபா அத்-தூனிஸீ நுட்பமானதும் ஆச்சர்யம் மிக்கதுமான அனுமானமொன்றை இப்னுல் முனீர் அல்- இஸ்கந்திரியுடன் தொடர்புபடுத்தி முன்வைக்கிறார். அதாவது, *''(நபியே) கூறும்: கெட்டவை அதிகமாகக் காணப்படு வது உமக்கு ஆச்சர்யம் ஊட்டினாலும் கெட்டதும் நல்லதும் சமமாவ தில்லை!'' (5: 100)* என்ற வசனமே அதிக எண்ணிக்கைக்கு

முக்கியத்துவம் தருவதாகவும், அதனை முற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது என அவர் குறிப்பிடுகிறார். இக்கூற்றினைத் தொடர்புபடுத்தி இப்னு ஆஷூரும் தனது அல்-குர்ஆன் விளக்க வுரையில் பின்வருமாறு கூறுகிறார்:

''ஒருமுறை நான் இப்னு அப்திஸ் ஸலாமுடன் கலந்துரையாடிக் கொண்டிருக்கையில் இவ்வாறு கூறினேன்: 'இந்த வசனம் சாட்சி யத்தின் போது அதிக எண்ணிக்கை முற்படுத்தப் படலாம் என்ப தற்குச் சான்றாக உள்ளது. ஏனெனில், ஒரு விடயம் குறித்து இரு நேர்மையான முஸ்லிம்களும், அதற்கெதிராக பத்து நேர்மையான முஸ்லிம்களும் சாட்சியமளித்தால் என்ன செய்வது என்பதில் (அறிஞர்கள்) கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். இந்நிலையில் இரண்டுக்கும் பத்துக்கும் இடையில் (சாட்சியம் கூறும் விடயத்தில் இரு தொகையும் பரிபூரணமானவையே என்ற வகையில்) எந்த வேறுபாடும் இல்லை என்பதுதான் பிரபலமான கருத்தாக இருந்த போதிலும், அதிக எண்ணிக்கை முற்படுத்தப்பட வேண்டும் என மற்றோர் அபிப்பிராயமும் உள்ளது. ''அதிக எண்ணிக்கை உம்மைக் கவர்ந்தாலும்'' என்ற பிரயோகம் அதிக எண்ணிக்கைக்கு ஒரு பெறுமானம் இருப்பதைக் காட்டுகிறது; அது கெட்டதாக இருக்கும் போதுதான் புறக்கணிக்கப்படுகிறது!' எனினும், இப்னு அப்திஸ் ஸலாம் எனது இக்கருத்துடன் எவ்வகையிலும் உடன்படவில்லை. பிறகு இப்னுல் முனீர் இதே கருத்தை குறிப்பிட்டிருந்ததைக் கண்டேன்''.

நல்லதில் அதிகமானதற்கு ஒரு பெறுமானமும் உயர்ந்த இடமும் வழங்கப்படுவதை ஸஹீஹ் முஸ்லிமின் கிதாப் அல்-ஜனாஇஸில் இடம்பெற்றுள்ள அனஸ் பின் மாலிகின் பின்வரும் அறிவிப்பும் எடுத்துக் காட்டுகிறது:

ஜனாஸா ஒன்று எடுத்துச் செல்லப்பட்ட போது மக்கள் அந்த ஜனாஸாவை நல்ல முறையில் மெச்சிப் பேசினர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''அது கடமையாகி விட்டது; கடமையாகி விட்டது; கடமையாகி விட்டது!'' என்றார்கள். பின்னரும் ஒரு

ஜனாஸா எடுத்துச் செல்லப்பட்டது. அப்போது மக்கள் அது பற்றி இகழ்ந்து பேசினார்கள். அப்போதும் நபி (ஸல்) அவர்கள், ''அது கடமையாகி விட்டது; கடமையாகி விட்டது; கடமையாகி விட்டது!'' என்றார்கள். அப்போது உமர் இவ்வாறு வினவினார்:

''என் தந்தையும் தாயும் உங்களுக்கு அர்ப்பணம்! ஒரு ஜனாஸாவை மக்கள் நல்ல முறையில் புகழ்ந்துரைத்த போது 'அது கடமையாகி விட்டது! கடமையாகி விட்டது' என்றீர்கள்; மற்றொரு ஜனாஸா பற்றி மோசமாகக் குறிப்பிடப்பட்டபோது, ''அது கடமை யாகி விட்டது கடமையாகி விட்டது!' என்றீர்களே?!'' அதற்கு நபியவர்கள் கூறினார்கள்: ''நீங்கள் எவரைப் பற்றி நல்ல முறையில் குறிப்பிட்டீர்களோ அவருக்கு சுவனம் கடமையாகி விட்டது; எவரைப் பற்றி மோசமாகக் குறிப்பிட்டீர்களோ அவருக்கு நரகம் கடமையாகி விட்டது! நீங்களே பூமியில் அல்லாஹ்வின் சாட்சி யாளர்கள்; நீங்களே பூமியில் அல்லாஹ்வின் சாட்சியாளர்கள்; நீங்களே பூமியில் அல்லாஹ்வின் சாட்சியாளர்கள்!''.

இமாம் நவவீயின் கருத்துப்படி இதன் சரியான பொருளாவது: ''எந்தவொரு முஸ்லிம் மரணித்து அல்லாஹ் அவர் பற்றிய நல்லெண்ணத்தை மக்களிடம் அல்லது அவர்களில் பெரும் பான்மையானோரிடம் ஏற்படுத்தி விடுகிறானோ அந்த முஸ்லிம் சுவனவாசியே என்பதற்கு அது சான்றாகி விடுகிறது...''

சுவர்க்கத்தையும் நரகத்தையும் தீர்மானிப்பதிலேயே அதிகமான இறைவிசுவாசிகளது சாட்சியம் முக்கியத்துவம் பெறுகின்றதெனில், உலக விவகாரங்களையும் நலன்களையும் தீர்மானிப்பதில் அல்லது ஆட்சி மற்றும் தலைமைத்துவப் பொறுப்புகளுக்கு பொருத்த மானவரைத் தெரிவு செய்வதில் அப்பெரும்பான்மை முக்கியத் துவம் பெறாதிருப்பது எங்கனம்?

உண்மையான ஷூறா என்பது கூட்டு அபிப்பிராயத்தையும் கூட்டுத் தீர்மானத்தையும் கொண்டிருப்பதே அன்றி, தனிப்பட்ட ஒருவருக்குரியதாக இருக்காது என்பதை உணர்த்தக் கூடியதாகவே

*''அவர்களது (பொது) விவகாரங்கள் அனைத்தும் அவர்களுக்கு மத்தியிலான ஆலோசனையின் அடிப்படையில் அமைந்திருக்கும்'' (42: 38)* என்ற வசனமும் உள்ளது. ஏனெனில், ஒரு விவகாரம் கலந்தாலோ சிக்கப்படும்போது அது அனைவரதும் உடமையாக மாறுகிறது; அனைவரது அபிப்பிராயங்களுக்கும் அங்கு இடமளிக் கப்படுகிறது; பிறகுதான் அவர்கள் அனைவரும் அல்லது அவர் களுள் பெரும்பாலானோர் கூறும் அபிப்பிராயம் முடிவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆக- குறித்த விடயம் ஆரம்பம் முதல் இறுதி வரை அவர்கள் அனைவருக்கும் மத்தியில் சுழல்கிறது. அவர்களது திருப்தியின்றி எந்த தனிநபருக்கும் அது சாட்டப்பட முடியாது.

'ஸபஉ' நாட்டு இளவரசி தொடர்பான பின்வரும் வசனங்களும் இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்த துணை செய்ய முடியும்:

*''(அவ்வரசி) கூறினாள்: பிரதானிகளே! கண்ணியமான நிருப மொன்று எனக்கு வந்திருக்கின்றது. அது ஸுலைமானிடமிருந்து வந்திருக்கிறது. 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' எனத் துவங்கி, 'நீங்கள் பெருமையடிக்காமல் முற்றிலும் வழிப்பட்டவர்களாக என்னிடம் வந்து விடுங்கள்!'' (என்று எழுதப்பட்டுள்ளது). பிரமுகர்களே! எனது இவ்விவகாரத்தில் ஆலோசனை தாருங்கள்; நீங்கள் எனக்கு நேரிடையாக அபிப்பிராயம் தெரிவிக்காமல் நான் எந்த முடிவையும் எடுத்ததில்லை!'' (27: 29-32)*

*''நீங்கள் எனக்கு நேரிடையாக அபிப்பிராயம் தெரிவிக்காமல் நான் எந்த முடிவையும் எடுத்ததில்லை!''* என்பதுதான் இங்கு நாம் சான்றாகக் கொள்ளும் பகுதியாகும்.

'ஸபஉ' நாட்டு இளவரசியின் இக்கூற்று சான்றாகக் கொள்ளப் படுவது பொருத்தமாக அமையும் பொருட்டும், அது குறித்து மறுப்பேதும் கூறப்பட இடமேற்படாத வகையிலும் இரு விடயங்கள் மீது கவனயீர்ப்புச் செய்வது இங்கு அவசியம்:

ஒன்று: ஷாத்திபீ உறுதிப் படுத்தும் பின்வரும் கருத்து (இதில் எவரும் அவருடன் முரண்பட்டதாகத் தெரியவில்லை): ''அல்-குர்ஆனில் கூறப்பட்டுள்ள எந்தச் சம்பவமாயினும் அதற்கு

முன்னால் அல்லது பின்னால் (இதுவே அதிகம்) அது குறித்த ஏதாவது மறுப்புரையையும் அல்-குர்ஆன் குறிப்பிடும். அவ்வாறு குறித்ததொரு சம்பவம் விவாதத்துக்கு உட்படுமாயின் அது ஏற்க முடியாதது அல்லது பொய்யானது எனக் கொள்ளப்படுவதில் எந்தச் சிக்கலும் இல்லை. ஆனால் அவ்வாறு மறுப்பேதும் இடம் பெறவில்லையாயின், கூறப்பட்ட விடயம் சரியானது என்பதற்கும் உண்மையானது என்பதற்கும் அதுவே சான்றாகி விடும்... ஏனெனில், அல்-குர்ஆன் 'ஃபுர்கான்' (அளவு கோல்), 'ஹுதா' (நேர்வழி), 'புர்ஹான்' (சான்று), 'பயான்' (தெளிவு) என்றும் அழைக்கப்படுகிறது. அது மிகப் பொதுவான விடயம் தொட்டு மிகக் குறிப்பான விடயம் வரை அனைத்திலுமே அல்லாஹ் மனித இனத்திற்கு வழங்கிய சாட்சியம். எனவே, அல்-குர்ஆனினால் சு ட்டிக் காண்பிக்கப்படாத பொய்யான அல்லது ஏற்க முடியாத எந்த விடயமும் அதில் இடம் பெறுவது சாத்தியமற்றது''.

'ஸபஉ' நாட்டரசி தனது பிரமுகர்களது உடன்பாடு இன்றி எந்த முடிவையும் எடுத்ததில்லை எனக் கூறியமைக்கும் அந்த நடை முறைக்கும் மறுப்பாக -அதே இடத்திலோ வேறு இடங்களிலோ- அல்-குர்ஆன் எதனையும் குறிப்பிடவில்லை.

நபி (ஸல்) அவர்களது ஸீறாவில் கூட இக்கருத்துக்குப் பலம் சேர்க்கக் கூடிய சான்றுகளையே காண்கிறோம். எனவே அப் பெண்மணியின் கூற்றையும் நடைமுறையையும் மறுத்துரைப்ப தற்கு எந்த ஆதாரமும் இல்லை. மட்டுமன்றி, உலகம் உள்ளளவும் தனது அடியார்களுக்கு ஓதிக் காண்பிக்கப்படும் வகையில் அல் லாஹ் அச்சம்பவத்தை உரைத்திருக்கிறான். ஆக- உஸ்தாத் அத்னான் அந்-நஹ்வீயின் குற்றம் சாட்டும் பாங்கிலான பின்வரும் கூற்று அடிப்படையற்றது: ''அப்பெண் ஆலோசனை வேண்டியது குறித்த பிரச்சினையிலிருந்து வெளியேறும் மார்க்கத்தை அறிய வோ, சத்தியத்தைக் கண்டடையவோ அல்ல. அது ஒரு நிர்வாக ஒழுங்கு என்பதையும், ஓர் ஆட்சி முறை என்பதையும், வெறும் கருவிகளையும் ஜடங்களையும் கையாளும் முறை என்பதையும் தவிர வேறில்லை!''.

அப்பெண்ணின் ஆலோசகர்கள் கூறிய பதிலுக்கு அச்சமும் இயலாமையும் வஞ்சப் புகழ்ச்சியும் அவளது அடக்கு முறையுமே காரணமாக இருந்திருக்குமெனில், *''நீங்கள் எனக்கு அபிப்பிராயம் தெரிவிக்காமல் நான் எந்த முடிவையும் எடுத்ததில்லை!''* என அவர்களுக்குக் கூற வேண்டிய அவசியம் இருந்திருக்காது. அவர் களைத் தவிர்த்து எந்த முடிவையும் எடுக்காதிருப்பதே அரசியின் நடைமுறையாக இருந்திருப்பதை இது எடுத்துக் காட்டுகிறது. அவர்கள் வெறும் கருவிகளாகவும் ஜடங்களாகவும் இருந்திருந்தால் அரசியின் இக்கூற்றுக்கே அவசியம் இருந்திருக்காது. மட்டுமன்றி, மொத்தத்தில் அவர்களிடம் ஆலோசனை கேட்கவே அவசியம் இருந்திருக்காது.

இரண்டு: இது முன்னையதை விட அதிக கவனத்திற்குரிய விடயமாகும். அதாவது, 'ஸபஉ' நாட்டரசியின் திட்டமிடல், சமயோசித நடவடிக்கை, முடிவு என்பவற்றை மெச்சும் வகையிலும் அவை குறித்து திருப்தி கொள்ளும் போக்கிலுமே அவளது கதை அல்-குர்ஆனில் விவரிக்கப் பட்டுள்ளது. முன்னர் அவள் இணை வைத்து வணங்கியிருந்தால் அதற்குக் காரணம் *''அவள் நிராகரிக்கும் சமூகத்தைச் சேர்ந்திருந்தாள்'' (27: 43)* என்பதே. எனினும் சத்திய அழைப்பைச் செவியேற்ற மாத்திரத்திலேயே அவர் கூறியது இதுதான்: *''என் ரட்சகா! நிச்சயமாக நான் எனக்கே அநியாயம் இழைத்துக் கொண்டேன். (இப்போது) ஸுலைமானுடன் இணை ந்து அகிலங்களின் ரட்சகனான அல்லாஹ்வுக்கு அடிபணிந்து விட்டேன்!'' (27: 44)*

அந்த வகையில், பின்வருமாறு கூறியோரின் வகையில் அவள் அடங்கி விடுகிறாள்:

*''எங்கள் ரட்சகா! உங்கள் ரட்சகனை விசுவாசம் கொள்ளுங்கள் என இறை நம்பிக்கையை நோக்கி அழைக்கும் ஓர் அழைப்பாளனை நாங்கள் செவியுற்றோம்... எனவே விசுவாசித்தோம்!'' (3: 193)*

-ஸுலைமானின் மடல் கிடைக்கப் பெற்றதிலிருந்து- அல்-குர் ஆன் விவரித்த அவளது அனைத்து வார்த்தைகளும் செயல்களும் அவள் மதி நுட்பத்துக்கும் சிறந்த திட்டமிடலுக்கும் உதாரணமாகவே

எடுத்துக் காட்டப்பட்டாள் என்பதற்கு சான்றாக உள்ளன. அந்த வகையில், துல்கர்னைன் பற்றி அல்லாஹ் விவரித்தது போன்றே அவளும் விவரிக்கப் பட்டிருக்கிறாள் எனலாம். அல்-குர்ஆன் விளக்கவுரை ஆசிரியர்கள் சிலரும் இப்போக்கினைப் புரிந்து கொண்டு அது குறித்து கவனயீர்ப்புச் செய்துள்ளனர்.

அவள் தனது பிரதானிகளுடன் மேற்கொண்ட கலந்தாலோசனை தொடர்பாகவும் கலந்துரையாடல் தொடர்பாகவும் அல்-குர்துபீ இவ்வாறு கூறுகிறார்:

''தனது சமூகத்தினருடன் நல்லொழுக்கமாக அவள் நடந்து கொண்டாள்; தன்னிடம் வந்திருக்கும் புதிய விவகாரம் குறித்து அவர்களுடன் கலந்தாலோசித்தாள்; எல்லா விவகாரங்களிலும் அதுவே தனது வழிமுறை என்பதை ''நீங்கள் எனக்கு அபிப்பிராயம் தெரிவிக்காமல் நான் எந்த முடிவையும் எடுத்ததில்லை'' என்ற கூற்றின் மூலமாக தெரியப்படுத்தினாள். அவ்வாறிருக்கையில், இப்போது ஏற்பட்டிருக்கும் மிகப் பெரும் விவகாரம் குறித்து எப்படி அவள் ஆலோசனை கேட்காது இருக்க முடியும்! பிரதானிகளும் அவள் மனம் குளிரும் வகையிலேயே பதில் தருகின்றனர். தங்களிடம் இருக்கும் சக்தி பற்றியும் எடுத்துக் கூறிய அவர்கள், குறித்த விடயத்தை அவளது பார்வைக்கே விட்டு விடுகின்றனர்''.

குர்துபீ தொடர்ந்து கூறுகிறார்: ''இது எல்லாத் தரப்பிலிருந்தும் அழகியதொரு கலந்துரையாடலாக அமைந்து விட்டது''.

அரசிக்கு அவளது ஆலோசனை சபை அளித்த அதிகாரத்துக்குத் தகுதியுடையவளாக அவள் இருந்தாள் என்பதையும், அவள் அனுபவமும் அறிவும் ஞானமும் வாய்க்கப் பெற்றிருந்தாள் என்பதையும் அவளது வார்த்தைகளும் செயற்பாடுகளும் வெளிப் படுத்துகின்றன. எனவேதான் ''நிச்சயமாக அரசர்கள் ஒரு நகரில் நுழைந்தால் அதனை அழித்து அதில் கண்ணியமாக வாழ்வோரையும் சிறுமைப்படுத்தி விடுவார்கள்!'' (27: 34) என்ற அவளது கூற்றை பலப்படுத்தும் வகையில் ''அவர்கள் அவ்வாறுதான் செய்வார்கள்'' என அல்லாஹ் முடித்து வைக்கிறான்.

இப்னு அப்பாஸ் கூறுகிறார்:

''இப்பிற்குறிப்பு அல்லாஹ்வின் கூற்றாகும். முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அன்னாரது சமூகத்தினருக்கும் எடுத்துரைக்கும் வகையிலேயே இதனை அவன் கூறினான்''.

அல்லாமா முஹம்மத் அல்-அமீன் அஷ்-ஷன்கீதீ கூறுகின்றார்:

''ஸபஉ நாட்டரசியும் அவளது சமூகமும் அல்லாஹ்வை விடுத்து சூரியனுக்கு சிரம் பணிவோராக இருந்த போதிலும், அவள் ஓர் உண்மையை எடுத்துரைத்த போது அல்லாஹ்வும் அதனை ஆமோதித்தான் என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா?! அவளது இறை நிராகரிப்பானது அவள் எடுத்துக் கூறிய உண்மையை ஆமோதிப்பதை விட்டும் தடுப்பதாக அமையவில்லை. *''நிச்சயமாக அரசர்கள் ஒரு நகரில் நுழைந்தால் அதனை அழித்து அதில் கண்ணியமாக வாழ்வோரையும் சிறுமைப்படுத்தி விடுவார்கள்!''* என அவள் கூறியதாக குறிப்பிடும் அல்லாஹ், *''அவர்கள் அவ்வாறுதான் செய்வார்கள்!''* என அக்கூற்றை ஆமோதிக்கவும் செய்கிறான்''.

ஆக- *''நீங்கள் எனக்கு அபிப்பிராயம் தெரிவிக்காமல் நான் எந்த முடிவையும் எடுத்ததில்லை''* என்ற அவளது கூற்று எவ்வித மறுப்போ கண்டனமோ இன்றி அல்லாஹ்வின் வேதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது என்ற அடிப்படையிலும்... ஆமோதித்தல் மற்றும் திருப்தி காணல் என்ற சூழமைவில் அக்கூற்று இடம் பெற்றுள்ளது என்ற அடிப்படையிலும்... 'தனது தேச விவகாரங்கள் எதிலும் தனது பிரதானிகள் அபிப்பிராயம் கூறி ஒப்புதல் தராமல் தான் எந்த முடிவையும் எடுத்ததில்லை' என்ற அவளது நடைமுறையானது பின்பற்றத் தக்க முன்மாதிரியாக கருதப்படு கிறது. அவர்களது இந்த ஒப்புதல் அவர்களது ஏகோபித்த முடிவின் அடிப்படையிலோ அல்லது அவர்களது திருப்தி நிலையின் அடிப்படையிலோ அல்லது அவர்களின் பெரும்பான்மை என்ற அடிப்படையிலோ அமைந்திருக்க முடியும்.

## *(2) நபியின் வாழ்வியலில் பெரும்பான்மை பெற்றிருந்த இடம்:*

*அல்-குர்ஆனைப் போலவே நபியவர்களது ஸீறாவிலும் பெரும்பான்மையைக் கருத்தில் கொள்ளல் தொடர்பாகவோ, பெரும்பான்மையின் அபிப்பிராயத்தைப் பின்பற்றுதல் தொடர் பாகவோ அல்லது அதற்கெதிராகவோ வெளிப்படையான எந்தக் குறிப்பும் இல்லை. எனினும், 'ஷூறா' செயற்பாடானது இறுதியில் பெரும்பான்மை ஆலோசகர்களது கருத்தை ஏற்று நடைமுறைப் படுத்தப்படுவதாகவே அமையும் என்பதை நபியவர்களது ஷூறா நடைமுறைகள் உறுதிப் படுத்துகின்றன. இதற்கான உதாரணங்கள் பின்வருமாறு:*

### *2.1 பத்ர் யுத்தம்.*

*குறைஷியர் முஸ்லிம்களுடன் போரிடத் தயாராகி விட்ட செய்தியை அறிந்த போது அவர்களை எதிர்கொள்வதற்குத் தயா ராகுதல் தொடர்பாக நபிகளார் தோழர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அதன்போது கருத்துத் தெரிவித்த அபூபக்கர், உமர், அல்-மிக்தாத் பின் அம்ர் ஆகியோர் குறைஷியரை எதிர்கொள்ளும் நபி (ஸல்) அவர்களது அபிப்பிராயத்தை ஆதரித்துப் பேசினர். ஆயினும் அவர்கள் அனைவரும் குறைஷியராகவே இருந்தனர். நபியவர்களோ அன்ஸாரிகளின் கருத்தையும் அறிய விரும்பி யிருந்தார்கள். எனவேதான், ''எனக்கு ஆலோசனை தாருங்கள் மனிதர்களே!'' என தொடர்ந்து கூறிக் கொண்டிருந்தார்கள். 'அன்னார் அன்ஸாரி களையே அதன் மூலம் நாடினார்கள்; ஏனெனில் பெரும் பான்மையாக இருந்தவர்கள் அவர்களே!' என இப்னு இஸ்ஹாக் இது பற்றி விளக்குகிறார்.*

*முஹாஜிர்களையும் அன்ஸாரிகளையும் உள்ளிட்ட முழுமொத்த நபித்தோழர்களது ஆதரவையும் தயார் நிலையையும் உத்தரவாதப் படுத்திக் கொள்ளாமல் போரில் இறங்க இறைத்தூதர் (ஸல்) விரும்பவில்லை. அதிலும் முதல் நிலையில் அன்ஸாரிகளே*

-இப்னு இஸ்ஹாக் குறிப்பிட்டது போல்- பெரும்பான்மையினராக இருந்ததால் அவர்களது தயார் நிலையை அன்னார் எதிர்பார்த்தார் கள். அவர்களது தலைவர்களது தெளிவான அறிக்கை மூலம் அந்த உத்தரவாதம் கிடைத்ததும் புறப்படத் தயாராகுமாறு கட்டளையிட்ட அன்னார் கூறினார்கள்: ''சுபமாகச் செல்லுங்கள்; இரு (எதிரிக்) குழுக்களில் ஒன்றின் மீது வெற்றியைத் தருவதாக நிச்சயமாக அல்லாஹ் எனக்கு வாக்களித்து விட்டான். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் மடிந்து வீழும் இடங்கள் எனக்குத் தென்படுகின்றன''.

போராட்டத்தின் இறுதியில் முஸ்லிம்களிடம் இணைவைப்பா ளர்களைச் சேர்ந்த ஒரு தொகைக் கைதிகள் அகப்பட்டிருந்தனர். அது தொடர்பான எந்தத் தீர்ப்பும் அதுவரை இறங்கியிருக்கவில்லை. எனவே நபி (ஸல்) அவர்கள் தோழர்களிடம் மீண்டும் ஒருமுறை ஆலோசனை கேட்டார்கள்.

உமர் இப்னுல் ஃகத்தாப் கூறியதாக ஸஹீஹ் முஸ்லிமில் இவ்வாறு பதியப்பட்டுள்ளது:

''அபூபக்கர் கூறினார்: அல்லாஹ்வின் நபியே! இவர்கள் நமது உறவினர்கள். இவர்களிடமிருந்து ஈட்டுப் பணம் (ஃபித்யா) மட்டும் பெற்றுக் கொள்வோம்; நிராகரிப்பாளர்களுக்கு எதிராகப் பலம்பெற அது நமக்கு உதவும். அல்லாஹ் இவர்களுக்கு இஸ்லாத்தை நோக்கி வழிகாட்டக் கூடும்!''

அப்போது இறைத்தூதர் (ஸல்), ''ஃகத்தாபின் மகனே நீர் என்ன கருதுகிறீர்?'' எனக் கேட்டார்கள். நான் கூறினேன்: ''இல்லை இறைத்தூதரே! அபூபக்கரின் கருத்தல்ல எனது கருத்து. அவர்களை சிரச் சேதம் செய்ய எனக்கு நீங்கள் இடம் தர வேண்டும்... ஏனெ னில் இவர்கள் நிராகரிப்பின் தலைவர்கள்; அதன் முன்னோடிகள்''.

எனினும், இறைத்தூதர் (ஸல்) அபூபக்கரின் கருத்தின் மீது மனச் சாய்வு கொண்டிருந்தார்களே அன்றி எனது கருத்தின் மீதன்று. மறுநாள் ஆனதும் நான் இறைத்தூதரிடம் வந்தேன். அப்போது அன்னாரும் அபூபக்கரும் அழுதவாறு அமர்ந்திருந்தார்கள்.

''நீங்களும் உங்கள் தோழரும் எதற்காக அழுகிறீர்கள் என்று கூறுங்கள்; அது அழுவதற்குரிய விடயமாக இருந்தால் நானும் அழுகிறேன்; இல்லையெனில் நீங்கள் அழுவதற்காகவேனும் அழ முயல்கிறேன்'' எனக் கூறினேன். அதற்கு இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்: ''(கைதிகளிடமிருந்து) ஈட்டுப் பணம் பெறுவோம் என உமது தோழர்கள் கூறிய கருத்துக்காகவே நான் அழுகிறேன்''. பின்னர் தனக்கு அருகிலிருந்த ஒரு மரத்தை சுட்டிக் காட்டி அன்னார் கூறினார்கள்: ''அவர்கள் உட்படக்கூடிய வேதனை இந்த மரத்தை விட சமீபமாக எனக்கு காண்பிக்கப்பட்டது!''

அதன் போதே அல்லாஹ் பின்வரும் வசனங்களை இறக்கினான்:

''எதிரிகளின் விஷமங்களை (போதியளவு) பூமியில் அடக்கும் வரை அவர்களை (உயிருடன்) சிறைப் பிடிப்பது எந்த நபிக்கும் தகுமானதல்ல. நீங்கள் உலகத்தின் நிலையற்றை பொருளை விரும்புகிறீர்கள்; அல்லாஹ்வோ (உங்களுக்கு) மறுமை வாழ்வை விரும்புகிறான். அல்லாஹ் ஆற்றல் மிக்கவனாகவும் ஞானம் நிறைந்தவனாகவும் இருக்கிறான். ஆகவே, உங்களுக்கு போரில் கிடைத்த பொருள்களை தூய்மையானவையாய் (கருதி) உண்ணுங்கள்; அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவன்; கிருபை நிறைந்தவன்.'' (8: 67-69)

இதன் மூலமாகவே அல்லாஹ் அவர்களுக்கு போரில் கிடைத்த (கனீமத்) பொருட்களை ஆகுமாக்கினான்''.

இறைத்தூதர் (ஸல்) ஏற்று நடைமுறைப் படுத்தியது அபூபக்கர் (ரழி) கூறிய (ஈட்டுப்பணம் பெற வேண்டும் என்ற) கருத்தே என இந்த அறிவிப்பின் ஆரம்பப் பகுதி உணர்த்தினாலும், பெரும்பாலான தோழர்களும் அக்கருத்தையே கொண்டிருந்தனர் என்பது அதன் இறுதிப் பகுதியில் தெளிவாகிறது: ''உமது தோழர்கள் கூறிய கருத்துக்காகவே அழுகிறேன்... அவர்கள் உட்படக் கூடிய வேதனை இந்த மரத்தை விட சமீபமாக எனக்கு காண்பிக்கப் பட்டது...!''

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்விவகாரத்தில் பெரும்பான்மைத் தோழர்களது அபிப்பிராயத்தையே எடுத்திருந்தார்கள்.

*அதனால்தான் அல்லாஹ்வின் கண்டனம் பொதுவானதாக அமைந்திருந்தது.*

*''எதிரிகளின் விஷமங்களை (போதியளவு) பூமியில் அடக்கும் வரை அவர்களை (உயிருடன்) சிறைப் பிடிப்பது எந்த நபிக்கும் தகுமானதல்ல. நீங்கள் உலகத்தின் (நிலையற்ற) பொருளை விரும்புகிறீர்கள்; அல்லாஹ்வோ (உங்களுக்கு) மறுமை வாழ்வை விரும்புகிறான். அல்லாஹ் ஆற்றல் மிக்கவனாகவும் ஞானம் நிறைந்தவனாகவும் இருக்கிறான். (உங்களது மன்னிப்பு பற்றி) ஏலவே அல்லாஹ்வின் ஏட்டில் எழுதப்பட்டிரா விடில், ('பத்ர்' கைதிகளிடம் ஈட்டுப் பணத்தை) நீங்கள் பெற்றுக் கொண்டதற்காக உங்களை பெரும் வேதனை பீடித்திருக்கும். ஆகவே, உங்களுக்கு போரில் கிடைத்த பொருள்களை தூய்மையானவையாய் (கருதி) உண்ணுங்கள்; அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவன்; கிருபை நிறைந்தவன்.'' (8: 67-69)*

இப்னு ஆஷூர் கூறுகிறார்: '' இங்கு 'நீங்கள் விரும்புகிறீர்கள்' (துரீதூன்) என்ற பன்மை அமைப்பு ஈட்டுப்பணம் பெறுமாறு ஆலோசனை கூறிய குழுவையே குறிக்கிறது. அந்தவகையில் இங்கு கண்டனத்துக்கு உட்படுவது இறைத்தூதர் (ஸல்) அவர் களல்ல என்ற குறிப்பு பெறப்படுகிறது. ஏனெனில் பெரும் பான்மையின் கருத்தையே அன்னார் செயற்படுத்தினார்கள்''.

'அது அவர்களுள் பெரும்பான்மையினரது விருப்பமாக இருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது''.

நபித்தோழர்கள் மீது அல்லாஹ் இறக்கிய இக்கண்டனம், அவர்கள் முன்வைத்த அந்த ஆலோசனைக்காக அல்ல. மாற்றமாக அதற்குப் பின்னால் தொழிற்பட்ட தூண்டற் காரணியையே அல்லாஹ் கண்டித்தான். லோகாயத லாபமே அத்தூண்டற் காரணி: ''நீங்கள் உலகத்தின் (நிலையற்ற) பொருளை விரும்புகிறீர்கள்''. எனவே, அந்த அபிப்பிரயாத்தை முன்வைத்தோருள் எவரிடம் இந்த விருப்பம் ஊக்கியாக செயற்பட்டதோ அவரே இக்கண்ட னத்துக்கு உரியவராகிறார்''.

## *2.2 உஹத் யுத்தம்.*

*'பத்ர்' யுத்தத்தில் குறைஷியர் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதற்குப் பழி வாங்குவதற்காவும் பதிலடி கொடுப்ப தற்காகவும் குறைஷித் தலைவர்கள் பரந்தளவில் பொருள் மற்றும் படையணியை திரட்டினர். எனவே நபி (ஸல்) அவர்கள் அது குறித்து தோழர்களிடம் ஆலோசனை கேட்டார்கள்; மதீனாவில் தங்கியிருந்து குறைஷியரின் தாக்குதலை உள்ளிருந்தே எதிர் கொள்வோம் என்ற தனது அபிப்பிராயத்தையும் முன்வைத்தார்கள். எனினும் தோழர்களுள் பெரியதொரு தொகையினர் அக்கருத்தை விரும்பவில்லை; மதீனாவுக்கு வெளியே சென்று குறைஷிப் படையை எதிர்கொள்ள வேண்டும் என்பதுதான் அவர்களது அபிப்பிராயமாக இருந்தது. தங்களது துணிச்சலுக்கும் வீரத்துக்கும் அதுவே உகந்தது என்றும், தாங்கள் அச்சத்தின் காரணமாகவும் பலவீனத்தின் காரணமாகவும்தான் மதீனாவிலிருந்து வெளியேறா திருக்கிறோம் என குறைஷியரோ பிறரோ எண்ணாதிருக்க அதுவே சிறந்த வழி என்றும் அவர்கள் கருதினர்.*

*இப்னுல் அறபீ கூறுகிறார்:*

*''ஹம்ஸா, ஸஅத் பின் உபாதா, நுஃமான் பின் மாலிக் பின் தஅலபா ஆகியோரும் அவ்ஸ், ஃகஸ்ரஜ்களில் பலரும் இவ்வாறு கூறினர்: 'அல்லாஹ்வின் தூதரே! நாம் கோழைத்தனத்தில்தான் வெளியேறிச் செல்லாதிருக்கிறோம் என எதிரிகள் கருதி, நமக் கெதிராக இன்னும் தைரியம் கொள்ள இது வழி அமைக்கும் என நீங்கள் அஞ்சவில்லையா?' அன்ஸாரிகளும், பனூ அல் - அஷ் ஹலில் சிலரும் அபூ ஸஅத் பின் ஃகய்தமாவும் வேறு நபர்களும் கூட இதேபோல் கூறினர்...''*

*இவ்வாறு வெளியேறிச் செல்ல வேண்டும் என்று கூறுவோரின் தொகையும் அழுத்தமும் அதிகரித்துச் சென்றதால் அவர்களது கருத்தை ஏற்க நபி (ஸல்) தீர்மானித்தார்கள். அதன்படி வெளியேறிச் செல்லத் தயாரான போது, இந்த வெளியேற்றத்துக்கு தாம் நபியவர்களை நிர்ப்பந்தித்து விட்டோமோ என்ற அச்சம் சில நபித்தோழர்களுக்கு ஏற்பட்டது. எனவே இவ்வாறு கூறினர்:*

'உம்மை நாங்கள் நிர்ப்பந்தித்து விட்டோம். உண்மையில் அதற்கான தகுதி எங்களுக்கில்லை. நீங்கள் விரும்பினால் வெளி யேறாமல் இருந்து விடுங்கள் அல்லாஹ்வின் தூதரே!'.

அதற்கு அன்னார் இவ்வாறு பதிலளித்தார்கள்: ''ஒரு நபி தனது போர் அங்கியை அணிந்து விட்டால், வெளியேறிப் போரிடாது அதனைக் கழற்றி வைக்கக் கூடாது''.

பின்னர் ஆயிரம் தோழர்களுடன் நபியவர்கள் வெளியேறிச் சென்றார்கள்...''

இக்கலந்தாலோசனைகளும் அதன் விளைவுகளும் ஷூறா குறித்து -தற்காலத்தில்- பல வாதப் பிரதிவாதங்களை கிளறி விட்டுள்ளன. ஷூறா முடிவு ஆட்சியாளரைக் கட்டுப்படுத்தும் என்பதையும், பெரும்பான்மை முடிவு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதையும் இந்நிகழ்வு காட்டுகிறதா? அல்லது அதற்கு மறுகிடையான பொருளை உணர்த்துகிறதா?... என்ற வாறான விவாதங்கள் அவை.

'உஹுத் யுத்த வேளையில் இடம்பெற்ற கலந்துரையாடல்' பற்றி வாசிப்புச் செய்தவர்கள் இரு வேறுபட்ட வாசிப்புகளினூடாக இரு விதமாக அதனைப் புரிந்து கொண்டனர்:

அவற்றுள் ஒன்று, வெளிப்படையான வாசிப்பு. அதாவது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது அபிப்பிராயத்தை விட்டுக் கொடுத்து பெரும்பான்மைத் தோழர்களது அபிப்பிராயத்துக்கு இறங்கி வந்தார்கள். அந்த அபிப்பிராயம் எவ்வகையிலும் ரத்துச் செய்யப்படாமலும் கண்டனத்துக்கு உட்படாமலும் செயற்படுத்தப் பட்டது. மட்டுமன்றி, அதனைத் தொடர்ந்து நேரடியாகவே *''அனைத்து (பொது) விவகாரங்களிலும் அவர்களுடன் கலந்தா லோசிப்பீராக!'' (3: 159)* என்ற இறைவாக்கும் இறங்கியது.

இரண்டாவது, வியாக்கியான அடிப்படையிலான வாசிப்பு. அதாவது, தலைவரின் அபிப்பிராயத்துக்கு முரணான பெரும் பான்மை அபிப்பிராயத்தைப் பின்பற்றுவது ஆரோக்கியமானதன்று;

இந்த யுத்தத்தில் முஸ்லிம்கள் சந்தித்த தோல்வி ஒரு பாடமாகவும், படிப்பினையாகவும், ''முஸ்லிம்கள் தங்களது தலைவர்கள் திருப்தியும் பிடிவாதமும் கொண்டிருக்கும் ஒரு கருத்தில் அவர்களுடன் முரண்படக் கூடாது என்ற நிலையான உபதேசமாகவும் கொள்ளப்பட வேண்டியது; ஷூறாவின் முடிவுகள் தலைவரைக் கட்டுப்படுத்தும் என்ற யூகத்தின் பேரிலோ, பெரும்பான்மையின் அபிப்பிராயம் என்ற காரணத்தைக் காட்டியோ அவர்கள் அவரது கருத்துடன் முரண்படக் கூடாது''.

இந்த இரண்டாவது வாசிப்பை வியாக்கியான ரீதியான வாசிப்பு என நான் சொல்லக் காரணம், அது அந்த நிகழ்வின் தெளிவான, வெளிப்படையான அர்த்தத்தை விடுத்து எடுகோள்களை நோக்கிச் செல்வதாகும். மட்டுமன்றி, அது வெளிப்படையான அர்த்தத்தை ரத்துச் செய்யும் வகையில் தனது எடுகோள்களை குறித்த நிகழ்வின் மீது ஏற்றி வியாக்கியானப் படுத்துகிறது.

இவர்களது எடுகோள்களின் படி, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவில் தங்கியிருப்பதில் பிடிவாதம் காட்டினார்கள் என்ற அர்த்தம் கொள்ளப்படுகிறது. ஆனால் அத்தகைய 'பிடிவாதம்' ஒன்றுக்கான எந்தச் சான்றும் இல்லை. அன்னார் தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினார்கள். ஆனால் மாற்றுக் கருத்துடையோர் அதிகரித்து அம்மாற்றுக் கருத்தில் ஆர்வம் காட்டியதால் அன்னார் அதனை ஏற்று நடைமுறைப்படுத்தினார்கள். நடந்தது அவ்வளவுதான்!

உஹுத் களத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தோல்வி, பெரும்பான்மையினரின் அபிப்பிராயப்படி வெளியேறிச் சென்றதனால்தான் ஏற்பட்டது எனவும், அவர்களுக்கு மிகக் கடுமையான படிப்பினையாகவும் பின்னால் வரவிருப்போருக்கு எச்சரிக்கையாகவுமே அத்தோல்வி அமைந்தது எனவும் இத்தரப்பினர் எடுத்துக் கொண்டனர்.

ஆனால் உண்மையில் இந்த எடுகோள் தவறானதாகும். ஏனெனில், வெளியேறிச் சென்றமைக்கும் தோல்விக்கான காரணத்

துக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை என்பது நன்கு அறியப்பட்ட ஒன்று. அவ்வாறு தொடர்பிருந்ததாக குறித்த நிகழ்வு களோடு வாழ்ந்த எந்த நபித்தோழரும் குறிப்பிடவும் இல்லை. கற்றுக் கொடுப்பதற்கும், கவனத்தை ஈர்ப்பதற்கும், பயிற்று விப்பதற்கும் கிடைக்கக்கூடிய எந்தச் சந்தர்ப்பத்தையும் நழுவ விடாத இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூட அது பற்றி எதுவும் கூறவில்லை. இப்படையெடுப்பு பற்றியும் அதனுடன் தொடர்பு பட்ட அம்சங்கள் பற்றியும் விரிவாகப் பேசியுள்ள அல்-குர்ஆன் கூட இத்தகைய வியாக்கியானம் எதையும் தரவில்லை.

மறுபுறத்தில் தோல்விக்கான காரணம் அனைத்து ஸீறா நூல் களிலும் பல ஹதீஸ் நூல்களிலும் தெளிவாக குறிப்பிடப் படுள்ளது. தளபதியாக இருந்த இறைத்தூதர் (ஸல்) அவர்களது கட்டளைக்கு வில் வீரர்கள் மாறு செய்தமையே அந்தக் காரணம். மலையில் நிறுத்தப் பட்டிருந்த அவர்கள், போராட்டத்தின் போக்கு எவ்வாறு அமைந்திருந்தாலும் தனது கட்டளையின்றி அங்கிருந்து இறங்கி வரக்கூடாது என நபியவர்களால் அறிவுறுத்தல் வழங்கப் பட்டி ருந்தார்கள். ஆனால் முதல் சுற்றில் முஸ்லிம்கள் பெற்றி பெறு வதைக் கண்ட அவர்கள் போர் முடிவுக்கு வந்தாயிற்று என எண்ணினர். ஏராளமான யுத்தப் பொருள்களை (கனீமத்) கண்ணுற்ற அவர்கள் அங்கிருந்து இறங்கி வந்து விட்டனர்...!

இந்த மீறலுக்கும் மதீனாவிலிருந்து வெளியேறி வந்தமைக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. ஏனெனில் இவ்வகையான மீறல்கள் எந்த இடத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் இடம்பெற முடியும்.

ஆக -தன்னிச்சையான எந்த வியாக்கியானமும் இன்றி- நாம் கூறமுடியுமானது இதுதான்:

வெளியேறிச் செல்லும் முடிவு தெளிவானதும் விரைவானதுமான வெற்றிக்கே வழி கோலியது. ஸீறா மற்றும் ஹதீஸ் நூல்களில் இதுவும் குறிப்பிடப்பட்டே உள்ளது. வெற்றி தென்படத் தொடங் கிய பிறகுதான் -வில் வீரர்கள் இழைத்த மாபெரும் தவறினால்-

நிலைமை தலை கீழாகியது. அதி முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த அவர்கள் அவ்விடத்தை விட்டகன்ற போது தான் அனர்த்தம் ஆரம்பித்தது. இவையனைத்தும் மேற்குறித்த நூல்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளதால் அவை பற்றிய விரிவான விவரணத்தை இங்கு தவிர்க்கிறோம்.

### 2.3 அகழி யுத்தம் (அஹ்ஸாப் யுத்தம்).

இப்போரின்போது இணைவைப்பாளர்களும் யூதர்களும் நய வஞ்சகர்களும் முஸ்லிம்களை வேரோடு அழிப்பதற்காக கூட்டணி அமைத்திருந்தனர். மதீனாவை அவர்கள் மிகக் கடுமையான முற்றுகை இட்டிருந்ததால் முஸ்லிம்கள் எல்லா வகையிலும் கடும் சோதனைக்கு உள்ளாயினர். அல்-குர்ஆன் இந்நிலையை பின்வரு மாறு விவரிக்கிறது:

*‘‘அவர்கள் உங்களுக்கு மேலிருந்தும் உங்களுக்குக் கீழிருந்தும் வந்தபோது (உங்கள்) பார்வைகள் தடுமாறின; இதயங்கள் (அச்ச த்தினால்) தொண்டைக் குழிக்கு எகிறின; அல்லாஹ்வைப் பற்றிப் பலவாறாக நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்கள். அங்குதான் இறை விசுவாசிகள் சோதிக்கப்பட்டு, கடும் அதிர்ச்சிக்கு ஆளாக் கப்பட்டனர்..’’ (33: 10-11)*

மிகக் கஷ்டமான அந்த நிலையில்தான், முற்றுகையை உடைத்து அதில் ஒரு முறிவை ஏற்படுத்த நபி (ஸல்) அவர்கள் சிந்தித்தார்கள். அந்த வகையில்தான், முற்றுகையின் மிகப் பலவீனமான வளைய மாக இருந்த கத்ஃபான் கோத்திரத்தை அன்னார் நாடினார்கள். அக்கோத்திரத்துடன் பேரம் பேசிய நபியவர்கள், அவ்வருடம் மதீனாவின் விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கை அவர்களுக்குத் தருவதாகவும் அதற்குப் பகரமாக அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிரான கூட்டணியிலிருந்து வாபஸ் பெற்று விடவேண்டும் எனவும் உடன்பாடு கண்டார்கள். எனினும் தோழர்களுடன் கலந்தா லோசித்த பிறகே உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும் தீர்மானத்தைக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக மதீனாவின் (அன்ஸாரித்) தலைவர்களுடன் ஆலோசனை செய்ய அன்னார்

எண்ணியிருந்தார்கள். ஏனெனில், கத்ஃபான் கோத்திரத்தாருக்குத் தருவதாக இருந்த விவசாய விளைச்சல் உண்மையில் மதீனா வாசிகளுடையதே! அந்த வகையில்தான், ''நான் ஸஅதுகளிடம் அனுமதி கேட்கும் வரை'' என தூதர் (ஸல்) கூறினார்கள்.

'ஸஅதுகள்' என அன்னார் நாடியது ஸஅத் பின் முஆத், ஸஅத் பின் உபாதா, ஸஅத் பன் மஸ்ஊத், ஸஅத் பின் ஃகய்தமா முதலியோரை ஆகும். ஒப்பந்தத்தையும் அதன் உள்ளடக்கத்தையும் செவியுற்ற அவர்கள், அது அல்லாஹ்விடமிருந்து வந்த வேத வெளிப்பாடோ நபி (ஸல்) அவர்களது விருப்பமோ அல்ல என்பதையும், முஸ்லிம்கள் உட்பட்டிருக்கும் முற்றுகையை உடைப்பதற்காகவே அது மேற்கொள்ளப்பட்டது என்பதையும் புரிந்து கொண்டார்கள். எனவேதான் -ஸஅத் பின் முஆதின் வாய் வார்த்தையால்- அவர்கள் இவ்வாறு கூறினர்:

''அல்லாஹ்வின் தூதரே! முன்னர் நாங்களும் அவர்களும் அல்லாஹ்வுக்கு இணை கற்பித்து, விக்கிரகங்களை வணங்கிக் கொண்டிருந்தோம்; அல்லாஹ்வை வணங்குபவர்களாகவோ அவனைப் பற்றி அறிந்தவர்களாகவோ நாங்கள் இருக்கவில்லை. அப்போதெல்லாம் எங்களிடம் விருந்தாளிகளாக அல்லது பணம் கொடுத்து வாங்குபவர்களாக அன்றி எங்களது விவசாய விளைச்சல்களை அனுபவிக்கும் பேராசை அவர்களுக்கு இருந்ததில்லை. அவ்வாறிருக்கையில், இஸ்லாத்தை நோக்கி அல்லாஹ் எங்களுக்கு வழிகாட்டி, அதன் மூலம் எங்களை கண்ணியப்படுத்திய பிறகா எங்கள் செல்வங்களை அவர்களுக்குக் கொடுப்போம்? அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவ்வாறு கொடுக்க வேண்டிய எந்தத் தேவையும் எங்களுக்கு இல்லை. அல்லாஹ் மீது ஆணையாக! எங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் அல்லாஹ் தீர்ப்பளிக்கும் வரை வாளைத் தவிர எதனையும் அவர்களுக்குக் கொடுக்க மாட்டோம்!''.

இதனைக் கேட்ட நபியவர்கள், ''உங்கள் விருப்பம் போன்றே ஆகட்டும்!'' என்றார்கள். பின்னர் உடன்படிக்கை எழுதப்பட்டிருந்த

ஏட்டை எடுத்து ஸஅத் பின் முஆத் அதிலிருந்ததை அழித்தார். பிறகு, ''எங்கள் மீது அவர்கள் போர் தொடுக்கட்டும்!'' என்றார்.

இந்நிகழ்வில் நபி (ஸல்) அவர்கள் நன்கு சிந்தித்து, திட்டமிட்டு, முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருந்த சோதனையின் வீச்சைக் குறைப்ப தற்கான தீர்வொன்றை தயார் படுத்தியிருந்தார்கள். அதற்காக கத்ஃபான் கோத்திரத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஆரம்ப நிலை உடன்பாடு ஒன்றையும் எட்டியிருந்தார்கள். எனினும் அதனை - செயற்படுத்த முன்னர்- கலந்தாலோசனைக்கு உட்படுத்தி னார்கள். இறுதியில் தனது அபிப்பிராயத்தையும் திட்டத்தையும் விட்டுக் கொடுத்து, மதீனாவில் பெரும்பான்மை முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்திய ஆலோசகர்களது கருத்தை நடைமுறைப் படுத்தினார்கள்.

**நபியவர்களது தனித்துவமான அந்தஸ்து**

இறைத்தூதர் (ஸல்) அவர்களது கலந்தாலோசனைகள் பற்றியும், அன்னார் மிக அதிகமாக கலந்தாலோசனை செய்பவர்களாக இருந்தமை பற்றியும், பெரும்பான்மைத் தோழர்களது அபிப் பிராயத்துக்காக -சிலபோது தனிப்பட்ட ஓரிருவரது அபிப்பிராயத் துக்காகக் கூட- தனது அபிப்பிராயத்தை விட்டுக் கொடுத்தமை பற்றியும் நாம் பேசும்போது அன்னாரது அந்தஸ்தையோ, பண்பு களையோ, தனித்தன்மைகளையோ கவனத்தில் கொள்ள தவறி விடக் கூடாது. மட்டுமன்றி, நம்மை விட சிறந்தவர்களாக இருந்தோருக்குக் கூறப்பட்டதே நமக்கும் இங்கு கூறப்பட வேண்டியுள்ளது:

*''உங்களுக்கு மத்தியில் இறைத்தூதர் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். பல விடயங்களில் உங்கள் கருத்துக்கு அவர் வழிப்பட்டால் நீங்களே சிரமத்துக்குள்ளாவீர்கள்''. (49: 7)*

பல நிலைமைகளில் நபியவர்கள் ஷூறாவில் தங்கியிருக்க வில்லை என்பதையும், எவரது அபிப்பிராயத்தையும் எதிர்பார்த் திருக்க வில்லை என்பதையும் நாம் அவதானிக்கறோம் எனில்,

அதற்குக் காரணம் அவ்வாறு செயற்படுவதே அன்னாரைப் பொறுத்தவரை அடிப்படையானதாக இருந்தது. ஏனெனில், அனைத்துக்கு முன்னாலும் மேலாகவும் அன்னார் அல்லாஹ்வின் தூதராக இருந்தார்கள். அந்த வகையில், ஷூறாவை விடச் சிறந்த ஒன்று... ஷூறாவை விட மேலான ஒன்று அவர்களுக்குத் துணையாக இருந்தது. அதுதான் 'வஹி' என்னும் வேத வெளிப்பாடு. மட்டுமன்றி, அன்னார் அல்லாஹ்வுக்கு மாறு செய்வதிலிருந்து பாதுகாக்கப்பட்ட இறையடியார் (அல்-மஃஸூம்). மனோ இச்சைப்படி அன்னார் பேசவில்லை; மனோ இச்சைப்படி செயற்படவில்லை; மனோ இச்சைப்படி ஓர் அபிப்பிராயத்துக்கு வரவில்லை; சொந்த நலன், சுயலாபம், அவ்வப்போதைய மனோ நிலை என்பவற்றுக்குக் கட்டுப்பட்டு முடிவுகள் எடுக்கவும் இல்லை. அந்தரங்கமாகவும் வெளிப்படையாகவும் அதியுச்ச தூய்மையோடும் நேர்மையோடும் அன்னாரது சிந்தனையும் செயற்பாடுகளும் அமைந்திருந்தன.

அன்னார் தோழர்களிடம் ஆலோசனை கேட்டாலும், கேட்காவிட்டாலும், அவர்களது அபிப்பிரயாத்துக்கும் விருப்பத்துக்கும் மாறாக ஒரு நடவடிக்கையை எடுத்தாலும் அவை அனைத்தும் அன்னாருக்கு மட்டுமே உரியவை. அன்னாருக்குப் பின்னர் தோன்றும் எவரும் அவ்வாறு நடந்து கொள்ள முடியாது... அவர் ஃகலீபாவாக இருந்தாலும் சரி; அறிஞராக இருந்தாலும் சரி; தலைவராக இருந்தாலும் சரி!

அதிகமாக ஆலோசனை கேட்பவராகவும் -வஹியால் வழிகாட்டப்படாத அம்சங்களில்- தோழர்களது அபிப்பிராயத்துக்கு முன்னால் தனது அபிப்பிராயத்தை விட்டுக் கொடுப்பவராகவும் அன்னார் இருந்திருக்கும் போது, பிற தலைவர்களும் ஆட்சியாளர்களும் அவ்வாறு நடந்து கொள்ள பன்மடங்கு கடமைப்பட்டோராகின்றனர்.

ஆலோசனை கேட்காதவராக அல்லது அடிப்படையிலேயே ஆலோசனை கேட்கக் கடமைப்படாதவராக, அல்லது ஆலோசனையால் பெறப்படும் முடிவை பின்பற்றக் கடமைப்படாத

வராக அன்னார் இருந்தால் கூட அது வேறெவருக்கும் இன்றி அன்னாருக்கு மட்டுமே உரியதோர் அந்தஸ்து. ஏனெனில் அன்னாருக்குப் பின் எந்த நபியும் இல்லை; தவறுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டவரும் இல்லை.

இந்தவகையில்தான் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எவரது அபிப்பிராயத்தையும் கவனிக்காமல் செயற்பட்ட சில சூழ்நிலைகள் (எவ்வாறாயினும் அவை வரையறுக்கப்பட்டவை; விஷேடமா னவை) பற்றிய சில விமர்சனங்கள் பொருளற்றவையாகி விடு கின்றன. ஹுதைபியா உடன்படிக்கையுடன் தொடர்பான விமர்ச னத்தை இதற்கு உதாரணமாகக் கூறலாம். நபித்தோழர்கள் அந்த உடன்படிக்கை குறித்து எதிர்ப்பும் கடும் அதிருப்தியும் வெளியிட்ட போதிலும் நபியவர்கள் அதனை செயற்படுத்தினார் கள். ஏனெனில் அது, -பல சான்றுகள் காண்பித்தது போன்று- வஹியின் வழி காட்டலாகவும், தெய்வீக திட்டமிடலாகவும் அமைந்திருந்தது. பின்வரும் நிகழ்வுகள் அச்சான்றுகளுக்கான எடுத்துக் காட்டாகும்:

- ஒட்டகம் இடை நடுவில் அமர்ந்து விட்டமையும், ''யானையை தடுத்து நிறுத்தியவனே இதனையும் தடுத்து நிறுத்தினான்'' என நபியவர்கள் கூறியமையும்.

- ஒப்பந்தம் முஸ்லிம்களை இழிவு படுத்துவதாகக் கருதி ஆத்திரம் அடைந்த உமர் அது பற்றி நபியவர்களிடம் வினவிய போது அன்னார் அளித்த பதில். உமர் கூறுகிறார்: நான் நபி (ஸல்) அவர்களிடம் சென்று, 'அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் உண்மை யாகவே அல்லாஹ்வின் நபியல்லவா?' எனக் கேட்டேன். அதற்கவர்கள், ''ஆம்!'' என்றார்கள். ''நாம் சத்தியத்திலும் நமது எதிரிகள் அசத்தியத்திலும் அல்லவா இருக்கிறார்கள்?'' என மீண்டும் கேட்டேன். அப்போதும் ''ஆம்!'' என்றார்கள். உடனே நான், ''அப்படியாயின் நமது மார்க்க விவகாரத்தில் நாம் ஏன் விட்டுக் கொடுப்புகள் செய்ய வேண்டும்? அல்லாஹ் நமக்கும் நம் எதிரிகளுக்கும் இடையில் இன்னும் தீர்ப்பு வழங்காதிருக்கும் நிலையில் நாம் பின்வாங்குவதா?'' எனக் கேட்டேன். அதற்கு

அன்னார் கூறினார்கள்: ‘‘நிச்சயமாக நான் அல்லாஹ்வின் தூதர்; அவன் எனக்கு உதவுவான்; அவனுக்கு நான் மாறு செய்ய மாட்டேன்’’

ஆக- குறித்த விவகாரம் அல்லாஹ்வின் கட்டளைப்படியே நிகழ்ந்தது என்பதும் நபி (ஸல்) அவர்கள் தமக்கு அறிவிக்கப் பட்டதையே நிறைவேற்றினார்கள் என்பதும் தெளிவு. எனவேதான் அன்னார் உடன்படிக்கை தொடர்பாக -கொள்கை அளவிலோ உள்ளடக்கம் பற்றியோ- அடிப்படையிலேயே ஆலோசனை கேட்கவில்லை.

அல்-குர்ஆன் கூட இவ்வாறு வெளிப்படையாகக் கூறுகிறது: *‘‘மேலும் அவன்தான் மக்காவில் உங்களுக்கு அவர்கள் மீது வெற்றியை ஏற்படுத்தி, உங்களை விட்டு அவர்களது கைகளையும் அவர்களை விட்டு உங்களது கைகளையும் விலக்கி வைத்தான். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் உற்றுக் கவனித்தவனாகவே இருக்கிறான்’’. (48: 24)*

இந்த அடிப்படையில் நோக்கும் போது, ‘‘அந்த உடன்படிக்கை ஒரு ராணுவ மூலோபாயமாகவே இருந்தது; அது பற்றி எதிரிகளுக்கு தகவல் கசிந்து, முஸ்லிம்களது திட்டத்தை அவர்கள் குழப்பி விடக் கூடாது என்பதற்காகவே தூதர் (ஸல்) அது பற்றி வெளிப்படையாக எதுவும் தெரிவிக்கவில்லை’’ என்றவாறான கூற்றுகள் வெறும் யூகமாகவும் கற்பனையாகவுமே இருக்கும். நபிமார்கள் தங்களது ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் தங்களது தோழர் களுக்கும் எதிரிகளுக்கும் மறைத்து வெறும் ராணுவத் தந்திரோ பாயமாக ஆக்கிக் கொள்வதில்லை. ஆம்; யுத்தம் என்பது தந்திரம் தான்! ஆனால், சமாதானம், உடன்படிக்கை, ஒப்பந்தம், பாதுகாப்பு உத்தரவாதம் என்பவற்றில் ஏமாற்றுக் கிடையாது. அவ்வாறிருக்கை யில், அல்லாஹ்விடமிருந்து வந்த ‘வஹி’யின் அடிப்படையில் நிகழ்ந்த ஒரு விடயத்தில் அது இருப்பது எங்கனம்?

## (3) அறிஞர்கள் பெரும்பான்மைக்கு வழங்கியுள்ள இடம்.

பெரும்பான்மையை கருத்தில் கொள்ளல் என்பது மேற்கு ஜனநாயக ஒழுங்கிலிருந்து பெறப்பட்ட சிந்தனை என்றும், இஸ்லாமிய சிந்தனைக்கும் கலாசாரத்திற்கும் அது அன்னியமானது என்றும் சிலர் எண்ணுகின்றனர். இச்சிந்தனையை நவீன காலத்தில் பரப்புவதிலும் ஊக்குவிப்பதிலும் மேற்கு ஜனநாயகக் கலாசாரத் துக்கு ஒரு பெரும் பங்கு உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆயினும் நாம் கூறுவது இதுதான்: இச்சிந்தனை எமது சட்டக் கலாசாரத்துக்கு புதியதோ அன்னியமானதோ அன்று. மாற்றமாக, அது நமது கலாசாரத்தில் பழமையானதும் அடிப்படையானதும் ஆகும். அதிகமானதை அல்லது பெரும்பான்மையை முற்படுத்து வது குறித்து நமது அறிஞர்கள் பல துறைகளில் -அரசியல் துறை அவற்றினுள் அடங்கா விட்டாலும்- பேசியும் உள்ளனர்; செயற்படுத்தியும் உள்ளனர்.

ஹதீஸ் அறிவிப்புகளை ஒப்பிட்டு நோக்கி ஏற்பதற்கு ஹதீஸ் துறை அறிஞர்கள் அதிக எண்ணிக்கையை கவனத்தில் கொண் டுள்ளனர். நியாயவியல் இஜ்திஹாதுகளை ஒப்பு நோக்கி ஏற்பதற்கு அதிக எண்ணிக்கையை நியாயவியல் மற்றும் மூலாதார அறிஞர்கள் கவனத்தில் கொண்டுள்ளனர்.

சட்டத்தீர்ப்பு சார்ந்த விளக்கங்கள் மற்றும் சான்றுகள் தொடர் பிலும் பெரும் எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட் டுள்ளது. நேர்மைப் பண்பில் சமமானவர்கள் எதிரெதிராக சாட் சியம் அளிக்கும் போது சிறு தொகையினரை விட பெரும் தொகையினர் முற்படுத்தப்படுவர் எனக் கூறும் சிலரது கருத்தை முன்னரும் நாம் பார்த்தோம். மட்டுமன்றி, தீர்ப்புப் பெறவும் பின்பற்றவும் தகுதியான அறிஞர்களைத் தெரிவு செய்வதில் கூட பெரும்பான்மை மனிதர்களது சாட்சியம் பெறப்பட வேண்டும் எனவும் சிலர் கூறுவர். அல்-காழீ அபூபக்கர் இப்னுல் அறபீ கூறுகிறார்:

''ஒரு பொது மகனுக்கு பிரச்சினை ஒன்று ஏற்பட்டால், தனது காலத்தில் வாழ்கின்ற அதி சிறந்த அறிஞரை நாடி, அது பற்றிக் கேட்டு, அவர் தரும் தீர்ப்பைப் பின்பற்ற வேண்டும். தனது காலத்தில் வாழும் அதி சிறந்த அறிஞர் யார் எனக் கண்டறிவதற்கு அவர் அறிவார்ந்த பிரயத்தனம் எடுத்துக் கொள்ள வேண்டும். அத்தகைய அறிஞர் பற்றி அவர் பெறும் தகவல் பெரும்பான்மை மக்களால் உடன்பாடு காணப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்''.

ஏதாவதொரு பிரச்சினை தொடர்பாக அறிஞர்களது அபிப் பிராயங்கள் முரண் பட்டால், அவர்களுள் பெரும்பான்மையினரது அபிப்பிராயத்தைப் பின்பற்றுவதே அதிக ஏற்புடையதும் ஆரோக் கியமானதும் ஆகும். நபித்தோழர்கள் தொட்டு இந்நடைமுறை பொருந்தும்.

இப்னு இஸ்ஹாக் அஷ்-ஷீறாஸீ கூறுகிறார்:

இரு அபிப்பிராயங்களுள் ஒன்றை அதிகமான நபித்தோழர் களும், மற்றதை குறைவான நபித்தோழர்களும் கொண்டிருந்தால் அதிகமானோரின் அபிப்பிராயமே முற்படுத்தப்படும். ஏனெனில் நபி (ஸல்) கூறினார்கள்: ''பெரும்பான்மையையே பின்பற்றுங்கள்!''

இப்னுல் கையிம் கூறுகிறார்: ''நால்வரும் (அதாவது நேர்வழி நின்ற நான்கு ஃகலீபாக்கள்) ஒரு கருத்தை ஆதரித்திருந்தால் அது சரியான கருத்தே என்பதில் ஐயமில்லை. ஆயினும், மறுபுறத்தில் பெரும்பான்மையினர் ஒரு கருத்தை ஆதரிப்பார்களாயின் அனேக மாக அதுவே சரியானதாக இருக்கும்''.

அலி(ரழி) பின்வருமாறு கூறியதாக அபூ யஅலா அறிவிக்கிறார்: ''பிள்ளைகளின் அன்னையர் (அதாவது அடிமைப் பெண்கள்) பற்றி உமர் ஒருமுறை என்னுடன் கலந்தாலோசனை செய்தார். அவர்களை விடுதலை செய்து விடுவதாக நாங்கள் இருவரும் கருத்தொருமைப் பட்டோம். எனினும், அவர்களை அடிமைகளாக வைத்திருப்பதே சிறந்தது என எனக்குத் தோன்றியது''. இதனைக் கேட்ட உபைதா என்பவர் (அதாவது உபைதா அஸ்-ஸல்மானீ என்னும் தாபிஈ) கூறினார்: ''நம்பகத்தன்மை கொண்ட ஒரு நபரது கருத்தை விட

நம்பகத் தன்மை கொண்ட இரு நபர்களது கருத்தே எங்களுக்கு அதிக விருப்பத்துக்குரியது''.

இதேபோன்ற மற்றொரு சந்தர்ப்பத்தில் அலீயிடம் இவ்வாறு கூறப்பட்டது: ''நீங்கள் தனியாக எடுத்த முடிவொன்றை விட அமீருல் முஃமினீனுடன் இணைந்து எடுத்த முடிவு -பின்னர் அவருடன் நீங்கள் அதில் முரண்பட்டாலும் - எங்களுக்கு அதிக ஏற்றமானது!''

அதனைக் கேட்ட அலீ சிரித்தார்.

ஆக- பெரும்பான்மை அறிஞர்கள், அல்லது (அஹ்லுல் ஹவ்லி வல்- அக்த் என்னும்) கட்டுப்பாடும் சுதந்திரமும் ஏற்படுத்த அதிகாரம் கொண்டோர், அல்லது பொதுமக்கள் (அவர்களிடம் அபிப்பிராயம் கேட்கப்படும் விடயங்களில்) தெரிவிக்கும் அபிப் பிராயமே நம்பத்தகுந்த, நடைமுறைச் சாத்தியமான சான்றாக கொள்ளப்படக்கூடியதாகும். எனினும், அத்தகைய பெரும்பான்மை யினரின் கருத்தே திட்டவட்டமான சான்றாகவும், எப்போதும் சரியானதாகவும் அமைந்திருக்கும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை. ஆனால், பெரும்பான்மை அபிப்பிராயத்தைப் பின்பற்றும் போதே அதிகம் சரியான நிலைப்பாட்டை அடைவதற்கும், சரி யானதற்கு மிக நெருக்கமாக இருப்பதற்கும், தவறைக் குறைப்ப தற்கும், தவறிலிருந்து அதிகம் தூரமாவதற்குமான உத்தரவாதம் நமக்குக் கிடைக்கிறது. ஏனெனில், அபூ அல்-ஹுஸைன் அல்-பிஸ்ரீ கூறுவது போல்- ''சரியானது அனேகமாக பெரும்பான்மையுடனே இருக்கும்''. அவ்வாறே ஷம்ஸுத்தீன் அல்- இஸ்ஃபஹானீ கூறுகிறார்: ''சிறு தொகையினரின் அபிப்பிராயம் சரியானதாக இருப்பதற்கான சாத்தியப்பாடு குறைவாகும். பெரும் தொகை யினரின் கருத்துக்கு முரணாக தனியொருவர் கொண்டிருக்கும் கருத்து பெரும்பாலும் பலவீனமான சான்று கொண்டதாகவே இருக்கும். ''பெரும்பான்மையையே பின்பற்றுவேன்'' என்ற நபி வாக்கு பெரும்பான்மையின் கருத்தே அதிக ஏற்புடையது என்ப தைக் காட்டுகிறது. அவ்வாறு அதிக ஏற்புடையதாகக் காணப்படு மிடத்து அதனைச் செயற்படுத்துவது கடமையாகி விடும்''.

இந்த வகையில், பெரும்பான்மைக் கொள்கையை ஏற்பதும், அதிக எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் அளிப்பதும், அதிக தொகை யினரே அதிகமாக சரியான கருத்தில் இருப்பர் என்பதும் அதற்கு மறுகிடையான விளைவு ஏற்படுவதற்கான சாத்தியப்பாட்டை நிராகரித்து விடாது. அதாவது, பெரும்பான்மையினர் தவறாகவும், சிறு தொகையினர் -அல்லது ஒரு தனிநபர்- சரியாகவும் இருக் கக்கூடிய சாத்தியப்பாட்டை இங்கு மறுப்பதற்கில்லை. ஆனால் அந்நிலை ஏற்படுவது -குறிப்பாக நடைமுறை விவகாரங்களில்- குறைவு அல்லது அரிது. இஸ்லாமிய ஷரீஆ நோக்கில், அரிதாக நிகழ்பவை சட்டங்களுக்கு அடிப்படையாக அமைய முடியாது. பெரும்பான்மை நிலைகளை அடியாகக் கொண்டே சட்டங்களும் செயன்முறைகளும் வகுக்கப்படுகின்றன.

அதேவேளை, பெரும்பான்மைக் கருத்துக்கு மாறாக சிறு பான்மைக் கருத்து அல்லது ஒரு தனிநபரின் கருத்து சரியாக இருக்க முடியும் என்ற கூற்றும் கூட வெறும் கோட்பாட்டு ரீதியான அனுமானம்தான். அந்த இடம்பாட்டை நாம் மறுக்க முடியாது. அதேபோல் திட்டவட்டமாக அதனை உறுதிப்படுத்தவும் முடியாது; அதன் மீது தங்கியிருக்கவும் முடியாது.

கருத்து வேறுபாடு தோன்றும் போது -அது ஷூறா ஆயினும் ஷூறா அல்லாதது ஆயினும் - நமக்கு முன்னால் இரு நிலைகள் இருக்கும்: ஒன்று, தனக்கான ஆதாரங்களையும் சான்றுகளையும் கொண்ட பெரும்பான்மைக் கருத்து; மற்றையது, தனக்கென மாற்று ஆதாரங்களையும் சான்றுகளையும் கொண்ட சிறுபான்மைக் கருத்து. இந்நிலையில், சத்தியமே பின்பற்றப்படத் தகுதியானது; அது ஒரு தனிநபரது கருத்தாக இருந்தாலும் சரி! சான்றாதாரமே எப்போதும் முதன்மைப் படுத்தப்பட வேண்டும்; அத்தகைய நிலையில் தலைவர் கூட சான்றாதாரத்துக்கே கட்டுப்பட வேண்டும்; ‘‘எந்தக் கருத்து அல்லாஹ்வின் வேதத்தோடும் அவனது தூதரின் ஸுன்னாவோடும் இணங்கி வருகிறதோ அதுவே செயற்படுத்தப்பட வேண்டும்...’’ என்றெல்லாம் கூறுவது அழகானதும், கோட்பாட்டு ரீதியில் அறிவார்ந்ததும்தான். ஆனால்,

குறித்த பிரச்சினை தெளிவானது. பல்வேறு இடம்பாடுகளுக்கும் கோணங்களுக்கும் இடமற்றது என்ற நிலையிலும், நிராகரிக்கப்பட்ட கருத்து குர்ஆனுக்கோ ஸுன்னாவுக்கோ இணக்கமற்றது.. அதனைக் கூறியோருக்கு அந்த இரண்டையும் பற்றிய அறிவு கிடையாது என்ற நிலையிலும் மாத்திரமே இக்கூற்று பொருத்தமாக அமையும்.

ஆனால், மனிதர்கள் ஒரே மண்ணினால் படைக்கப்பட்டிருந்தாலும், அவர்களுக்கு என்று சிந்திக்கும் உள்ளங்களும், கேட்கும் செவிகளும் உண்டு; கருத்துக் கூறும் தகைமையுடைய ஒவ்வொருவருக்கும் தனித்தனியான பார்வையும் இஜ்திஹாதும் ஆதாரங்களும் சான்றுகளும் உண்டு; குறித்த பிரச்சினையில் ஒவ்வொரு தரப்பும் தனது நிலைப்பாடே அல்-குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் இணக்கமானது என்றும், அதுவே இஸ்லாத்தினதும் முஸ்லிம்களதும் நலனைப் பாதுகாக்க மிகப் பொருத்தமானது என்றும் கருதும் நிலை உண்டு. இத்தகைய நிலைகளில், ‘நாம் சத்தியத்தையே பின்பற்றுவோம்; அது பெரும்பான்மை கூறுவதாய் இருந்தாலும் சரி; ஒரு தனிநபர் கூறுவதாய் இருந்தாலும் சரி!’ என்று கூறுவதில் பயனில்லை. ‘சத்தியம்’ எந்தக் களங்கமும் இன்றி தெளிவாக அறியப்படுமாயின், அங்கு பெரும்பான்மைக் கருத்துமில்லை; சிறுபான்மைக் கருத்துமில்லை. கணவன்-மனைவியின் ஜனன உறுப்புகள் சந்தித்துக் கொண்டால் குளிப்பது கடமையா இல்லையா என்று -நாம் முன்னர் கலந்துரையாடிய- பிரச்சினை அத்தகைய ஒன்றே!

எனவே, நடைமுறையில் நமக்கு முன்னால் உள்ள தெரிவு பெரும்பான்மை கொண்டிருக்கும் ‘சத்தியத்தை’ அல்லது சிறுபான்மை கொண்டிருக்கும் ‘சத்தியத்தை’ பின்பற்றுவதே!

‘‘பெரும்பான்மையை நாடுமாறு அல்லாஹ் கட்டளை இடவில்லை. பூமிவாசிகள் அனைவரும் சேர்ந்து கூறினாலும் அசத்தியம் சத்தியத்திலிருந்து வேறானதே!’’ என்ற இப்னு ஹஸ்ம் போன்றோரது கூற்று வெறும் பிடிவாதமும் மேலோட்டமான தர்க்கமும் மாத்திரமே. இவ்விடத்தில் இமாம் ஷாத்திபீ நினைவு

கூரத் தக்கவர். ஒளியும் சமநிலையும் மிக்க பின்வரும் வாசகத்தின் மூலம் தனது அறிவியல் வாழ்வை அவர் முடித்துக் கொண்டார்: ''மனிதர்கள் அன்றி சத்தியமே கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது எனினும், அந்த மனிதர்கள் ஊடாகவே சத்தியம் எதுவென்று அறியப்படுகிறது; அவர்கள் ஊடாகவே அந்த சத்தி யத்தை நாம் அடைந்து கொள்கிறோம். சத்தியத்தை நோக்கிய பாதையில் வழிகாட்டியாய் நிற்பவர்கள் அவர்களே!''

ஆக- அறிவும் அனுபவமும் கொண்டோரும், அவ்வாறே -பொதுமக்களது நலன்சார்ந்த விவகாரங்களில்- பொதுமக்களும்தான் சத்தியத்தையும் உண்மையையும் நோக்கி வழிகாட்டுவோராய் நிற்கின்றனர்; அல்லது ஒப்பீட்டளவில் அதிகம் சரியானதற்கு வழிகாட்டுகின்றனர். அதேபோல், அவர்களே அல்-குர்ஆனும் ஸுன்னாவும் வேண்டி நிற்பதையும் அவற்றின் முழுமொத்த நோக்கங்களையும் காட்டித் தருவோராய் உள்ளனர். வேறு வார்த் தையில் கூறினால், எது முடியுமானது? எது முடியாதது? எது ஏற்கக் கூடியது? எது ஏற்க முடியாதது? என்பதை அறிவதற்கான அளவுகோல் அவர்களே.

எனவே குறிப்பிட்டதொரு கருத்தில் அவர்களது எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுமாயின் அது குருட்டுத் தனமான அதிகரிப்பல்ல; மாறாக, ஆய்வினாலும் சான்றினாலும் தெரிவினாலும் ஏற்படும் அதிகரிப்பு. எனவே சத்தியமும் உண்மையும் -எப்போதும் அல்லது பெரும்பாலும்- அவர்கள் பக்கமே அடிப்படையில் இருக்கும். இதற்கு மாறான நிலையும் காணப்பட முடியுமாயினும் அது விதிவிலக்கான அல்லது சாத்தியத் தன்மை கொண்ட நிலை மட்டுமே.

அல்-புஹாரியில் இடம்பெறும் சில ஹதீஸ்கள் பற்றிய விளக்கவுரையில் இப்னு பத்தால் கூறுவது போல், ''அந் நள்ளாம் மற்றும் முஃதஸிலாக்களில் ஒரு பிரிவினர் முதலியோரே (அல் கியாஸ் என்னும்) ஒப்பீட்டு முறையை மறுக்கின்றனர். நியாயவியல் துறையை சேர்ந்த தாவூத் பின் அலீயும் அவர்களைப் பின் பற்றிச்

செல்கின்றார். ஆனால் சமூகமே இங்கு சான்றாகக் கொள்ளப்பட வேண்டியவர்கள். புறநடையாகச் செல்வோரை இங்கு பொருட் படுத்தத் தேவையில்லை''.

'சமூகம்' (அல் ஜமாஆ) என்பதன் மூலம் இங்கு நாடப்படுவது 'அறிஞர் சமூகம்' ஆகும். அதாவது அவர்களுள் பெரும்பான்மை யினர் ஆவர்.

## அத்தியாயம் மூன்று:

# நபியவர்கள் காலம் தொட்டு வரலாறு நெடுகிலும் இஸ்லாமிய ஷூறா

## நபியவர்கள் காலம் தொட்டு வரலாறு நெடுகிலும் இஸ்லாமிய ஷூறா

***பீடிகை:***

*ஷூறா செயற்பாடானது ஆரம்பகால இஸ்லாமிய சமூகத்தினதும் அதன் புதிய அரசினதும் சக்தியையும் உயிர்ப்பையும் கட்டுறுதியை யும் பிரதிநிதித்துவப் படுத்திய கூறுகளுள் ஒன்று என்பதில் ஐயமில்லை.*

*மனித வரலாற்றில் தோன்றிய அந்த மிக உயர்ந்த மாதிரி யிலிருந்தே இஸ்லாமிய சீர்திருத்தப் புனர் நிர்மாண இயக்கம் எப்போதும் உத்வேகம் பெறும் என்பதிலும் ஐயமில்லை. ஒரு புறம் அம்மாதிரியை செயற்படுத்துவதற்கும், மறுபுறம் நவீன காலத்தின் சூழமைவுகளையும் தனித்தன்மைகளையும் கவனத்திற் கொண்டு அதன் தேவைகளை சாத்தியப் படுத்துவதற்குமான மிகப் பொருத்தமான வடிவங்களையே அது தேடும்.*

*அந்த வகையில், நம் பார்வைகள் ஒட்டு மொத்தமாகவும் ஒரே நேரத்திலும் நம் சட்டவாக்க அடிப்படைகளையும் நமது வாழ்வியல் யதார்த்தங்களையும் நோக்கிச் செல்வது இயல்பானது மட்டுமன்றி அவசியமானதும் கூட. இதனையும் அதனையும் நாம் தொடர்பு படுத்தி நோக்க வேண்டும்; இதற்கும் அதற்கும் இடையில் இணக்கம் காண வேண்டும். 'யா அல்லாஹ்! என் தாயின்*

அழைப்பைக் கவனிப்பதா அல்லது தொழுகையைக் கவனிப்பதா?' என ஜுறைஜ் தடுமாறி நின்றது போல் தடுமாறி நிற்க நாம் விரும்பவில்லை.

அதாவது, சன்மார்க்க ஆன்மீகவியலை பற்றிப் பிடித்துக் கொண்டு உலக நலன்களைத் தியாகம் செய்வதா? அல்லது மார்க் கத்தை விட உலகத்தை முற்படுத்துவதா?... நமது சமகாலத்தையும் யதார்த்தத்தையும் கவனித்துக் கொண்டு, கடந்த காலத்தையும் பாரம்பர்யங்களையும் மறந்து விடுவதா? அல்லது கடந்த காலத்திலும் பாரம்பர்யங்களிலும் தொலைந்து போய், சமகாலத் தையும் அது குறித்த நலன்களையும் புறக்கணித்து விடுவதா?

முற்றிலும் முரண்பட்ட இந்த இரட்டைகளுக்கிடையில் ஏதாவ தொன்றைத் தெரிவு செய்தே ஆக வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் நமக்கில்லை. ஏனெனில், இந்த முரண்பாட்டை நீக்கி இரண்டுக்குமிடையில் இணக்கம் காணவும் ஒவ்வொன்றையும் அதற்குரிய இடத்தில் வைக்கவும் நம்மால் முடியும்; அது நமது கடமையும் கூட! இந்த அத்தியாயத்திலும் இதற்கு அடுத்து வரும் அத்தியாயத்திலும் நாம் செய்ய முனைவது அதுவே!

*பகுதி ஒன்று:*

## ஆரம்பகால இஸ்லாமிய ஷூறா அனுபவமும் பாடங்களும்

*''அவர்களது அனைத்து (பொது) விவகாரங்களும் அவர்களுக்கு மத்தியிலான ஆலோசனையின் அடிப்படையில் அமைந்திருக்கும்'' (42: 38)* என்ற 'ஷூறா' தொடர்பான முதல் வசனம் இறங்கியது மக்கா காலப் பிரிவில் புலம் பெயர்வுக்கு முன்பாகும். குறித்த வசனம் விவரணப் போக்கிலும் புகழும் வகையிலும் அமைந்திருக்கிறதே அன்றி கட்டளையாக அமையவில்லை. ஷூறா செயற்பாடானது ஏற்கனவே பின்பற்றப்பட்டு வந்த ஒரு நடைமுறை என்ற பொருளை இது தருகின்றது.

ஷூறா பற்றிய மேற்குறித்த வசனமும் *''அனைத்து (பொது) விவகாரங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசிப்பீராக!'' (3: 159)* என்ற வசனமும் இறங்க முன்னர் நபி (ஸல்) அவர்கள் ஷூறாவை நடைமுறைப் படுத்தி இருக்கவும் முடியும்; முஸ்லிம்கள் தங்களது சூழ்நிலையின் தேவை உணர்ந்து இயல்பாகவே அதனைச் செயற்படுத்தி இருக்கவும் முடியும். எது எவ்வாறிருப்பினும், ஷூறா என்பது சீரறிவு கொண்ட மனிதர்களது இயல்பான நடைமுறையாக கருதப்படக் கூடியது. இஸ்லாமிய ஷரீஆ அதனை சரியான இஸ்லாமிய செயற்பாட்டுக்கு அவசியமான அம்சமாக்கியுள்ளது; அவ்வளவுதான்! வேறு பல நல்ல செயற்பாடுகளையும் அறிவார்ந்த

அம்சங்களையும் இஸ்லாமிய ஷரீஆ சட்டபூர்வமாக்கி வைத்தி ருப்பது போன்றதே இதுவும்.

ஷூறா பற்றிய அல்-தர்தூஷியின் கூற்றை இப்னுல் அஸ்றக் இவ்வாறு பதிவு செய்கிறார்: ''ஞானிகள் அதனை ராஜ்யங்களின் அடிப்படையாகக் கருதுகின்றனர். அது ஆள்பவருக்கும் தேவை; ஆளப்படுபவருக்கும் தேவை!''

இதற்குப் பிற்சேர்க்கையாக இப்னுல் அஸ்றக் இவ்வாறு கூறுகிறார்: ''அது ஷரீஆவிலும் அச்சொட்டாக அவ்வாறுதான்.!''

இஸ்லாமிய ஷரீஆவுக்கும் ஞானத்துக்கும் இடையிலான இந்தப் பரிபூரண இணக்கப்பாடு சீரிய அறிவு படைத்த அனைவரதும் இயல்பான பண்பாக ஷூறா இருப்பதற்குச் சான்றாகிறது. அரே பியக் கோத்திரங்கள், அவுஸ்திரேலியப் பழங்குடிகள், கிரேக்க-ரோமானியர்கள், பண்டைய ஈராக்கியர்கள், ஷாஸானியர்கள், எகிப்தியர்கள், அஸிரியர்கள் முதலானோரிடம் கலந்தாசிக்கும் நடைமுறையும் சமூகத் திட்டமிடலும் தொன்று தொட்டுக் காணப் பட்டிருந்தது பற்றி கலாநிதி கஹ்தான் அல்-தூரி சிறந்த விளக்க மொன்றை முன்வைக்கிறார். மனித வாழ்வில் ஜனநாயக 'ஷூறா' நடைமுறை தொன்று தொட்டு எவ்வாறு இடம் பிடித்திருந்தது என்பதை இவையனைத்தும் எடுத்துக் காட்டுகின்றன. அவ்வாறே -வடிவங்கள் பல்வகைப் பட்டிருந்த போதிலும்- பிரதிநிதித்துவ அடிப்படையிலான 'ஷூறா' ஒழுங்கும் பாராளுமன்ற பிரதிநிதித்துவ முறைமையும் பல்வேறு சமூகங்களில் பெற்றிருந்த இடத்தை இது சுட்டிக் காட்டுகின்றது.

இவ்வாறு இயல்பான பண்பினாலும் ஷரீஆவினாலும் உந்தப் பட்டே நபி (ஸல்) அவர்களும் தோழர்களும் ஆரம்பகால 'ஷூறா' அனுபவத்தினுள் நுழைந்தார்கள். அந்த அனுபவம் பாரியளவு சுயாதீனமானதாகவும் இயல்பானதாகவும் நம்பிக்கையும் விட்டுக் கொடுப்பும் கொண்டதாகவும் அமைந்திருந்ததோடு, விரிவான நியமங்களோ ஒழுங்கமைக்கப்பட்ட வடிவங்களோ அற்றதாகவும் அமைந்திருந்தது. மட்டுமன்றி, அவர்களது ஒட்டுமொத்த வாழ்வும்

தொடர்புகளும் கொடுக்கல்-வாங்கல் செயற்பாடுகளும் பிற விவகாரங்களும் கூட இத்தகைய பண்புகளையே கொண்டிருந்தன. மிக நிர்ப்பந்தமான சூழ்நிலையில் மாத்திரமே அவர்கள் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். இறைத்தூதர் பற்றியும் அன்னாரது நுபுவ்வத் பற்றியும் புதிய மார்க்கம் பற்றியும் அறபியருள் எவராவது கேள்விப்படும் போதெல்லாம் அன்னாரைத் தேடி வந்து விசாரிப்பார்; அன்னார் தனது தோழர்களுடன் அமர்ந்திருப்பதாக அவருக்குக் கூறப்படும்; ஆயினும் கூட்டத்தினுள் நபியவர்களை வேறுபடுத்திப் பார்க்க அவரால் முடியாதிருக்கும்; 'உங்களில் முஹம்மத் யார்?' எனக் குழப்பத்துடன் அவர் விசாரிப்பார்.

ஃகலீபா உமரைச் சந்திக்க பாரசீக மன்னன் ஹுர்முஸான் வருகிறார். ஆனால் காவல் வீரனோ வாயில் பணியாளனோ அவருக்குத் தென்படவில்லை. 'உமர் மஸ்ஜிதில் இருக்கிறார்!' என அவருக்கு கூறப்படுகிறது. எனவே மஸ்ஜிதுக்கு வருகிறார். அங்கு உமர் சிறு கூழாங்கற்களை தலையணையாக்கிப் படுத்திருக்கிறார். அவருக்கு முன்னால் அவரது சாட்டை வைக்கப்பட்டிருக்கிறது. அப்போது ஹுர்முஸான் கூறுகிறார்: ''உமரே! நீதம் செலுத்தினீர். அதனால் அச்சம் களைந்தீர்; நிம்மதியாகத் தூங்கினீர்!''

அதன் பிறகு நிலைமைகள் வெகுவாக மாறிப் போயின. உஸ்மான் (றழி) ஃகிலாபத் பொறுப்பை ஏற்றார். நபித் தோழர்களுள் பெரும் செல்வந்தர்களுள் ஒருவராக இருந்தும் எளிமையாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்தார். ஹஸன் அல்-பஸரி அவர் பற்றி இவ்வாறு கூறினார்: ''உஸ்மான் பின் அஃப்பான் ஃகலீபாவாக இருக்கும்போது அவரைக் கண்டேன். மஸ்ஜிதில் தூங்கி எழுந்திருந்த அவரது விலாப் புறத்தில் கூழாங்கற்களின் அடையாளம் பதிந்திருந்தது''. மேலும் கூறினார்: ''உஸ்மான் பின் அஃப்பான் மஸ்ஜிதில் போர்த்தியவாறு தூங்குவதை நான் கண்டேன். அமீருல் முஃமினீனாக இருந்தும் அவரைச் சூழ எவரும் இருக்கவில்லை''.

இவ்வாறு இறைத்தூதர் (ஸல்) அவர்களது ஸீறாவிலும் ஃகலீபாக்களது ஸீறாவிலும் உதாரணங்கள் ஏராளம். அவர்களது

‘ஷூறா’ அனுபவம் பற்றிப் பேசும் சமயம் அக்கால கட்டத்துக்குரிய இயல்பையும் அதன் சில பண்புகளையும் நினைவூட்டவே இங்கு நான் விரும்பினேன்.

அக்கட்டத்தில் ஷூறா செயல்பாடு செறிவாக மேற்கொள்ளப் பட்டிருந்தது. பெரிய, சிறிய விவகாரங்கள் அனைத்தும் அச்செயற் பாட்டுக்கு உட்படுத்தப்பட்டன. சமாதானம், போர், ஃகிலாபா, பொதுவான சட்டவாக்கங்கள் முதலான சமூக விவகாரங்கள் தொட்டு திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை, மற்றும் (கிணறு, பேரீச்ச மரம், ஒட்டகம்... என்பவை தொடர்பான) பிணக்குகள் முதலிய தனிநபர் விவகாரங்கள் வரை அனைத்துமே ஷூறாவுக்கு உட்படுத்தப் பட்டன.

செறிவு மிக்க இக்கலந்தாலோசனைச் செயற்பாடுகளில் மிக முக்கியமான அம்சம் யாதெனில், அவை தமது இலக்கை பரி பூரணமாக அடைந்து கொள்வது தவிர வேறு அம்சங்கள் குறித்து அலட்டிக் கொள்ளவில்லை. அதாவது, அவர்களது ஆலோசனைச் செயற்பாட்டின் இயல்பை இவ்வாறு நாம் சுருக்கிக் கூறலாம்: ‘‘ஷூறா என்பது நோக்கங்களைப் பொறுத்தது; வடிவங்களைப் பொறுத்ததல்ல’’.

அந்த வகையில், ஆலோசனை கேட்கப் பட்டவர்கள் யாவர்? கேட்கப்படாதவர்கள் யாவர்? சமூகமளித்தவர் யார்? சமூகமளிக் காதவர் யார்?... என்றெல்லாம் அவர்கள் தேடிப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. ஆலோசனை கேட்கப்பட்டவர்கள் அதற் குத் தகுதியானவர்களாக இருப்பதும், ஆலோசனைச் செயற்பாட் டில் எவராவது சமூகமளிக்கா விட்டாலும் அதனால் இழப்பெது வும் இல்லாதிருப்பதுவும் மட்டுமே அங்கு போதுமானதாக இருந்தது. எவரது பிரசன்னமும் அங்கு திட்டமிட்டு தவிர்க்கப் படவில்லை.

குறித்ததொரு பிரச்சினையில் ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனை என்று கூட அவர்கள் பெரிதளவு அலட்டிக் கொள்ள வில்லை. அவர்கள் ஓரிருவரா? அல்லது நூற்றுக் கணக்கானவர்

களா? என்றும் கூட அவர்கள் பார்க்கவில்லை. இருக்கும் ஆலோசகர்கள் உண்மையாகவே தங்களது கருத்துகளையும் நலன்களையும் பிரதிபலிப்பவர்களாக இருந்தால் அதுவே அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது.

குறித்த அபிப்பிராயத்தை எத்தனை பேர் ஆதரித்தனர்? எத்தனை பேர் எதிர்த்தனர்?... என்றும் அவர்கள் நுணுக்கமாகக் கவனிக்கவில்லை. பொதுவான பெரும்பான்மைப் போக்கு தெளிவாகத் தெரிந்து விட்டால், அல்லது ஒருவகை இணக்கப்பாடும் பரஸ்பர திருப்தியும் விட்டுக் கொடுப்பும் ஏற்பட்டு விட்டால் அதுவே போதுமானதாக இருந்தது.

அவர்களுள் ஒருவர் முரண்பட்டாலும் பின்னர் அவரது கூற்றில் உண்மை இருப்பதாகவும் அவரது சான்று நம்பத் தகுந்ததாகவும் தென்படும் பட்சத்தில் அவரது அறிவிலும் அனுபவத்திலும் சிறந்த அனுமானத்திலும் நம்பிக்கை வைக்க அவர்கள் தயங்குவதில்லை. இந்நிலையில் ஒரு தனிநபரின் அபிப்பிராயம் ஏகோபித்த அபிப்பிராயமாக அல்லது அதற்கு நெருங்கிய அபிப்பிராயமாக மாறிவிடும்.

கலந்தாலோசனைச் செயற்பாடுகள் அங்கு சுதந்திரமும் பாதுகாப்பும் தன்னம்பிக்கையும் மிகுந்த சூழலொன்றிலேயே இடம் பெற்றன. எவரும் எவருக்கும் பாரபட்சம் காட்டவில்லை; எவரும் எவரையும் ஏமாற்றவில்லை; எவரும் எவருக்கும் அஞ்சவில்லை; எவரும் எவரிடமும் லாபத்தை எதிர்பார்க்கவில்லை.

இத்தகைய பண்புகளையும் சூழமைவுகளையும் கொண்டிருந்த அவர்களது ஷூறா செயற்பாடுகளுக்கு விரிவான சட்டங்களோ நியமங்களோ உத்தரவாதங்களோ முன்னெச்சரிக்கைகளோ அவசியப்பட்டிருக்கவில்லை. சிக்கலான நிறுவன அமைப்புகள் அவசியப்படாத போது அவற்றை ஏற்படுத்துவது சுமையாகவும் தடையாகவும் அமைந்து விடும்; அல்லது -குறைந்த பட்சம்- அவற்றின் பயனை விட தொல்லை அதிகமாகி விட முடியும்.

*ஆரம்பகால அனுபவத்தில் 'ஷூறா' செயற்பாடானது நிறுவன மயப் படுத்தலிலும் செயற்படுத்தும் வழிமுறைகளிலும் எளிமை யானதாக அமைந்திருந்தது; ஆனால் நோக்கத்தின் வினைமைத் தன்மையிலும் தார்மீகப் பண்பிலும் கனதி மிக்கதாக இருந்தது.*

*நபியவர்களது ஆலோசனைச் செயற்பாடுகளுக்கான பல எடுத்துக் காட்டுகள் முன்பு தரப்பட்டுள்ளன. மறுபுறத்தில் அச் செயற்பாடுகளை எவரும் நியாயப்படுத்தவோ சான்றாதாரப் படுத்தவோ வேண்டிய எந்த அவசியமும் இல்லை. ஏனெனில், பிறரது செயற்பாடுகளுக்கு அடிப்படையாகவும் சான்றாகவும் அவையே உள்ளன. அவ்வகையில் நபித் தோழர்களது -குறிப்பாக நேர்வழிநின்றஃகலீபாக்களது-ஆலோசனைச்செயற்பாடுகளுக்கான எடுத்துக் காட்டுக்களை நோக்கி இனி நகர்வோம். ஏலவே நாம் குறித்துக் காட்டிய சில அம்சங்களையும் பண்புகளையும் விளக்கு வதற்கு அவை உதவும்.*

## *1. அபூபக்கர் ஸித்தீகின் ஃகிலாபத்துக்கு வழங்கப்பட்ட விசுவாசப் பிரமாணம்:*

*இறைத்தூதர் அவர்களுக்குப் பின் வரக் கூடிய ஃகலீபாவை தெரிவு செய்வதற்காக இடம்பெற்ற மிகப் பெரும் ஷூறா செயற் பாட்டிலிருந்து ஆரம்பிப்போம். இமாம் புஹாரியின் அறிவிப்பை இங்கு நாம் துணையாகக் கொள்ளலாம்:*

*உமர் (றழி) ஹஜ் கிரியையில் ஈடுபட்டிருந்த பொழுது ஒரு மனிதர் அவரிடம் வந்து, ''அமீருல் முஃமினீனே! உமர் மரணித்து விட்டால் நான் இந்தக் குறிப்பிட்ட நபருக்குத்தான் விசுவாசப் பிரமாணம் செய்வேன்; அல்லாஹ்வின் மீது ஆணையாக! அபூ பக்கருக்குச் செய்யப்பட்ட விசுவாசப் பிரமாணம் ஒரு பிசகு அன்றி வேறில்லை!'' எனக் கூறும் ஒருவரைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என வினவினார்.*

*இதனால் கோபமடைந்த உமர் கூறினார்: ''இன்ஷா அல்லாஹ் இன்று மாலையே மக்களுக்கு மத்தியில் நான் எழுந்து நின்று*

அவர்களது விவகாரங்களில் கையாடல் செய்ய முனைவோர் குறித்து எச்சரிக்கப் போகின்றேன்!''

எனினும், இப்பிரச்சினையைக் கிளறுவதற்கு ஹஜ் காலம் உகந்ததல்ல என்றும், மதீனாவுக்கு திரும்பிச் செல்லும் வரை அதனை விட்டு வைக்குமாறும் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவரை அமைதிப் படுத்தினார்.

மதீனாவுக்குத் திரும்பி வந்ததும் மக்களுக்கு மத்தியில் உரை யாற்றிய உமர் இவ்வாறு கூறினார்: ''உங்களில் ஒருவர் 'அல் லாஹ்வின் மீது ஆணையாக! உமர் மரணித்தால் நான் இன்ன நபருக்குத்தான் விசுவாசப் பிரமாணம் அளிப்பேன்!'' எனக் கூறியதாக கேள்விப் பட்டேன். அபூபக்கருக்கு வழங்கப்பட்ட விசு வாசப் பிரமாணம் ஒரு சடுதியான பிசகு என்று கூறுமளவுக்கு எவரும் மதிமயங்கி விட வேண்டாம். அது அவ்வாறுதான் அமைந்திருந்தாலும் அதனால் தோன்றக் கூடிய தீங்கை அல்லாஹ் அகற்றி விட்டான் என்பதில் ஐயமில்லை. அந்தப் பொறுப்புக்கு அபூபக்கருக்கு நிகராக உங்களில் எவரும் இருக்கவுமில்லை. முஸ்லிம்களது ஆலோசனை பெறப்படாமல் எவர் மற்றொருவ ருக்கு 'பைஅத்' பிரமாணம் செய்கிறாரோ அவ்விருவரும் கொலை அபாயத்துக்கு உட்படுவர். அல்லாஹ் தனது நபியை மரணிக்கச் செய்த பிறகு அன்ஸாரிகள் எம்முடன் முரண்பட்டு பனீ ஸஈதா மண்டபத்தில் ஒன்று கூடினர். அலீயும் ஸுபைரும் அவ்விருவருக்கு சார்பானவர்களும் கூட எம்முடன் முரண்பட்டிருந்தனர். எனினும் முஹாஜிர்கள் அபூபக்கரை நோக்கித் திரண்டனர். அப்போது நான் அபூபக்கரிடம், 'அபூபக்ரே வாரும்! நமது சகோதரர்களாகிய அன் ஸாரிகளிடம் செல்வோம்!' எனக் கூறினேன். அவ்வாறே நாங்கள் சென்று அவர்கள் இருக்கும் இடத்தை நெருங்கியபோது அன்ஸாரி களைச் சேர்ந்த இரு நல்ல மனிதர்கள் வழியில் எங்களைச் சந்தித்து அன்ஸாரிகள் தங்களுக்கு மத்தியில் ஒரு தலைவரைத் தெரிவு செய்ய உடன்பட்டிருப்பதாகத் தெரிவித்தனர். பின்னர், 'முஹாஜிர் களே! நீங்கள் எங்கு செல்கிறீர்கள்?' என வினவினர். அதற்கு நாம் 'எங்கள் அன்ஸாரிச் சகோதரர்களை நாடிச் செல்கிறோம்' எனப்

பதிலளித்தோம். அதற்கவர்கள், 'நீங்கள் அவர்களிடம் செல்ல வேண்டாம்; ஏலவே தீர்மானித்தது போன்றே செயற்படுங்கள்!'' எனக் கூறினர். அதற்கு நான் 'இல்லை; நிச்சயமாக அவர்களிடம் நாம் செல்வோம்' என்றேன். பின்னர் அன்ஸாரிகள் கூடியிருந்த பனீ ஸாஈதா மண்டபத்தைச் சென்றடைந்தோம். அங்கு அவர்களுக்கு மத்தியில் ஒரு மனிதர் போர்த்தியவாறு இருந்தார். 'இவர் யார்?' எனக் கேட்டேன். 'இவரா? இவர் ஸஅத் பின் உபாதா?' என்றனர். 'என்ன நடந்தது இவருக்கு?' என மீண்டும் கேட்டேன். 'அவர் சுகவீனமுற்றிருக்கிறார்' எனப் பதிலளித்தனர். நாம் சிறிது நேரம் அமர்ந்திருக்கையில் அவர்களது பேச்சாளர் எழுந்து நின்றார். அல்லாஹ்வைப் புகழ்ந்த பிறகு இவ்வாறு கூறினார்: 'அல்லாஹ் வின் உதவியாளர்களும் இஸ்லாத்தின் பெரும்படையும் நாங் கள்தான். குறைஷிகளே! நீங்கள் சிறு தொகையினர்தான். உங்கள் சமூகத்தைச் சேர்ந்த சிலர் வந்து எங்களை நிர்மூலமாக்கி ஆட்சி யுரிமையை விட்டு எங்களை ஓரங்கட்ட முயல்கின்றனர்!'. அவர் மௌனித்த போது நான் பேச முயன்றேன். அபூபக்கருக்கு முன்னால் பேசுவதற்கு எனக்குப் பிடித்த வகையில் உரையொன்றைத் தயார் படுத்தி வைத்திருந்தேன். எனினும் நான் பேச முற்பட்டதும் சற்றுப் பொறுக்குமாறு அபூபக்கர் என்னிடம் கூறினார். அவரைக் கோபப்படுத்த நான் விரும்பவில்லை. பின்னர் அவரே பேசினார். அவர் என்னை விட நிதானமானவராகவும் சகிப்புத் தன்மை மிக்கவராகவும் இருந்தார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் தயாரித்து வைத்ததில் ஒரு வார்த்தை கூடப் பிசகாமல் அதேபோன்று அவர் பேசினார். அவர் கூறியது இதுதான்: 'உங்களைப் பற்றி நீங்கள் குறிப்பிட்ட அனைத்துச் சிறப்புகளுக்கும் நீங்கள் தகுதி யானவர்களே. ஆயினும் ஃகிலாபத் விடயத்தைப் பொறுத்தவரை அது குறைஷியருள் இந்தக் குறிப்பிட்ட பிரிவினருக்கு உரியதாகும்; அவர்களே வம்சத்தாலும் வாழ்விடத்தாலும் அறபிகளுள் சிறந்த வர்கள். உங்களுக்கு இவ்விரு மனிதர்களை நான் திருப்தியுடன் முற்படுத்துகிறேன். நீங்கள் விரும்பிய ஒருவருக்கு விசுவாசப் பிரமாணம் அளியுங்கள்!'

பின்னர் எங்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தவாறே எனது கரத்தையும் அபூ உபைதா இப்னுல் ஜர்ராஹின் கரத்தையும் பற்றிக் கொண்டார். அவர் பேசிய விடயங்களுள் அந்த ஒன்றைத் தவிர வேறெதையும் நான் வெறுக்கவில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எந்தக் குற்றமும் செய்யாத நிலையிலும் மரண தண்டனைக்கு உட்படுவதை அபூபக்கர் இருக்கும் ஒரு சமூகத்துக்கு தலைமை தாங்குவதை விட அதிகம் விரும்பினேன். அப்போது அன்ஸாரிகளுள் ஒருவர், 'எங்களில் ஒரு தலைவரும் குறைஷிகளாகிய உங்களில் ஒரு தலைவரும் இருக்கட்டும்!' எனக் கூறினார். அதனால் சத்தமும் சந்தடியும் அதிகரித்தது. பிளவு தோன்றி விடுமோ என அஞ்சிய நான், 'அபூபக்கரே, கையை நீட்டும்!' என்றேன். அவர் கையை நீட்டியதும் பைஅத் செய்தேன்; முஹாஜிர்களும் செய்தனர். தொடர்ந்து அன்ஸாரிகளும் செய்தனர். பின்னர் ஸஅத் பின் உபாதாவை நோக்கி விரைந்தோம். அப்போது ஒருவர், 'ஸஅத் பின் உபாதாவைக் கொன்று விட்டீர்கள்!' என்றார். அதற்கு நான், 'அல்லாஹ்வே அவரை மரணிக்கச் செய்தான்' என்றேன்''.

உமர் தொடர்ந்து இவ்வாறு கூறினார்: ''அல்லாஹ்வின் மீது ஆணையாக! அபூபக்கரைத் தெரிவு செய்வதை விட உகந்த செயல் எதுவும் அப்போது எங்களுக்குத் தெரியவில்லை. ஒரு தலைவரைத் தெரிவு செய்யாது நாங்கள் சென்றிருந்தால், அவர்கள் தங்களுக்கு மத்தியில் ஒருவரை தலைவராகச் தெரிவு செய்திருப்பார்கள். அந்நிலையில் -நாங்கள் விரும்பாத போதும்- அதற்கு உடன்பட வேண்டி இருந்திருக்கும். உடன்படவில்லை எனில், பெரும் குழப்பம் தோன்றி விடும். முஸ்லிம்களது ஆலோசனை பெறப் படாமல் ஒருவர் மற்றொருவருக்கு பைஅத் செய்வாராயின் அவர் தன்னையும் அவரையும் மரண அபாயத்துக்கு உட்படுத்திக் கொள்வார்''.

முஸ்லிம்களுக்கான ஃகலீபாவை தெரிவு செய்வது தொடர்பான கலந்தாலோசனை தனிநபர்களுக்கிடையிலும் சிறு குழுக்களுக்

கிடையிலும் அன்ஸாரிகளுக்கிடையிலும் முஹாஜிர்களுக்கிடை யிலும் நிகழ்ந்திருப்பதையும், பின்னர் பனீ ஸாஈதாவில் முஹாஜிர் களுக்கும் அன்ஸாரிகளுக்கும் இடையில் விரிந்தளவிலான கலந்து ரையாடலும் ஆலோசனையும் மேற்கொள்ளப்பட்டு இறுதியில் அபூபக்கருக்கு பைஅத் செய்வதில் முடிந்திருப்பதையும் மேற் குறித்த அறிவிப்பு மட்டுமன்றி வேறு பல அறிவிப்புக்களும் எடுத்துக் காட்டுகின்றன.

இக்கலந்தாலோசனைகள் எத்தனை தடவை நிகழ்ந்த போதும், எவ்வளவு பரந்தளவில் நிகழ்ந்த போதும், எவ்வளவு கூர்மை யடைந்த போதும்... இறுதி முடிவாக அபூபக்கருக்கு வழங்கப்பட்ட பைஅத் ஒரு சடுதியான பிசகாகவே கருதப்பட்டுள்ளது. அதில் பிரதான பாத்திரம் ஏற்றிருந்த உமர் கூட அது பிசகு என்று கூறப்படுவதை மறுக்கவில்லை. எனினும் அது ஏன் அவ்வாறு நிகழ்ந்தது என்பதை அவர் விளக்கினார். அது கூட ஏற்புடையதாகவும் வெற்றிகரமானதாகவும் ஏன் கொள்ளப்பட வேண்டும் என்பதையும் விளக்கினார். மீண்டும் அவ்வாறு ஏன் நிகழக் கூடாது என்பதையும் விளக்கினார்.

ஆக- அது ஒரு பிசகுதான்; ஏனெனில் அது ஒரு வகையில் திட்டமிடப் படாமலும் திடீரெனவும் நிகழ்ந்தேறியது; இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணித்த அதிர்ச்சியில் ஃகிலாபத் பற்றிய எந்த முன்னேற்பாடும் இல்லாதிருந்த சங்கடமான சூழ்நிலையில் இடம் பெற்றது. மட்டுமின்றி, இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் வரலாற்றில் இடம்பெற்ற முதல் அனுபவம் என்ற நியாயமும் அதற்குண்டு. இவ்வாறெல்லாம் இருந்த போதிலும், பரஸ்பர கலந்துரையாடலும் கலந்தாலோசனையும் வெளிப்படைத் தன்மை யும் கருத்துச் சுதந்திரமும் அங்கு பெருமளவில் காணப்பட்டிருந் தமை தெளிவு.

எது எவ்வாறிருப்பினும், அந்த 'தவறு' ஏற்பட்டமைக்கும் வெற்றி பெற்றமைக்கும் மிக முக்கிய காரணம், அங்கு முடிவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஃகலீபா எவரும் போட்டி போட முற்படாத

அந்தஸ்துக் கொண்ட ஒரு நபராக இருந்தமையே. அது அவரது சிறப்புகள் மற்றும் தகைமைகள் என்ற வகையிலாயினும் சரி; இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது ஃகலீபாவாக அவரைப் பிரேரிக்கும் வகையிலான பல சைக்கினைகளை விட்டுச் சென்றிருந்தார்கள் என்ற வகையிலாயினும் சரி! ஃகலீபா முஹாஜிர்களிலிருந்து அன்றி தங்களிலிருந்தே தெரிவு செய்யப்பட வேண்டும் எனக் கருதிய சில அன்ஸாரிகள் கூட பைஅத் வழங்கப்பட்டது அபூபக்கருக்கு என அறிந்ததும் சற்றும் தயக்கமின்றி விரைந்து பைஅத் செய்தனர். தங்களுக்கு மத்தியிலிருந்த எந்தவொரு அன்ஸாரித் தலைவரையும் விட அபூபக்கருக்கு பைஅத் செய்வதில் அவர்கள் அதிக உடன்பாடும் மன அமைதியும் கொண்டிருந்தார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆயினும், இந்தத் தவறும் சடுதியான நடவடிக்கையும் உமரின் நோக்கில் புறநடையாக வெற்றியடைந்ததொரு நிகழ்வாகும். அவ்வாறு திரும்ப நிகழவும் கூடாது; பின்பற்றுவதற்கான மாதிரியாக கொள்ளப்படவும் கூடாது. ஏனெனில் அபூபக்ரைப் போன்ற வேறொருவர் முஸ்லிம்களில் கிடையாது. அவ்வகையில்தான் உமரின் கூற்று தெளிவாகவும் தீர்மானகரமாகவும் அமைந்திருந்தது. ‘‘அபூபக்ருக்கு வழங்கப்பட்ட பைஅத் ஓர் எதிர்பாராத பிசகு என்று கூறுமளவுக்கு எவரும் மதிமயங்கி விட வேண்டாம். அது அவ்வாறுதான் அமைந்திருந்தாலும், அதனால் தோன்றக் கூடிய தீங்கை அல்லாஹ் அகற்றி விட்டான். அந்தப் பொறுப்பைச் சுமக்க அபூபக்கருக்கு நிகராக உங்களில் எவரும் இருக்கவில்லை. முஸ்லிம்களது கலந்தாலோசனை பெறப்படாமல் ஒருவர் மற்றொருவருக்கு பைஅத் செய்வாராயின் அவர் தன்னையும் மற்றவரையும் மரண அபாயத்துக்கு உட்படுத்திக் கொள்வார்’’. ஆக- எதிர்பாராத இந்தத் தவறை அடிப்படை விதியொன்றாக எடுத்துக் கொள்ள விரும்புபவர்கள் ‘உம்மா’வையும் அதன் பிரதிநிதிகளையும் ‘அஹ்லுல் ஹல்லி வல் அக்த்’ எனப்படும் அதிகாரிகளையும் செயலிழக்கச் செய்யவும் ஷூறா என்ற உரிமையையும் கடமையையும் ரத்துச் செய்யவுமே முயல்கின்றனர். எனவேதான் தவறு

பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்ட செய்தி தனக்கு எட்டிய போது உமர் அளித்த பதில் விரைவானதாகவும் தீர்மானகரமானதாகவும் அமைந்திருந்தது: ''இன்று மாலையே நான் மக்களுக்கு மத்தியில் எழுந்து நின்று, அவர்களது விவகாரங்களில் கையாடல் செய்வோர் குறித்து எச்சரிக்கப் போகிறேன்''. அவ்வாறு தவறாக பைஅத் செய்பவரும் அந்த பைஅத்தை ஏற்பவரும் கொல்லப்படுவர் என்ற அச்சுறுத்தலையும் அவரது எச்சரிக்கை உள்ளடக்கியிருந்தது. இது மிகக் கடுமையான எச்சரிக்கையாகும்.

எனினும்- சில நியாயவியலாளர்களும் 'இல்முல் கலாம்' துறை சார்ந்தோரும் உமரின் கடுமையான தொனி கொண்ட இந்த எச்சரிக்கையைப் புறக்கணித்து, மேற்குறித்த சடுதியான தவறையே அடிப்படை விதியாகக் கொண்டனர். 'ஒருவரது அல்லது இருவரது அல்லது நால்வரது பைஅத் மூலமாகக் கூட கிலாபத் நிலைபெற முடியும்' என அவர்கள் கூறினர்.

இமாமுல் ஹறமைன் அல்-ஜுவைனி இப்பிரச்சினையை மிக விரிவாக விளக்கியுள்ளார்; இது தொடர்பான பல்வேறு கருத்துகளையும் நிலைப்பாடுகளையும் குறிப்பிட்டுள்ளார். ''அரசியல் மற்றும் ஆன்மீகத் தலைமைத்துவம் (அல் இமாமா) என்பது 'அஹ்லுல் ஹல்லி வல் அக்த்' தரத்திலுள்ள ஒரு தனிநபர் வழங்கும் பைஅத் மூலமாகக் கூட செல்லுபடியாக முடியும்'' என்ற அஷ்அரீ மற்றும் அல்-பாகில்லானி ஆகியோரது கருத்துகள் அவற்றுள் ஒன்று. இறுதியில் அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

''எனது நோக்கின்படி, பின்பற்றுவோரிலும் ஆதவாளர்களிலும் அபிமானிகளிலும் ஒரு தொகையினர் பைஅத் பிரமாணம் வழங்கும் போதே அது கவனத்தில் கொள்ளப்படும். வெளிப்படையாகத் தெரியக் கூடிய சக்தியாகவும், எதிர்ப்பை சமாளித்து அடக்கக் கூடிய வல்லமை கொண்டதாகவும் அந்த எண்ணிக்கை அமைய வேண்டும்''.

பின்வரும் கூற்று மூலமாக இப்னு தைமியா குறிப்பதும் இதுவே: ''இல்முல் கலாம் சார்ந்த சிலர் நான்கு பேர் வழங்கும்

பைஅத் மூலமாக இமாமத் செல்லுபடியாகும் என்கின்றனர்; இன்னும் சிலர் இருவரது பைஅத் போதுமானது என்கின்றனர்; வேறு சிலர் ஒருவரது பைஅத் போதுமானது என்கின்றனர். ஆனால் இவை எதுவும் அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களது கூற்றுகளல்ல. ஒரு சமூகத்தின் பலமான எண்ணிக்கையினரின் உடன்பாட்டின் மூலமாகவே இமாமத் உறுதி செய்யப்பட முடியும். இமாமத் மூலமாக எதிர்பார்க்கப்படும் நோக்கம் அந்த எண்ணிக்கையினரின் கீழ்ப்படிவால் ஈட்டப்பட முடியுமாக இருப்பதும் அவசியம்''.

''உமர் அபூபக்கருக்கு பைஅத் பிரமாணம் வழங்கிய போது, பிறரும் இணங்கிச் செல்ல இசைந்தார்கள்''; இல்லையெனில் அந்த பைஅத் சரியானதாகவோ நடைமுறைச் சாத்தியமானதாக வோ இருந்திருக்காது... என்பது இமாம் ஜுவைனியின் அபிப்ராயம்.

அபூபக்கருக்கு உமர் செய்த பைஅத்துக்கு மறுப்பும் எதிர்ப்பும் கிளம்பியிருக்குமெனில், ஒரு தனிமனிதரது 'பைஅத்'தும் செல்லு படியாகும் என்று கூறுவதற்கான சாத்தியம் ஏற்பட்டிருக்காது. ஒரு தனிமனிதர் வழங்கும் பைஅத் மூலமாக ஃகலீபா உறுதி செய்யப் பட முடியும் எனவும், அது முழு முஸ்லிம்களையும் கட்டுப்படுத்து வதாக மாறும் எனவும் கொள்வோமாயின், முஸ்லிம்களது கலந்தாலோசனையோ அங்கீகாரமோ பெறப்படாமல் அவர்கள் மீதான அதிகாரியை நியமிக்கும் பொறுப்பை ஒரு தனிநபருக்கு நாம் கொடுத்தவர்களாகி விடுவோம். ஆனால் இறுதித்தூதர் (ஸல்) அவர்களோ இவ்வாறு கூறுகிறார்கள்: ''கலந்தாலோசனை செய் யாமல் ஒருவரை நான் தலைவரா நியமிப்பதாயின் இப்னு உம்மி அப்தையே நியமிப்பேன்''.

ஆக- இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூட முஸ்லிம்களது ஆலோ சனை இன்றி அவர்களுக்குத் தலைவராக ஒருவரை நியமிக்கும் உரிமையை எடுத்துக் கொள்ளவில்லை. ''*உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கிறார். நீங்கள் துன்பப்படும் போதெல் லாம் அவர் வருத்தமடைகிறார். உங்கள் நலன்கள் மீதே அவர் அக்கறை கொண்டிருக்கிறார். இறை விசுவாசிகள் மீது மிக அன்பும்*

*கிருபையும் கொண்டவராக அவர் இருக்கிறார்'' (9: 128)* என்றும், *''இந்த நபி இறை விசுவாசிகளுக்கு அவர்களது உயிரையும் விட நெருக்க மானவர்'' (33: 6)* என்றும் அல்லாஹ்வினால் புகழ்ந்துரைக் கப்பட்ட நபியவர்களே அந்த அதிகாரத்தை தனக்கு எடுத்துக் கொள்ளவில்லை எனில், பிறருக்கு அது எவ்வாறு வழங்கப்பட முடியும்?

### 2. உமர் ஃகலீபாவாக நியமிக்கப்பட்டமை:

ஃகலீபா அபூபக்கர் கடும் சுகயீனம் அடைந்த போது, தான் மரணித்தால் தனக்குப் பின்னர் ஃகலீபாவாக வரக் கூடியவர் யார் என்பது குறித்த கலந்தாலோசனைகளை ஆரம்பித்தார். அந்தவகை யில் அப்துர் ரஹ்மான் பின் அவ்பை அழைத்து, ''உமர் இப்னுல் ஃகத்தாப் பற்றி எனக்குக் கூறும்!'' என்றார். அதற்கு அப்துர் ரஹ்மான், ''என்னை விட அதிகமாக நீரே அறிந்திருக்கும் ஒன்று பற்றித்தான் என்னிடம் கேட்கின்றீர்!'' எனப் பதிலளித்தார். ''இருந்தாலும்..'' என அபூபக்கர் மீண்டும் கேட்க, அப்துர் ரஹ்மான் கூறினார்: ''அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீர் எண்ணுவதை விட அவர் சிறந்தவர்''. பிறகு உஸ்மான் பின் அஃப்பானை அழைத்து, ''உமர் பற்றி எனக்குக் கூறும்!'' என்றார். அதற்கு உஸ்மான், ''அவரைப் பற்றி எம்மில் மிக அறிந்தவர் நீரே!'' என்றார். ''இருந்தாலும் கூறும்!'' என அபூபக்கர் மீண்டும் கேட்க, அவர் இவ்வாறு கூறினார்: ''அவர் பற்றி எனக்குத் தெரிந்ததெல் லாம், அவர் வெளிப்படையாக காட்டிக் கொள்வதை விட அந்தரங்கத்தில் சிறந்தவர்; அவரைப் போல் ஒருவர் நம்மில் இல்லை... என்பதுதான்!'' இவர்கள் இருவருக்கும் அப்பால் ஸஈத் இப்னு ஸெய்த், உஸைத் இப்னு ஹுழைர் உள்ளிட்ட பல முஹாஜிர்களிடமும் அன்ஸாரிகளிடமும் அபூபக்கர் விசாரித்தார். உமர் பற்றி உஸைத் கூறியது இதுதான்: ''உமக்குப் பின்னர் சிறந்தவராக அவரையே நான் அறிவேன்; நல்லதில் திருப்தி கொள்வார்; கோபப்பட வேண்டியதில் கோபப் படுவார். அவரது வெளிப்படையை விட அந்தரங்கம் சிறந்தது. இப்பொறுப்பை ஏற்பதற்கு அவரை விடப் பலசாலி எவருமில்லை''.

இக்கலந்தாலோசனைகளிலும் சாட்சியங்களிலும் மிக முக்கிய விடயம் யாதெனில், அவற்றில் முகஸ்துதியோ பாரபட்சமோ உள்நோக்கமோ பயமோ இருக்கவில்லை என்பதுதான். இந்த அபாயங்கள் எதற்கும் அவர்கள் சற்றும் இடமளிக்கவில்லை. எனவேதான் அபூபக்கர் தனக்குப் பின் ஃகலீபாவாக உமரை பிரேரித்ததைக் கேள்விப்பட்ட சில நபித் தோழர்கள் அவர் அதற் குப் பொருத்தமற்றவர் எனக் கருதி, உடனடியாக அபூபக்கரிடம் சென்று இப்படிக் கூறினர்: ''உமரின் கடின இயல்பு பற்றித் தெரிந்திருந்தும் அவரை எமக்கு ஃகலீபாவாக நியமித்தது பற்றி அல்லாஹ் உம்மிடம் கேட்டால் என்ன பதில் கூறுவீர்?'' இவ் வாறு கேட்டவருக்கும், உமர் தொடர்பாக தயக்கம் கொண்டிருந்த பிறருக்கும் அபூபக்கர் கூறிய பதில் இதுதான்: ''என்னைப் பய முறுத்துகிறீர்களா? நிச்சயமாக உங்களது மக்களில் மிகச் சிறந்த வரையே உங்களுக்கு நான் ஃகலீபாவாக நியமித்திருக்கிறேன்; நான் சொன்னதை அடுத்தவர்களுக்கும் போய்ச் சொல்லுங்கள்!''

யஸார் பின் ஹம்ஸா வாயிலாக இப்னு அஸாகிர் இவ்வாறு பதிவு செய்கிறார்:

''அபூபக்கருக்கு நோய் கடுமையான போது சிறு ஜன்னல் வழியாக மக்களை நோக்கி, ''மனிதர்களே! நான் ஓர் உறுதி எடுத்திருக்கின்றேன். நீங்கள் அதனை ஏற்றுக் கொள்வீர்களா?'' எனக் கேட்டார். அதற்கு மக்கள், ''இறைத்தூதரின் ஃகலீபாவே, நாங்கள் ஏற்றுக் கொள்வோம்'' என்றனர். அப்போது அலீ எழுந்து, ''அது உமராக இல்லா விட்டால் நாங்கள் திருப்தியடைய மாட் டோம்'' எனக் கூறினார். அதற்கு அபூபக்கர், ''அவர் உமர்தான்!'' எனப் பதிலளித்தார்.

இங்கும் ஷூறா செயற்பாடு தனக்குரிய இடத்தை உண்மை யாகவும் இயல்பாகவும் எடுத்திருப்பதைக் காண்கிறோம். ஐயங் களோ சந்தேகங்களோ குற்றச்சாட்டுகளோ இன்றி வெளிப்படைத் தன்மை நிறைந்ததொரு சூழலில் அது இடம்பெற்றிருக்கிறது.

அபூபக்கர் உமரை ஃகலீபாவாக நியமித்தார்; அது தொடர்பாக முஹாஜிர்களிலும் அன்ஸார்களிலும் உள்ள முக்கியமான நபர் களிடம் கலந்தாலோசனையும் செய்தார்; அதன் பிறகு முடியு மானளவு பொதுமக்களிடமும் எடுத்துக் காட்டினார். முஸ்லிம் களது ஆலோசனையோடும் அங்கீகாரத்தோடும் உமர் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதும், அவரை விடச் சிறந்த தெரிவு இருக்க முடியாது என்ற திருப்தியை அவர்களிடம் உறுதிப்படுத்துவதுமே இந்த அனைத்தினதும் பெறுபேறாகும். ஏனெனில் உமர் மீதும் உமரைப் பிரேரித்தவர் மீதும் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை அளப்பரியது..!

எனவே- இதற்கப்பால் எத்தனை பேரிடம் ஆலோசனை கேட்கப்பட்டது? ஆலோசனை கேட்கப்பட வேண்டிய வேறெ வரும் இருந்தனரா?... என்ற கேள்விகளுக்கெல்லாம் பெருமளவு முக்கியத்துவம் கிடையாது.

### 3. உஸ்மானுக்கு வழங்கப்பட்ட பைஅத்:

உமர் (றழி) குத்தப்பட்டு, இனி பிழைக்க மாட்டார் என்பது தெளிவான போது மக்கள் அவரிடம் வந்து, அபூபக்கர் போன்று அவரும் தனக்குப் பின் ஒருவரை ஃகலீபாவாக நியமிக்க வேண்டும் எனக் கேட்கலாயினர். அப்போது, இறைத்தூதர் (ஸல்) மரணிக்கும் போது திருப்தி கண்டிருந்த நபர்களை விட இவ்விடயத்தைத் தீர்மானிக்க அதிக தகுதி படைத்த எவரையும் தான் காணவில்லை என்று கூறிய உமர், அந்த நபர்களது பெயர்களையும் பிரஸ்தாபித்தார்: அலீ, உஸ்மான், ஸுபைர், தல்ஹா, ஸஅத், அப்துர் ரஹ்மான் ஆகியோரே அவர்கள். ''இவர்களோடு அப்துல்லாஹ் பின் உமரும் கலந்துகொள்ள முடியும். ஆனால் ஆட்சியாளராக அவர் பிரே ரிக்கப்பட முடியாது!'' என்றும் உமர் கூறினார்.

உமரால் பிரேரிக்கப்பட்ட அந்த நபர்கள் ஒன்று கூடி கலந் தாலோசிக்கத் தொடங்கினர். அப்போது அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் கூறினார்: ''இந்த ஆட்சி விவகாரத்தில் நான் உங்களோடு போட்டியிட விரும்பவில்லை. எனினும், நீங்கள் விரும்பினால்

உங்களிலிருந்து ஒருவரை நான் தெரிவு செய்து தருவேன்''. அதன்படி இப்பொறுப்பு அப்துர் ரஹ்மானுக்கு வழங்கப் பட்டது. கலீபாவைத் தெரிவு செய்யும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது முதல் மக்கள் பல இரவுகள் அவரிடம் சென்று கலந்தாலோசனை செய்தனர். இறுதியில் ஒருநாள் காலை உஸ்மானுக்கு பைஅத் செய்தனர்.

இந்நிகழ்வு குறித்து அல்-மிஸ்வர் இவ்வாறு கூறுகிறார்:

இரவு வேளையொன்றில் அப்துர் ரஹ்மான் வந்து என் வீட்டுக் கதவைத் தட்டினார். நான் தூக்கத்திலிருந்து எழுந்து வந்ததும் என்னிடம், ''தூங்கியிருந்தீர் போலும்! கடந்த மூன்று இரவுகளாக நான் அதிகம் தூங்கவில்லை. சென்று ஸுபைரையும் ஸஅதையும் அழைத்து வாரும்'' என்றார். நான் அழைத்து வந்ததும் அவர்கள் இருவரோடும் அவர் கலந்தாலோசித்தார். பின்னர் மீண்டும் என்னை அழைத்து அலீயைக் கூப்பிடுமாறு வேண்டினார். அவரை அழைத்து வந்ததும் நள்ளிரவு வரை அவருடன் தனியாகப் பேசினார். பின்னர் தான் ஃகலீபாவாக தெரிவு செய்யப்படலாம் என்ற எதிர்பார்ப்புடன் அலீ அங்கிருந்து கிளம்பிச் சென்றார். உண்மையில் அலீயிடமிருந்து ஏதேனும் எதிர்ப்பு வரலாம் என்ற அச்சம் அப்துர் ரஹ்மானுக்கு இருந்தது. பின்னர் உஸ்மானை அழைக்குமாறு அப்துர் ரஹ்மான் என்னிடம் கூறினார். நான் அழைத்து வந்ததும் அவரோடும் தனியாகப் பேசினார். ஸுப்ஹு தொழுகைக்கான பாங்கோசை கேட்டே இருவரும் பிரிந்து சென்றனர். மக்களுக்கு ஸுப்ஹுத் தொழுகையை அவர் முன்னின்று நடாத்திய பிறகு அக்குழுவினர் 'மிம்பர்' அருகில் ஒன்று கூடினர். பின்னர் ஊரில் தங்கியிருந்த அனைத்து முஹாஜிர்களுக்கும் அன்ஸாரிகளுக்கும் செய்தி அனுப்பினார். அவ்வருடம் உமருடன் ஹஜ் கடமையில் ஈடுபட்டிருந்த படைத் தளபதிகளுக்கும் செய்தி அனுப்பினார். அனைவரும் ஒன்று திரண்டதும் எழுந்து நின்ற அப்துர் ரஹ்மான் அல்லாஹ்வின் ஒருமைக்கும் முஹம்மத் (ஸல்) அவர்களது தூதுக்கும் சான்று பகர்ந்த பின் இவ்வாறு கூறினார்:

''அலீயே! கிலாபத் பொறுப்பு பற்றி மக்களுடன் நான் கலந்தாலோசித்தேன். அவர்கள் உஸ்மானுக்கு நிகராக எவரையும் காணவில்லை. எனவே உம் மீது எவரும் குறை கூறும் வகையில் நடந்து கொள்ளாதீர்!''

பின்னர் உஸ்மானை நோக்கி, ''அல்லாஹ்விடமிருந்தும் அவனது தூதரிடமிருந்தும் அன்னாருக்குப் பின் இரு ஃகலீபாக்க ளிடமிருந்தும் பெற்ற வாழ்க்கை முறையின் அடிப்படையில் உமக்கு விசுவாசப் பிரமாணம் அளிக்கிறேன்'' எனக் கூறி, அவருக்கு பைஅத் செய்தார்; தொடர்ந்து முஹாஜிர்கள், அன்ஸார்கள், படைத் தளபதிகள், பிற முஸ்லிம்கள் உள்ளிட்ட அனைவரும் பைஅத் செய்தனர்.

ஸுஹ்ரீ வாயிலான மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு இடம் பெற்றுள்ளது:

''மக்களெல்லாம் அப்துர் ரஹ்மானை நாடிச் சென்று கலந் துரையாடலாயினர்; அந்த இரவுகளெல்லாம் அவருடன் அந்த ரங்கமாக உரையாடினர். அவர்களுள் எவரும் உஸ்மானுக்கு நிகராக எவரையும் குறிப்பிடவில்லை''.

இப்னு கஸீர் இவ்வாறு கூறுகிறார்:

''...பின்னர் எழுந்து சென்ற அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (றழி) (அலீ மற்றும் உஸ்மான் ஆகிய) இருவர் தொடர்பாகவும் முஸ்லிம்களது அபிப்பிராயத்தை திரட்டலானார்; மக்களது தலை வர்களையும் தளபதிகளையும் சந்தித்தார்; மனிதர்களை கூட்டாக வும் தனித்தனியாகவும் இவ்விருவராகவும் சந்தித்தார். தங்கள் மறைவிடங்களில் இருந்த பெண்களையும், அல்-குர்ஆன் பாட சாலைகளில் பயின்று கொண்டிருந்த சிறுவர்களையும் கூட அவர் விட்டு வைக்கவில்லை. அந்த மூன்று நாட்களும் இரவிலும் பகலிலும் மதீனாவுக்கு வருகை தந்த பயணிகளிடமும் நாட்டுப் புற அறபிகளிடமும் அபிப்பிராயம் கேட்டார். அம்மார் மற்றும் அல்-மிக்தாத் ஆகிய இருவரையும் தவிர வேறெவரும் உஸ்மானே முற்படுத்தப்பட வேண்டியவர் என்பதில் மாற்றுக் கருத்து

கொண்டிருக்கவில்லை. அம்மாரும் அல்-மிக்தாதும் அலீ பின் அபீ தாலிப் முற்படுத்தப்பட வேண்டும் என ஆலோசனை கூறினாலும், இறுதியில் மக்களுடன் சேர்ந்து உஸ்மானுக்கு பைஅத் செய்தனர்.

வரலாற்றில் நிகழ்ந்த இத்தனித்துவமான ஷூறா செயற்பாடு குறித்து நீண்ட விளக்கம் கூற நான் விரும்பவில்லை. எனினும், முக்கியமான சில விளக்கக் குறிப்புகளை மாத்திரம் இங்கு பதிவு செய்ய முனைகிறேன்:

- ஃகலீபாவைத் தெரிவு செய்யும் பணிக்காக ஆறு பேரை நியமிக்கும் தீர்மானத்தை உமர் எவராலும் குற்றம் காண முடியாத வகையிலும், மீளவும் இடம்பெற முடியாத வகையிலும், ஒப்பீடு (கியாஸ்) மேற்கொள்ள முடியாத வகையிலும் அமைத்திருந்தார். ஏனெனில் அந்த ஆறு பேரும் இறைத்தூதர் (ஸல்) அவர்களால் திருப்தி காணப் பட்டவர்களாக இருந்தனர். (அல்லாஹ்வும் அவர்களை பொருந்திக் கொள்வானாக!)
- இத்திருப்திக்கு அப்பால், அந்த அனைவரும் பொதுமக்களால் திருப்தி காணப்பட்ட தலைவர்களாகவும் இருந்தனர். இப்னு பத்தால் கூறுகின்றார்: ''அந்த அறுவரும் எவரில் திருப்தி காண்கின்றனரோ அவரையே உம்மாவும் ஏற்றுக் கொள்ளும் என்பதை உமர் அறிந்திருந்தார்; ஏனெனில் மக்கள் அவர்களை தங்களது ஆன்மீக-அரசியல் தலைவர் களாகவும் தளபதிகளாகவும் ஏற்று கட்டுப்பட்டிருந்தனர்''.

அத்-தபரீ கூறுகின்றார்: ''சன்மார்க்கத்திலும், புலம்பெயர்விலும், ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமையிலும், நற் பண்பிலும், அறிவிலும், உம்மாவை வழிநடாத்துவதிலும் அவர்கள் பெற்றிருந்த அந்தஸ்தில் அன்று வேறெவரும் இருக்கவில்லை''.

- இவ்வாறெல்லாம் இருந்த போதிலும், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் மக்களோடு அதிக பட்சக் கலந்தாலோச னையில் ஈடுபட்டார். குறித்த விவகாரம் தொடர்பாக

பொதுமக்களிடம் அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்துவது போல் அவரது செயற்பாடு அமைந்திருந்தது. அவர் மீதும் அவர் பெற்ற பெறுபேற்றிலும் மக்கள் அப்பழுக்கற்ற முழுமையான நம்பிக்கை வைத்திருந்தனர் என்பது தெளிவு.

### 4. வெற்றிகொள்ளப்பட்ட நிலங்கள் தொடர்பான ஆலோசனை:

இது அரசியல், ராணுவ, பொருளாதாரப் பரிமாணங்கள் கொண்ட நியாயவியல் (அல்-ஃபிக்ஹ்) சார்ந்ததொரு பிரச்சினை. ஃகலீபா உமர் உட்பட நபித்தோழர்கள் இதில் அபிப்பிராய பேதம் கொண்டிருந்தனர். வெற்றி கொள்ளப்பட்ட நிலங்கள் வெற்றி கொண்ட வீரர்களுக்கு மத்தியில் ஏனைய யுத்தப் பொருட்களைப் போன்று பங்கிடப்பட வேண்டுமென்று சிலர் கருதினர். நிலங்களை அவ்வாறு பங்கிட முடியாது; அவை போர் வீரர்களுக்கு மாத்திரம் உரியவையும் அன்று. எனவே, அசையும் தன்மை கொண்ட யுத்தப் பொருட்கள் பங்கிடப்பட முடியுமே தவிர நிலங்களல்ல... என மற்றும் சிலர் கருதினர்.

அபூ உபைத் தனது சொந்த அறிவிப்பாளர் வரிசையூடாக பின்வருமாறு அறிவிக்கிறார்: பிலால் (றழி) ஒருமுறை உமர் இப்னுல் ஃகத்தாபிடம், ''கைப்பற்றப்பட்ட ஊர்களை எங்களுக்கு மத்தியில் பிரித்தளித்து, ஐந்தில் ஒரு பங்கை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்!'' எனக் கூறினார். அதற்கு உமர் (றழி) கூறினார்: ''இல்லை; அந்த நடைமுறை நிலங்களுக்கன்றி செல்வங்களுக்கே பொருந்தும். எனவே அவற்றை நான் 'வக்ஃப்' எனும் தர்மச் சொத்தாக ஆக்கி, அவற்றின் வருமானத்திலிருந்து போர் வீரர் களும் பிற முஸ்லிம்களும் பயன் பெறுமாறு செய்வேன்...''

போர்வீரர்களோடும் அவர்களது பிரதிநிதிகளோடும் உமர் ஓர் உடன்பாட்டுக்கு வராததால் குறித்த விடயம் ஷூறாவுக்கு விடப் பட்டது. அந்த வகையில், முஹாஜிர்களுள் சிரேஷ்டமானவர் களிடம் அவர் கலந்தாலோசித்தார். அவர்களுள் பெரும்பான்மை யினர் அவரது கருத்தை ஆதரித்தனர். எனினும், அப்துர் ரஹ்மான்

பின் அவ்ஃப் வெற்றி பெற்ற வீரர்களது கோரிக்கையை ஆதரித்தார். பின்னர் அன்ஸாரிகளில் சிரேஷ்டமானவர்களுக்கு பிரச்சினை முன்வைக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் உமருடன் உடன் பட்டார்கள்.

அபூ யூஸுஃப் கூறுகிறார்:

''போர்வீரர்களுக்கு அவர்களது பங்குகள் பகிர்ந்தளிக்கப் பட வேண்டும் என்பதே அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃபின் கருத்தாக இருந்தது. ஆனால், உஸ்மான், அலீ, தல்ஹா, இப்னு உமர் ஆகியோர் உமரின் அபிப்பிராயத்தையே கொண்டிருந்தனர். எனவே உமர் அன்ஸாரித் தலைவர்களுள் பத்துப் பேரை (அவ்ஸிலிருந்து ஐவரும் ஃகஸ்றஜிலிருந்து ஐவரும்) வரவழைத்தார். அவர்கள் வந்து சேர்ந்ததும் உமர் அல்லாஹ்வை அழகிய முறையில் புகழ்ந்து இவ்வாறு கூறினார்: 'எனக்கு பொறுப்பாக்கப் பட்டிருக்கும் உங்கள் விடயங்கள் தொடர்பான கடமையில் நீங்களும் பங்கேற்க வேண்டும் என்பதற்காகவே உங்களை அழைத்து சிரமப்படுத்து கிறேன். நிச்சயமாக நான் உங்களில் ஒருவனே. எவர் முரண் பட்டாலும், எவர் உடன்பட்டாலும் இன்று நீங்கள் சத்தியத்தை உறுதிப்படுத்த வேண்டும். நீங்கள் எனது விருப்பத்தையே பின் பற்ற வேண்டும் என நான் எதிர்பார்க்கவில்லை. சத்தியத்தை உரைக்கும் இறை வேதம் உங்களிடம் இருக்கிறது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் ஒரு விடயத்தை விரும்பிக் கூறியிருந்தால், அதன் மூலம் சத்தியத்தை அன்றி வேறெதனையும் நான் நாடவில்லை!'

இதனைக் கேட்ட அவர்கள், 'சொல்லுங்கள்; செவி சாய்க்கி றோம் அமீருல் முஃமினீனே!' என்றனர்.

அதற்கவர் கூறினார்: 'நான் அவர்களுக்கு அநீதி இழைப்பதாக அவர்கள் கூறுவதை நீங்கள் கேட்டீர்கள். அநீதி இழைப்பதிலிருந்து நான் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன். அவர்களுக்கு உரிமையான ஒன்றை அவர்களுக்குக் கொடுக்காமல் வேறெவருக் கும் கொடுத்து அநியாயம் செய்வேனாயின் நானே துன்பப்

பட்டவன் ஆவேன். ஆனால் பாரசீகப் பூமிக்குப் பிறகு வெற்றி கொள்ளப் படுவதற்கு எதுவும் இல்லை என்று நான் கண்டேன். அவர்களது செல்வங்களையும் நிலங்களையும் முஸ்லிமல்லாத குடிமக்களையும் அல்லாஹ் நமக்கு செல்வமாகத் தந்திருக்கிறான். அவ்வாறு பெறப்பட்ட செல்வத்தை போராட்டத்தில் பங்கு கொண்டவர்களுக்கு பகிர்ந்தளித்தேன். அரசின் பங்காகிய ஐந்தில் ஒன்றை எடுத்து பொருத்தமான முறையில் பங்கிட்டும் வருகிறேன். எனினும் வெற்றி கொள்ளப்பட்ட நிலங்களையும் அவற்றிலுள்ள மக்களையும் பொது தர்மச் சொத்தாக (வக்ஃப்) ஆக்கிக் கொண்டு நில வரியையும் ஆள் வரியையும் விதிக்கலாம் என்பது என் அபிப்பிராயம். அவ்வாறு பெறப்படும் வருமானம் போர் வீரர்கள், அவர்களது பிள்ளைகள், இனி வர இருப்பவர்கள் முதலிய அனைத்து முஸ்லிம்களுக்கும் பயன் தரக் கூடிய செல்வமாக அமையும்.

நமது எல்லைப் புறங்களைக் கவனித்தீர்களா? அவற்றில் நிரந்தரமாகத் தங்கி காவல் புரிய நமக்கு ஆட்கள் தேவை. ஷாம், தீபகற்பம், கூஃபா, பஸ்றா, எகிப்து போன்ற பெருநகரங்களைப் பாருங்கள்; அவற்றுக்குப் படைவீரர்களும், அவர்களுக்காகச் செலவிட பணமும் வேண்டும். நிலங்களும் அவற்றில் உள்ளோரும் பகிர்ந்தளிக்கப்பட்டால் அவர்கள் எங்கிருந்து வருவார்கள்?'

இதனை கேட்டுக் கொண்டிருந்த மக்கள் கூறினார்கள்: 'உங்கள் கருத்தே சரியான கருத்து! நீங்கள் சரியாகத்தான் சொன்னீர்கள்! அந்த எல்லைப் புறங்களும் பெருநகர்களும் ஆட்களால் நிரப்பப் பட்டு அவர்கள் பலம் பெறுவதற்கான செல்வம் வழங்கப்படா விட்டால், இறை நிராகரிப்பாளர்கள் மீண்டும் தங்கள் நகரங் களுக்குத் திரும்பி விடுவர்' ''.

குறித்த விடயம் தொடர்பாக உமர் (றழி) மாத்திரம் அக்கருத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதும், அறிவுத் தகைமை கொண்ட பெரும்பான்மை நபித் தோழர்களும் அதனை ஆதரித்தார்கள் என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது.

'அவர் ஆலோசனை கேட்கவும் ஆதரவு பெறவும் முன்னமே தனது கருத்தில் பிடிவாதமாக இருந்தார்!' என இங்கு ஒருவர் கூற முடியும். அதற்கு நாம் சொல்வது இதுதான்: அவ்வாறு அவர் தனது கருத்தில் பிடிவாதமானவராகவும், தனியாக நின்று அதனை நடைமுறைப் படுத்த முனைபவராகவும் இருந்திருந்தால் குறித்த பிரச்சினையை ஆலோசனைக்கு உட்படுத்தியிருக்க மாட்டார்.

மட்டுமன்றி, உமர் அந்த நிலங்களைப் பங்கிட விரும்பியிருந்தார் என்றும், அவரது சில ஆலோசகர்களே அதனை எதிர்த்தார்கள் என்றும், உரிமையாளர்களுக்கே அவற்றை விட்டு விடுமாறு அவர்கள் கூறினார்கள் என்றும் காட்டக் கூடிய சான்றுகளும் காணப்படுகின்றன. உமரிடமிருந்து ஹாரிதா பின் மழ்றப் ஊடாக அபூ உபைத் பதிவு செய்துள்ள ஓர் அறிவிப்பின் படி, உமர் அந்நிலங்களை முஸ்லிம்களுக்குப் பகிர்ந்தளிக்க விரும்பி கலந்தாலோசித்த போது, 'அவற்றை முஸ்லிம்களுக்கான வருமான வழியாக விட்டு வையுங்கள்!' என அலீ பின் அபீ தாலிப் கூறியதால் விட்டு விட்டார்.

மற்றோர் அறிவிப்பின் படி, (சிரியாவிலுள்ள) ஜாபியா என்னுமிடத்திற்கு வந்த உமர் அங்கிருந்த நிலங்களை முஸ்லிம்களுக்குப் பகிர்ந்தளிக்க விரும்பினார். அபோது முஆத் அவரிடம் இவ்வாறு கூறினார்: ''அப்படிச் செய்தால் நீங்கள் விரும்பாத விளைவே ஏற்படும். நீங்கள் நிலங்களைப் பகிர்ந்து கொடுத்தால், அவற்றின் வருமானத்தில் பெரும் பகுதி அம்மக்களையே சென்றடையும். பிறகு அவர்கள் மரணித்து விட்டால் அவை ஒரு தனி ஆணுக்கோ பெண்ணுக்கோ அறுதியாகி விடும். அதன் பிறகு ஒரு சமூகம் தோன்றும். அவர்களிடம் இஸ்லாம் எஞ்சியிருக்கும்; ஆனால் அவர்களுக்கென்று எதுவும் எஞ்சியிருக்காது. எனவே, இப்போது இருப்பவர்களுக்கும் இனி வர இருப்பவர்களுக்கும் நலன் பயக்கக் கூடிய ஒரு தீர்வைத் தாருங்கள்!''

முஆதின் இந்த ஆலோசனையை உமரும் ஏற்றுக் கொண்டார்.

அபூ உபைத் கூறுகின்றார்: ''உமர் அந்த நிலங்களை முஸ்லிம் களது பல தலைமுறைகளுக்குப் பயனளிக்கும் வக்ஃபு வருமானமாக ஆக்கி விட்டார். அவற்றை ஐந்தாகப் பிரிக்கவுமில்லை; பங்கிடவு மில்லை. அலீ பின் அபீ தாலிப் (றழி) மற்றும் முஆத் பின் ஜபல் (றழி) ஆகியோர் கூறிய ஆலோசனையும் அதுவே''.

## ஆரம்ப கால ஷூறா அனுபவத்தின் சாராம்சம்:

இப்பகுதியிலும் இதற்கு முந்திய பகுதிகளிலும் ஆங்காங்கே நாம் குறிப்பிட்ட நபியவர்கள் மற்றும் ஃகலீபாக்கள் கால ஷூறா அனுபவத்தின் அடையாளங்களையும் படிப்பினைகளையும் -நினைவூட்டலுக்காகவும் கவனக் குவிப்புக்காகவும்- கீழ்வருமாறு சுருக்கிக் கூற முடியும்:

1. ஷூறா செயற்பாடு பலம் மிக்கதாகவும் தாக்கம் மிக்கதாகவும் காணப்பட்டமை.
2. சிந்திப்பதிலும், கருத்து வெளியீட்டிலும், முந்திக் கொண்டு வினையாற்றுவதிலும் காணப்பட்ட பரிபூரண சுதந்திரம்.
3. உண்மை, வெளிப்படைத் தன்மை, தூய்மை, தன்னம்பிக்கை முதலிய பண்புகள்.
4. எளிமை, உண்மை, தெளிவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட மானிடத் தொடர்புகளுடன் இணங்கி வரும் வகையிலும், ஷூறா செயற்பாட்டின் அடிப்படை நோக்கங் களுக்கு ஊறு ஏற்படாத வகையிலும் அதில் கடைப் பிடிக்கப்பட்ட எளிமையும் அமைப்பாக்க ரீதியான நெகிழ்வுத் தன்மையும்.

*பகுதி இரண்டு:*

## வரலாற்றில் தொடரும் ஷூறா

*நபியவர்கள் காலத்தின் நீட்சியாக அமைந்த அல்-ஃகுலபாஉர் ராஷிதூன் காலத்திலிருந்து உமையாக்கள் காலத்தை நோக்கிய நகர்வானது முஸ்லிம்களது அரசியல் சூழ்நிலையிலும் அரசியல் ஒழுங்கிலும் ஏற்பட்ட ஆழமானதொரு நிலை மாற்றம் என்பதில் ஐயமில்லை.*

*இஸ்லாமிய, கலாசார, அரசியல், ராணுவ, அறிவியல், நாகரிக வெற்றிகள் பலமாக தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருந்த போதிலும். ஷூறாவை அடிப்படையாகக் கொண்ட தேசிய ஃகிலாபத் ஒழுங்கிலிருந்து அடக்குமுறை கொண்ட பரம்பரை ஆட்சியாக இடம்பெற்ற அரசியல் மாற்றமானது என்றும் ஆறாத ஆழமான காயமாகவே அமைந்தது.*

*ஷூறா நடைமுறையே இஸ்லாமிய அரசின் சிரசிலும் பின்னர் முழு உடலிலும் ஏற்பட்ட அந்த மாற்றத்துக்கு வழங்கப்பட்ட மிகப் பெரும் பலியாகும். அதற்கு முன்னர் அது அல்-குர்ஆனினால் உறுதி செய்யப்பட்டு, நபியவர்களாலும் நேர்வழி பெற்ற ஃகலீபாக் களாலும் பின்பற்றப் பட்டு வந்த நடைமுறையாக இருந்தது.*

*ஆனால் உமையா ஆட்சி தோன்றிய பிறகோ அந்த ஷூறா -விடயங்களைத் திட்டமிடும் போது- மிகக் கடைசியில் கவனிக்கும் அம்சமாக மாறிப் போனது.*

நமது அரசியல் வரலாற்றையும், நியாயவியல் நூல்களையும், 'இல்முல் கலாம்' மற்றும் அரசாட்சி முறைமைகள், ஆட்சிக் கொள்கைகள் தொடர்பான நூல்களையும் கவனிக்கும் ஒருவர் அவற்றில் ஷூறாவுக்கு வலுவற்ற அல்லது இரண்டாம் பட்சமான இடமே வழங்கப் பட்டுள்ளதை கண்டு கொள்வார்.

இமாம் அபூபக்கர் அல்-தர்தூஷீ தனது பெறுமதி மிக்க 'ஸிறாஜ் அல்-முலூக்' என்ற நூலை எழுதிய போது அதன் முன்னுரையில், ''அந்த நூலை வாசிக்கும் ஞானிக்கு பிற ஞானிகளின் நட்பு அவசியப்படாது; அரசருக்கு அமைச்சர்களின் ஆலோசனை தேவைப் படாது'' எனக் குறிப்பிட்டார். இப்படித்தான் ஓர் அரசர் வெறுமனே ஒரு நூலைப் படிப்பதன் மூலம் கலந்தாலோசனை தேவையற்றவராக மாறும் நிலை ஏற்பட்டிருந்தது. ஷூறா என்பது வெறுமனே படிக்கப்படும் பாடமாக அல்லது மனனம் செய்யப் படும் உபதேசமாக மாறிப் போயிருந்தது. அரசர்களும் தலைவர் களும் அவர்களது பொறுப்புகளில் தோன்றும் ஒவ்வொரு பிரச்சி னையின் போதும் கடைப்பிடிக்க வேண்டிய அன்றாட நடத்தை யாகவோ நடைமுறைப் பாடமாகவோ அது கொள்ளப் படவில்லை.

அறிஞர்களிடமும் சிந்தனையாளர்களிடமும் கூட ஷூறா அடைந்திருந்த கவலைக்கிடமான நிலை இதுதான். இந்நிலை அல்-தர்தூஷீ ஏற்படுத்தியதல்ல. மாறாக- அது வரலாற்றுப் போக்கினதும் சூழலினதும் விளைவு.

அரசியல் செயல்பாட்டில் தோன்றிய புதிய அமைப்பினால் ஷூறாவுக்கு கட்டுப்பட்டுச் செல்ல முடியவில்லை. ஏனெனில் ஷூறா செயற்பாட்டை உயர்த்திப் பிடிக்கும் போது அது அரசியல் செயற்பாட்டை முதலிலிருந்து முடிவு வரை கட்டுப்படுத்துகிறது. மட்டுமன்றி, நிகழ்வுகளின் போக்கையே புரட்டி விடுவதற்கு அது காரணமாக அமைந்து விட முடியும். இதனை அவர்கள் ஏற்கப் போவதில்லை. எனினும், சில ஆட்சியாளர்கள் ஷூறாவுக்குக் கட்டுப்பட்டு ஷூறாவின் அடிப்படையில் செயற்பட்டிருக்கிறார்கள் எனில், அதற்குக் காரணம் அவர்கள் தனிப்பட ரீதியில்

நல்லவர்களாகவும் மார்க்கப்பற்றும் நேர்மையும் கொண்டவர் களாகவும் இருந்தமைதான்!

உமர் பின் அப்துல் அஸீஸ் அத்தகையோருள் ஒருவர். நேர்வழி நடந்த கலீபாக்களின் வாழ்க்கை முறையை ஒத்ததாக அவரது வாழ்வியல் அமைந்திருந்ததால் அவரும் அவர்களுள் ஒருவராகவே கருதப் படுகிறார். ஷூறா அடிப்படையில் அவர் மேற்கொண்ட நேர்மையான அரசியலை இமாம் அத்-தபரீ தனது 'தாரீஃஃக்' என்ற நூலில் இவ்வாறு விவரிக்கிறார்:

''உமர் பின் அப்துல் அஸீஸ் மதீனாவுக்கு வந்து மர்வானின் வீட்டில் தங்கிய போது மக்கள் சென்று அவருக்கு முகமன் கூறினர். நண்பகல் தொழுகைக்குப் பிறகு அவர் மதீனாவில் வாழ்ந்த நியாயவியல் அறிஞர்களுள் பத்துப் பேரை வரவழைத்தார். உர்வா பின் ஸுபைர், உபைதுல்லாஹ் பின் அப்துல்லாஹ் பின் உத்பா, அபூபக்கர் பின் அப்துர் ரஹ்மான், அபூ பக்கர் பின் ஸுலைமான் பின் அபூ ஹத்மா, ஸுலைமான் பின் யஸார், அல்-காஸிம் பின் முஹம்மத், ஸாலிம் பின் அப்துல்லாஹ் பின் உமர், அப்துல்லாஹ் பின் அப்துல்லாஹ் பின் அம்ர், அப்துல்லாஹ் பின் ஆமிர் பின் றபீஆ, ஃகாரிஜா பின் ஸெய்த் ஆகியோரே அவர்கள்.

அவர்கள் வந்து அமர்ந்ததும், அல்லாஹ்வை அழகிய முறையில் புகழ்ந்த அவர் பின்வருமாறு கூறினார்:

''உங்களுக்கு நற்கூலி பெற்றுத் தரும் ஒரு விடயத்துக்காகவே உங்களை அழைத்திருக்கிறேன். அதில் நீங்கள் சத்தியத்துக்கு உதவுபவர்களாக இருக்க வேண்டும். எந்தவொரு விடயத்தையும் உங்களது அல்லது உங்களில் சமூகமளித்திருப்பவர்களது அபிப் பிராயத்தைப் பெறாமல் நான் தீர்மானிக்க விரும்பவில்லை. எனவே எவராவது அத்துமீறுவதாக நீங்கள் கண்டால், அல்லது எனது கவர்னர் ஒருவர் அநீதி இழைப்பதாக நீங்கள் கேள்விப் பட்டால், அது பற்றி எனக்கு அறியத் தருமாறு அல்லாஹ்வை முன்னிறுத்தி உங்களிடம் கேட்கிறேன்''.

இதனைச் செவிமடுத்த அவர்கள் அவருக்காக அல்லாஹ்வின் அருளைப் பிரார்த்தித்தவாறு அங்கிருந்து அகன்றனர்.

இவ்வுரை மூன்று துறைகளில் கவனம் செலுத்தி ஆலோசனை வழங்கும் பொறுப்பை அந்த அறிஞர்கள் மீது சுமத்துகிறது:

1. இஜ்திஹாத் மேற்கொள்ளலும், கருத்துத் தெரிவிப்பதில் அல்லது தீர்மானம் எடுப்பதில் பங்கேற்றலும்.
2. சமூகத்தையும் அதில் நிகழும் அநீதியையும் அத்துமீறலையும் கண்காணித்தல்.
3. அரச பணியாளர்களையும் கவர்னர்களையும் கவனித்து அவர்களது அநீதிகள் பற்றி ஃகலீபாவுக்கு எத்தி வைத்தல்.

ஹிஜ்ரி ஐந்தாம் நூற்றாண்டிலும் ஆறாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலும் மொரோக்கோ, ஸ்பெயின், மற்றும் மேற்காபிரிக்கப் பிராந்தியங்களை ஆண்ட முறாபிதூன் ஆட்சியிலும் ஷூறா செயற்பாட்டுக்கான அற்புதமான எடுத்துக் காட்டுகளை காண்கிறோம். அந்த மகத்தான ஆட்சியின் சிறப்பம்சங்களுள் ஒன்று, அது நியாயவியல் அறிஞர்களின் ஆட்சி என்ற பண்பை பெற்றிருந்ததாகும். ஏனெனில் அதன் நிர்வாகத்திலும், நிலைபேற்றிலும், தலைவர்களுக்கு விசுவாசப் பிரமாணம் வழங்குவதிலும் அந்த அறிஞர்களுக்கு தீர்க்கமானதொரு வகிபாகம் இருந்தது. அங்கு 'அமீருல் முஸ்லிமீன்' எனும் பெயர் தாங்கியிருந்த ஆட்சியாளர் ''அரசியல் துறையாயினும் சன்மார்க்கத் துறையாயினும் தனது அனைத்து விவகாரங்களிலும் தேசத்தின் பிரதானிகளிடம் ஆலோசனை கேட்க வேண்டும் என்பதும், நியாயவியல் அறிஞர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என்பதும்'' அவருக்கு ஆட்சியாளராக பைஅத் செய்யப் படுவதற்கான நிபந்தனைகளுள் ஒன்றாக இருந்தது.

முறாபிதூன்களது ஆட்சியில் நியாயவியல் அறிஞர்கள் பெற்றிருந்த செல்வாக்கை பேணுதலுக்குப் பெயர் பெற்ற ஆட்சியாளரான அலீ பின் யூஸுஃப் பற்றிய குறிப்பில் வரலாற்றாசிரியர்

அப்துல் வாஹித் அல் முராகிஷீ இவ்வாறு விவரிக்கிறார்: ''தனது முழு ராஜ்யத்திலும் நியாயவியல் அறிஞர்களது ஆலோசனையைப் பெறாமல் எந்த முடிவையும் எடுக்காதவராக அவர் இருந்தார்''. இஸ்லாமிய ஷரீஆவையும் ஷூறாவையும் மிக அதிகமாக நடைமுறைப்படுத்திய அரசாக முறாபிதூன்களது அரசு அமைந்திருந்தது. முன்பொரு முறை நாம் குறிப்பிட்ட பின்வரும் கூற்றுக்குச் சொந்தக்காரரான நீதிபதி அப்துல் ஹக் பின் அதிய்யாவும் அந்த அரசின் நிழலில்தான் வாழ்ந்தார்: ''அறிவியல் மற்றும் சன்மார்க்கப் புலமையாளர்களிடம் ஆலோசனை கேட்காத ஒருவரை பதவி நீக்குவது கடமை''.

எவ்வாறிருப்பினும், இந்த உதாரணங்களும் மாதிரிகளும் இஸ்லாமிய அரசுகளையும் பிராந்தியங்களையும் பரம்பரை பரம்பரையாக ஆண்ட பல நூறு மன்னர்களுள்ளும் ஆட்சியாளர்களுள்ளும் புறநடையாக கருதத் தக்கனவாகவே அமைந்திருந்தன.

தீர்த்து வைத்தல், தீர்மானம் எடுத்தல், செல்லுபடியாக்குதல், ரத்துச் செய்தல் முதலிய அனைத்து அதிகாரங்களும் அடங்கிய அதியுயர் சபையைக் குறிக்கும் 'அஹ்லுல் ஹல்லி வல் அக்த்' என்ற பதப் பிரயோகம் நமது வரலாற்றிலும் முதுசங்களிலும் தோன்றியிருந்தாலும் கூட அச்சபையை அமைக்கும் முறை மற்றும் அதன் அதிகார எல்லைகள் என்பன எப்போதும் மயக்கமாகவும் குழம்பிய நிலையிலுமே இருந்து வந்துள்ளன. அறிஞர்களிடம் காணப்பட்ட கோட்பாட்டுச் சர்ச்சைகள், ஆட்சியாளர்களது மனநிலைக்கேற்ப மாறுபடும் அடக்குமுறை சார்ந்த செயற்பாடுகள் என்பன இந்நிலையை மேலும் மோசமாக்கின.

மட்டுமன்றி, 'அஹ்லுல் ஹல்லி வல் அக்த்' பற்றிப் பேசிய அறிஞர்கள் கூட ஆன்மீக-ஆட்சித் தலைவரைத் தெரிவு செய்தல் என்ற பிரச்சினையுடன் மாத்திரமே தங்கள் பணியை பெரிதும் சுருக்கிக் கொண்டனர். அந்தத் தலைவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? எவ்வாறு தலைமை தாங்க வேண்டும்? எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும்? அவரிடம் அப்பொறுப்பை ஒப்படைப்

பவர்கள் எவ்வாறு அவருடன் சேர்ந்து பாடுபட வேண்டும்; பங்காளர்களாகச் செயற்பட வேண்டும்; கண்காணிக்க வேண்டும்; திருத்த வேண்டும்; உடன்பட வேண்டும்; முரண்பட வேண்டும்; ஏவ வேண்டும்; விலக்க வேண்டும்?.. என்பவை தொடர்பான விளக்கங்களைப் பொறுத்த வரையில், அவை மிகச் சுருக்கமான வார்த்தைகளில் -சங்கோஜத்துடன்- ஓரிரு இடங்களில் மாத்திரம் பதிவு செய்யப் பட்டுள்ளன. ஆனால், இந்த அனைத்துப் பணி களையும் 'அஹ்லுல் ஹல்லி வல் அக்த்' என்ற கண்ணியமான வார்த்தைப் பிரயோகம் உள்ளடக்கி நிற்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இஸ்லாமிய அரசின் நிறுவன ரீதியான வளர்ச்சியும் ஷூறா செயற்பாட்டின் பின்னடைவும்:

நபியவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, நேர்வழி நடந்த ஃகலீபாக்க ளால் உறுதிப் படுத்தப் பட்டு விஸ்தரிக்கப்பட்ட இஸ்லாமிய அரசு அதன் பிறகு தொடர்ச்சியான பரிணாம மாற்றங்களுக்கு உட்பட லானது. கட்டமைப்புகள், ஒழுங்குகள், செயற்படும் முறைகள் முதலிய அனைத்திலும் இம்மாற்றங்கள் நிகழ்ந்தன. சிலபோது அவை பிற சமூகங்களது அனுபவங்களிலிருந்து பிரதி பண்ணுவதன் மூலமாகவும் கடன் வாங்குவதன் மூலமாகவும் நிகழ்ந்தன; மற்றும் சிலபோது இஜ்திஹாத் எனும் அறிவார்ந்த முயற்சியூடாகவும் புத்தாக்க முனைப்பினூடாகவும் நிகழ்ந்தன. இவ்வாறுதான்- அரசியல், பொருளாதார, நிர்வாக, ராணுவ, கல்வி, நீதி, சமூகவியல் துறைகளில் இஸ்லாமிய அரசு பல புதிய அல்லது முன்னேறிய நிறுவன வடிவங்களை தனக்கு பரிச்சயமாக்கிக் கொண்டது.

அரசின் வளர்ச்சியும் விரிவாக்கமும் பிரமாண்டமான பொறுப்பு களும் அதிகாரங்களும் மாத்திரம் இந்நிறுவன ரீதியான வளர்ச்சி யை வற்புறுத்தவில்லை. இஸ்லாமிய சமூகங்கள் அல்லது இஸ்லாமிய உம்மா கண்ட அதே மாதிரியான மாற்றங்களும் பரிணாம வளர்ச்சிகளும் கூட உள்வாங்குதல், நியமப்படுத்தல், ஒற்றுமையைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கான பல பொறிமுறை

களை விருத்தி செய்ய வேண்டிய தேவையை உருவாக்கின. மட்டுமன்றி, முஸ்லிம் சமூகங்களில் எண்ணிக்கையாலும் வகையாலும் ஏற்பட்ட பெரு மாற்றங்களால் விளைந்த சவால்களையும் பாதகங்களையும் எதிர்கொள்வதற்குக் கூட இப்பொறிமுறைகள் அவசியமாகின.

இஸ்லாமிய அரசும் உம்மாவும் எளிமை, பிணைப்பு, சகோதரத்துவம், சுய கட்டுப்பாடு, சமூக மற்றும் விழுமியம் சார் கட்டுப்பாடு என்பவற்றைக் கொண்ட வாழ்வமைப்பிலிருந்து -இப்பண்புகளைப் புறக்கணிக்காத ஆனால் இவற்றுடன் மாத்திரம் போதுமாக்கிக் கொள்ளாத- புதியதொரு வாழ்வமைப்பை நோக்கி நகர்ந்தது. அத்தகைய புதிய வாழ்வமைப்பில் ஆட்சியாளர்களுக்கும் குடி மக்களுக்குமான சட்டங்கள், நிறுவனங்கள், உத்தரவாதங்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்பவற்றினூடாக விவகாரங்கள் ஒழுங்கு படுத்தப் படவும் நியமப்படுத்தப் படவும் வேண்டிய தேவை ஏற்பட்டது.

அந்த வகையில், இஸ்லாமிய அரசுகளும் சமூகங்களும் பல ஒழுங்குகளையும் திட்டங்களையும் பல்வேறு துறைகளில் ஏற்படுத்திக் கொண்டன. அத்திட்டங்கள் காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம் அரசுக்கு அரசு பல பரிணாம வளர்ச்சிகளையும் நிறுவன முறைமைகளையும் கூட கண்டன. சட்டவாக்கம், விசாரணை, நீதி, தீர்ப்பு முதலிய திட்டங்கள் இவற்றுள் சிலவாகும். மட்டுமன்றி- கல்வி, பல்வேறு நிலையான தர்மச் சொத்துகள் என்பவற்றுக்கும் கூட பரிபூரணமான ஒழுங்குகள் உருவாக்கப் பட்டன.

அந்தலூஸில் நடைமுறைப் படுத்தப்பட்ட அத்தகைய சில திட்டங்கள் பற்றி அல்-வன்ஷரீஸி இவ்வாறு குறிப்பொன்றைத் தருகிறார்:

‘‘கோர்டோவாவில் பிற்காலத்தில் வாழ்ந்த ஓர் அறிஞர் தனது நூலொன்றில் குறித்துள்ள தரவுகளின் படி அங்கு காணப்பட்ட திட்டங்களுள் முதலாவதாக நீதித்துறை இருந்தது. அதிலும்

செம்மைப்படுத்தப்பட்ட அம்சங்களாக குழு அடிப்படையிலான நீதிச் செயற்பாடு, பெரும்பாக காவல்துறை, மத்திம காவல்துறை, சிறிய மட்ட காவல்துறை, அநீதிகளை மதிப்பீடு செய்பவர், பரிந்துரைகளுக்கான தலைமை அதிகாரி (இவர் காவல்துறை தலைமை அதிகாரியைப் போன்றவரே; வழக்குகள் இவரது தீர்ப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டன.) நகர பிதா, சந்தை நிர்வாகி முதலிய பொறுப்புகளைக் குறிப்பிடலாம். சுருக்கமாகக் கூறினால் நீதித் துறை, சட்ட அமுலாக்கம், மனித உரிமைகள் கண்காணிப்பு, தீர்ப்புக்கான பரிந்துரை, சந்தை முதலிய துறைகளை அத்திட்டங்கள் உள்ளடக்கி இருந்தன.

இவற்றை இங்கு குறிப்பிடுவதனூடாக நான் சுட்டிக்காட்ட விரும்புவது இதுதான்: இஸ்லாமிய அரசுகளும் சமூகங்களும் தமக்குத் தேவையான ஒழுங்குகளையும் ஏற்பாடுகளையும் தமது சன்மார்க்க, லோகாயத தேவைகளுக்கு உதவும் வகையில் உரு வாக்கி வளர்த்துக் கொண்டாலும் ஷூறா என்பது அங்கு ஒரு திட்டமாகவோ ஒழுங்காகவோ வடிவம் பெற்றிருக்கவில்லை எத்தகைய தெளிவான நியமப்படுத்தப்பட்ட அமைப்பாக்கத்திற் கும் அது உட்பட்டிருக்கவில்லை.

உண்மையில், இறைத்தூதர் (ஸல்) அவர்களும் நேர்வழி நின்ற கலீபாக்களும் நிறுவிய அந்த உயர்ந்த கலந்தாலோசனைத் தரம் பேணிப் பாதுகாக்கப் பட்டிருக்க வேண்டும்; மட்டுமன்றி, வாழ் வியல் முன்னேற்றத்துக்கும், ஒழுங்கமைக்கப்பட்டு வளர்த்தெடுக் கப்பட்ட பிற தொழிற்பாடுகளுக்கும் திட்டங்களுக்கும் ஈடான வகையில் ஷூறா செயற்பாடும் தனது ஆரம்ப எளிய நெகிழ்வுத் தன்மை நிலையிலிருந்து நன்கு நியமப்படுத்தப்பட்டு வளர்ச்சி யடைந்த நிறுவன ஒழுங்கை நோக்கி நகர்ந்திருக்கவும் வேண்டும். ஆனால் ஷூரா செயற்பாடு பொதுவாக முன்னேறவுமில்லை; இருந்ததைத் தக்க வைக்கவும் இல்லை. அதாவது புதிய நிலை மைகளுக்கு ஏற்ற வகையில் ஷூறா செயற்பாடு உயரவும் இல்லை; ஆரம்ப கால அடைவுகளையும் சாதனைகளையும் பேணிக் காக்கவும் இல்லை.

ஷூறா பற்றிய சொல்லாடலில் ஆட்சியாளாரைத் தெரிவு செய்தல் மற்றும் அது தொடர்பான சட்டதிட்டங்கள் தொடர் பாகவே 'இல்முல் கலாம்' சார்ந்தோரும் நியாயவியல் துறை சார்ந் தோரும் கவனம் குவித்திருந்தமை பற்றி முன்னர் குறிப்பிட்டோம். ஆனால், அந்த விவகாரம் கூட -கோட்பாட்டிலும் நடைமுறை யிலும்- ஷூறாவின் உண்மையான கட்டுப்பாட்டிலிருந்து விடு பட்டுப் போனது.

தெரிவு செய்யும் தகுதியைக் கொண்ட (அதாவது அஹ்லுல் ஹல்லி வல் அக்தைச் சேர்ந்த) ஒருவர் அல்லது இருவர் ஆட்சி யாளருக்கு பைஅத் செய்தால் கூட போதுமானது என்று கூறுகின்ற சில இல்முல் கலாம் துறையினர் பற்றியும் முன்னர் நாம் பார்த்தோம். அவ்வாறு செல்லுபடியாகுமெனில் ஷூறாவுக்கு எங்கே இடமிருக்கப் போகிறது? 'அஹ்லுல் ஹல்லி வல் அக்த்' சபைக்குத்தான் என்ன வேலை இருக்கப் போகிறது?

அறிஞர்களதும் கொள்கை வகுப்பாளர்களதும் நிலை இது வெனில், மறுபுறம் -செயற் கோணத்தில்- தலைவர் தெரிவும் ஃகலீபா நியமனமும் முற்று முழுதாக தனிப்பட்ட, குடும்பம் சார்ந்த விவகாரமாக மாறியிருந்தது; ஒருவர் தனது செல்வத்திலி ருந்து ஒரு பகுதியை தனது உறவினர் ஒருவருக்கு மரண சாசனம் (வஸிய்யத்) செய்வது போன்று விரும்பியவர் விரும்பிய ஒருவருக்கு ஆட்சியை ஒப்படைக்கும் நிலை உருவாகியது. மரண சாசனம் கூட சொத்தில் மூன்றில் ஒரு பங்கில் மட்டுமே ஷரீஆவினால் அனு மதிக்கப் பட்டுள்ளது. ஆனால் ஃகிலாபத் பதவிக்கும், 'உம்மா'வின் செல்வங்களிலும் எதிர்காலத்திலும் விரும்பியவாறு செயற்படு வதற்கும் வழங்கப்பட்ட 'வஸிய்யத்' எந்தக் கட்டுப்பாடும் நியம மும் அற்றதாக மாறியது. அந்த வகையில், அது பிள்ளை, தந்தை, உடன் பிறந்த சகோதரன், உடன் பிறவாச் சகோதரன் முதலிய யாவருக்கும் வழங்கப்பட முடியுமான நிலை தோன்றியது. சிலபோது ஆட்சிப் பொறுப்பு ஒரே நேரத்தில் இருவருக்கு அல்லது மூவருக்கு கையளிக்கப்பட்டது. ஏனெனில் ஆட்சியைக் கையளிப் பவருக்கு தனது சமகாலத்தவர்களதும் அடுத்து வரும் பரம்

பரையினதும் உரிமைகளைச் சூறையாடுவது மட்டும் போது மானதாக இருக்கவில்லை. தொடர்ந்தும் பல தலைமுறைகள் வரை அந்தக் கொள்ளை நீண்டு சென்றது.

சிறுவர்களுக்கும் பால்குடிப் பருவத்திலுள்ள குழந்தைகளுக் கும் ஆட்சிப் பொறுப்பை வழங்கும் நிலைக்குக் கூட விவகாரம் சென்றிருந்தது.

ஃகிலாபத் பொறுப்பும் விசுவாசப் பிரமாணமும் வழங்கப் படுவதற்கான குறைந்தபட்ச வயதெல்லையாக பருவமடையும் வயது காணப்பட வேண்டுமென இந்தக் கேலிக் கூத்தும் முட்டாள்தனமும் இடம்பெறத் தொடங்கிய மாத்திரத்திலேயே அறிஞர்கள் ஏகோபித்தும் வெளிப்படையாகவும் கூறியிருக்க வேண்டும். அவர்களுள் சிலராவது அதனை விட உயர்ந்த வய தெல்லை ஒன்றை நிபந்தனையாக இட்டிருந்தால் கூட அது அறிவார்ந்ததாகவும் வரவேற்கத் தக்கதாகவும் இருந்திருக்கும்.

இவ்விடத்தில் சுவாரஷ்யமான -அதே நேரம் படிப்பினையாக அமையத்தக்க- செய்தியொன்றையும் குறிப்பிடுதல் பொருந்தும். அதாவது, லிஸானுத்தீன் இப்னுல் ஃகதீப் என்பவர் எழுதிய ‘இஃமாலுல் அஃலாம் ஃபீமன் பூயிஅ கப்லல் இஹ்திஸாம் மின் முலூக் அல் இஸ்லாம் வமா யதஅல்லகு பி தாலிக மினல் கலாம்’ (பருவ வயதை அடைய முன்னர் பைஅத் பிரமாணம் வழங்கப்பட்ட இஸ்லாமிய மன்னர்களும் அது தொடர்பான சொல்லாடல்களும்) என்ற நூலில், அது கால வரையில் அவ்வாறு பருவம் அடைய முன்னர் பைஅத் செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை நாற்பத் தெட்டை அடைந்திருந்ததாக குறிப்பிடப் பட்டுள்ளது.

இதில் வினோதம் என்னவெனில், இப்னுல் ஃகதீப் இத் தோற்றப்பாட்டை விமர்சிப்பதற்காகவோ அல்லது அது முறை பிறழ்வானது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவோ இந்நூலை எழுதாமல், அது சரியானது என்று கூறும் வகையிலும் அந்த நடைமுறையைப் பாதுகாக்கும் வகையிலுமே எழுதியுள்ளார். எனினும் அவ்விவகாரம் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பி

விட்டிருந்ததாகவும் அவரே ஒப்புக் கொள்கிறார். ''அங்கு தீர்க்க மான வாதங்களுக்கும் அறிவார்ந்த சான்றுகளுக்கும் பதிலாக கூரிய வாள் முனைகள் இருந்தன''. அதாவது அங்கு வாளின் ஆட்சி நடந்ததே தவிர ஷரீஆவின் ஆட்சி நடக்கவில்லை. இதுதான் போலும் சிறுவர்களுக்கு பைஅத் செய்வதை நியாயப் படுத்தும் வகையில் அவரை இவ்வாறு கூற வைத்தது: ''விசுவாசமாக இருக்கும் படி நாம் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ள இத்தகைய விவகாரங்களில் பல சன்மார்க்கத் தலைவர்களைப் பின்பற்றியே இவ்வாறு விசுவாசமாக இருக்கிறோம்; நமது காலத்தில் எதனை யும் நாம் நூதனமாகக் கொண்டு வரவில்லை. தங்களது இஜ்திஹாதில் அவர்கள் சரியான கருத்தை அடைவார்களாயின் அவர்களைப் பின்பற்றுவது நமக்கும் மகிழ்ச்சியானது!... அவர்கள் அதிக எண்ணிக்கை கொண்ட அறிஞர்களாகவும் நியாயவியலாளர் களாகவும் இருந்தும் அதில் தவறு விடுவார்களாயின் அந்தத் தவறில் நாமும் திருப்தியுடன் பங்கு கொள்கிறோம்''.

இவ்வாறுதான் ஷூறா என்பது அரசியல் தளத்தில் -சில விதிவிலக்கான நிலைகளைத் தவிர- உண்மையான, ஒழுங்கு படுத்தப்பட்ட நடைமுறையை இழந்திருந்ததனைக் காண்கிறோம். இதனால் ஆட்சிப் பொறுப்பானது மொத்தமான அனந்தரச் செயற்பாட்டுக்கும், சண்டையிட்டு தட்டிப் பறிப்பதற்கும் இடை யில் ஊசலாடிக் கொண்டிருந்தது. ராஜாங்க விவகாரங்கள் நடாத்திச் செல்லப்பட்ட முறையும் திட்டமும் அவ்வப்போது இருந்த ஆட்சியாளரது தேவை, நலன், மனநிலை என்பவற்றிலேயே தங்கியிருந்தது. இதுவே பொதுவாகக் காணப்பட்ட நிலையாகும்.

### நீதித்துறை விதிவிலக்கு:

நமது வரலாற்றில் ஷூறா தொடர்ச்சியாகவும் சிறந்த முறை யிலும் பிரயோகிக்கப்பட்ட துறையாக நமது நீதித் துறையே உள்ளது. நீதித் துறையின் கலந்தாலோசனை செய்யும் நடைமுறை நேர்வழி நின்ற ஃகலீபாக்களின் -குறிப்பாக உமர் மற்றும் உஸ்மான்- காலம் தொட்டு இருந்து வரும் பழைய நடைமுறையாகும். நீதிபதி

அபூ முதர்ரஃப் அஷ்-ஷஅபீ கூறுவது போல், ஒரு நீதிபதி ''தீர்ப்புப் பெறுவதில் தனது தன்னிச்சையான கருத்தில் மாத்திரம் தங்கி யிருக்கக் கூடாது. தனக்கு முன்னால் வாழ்ந்து சென்ற நீதியான ஆட்சியாளர்களினதும் நீதிபதிகளினதும் வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். நபித்தோழர்கள் சன்மார்க்கத்திலும் சிறப்பி லும் தன்னிகரற்றவர்களாகத் திகழ்ந்த போதிலும் தங்களது தீர்ப்புகளில் பிறரைக் கலந்தாலோசிக்கும் வழக்கத்தைக் கொண்டி ருந்தனர். ஒருமுறை உஸ்மான் (றழி) அவர்களிடம் ஹாஷிமிய்யப் பெண்ணொருவருக்கு எதிரான முறைப்பாடொன்று கொண்டு வரப் பட்டது. உஸ்மான் (ரழி) அது தொடர்பாக அலீ (றழி) யிடம் ஆலோசனை செய்தார்; பின்னர் அப்பெண்ணுக்கெதிராக வழக்குத் தொடுத்த நபருக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கினார். ஹாஷிமிய்யப் பெண் அதற்காக உஸ்மானைக் கடிந்து கொண்ட போது அவர் இவ்வாறு சொல்லியனுப்பினார்: ''உனது பெரிய தந்தையின் மகனே அவ்வாறு எனக்கு ஆலோசனை வழங்கினார்!''

நேர்வழி நின்ற ஃகலீபாகள் தங்களது தீர்ப்புகளின் போது மேற்கொண்ட கலந்தாலோசனை பற்றிக் குறிப்பிடும் இப்னு குதாமா, தொடர்ந்து இமாம் அஹ்மதின் பின்வரும் கூற்றையும் பதிவு செய்துள்ளார்: ''ஸஅத் பின் இப்றாஹீம் மதீனாவின் நீதித் துறையைப் பொறுப்பேற்ற போது அல்-ஹகம் மற்றும் ஹம்மாத் ஆகிய இருவருக்கும் இடையில் அமர்ந்து அவர்கள் இருவரிடமும் கலந்தாலோசிப்பவராக இருந்தார். பிற ஆட்சியாளர்களும் இவ் வாறு செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்..!''

நீதித்துறை சார்ந்த இப்பழைய கலந்தாலோசனைச் செயற்பாடு ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவைப் பெற்றது குறிப்பாக அந்தலூ ஸிலும் மொறோக்கோவிலும் ஆகும். அங்கு அது நீதித்துறையின் பிரிக்க முடியாத கூறொன்றாக மாறியிருந்தது. ஆலோசகர்கள் அங்கு நீதிபதியினால் அல்லது ஆட்சியாளரால் சட்டத் தீர்ப்பு வழங்கும் தகைமை கொண்ட நியாயவியலாளர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். கலாநிதி முஹம்மத் அப்துல் வஹ்ஹாப் ஃகல்லாஃப் கூறுகின்றார்: ''அப்போதைய இஸ்லாமிய உலகை

விட்டும் தனித்துவமான வகையில் மொறோக்கோவிலும் அந்தலூஸிலும் மாத்திரம் நடைமுறையில் இருந்த திட்டம் அது. அந்தலூஸில் அது நீதித் துறைக் கட்டமைப்பை பூரணப்படுத்தும் திட்டங்களுள் ஒன்றாகவும் அதன் இன்றியமையாத அம்சமாகவும் கருதப்பட்டது. பரந்த நோக்கும் அறிவும் கொண்டவர்கள் என அடையாளம் காணப்பட்ட நியாயவியல் அறிஞர்களே அப்பணிக்காக தெரிவு செய்யப் பட்டனர். குழும நீதிபதியின் பிரேரணையின் அடிப்படையில் ஆட்சியாளர் அல்லது கலீபா அத்தகையோரை நியமனம் செய்தார்.

'அஃக்பார் அல் குழாத்' நூலின் ஆசிரியரிடமிருந்து கலாநிதி ஃகல்லாப் பதிவு செய்துள்ள பின்வரும் செய்தி நீதித்துறையில் பின்பற்றப்பட்ட இந்த ஆலோசனை முறைக்கு நேர்வழி நின்ற ஃகலீபாக்களது நடைமுறை அடிப்படையாக இருந்ததை உறுதி செய்கிறது:

''மூன்றாவது ஃகலீபாவான உஸ்மான் (றழி) நீதி வழங்க அமரும் சமயம் நான்கு நபித் தோழர்களை அழைத்து வந்து அவர்களிடம் ஆலோசனை கேட்பவராய் இருந்தார். அலீ, தல்ஹா பின் அப்துல்லாஹ், அஸ்-ஸுபைர், அப்துர் ரஹ்மான் ஆகியோரே அந்த நால்வரும். அவர்கள் கூறும் தீர்ப்பையே அவர் செயற்படுத்தினார். வழக்கைக் கொண்டு வந்தவரிடம், 'தீர்ப்பு வழங்கியோர் அவர்களே தவிர நானல்ல' என்றும் கூறுவார்.

நீதித் துறையில் காணப்பட்ட இத்தகைய ஷூறா அணுகுமுறையே 'கூட்டான நீதிச் செயற்பாடு' என்ற சிந்தனைக்கு மிக அடிப்படையாக அமைந்ததெனலாம். இன்று மேற்குலகில் நடைமுறையிலுள்ள 'ஜூரர்' சபை முறைமைக்கு முந்தியதும் விஞ்சியதுமான ஒரு முறையாகவும் இது உள்ளது. உஸ்தாத் அல்லால் அல்-ஃபாஸீ பின்வருமாறு கூறுகிறார்: ''அந்தலூஸிலும் மொறோக்கோவிலும் காணப்பட்ட இஸ்லாமிய நீதித்துறை ஒழுங்கு அதில் இடம் பெற்றிருந்த ஆலோசகர்கள் அல்லது சட்டத் தீர்ப்பு வழங்குவோர் (முஃப்திகள்) மூலமாக தனிச் சிறப்பு வாய்ந்ததாக

அமைந்திருந்தது. நீதிபதி தன்னிடம் வரும் வழக்குகளின் உண்மை நிலையைக் கண்டறிவதற்காக அவர்களை உதவிக்கு அழைக்கும் நடைமுறையைக் கொண்டிருந்தார். இந்த ஒழுங்கானது ஆங்கில நீதித் துறையில் உருவாகி பின்னர் ஐரோப்பிய அரசுகள் தத்தெடுத்துக் கொண்ட ஜூரர் சபை ஒழுங்கினை விடவும் சிறந்ததாக இருந்தது''.

நீதித்துறையில் விதிவிலக்காகப் பேணப்பட்ட இந்த ஷூறா செயற்பாட்டின் மூலமாக இஸ்லாமிய நீதித்துறையானது வரலாறு நெடுகிலும் இஸ்லாமிய வாழ்வியலுக்கும் இஸ்லாமிய செயற் பாட்டுக்கும் பிரகாசமான பக்கமொன்றை பொதுவாகவே வழங்கி யிருந்தது. அதன் மூலாதாரம் தூய இஸ்லாமிய மூலாதாரமாக அமைந்திருந்ததும், தனது சுயாதீனத்தையும் தூய்மையையும் பெருமளவு அது பேணிக் கொண்டதுமே இதற்கான காரணமாகும்.

இஸ்லாத்தின் நீதிபதிகள் மிக முக்கியமான அறிஞர்களாகவும் நியாயவியல் துறை விற்பன்னர்களாகவும் இருந்தமையும் இதற்கான மற்றொரு காரணம் எனலாம். வேறு வகையில் சொல் வதானால், அந்த அறிஞர்களும் நியாயவியலாளர்களும் சமூகத்தில் தங்களது பெரும் தாக்கத்தையும் வகிபாத்திரத்தையும் நன்கு பேணிக் கொண்டனர். இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் அடுத்தடுத்துத் தோன்றிய அரசுகளாலும் அரசியல் ஒழுங்குகளாலும் அறிஞர்கள் ஆதிக்கம் செலுத்திய இச்சட்டவாக்க, கலாசாரத் தளங்களில் போட்டிபோட முடியவில்லை. அரசியல், ராணுவ, பாதுகாப்பு தளங்களில் தனது கடிவாளம் கைநழுவிப் போகாமல் பார்த்துக் கொள்வதிலேயே அன்றிருந்த முஸ்லிம் ஆட்சியாளனின் கவனம் குவிந்திருந்தது. சட்டவாக்க, கலாசார, சிந்தனா, அறிவியல், கல்வி, சமூகவியல் பரப்புகளைப் பொறுத்த வரையில் அவை அனைத்திலும் எல்லோரும் இஸ்லாமிய அதிகாரத்துக்கே முழு மையாக கட்டுப்பட்டிருந்தனர்.

## அத்தியாயம் நான்கு:

# சமகாலத்தில் ஷூறா
# அதனைக் கட்டியெழுப்புவது எவ்வாறு?
# அதன் மீது கட்டியெழுப்புவது எவ்வாறு?

*பகுதி ஒன்று:*

## மீள் கட்டுமானத்தையும் முழுமைப்படுத்தலையும் நோக்கி...

*ஷூறா தொடர்பான விவகாரங்களை விளங்குவதிலும், அதனை நிலை நிறுத்துவதிலும், செயற்படுத்துவதிலும் பல குறைபாடுகளும் குளறுபடிகளும் காணப்படுவதை முன்னைய அத்தியாயங்களில் கண்டோம். நவீன இஸ்லாமிய இஜ்திஹாத் தனது கவனத்திலும் ஆய்வுகளிலும் ஷூறாவுக்கென விரிந்த இடமொன்றை ஒதுக்கி யுள்ளது; ஷூறா பற்றியும் அதன் பிரச்சினைகள் பற்றியும் நூற்றுக் கணக்கான ஆய்வுகளையும் நூல்களையும் தந்திருக்கிறது. ஷூறா செயற்பாட்டை உரிய முறையில் மீண்டும் கவனத்தில் எடுப்ப தற்கும், ஷூறாவை நிறுவன ஒழுங்காக கட்டியெழுப்புவதை நோக்கி நகர்வதற்கும் இவை பங்களித்திருக்கின்றன. ஆயினும் இக்கட்டுமானப் பணியை ஸ்திரப்படுத்துவதற்கும் முழுமைப் படுத்துவதற்குமான பங்களிப்புகள் இன்னும் தேவை. மட்டுமன்றி, ஏராளமான வாழ்வியல் துறைகளில் அதனை செயல்பூர்வமாக பிரயோகிக்க வேண்டிய தேவையும் உள்ளது.*

*ஷூறாவை மீளவும் கவனத்துக்கு கொண்டு வரல், அதன் பல்வேறு விவகாரங்களையும் அடிப்படைகளையும் பரிபூரண மாகவும் வினைத்திறன் மிக்க வகையிலும் கட்டியெழுப்புதல், புதிய வளர்ச்சிகளுக்கும் தேவைகளுக்கும் முகம் கொடுக்கக் கூடிய*

வகையில் தேவையான அம்சங்களை முழுமைப்படுத்துதல்... ஆகிய இந்த அனைத்துச் செயற்பாடுகளும் தமக்குத் தேவையான மூலாதார அடிப்படைகளையும் உள்ளடக்கத்தையும் இஸ்லாத்தின் உருவாக்கக் கோட்பாடுகள், நடைமுறைகள், ஷரீஆ விதிகள், இறுதி நிலை இலக்குகள் (மகாஸித்), வரலாறு நெடுகிலும் பல் வேறு நாடுகளில் முஸ்லிம்கள் நடைமுறைப் படுத்திய ஒழுங்குகள் மற்றும் திட்டங்கள் என்பவற்றிலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஷூறா செயற்பாட்டை ஸ்தாபிப்பதன் தொடக்கப் புள்ளி அல்லாஹ்விடமிருந்து வந்த மார்க்கமாகவும் வேத வெளிப் பாடாகவும் சட்டமாகவும் அதனை நோக்குவதாகும். ஏனெனில், அது ஷரீஆவின் ஒரு பகுதியாக மட்டுமன்றி அதன் மிகப் பெரும் விதியொன்றாகவும் உள்ளது. அவ்வகையில் அதனை நடைமுறைப் படுத்துவது ஷரீஆவை நடைமுறைப் படுத்துவதாகும்; அதனை செயலிழக்கச் செய்வது ஷரீஆவை செயழிலக்கச் செய்வதாகும்.

இதற்கும் அப்பால், அது -வேத வெளிப்பாட்டிற்கு அடுத்து- தனிமனித மற்றும் சமூக நடவடிக்கைகளை நேர்வழிப்படுத்து வதற்கும் செம்மைப் படுத்துவதற்கான பிரதான வழியாக உள்ளது. ஏனெனில், முஸ்லிம்கள் முதல் நிலையில் வேத வழிகாட்டலால் வழிநடாத்தப் படுகிறார்கள்; இரண்டாவதாக ஷூறாவினால் வழிநடாத்தப் படுகிறார்கள். இந்த இரண்டினதும் ஊடாக அல்லது இரண்டும் இணைந்துதான் அறிவும் புரிதலும் அனுபவமும் இஜ்திஹாதும் வருகின்றன.

வஹியின் அடிப்படையில் அமைந்த விவகாரமாயினும், வஹியினால் வழிகாட்டப்படாமல் ஷூறா மூலமாக தீர்மானிக்கப் படும் விவகாரமாயினும் இறை விசுவாசிகள் *''சொல்லப்படும் அனைத்தையும் செவியேற்று மிகச் சிறந்ததை பின்பற்றுவார்கள்'' (39: 18)* என அல்-குர்ஆனில் வர்ணிக்கப்பட்டுள்ளனர். *''தங்களது ரட்சகனின் அழைப்பை ஏற்று தொழுகையை நிலை நாட்டியவர் கள் அவர்கள். அவர்களது அனைத்து (பொது) விவகாரங்களும்*

அவர்களுக்கு மத்தியிலான கலந்தாலோசனையின் அடிப்படை யில் அமைந்திருக்கும். அவர்களுக்கு நாம் அளித்த செல்வத்தி லிருந்து (நமக்காக) செலவும் செய்வார்கள்'' (42: 38) என அவர்கள் வர்ணிக்கப் பட்டிருப்பது போன்றதே இதுவும்.

ஷூறா என்பது யதார்த்தத்தில், சொல்லப்படுவற்றைக் கேட்டு அவற்றுள் மிகச் சிறந்ததைப் பின்பற்றுதலே அன்றி வேறில்லை.

பலருக்கும் பொதுவானதாக அல்லது பிறரது உரிமையும் சம்பந்தப்படுவதாக ஒரு விடயம் அமையும்போது அந்த நபர் களுடன் அல்லது அவர்களை உரிய முறையில் பிரதிநிதித்துவம் செய்பவர்களுடன் அது பற்றி -குறிப்பாக அவர்களைப் பாதிக்கும் அம்சங்கள் தொடர்பாக- கலந்தாலோசனை புரிவது அதிக அவசி யத் தன்மை கொண்டதாக மாறுகின்றது.

ஒருவருக்கு தான் மட்டும் சம்பந்தப்பட்ட விடயத்தில் மட்டுமே தன்னிச்சையாக செயற்படும் உரிமையுண்டு. அந்த வகையில் அல்லாஹ் மட்டுமே ''அவனது தீர்ப்பில் மாற்றம் செய்பவர் எவருமில்லை'' (13: 41) என்ற நிலையில் இருப்பவன். அவனே ''தனது ஆட்சி அதிகாரத்தில் எவரையும் கூட்டாக்கிக் கொள்ளாத வன்''. (18: 26) படைப்பிலும் அதிகாரத்திலும் அவனுக்கு இணை துணை எவருமில்லை.

அவ்வாறே ஆட்சியிலும் விவகாரங்களை நிர்வகிப்பதிலும் அவனுக்கு எவரும் இணையில்லை; ''அனைத்து விவகாரங்களை யும் அவனே திட்டமிடுகிறான். அவனது அனுமதியின்றி எவரும் அவனிடம் சிபாரிசு செய்ய முடியாது''. (10: 3) ''அல்லாஹ்வின் கட்ட ளையே நிர்ணயிக்கப்பட்ட வழியாகி விட்டது.'' (33: 38) ஆனால் அவனது படைப்புகளோ ஒருவரோடு ஒருவர் பரஸ்பரம் கலந்தாலோசித்து, ஒத்துழைத்து, புரிந்துணர்வுடனேயே தங்களது காரியங்களை திட்டமிட வேண்டும்.

எவர் மனிதர்களது விவகாரங்களை தன்னிச்சையாக திட்டமிட பிடிவாதம் கொண்டு, பிறரை அவற்றில் கூட்டுச் சேர்க்க மறுக்கி றாரோ அவர் உண்மையில் இணை வைப்புக்கு நெருக்கமாகி

விடுகிறார். ஏனெனில், அத்தகைய பிடிவாதத்தின் மூலமாக அல்லாஹ்வுக்கு மாத்திரமே உரியதொரு பண்பை அவர் தனக்கும் எடுத்துக் கொள்ள முனைகிறார். இந்த வகையில் அதுவும் ஒரு வகை இணை வைப்பாகி விடுகிறது. இஸ்லாத்தைப் பொறுத்த வரை, அல்லாஹ்வுடன் கூட்டுச் சேரவோ கூட்டுச் சேர்க்கவோ எந்த இடமும் இல்லை. ஆனால், மனிதர்கள் தங்களுக்கிடையில் கூட்டுச் சேர்வதும் கூட்டுச் சேர்ப்பதும் தவிர்க்க முடியாதது. ஷூறாவும் அத்தகையதொரு கூட்டுச் செயற்பாடே. சிந்திப்பதிலும் திட்டமிடுவதிலும் காரியங்களை நடாத்திச் செல்வதிலும் இடம் பெறும் கூட்டு அது. இச்செயற்பாடு பொதுவாக மனிதர்கள் ஒருவர் மீது மற்றொருவருக்கு உள்ள உரிமையாகும். அவ்வாறே, அதிகாரத்தை அடைய முன்னரும், அடைந்த பின்னரும் அதிகாரிகள் மீது பொதுமக்களுக்குள்ள விஷேட உரிமையாகவும் இது உள்ளது.

இவ்விடத்தில் -நாம் ஏலவே குறிப்பிட்ட- உமரின் கோபத்தை நினைவு கூர்கிறோம். ''உமர் மரணித்து விட்டால், நான் இன்ன நபருக்குத்தான் விசுவாசப் பிரமாணம் செய்வேன்; அல்லாஹ்வின் மீது ஆணையாக! அபூபக்கருக்கு வழங்கப்பட்ட 'பைஅத்' ஒரு சடுதியான பிசகே!'' என்ற செய்தி உமரை எட்டிய போது கோபமடைந்த உமர் இவ்வாறு கூறினார்: ''இன்ஷா அல்லாஹ், இன்று மாலையே நான் மக்களுக்கு மத்தியில் எழுந்து நின்று அவர்களது விவகாரங்களில் கையாடல் செய்ய முயல்வோர் குறித்து எச்சரிக்கப் போகிறேன்... முஸ்லிம்களது ஆலோசனை பெறப்படாமல் எவர் மற்றொருவருக்கு பைஅத் செய்கிறாரோ அவ்விருவரும் கொலை அபாயத்துக்கு உட்படுகின்றனர்''.

ஆக- முஸ்லிம்களது பொது விவகாரங்கள் மற்றும் நலன்கள் தொடர்பாக அவர்களிடம் ஆலோசனை கேட்கப்படுவது அவர் களது உரிமை; அதனை அவர்களிடமிருந்து எவரும் பறிக்க முடியாது என்பது தெளிவு.

ஷூறாவிலும் மக்களது விவகாரங்களை ஒழுங்குபடுத்துவதி லும் அவர்களைப் பங்கேற்கச் செய்வது அவர்களது உரிமை எனில்,

அந்த உரிமையைப் பறிப்பது அல்லது செயலிழக்கச் செய்வது அவர்களுக்குச் செய்யும் அநியாயமாகி விடும். உரிமைக்குச் சொந்தக்காரர்களது எண்ணிக்கைக்கும், உரிமைப் பறிப்பின் கால நீட்சிக்கும், அதனால் திரட்சியடையும் தீங்குகளுக்கும் ஏற்ற அந்த அநியாயமும் பூதாகாரமாக மாறும். ''எனவே அறிவுப் பார்வை கொண்டவர்களே... சிந்தித்து நல்லுணர்ச்சி பெறுங்கள்!'' (59: 2)

பேரறிஞர் அப்துர் ரஹ்மான் இப்னு ஃகல்தூன் கூறுகிறார்: ''செல்வத்தை அல்லது உரிமையை -எந்தப் பிரதியீடோ சரியான காரணமோ இன்றி- அதன் உரிமையாளரிடமிருந்து எடுத்துக் கொள்வதுதான் அநியாயம் என எண்ணி விடாதீர்கள். அப்படித்தான் பரவலாக நம்பவும் படுகிறது. ஆனால் அநியாயம் என்பது அதனை விட பரந்த பொருள் கொண்டது. ஒருவர் மற்றொருவரது உடமை களை எடுத்துக் கொள்வது, அவரது உழைப்பைச் சுரண்டுவது, தனக்கு உரிமை அற்றதை அவரிடம் கேட்பது, ஷரீஆவினால் கடமையாக்கப்படாத ஒன்றை அவர் மீது விதிப்பது முதலிய அனைத்தும் அநியாயமே. அதன் கொடிய விளைவு அரசைத் தாக்கி,வளங்களை நிர்மூலமாக்கி விடும்...''

உமர் (றழி) அவ்வாறு கடுமையாக எச்சரிக்கை விடுத்த போது இப் பயங்கரமான விளைவுகளை மனக்கண்ணில் கண்டிருப்பார் என்பதில் ஐயமில்லை. எனவேதான், மக்களது விவகாரங்களில் கையாடல் செய்து, அவர்களுடன் கலந்துரையாடல் செய்வதைக் கைவிடுவோர் கொல்லப் படுவர் என அவர் உணர்த்தினார்.

ஷூரா செயற்பாட்டைக் கைவிடுவதால் தேசம் மற்றும் அரசியல் ஒழுங்கில் மாத்திரமன்றி தனிமனிதன், குடும்பம் என அனைத்து மட்டங்களிலும் தீங்குகளும் சீர்கேடுகளும் தோன்றும் என விழிப்பூட்டியோருள் அல்-கவாகிபீயும் ஒருவர். ஒரு ஞானியின் கூற்றாக அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''இவ்வாறு நாம் நுணுகிக் கவனிக்கும் போது, இஸ்லாமிய அரசின் ஒவ்வொரு பிரிவிலும் மாத்திரமன்றி, ஒவ்வோர் ஆட்சி யாளரது வரலாற்றிலும்.. ஒவ்வொரு குடும்பத்தின் நிலையிலும்..

ஒவ்வொரு தனிமனிதன் மீதும் ஏற்படக் கூடிய நன்மையும் சீர்கேடும் ஷூறா என்ற வழி முறையில் அல்லது தன்னிச்சையான முடிவில் மையம் கொண்டிருப்பதைக் காண்கிறோம்''. அதாவது நன்மை ஷூறாவுடன் இணைந்ததாகவும், சீர்கேடு தன்னிசையான முடிவுடன் இணைந்ததாகவும் இருக்கும் என்பது இதன் பொருள்.

ஷூறாவை செயலிழக்கச் செய்ததால் நாம் எவ்வளவு இழந்தோம் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். எனவே இந்த அடிப் படையிலும், வேத வெளிப்பாட்டுக்கு அடுத்த நிலையில் மக்களை நேர்வழிப் படுத்தவும் அவர்களது விவகாரங்களை சீரமைக்கவு மான மூலாதாரமாக ஷூறாவே உள்ளது என்ற வகையிலும் அதனையும் அதன் முக்கியத்துவத்தையும் பெறுமானத்தையும் நாம் கவனிக்க வேண்டிய காலம் வந்து விட்டது. மட்டுமன்றி, அது முஸ்லிம்களது உரிமைகளுள் ஒன்று. அதனைப் பறித்தது அல்லது செயலிழக்கச் செய்ததுதான் முஸ்லிம்களுக்கு நேர்ந்த மிகப் பெரும் அநியாயமாக அமைந்தது. அந்த நிலையைச் சீர் செய்து, ஷூறாவை அதற்குரிய இடத்துக்கு மீளக் கொண்டு வருவதே அனைத்து வகையான மார்க்க-உலக புனரமைப்புக்கும் எழுச்சிக்குமான அத்தியாவசிய நிபந்தனைகளுள் ஒன்றாக அமைந்துள்ளதெனலாம்.

## ஷூறாவை ஒழுங்குபடுத்தி நிறுவன மயப்படுத்தலை நோக்கி...

குறுகிய ஆயுள் கொண்ட, புறநடையான சில நிகழ்வுகள் தவிர - பொதுவாக- ஷூறாவுக்கென விரிவான கட்டொழுங்கொன்று முஸ்லிம்களது வரலாற்றின் எந்தக் கட்டத்திலும், எந்தத் தேசத் திலும் தோன்றியது கிடையாது என்பது அந்த வரலாற்றில் நாம் காண்கின்ற மிகப் பெரும் இடைவெளியாகும். அரசாட்சி, நிர்வாகம், ஸகாத், தர்மச் சொத்து (வக்ஃப்), பொது ஒழுங்குக் கண்காணிப்பு (ஹிஸ்பா), சந்தை, சட்டம், குற்றத் தடுப்பு, காவல்துறை, பாதுகாப்பு, கல்வி முதலியவற்றுக்கு தனியான நிறுவனங்கள் தோற்றம் பெற்றது போன்று ஷூறாவுக்கென எந்த அமைப்பொழுங்கும் தோற்றம் பெற்றதில்லை.

இதன் காரணமாக ஷூறா செயற்பாடானது அனைத்து வகையான இடம்பாடுகளுக்கும் உட்படக் கூடியதாக இருந்தது: இருப்பதா அல்லது இல்லாதிருப்பதா? அதிகமாகச் செயற்படுத்துவதா அல்லது குறைவாகச் செயற்படுத்துவதா? இந்தத் துறையில் செயற்படுத்துவதா அல்லது அந்தத் துறையில் செயற்படுத்துவதா? இந்தப் பிரச்சினையிலா அல்லது அந்தப் பிரச்சினையிலா? ஒரு நாளைக்கு ஒரு தடவை மேற்கொள்வதா அல்லது வருடத்துக்கு ஒரு தடவை மேற்கொள்வதா அல்லது ஆயுளுக்கு ஒரு தடவையா? இந்த நபருடன் மேற்கொள்வதா அல்லது அந்த நபருடன் மேற்கொள்வதா? இந்தக் குழுவுடனா அல்லது அந்தக் குழுவுடனா? முரண்படுபவருடனா அல்லது உடன்படுபவருடன் மட்டுமா? ஆலோசகர்களின் கருத்தை ஏற்பதா அல்லது விடுவதா?...

சுருங்கச் சொன்னால், ஷூறா என்பது மனித விருப்பங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப பந்தாடப் பட்டிருக்கிறது. அதற்கென்று விரிவான ஒழுங்கொன்றும் நிலையான நிறுவன அமைப்பொன்றும் தோன்றாமல் போனது ஏன்?

இஸ்லாத்தின் முதற் காலகட்டத்தைப் பொறுத்தவரை, அக்கட்டத்தின் இயல்புக்கு அத்தகையதோர் ஏற்பாடு அவசியமாகவோ பொருத்தமாகவோ இருக்கவில்லை என்பதை முன்னர் விளக்கினோம். வரையறுக்கப்பட்ட ஒழுங்கோ விஷேடமான நிறுவனமோ இல்லாமலும் கூட ஷூறா செயற்பாடு கிரமமாகவும் வினைத்திறனோடும் இடம்பெறும் வகையிலான எளிமையும் உண்மையும் நாணயமும் அக்கால கட்டத்தில் இருந்தன.

நேர்வழி நடந்த ஃகலீபாக்களின் காலத்தில் பொதுவாகவே எல்லாத் துறையிலும் நியமப் படுத்தலையும் ஒழுங்கு படுத்தலையும் நோக்கிய சில முன்னெடுப்புகளும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை தொடர்ந்து கொண்டு செல்லப் படவோ வளர்க்கப் படவோ இல்லை. உதாரணமாக, அபூபக்கர் (றழி) புதிதாகத் தோன்றும் பிரச்சினைகளில் மக்களது தலைவர்களை ஒன்று கூட்டி ஆலோசனை கேட்காமல் எந்த 'இஜ்திஹாத்'

முடிவையும் செயற்படுத்தவில்லை. உமர் (றழி) பின்பற்றிய நடைமுறையும் அதுவே. உமரின் காலத்தில் ஷூறா சபையும் அதன் அங்கத்துவமும் ஒரு குறிப்பிட்ட வடிவத்தைப் பெறலாயின. உமரின் ஆலோசகர்கள் 'அல்-குர்ராஉ' எனப்படும் அறிஞர்களாக இருந்ததாக ஸஹீஹுல் புஹாரியில் இடம்பெற்றுள்ள பின்வரும் அறிவிப்பு எடுத்துக் காட்டுகிறது: ''அல்-குர்ராஉ' களே உமரின் ஆலோசகர்களாக இருந்தனர். அவர்களுள் முதியோரும் இருந்தனர்; இளைஞர்களும் இருந்தனர்!''.

அவ்வாறே- உமர் தனக்குப் பின்னால் வர வேண்டிய ஃகலீபாவை தெரிவு செய்வதற்காக குறிப்பிட்ட நபர்களைக் கொண்ட ஆலோசனை சபையொன்றையும் நியமித்திருந்தார்.

உஸ்மானும் கூட தனக்கு முன்வைக்கப்படும் பிரச்சினைகளுக்கு தனது ஆலோசகர்களது முடிவையே தீர்ப்பாக வழங்குபவராக இருந்தார். இதற்காக அவர் தனது நீதிச் சபையில் ஆலோசகர்களை அமர்த்திக் கொள்ளும் வழக்கத்தையும் கொண்டிருந்தார்.

இது போன்ற நிறுவன மயப்படுத்தல் நடவடிக்கைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் திரட்சியடைந்து, 'ஷூறா' செயற்பாட்டுக்கென ஓர் ஒழுங்கை ஏற்படுத்தித் தருவதே இயல்பான நகர்வாகும். அந்த ஒழுங்கு அனைத்து பொதுத் தளங்களையும் -அவற்றுள்ளும் முதல் நிலையில் அரசியல் தளத்தை- தழுவியதாக அமைந்திருக்க வேண்டும்.

மேலும், ஷூறாவின் நிலைபேற்றையும் அதன் ஆரோக்கிய மான செயற்பாட்டையும் பாதுகாக்கும் வகையிலான இஜ்திஹா திலும் சட்டத் தீர்ப்பு வழங்கும் முனைவிலும் அறிஞர்கள் -குறிப்பாக நியாயவியல் துறையினர்- ஈடுபட்டிருக்க வேண்டும். ஏனெனில், ஆட்சியாளர்களது லோகாயத நோக்கங்களிலிருந்தும் கணிப்பீடுகளிலிருந்தும், அவர்கள் முதன்மைப்படுத்தும் அம்சங் களிலிருந்தும் விடுபட்டு நின்றவர்கள் இந்த அறிஞர்களே!

ஷூறாவை நிர்வகிப்பதிலும் அரசியல் முரண்பாடுகளை நிர்வகிப்பதிலும் காணப்பட்ட நிறுவன மற்றும் நியாயவியல்

ரீதியான இடைவெளியே பலப் பிரயோகம் என்ற தர்க்கம் நாடப் படுவதற்கு எப்போதும் காரணமாக இருந்திருக்கிறது. குழப்பங்கள், போராட்டங்கள், ரண களங்கள் முதலிய அனைத்தையும் இது உள்ளடக்கும். இத்தகைய பிணக்குகளிலும் குழப்பங்களிலும் வீழ்ந்து ஆயுதங்களால் அவற்றை கையாள்வதற்குப் பதிலாக, அவற்றைக் களைவதற்கும் தவிர்ப்பதற்குமான தெளிவான -பொது வாக ஏற்றுக் கொள்ளப்பட்ட- நியமங்களை ஏற்படுத்துவதற்கான முன்னெடுப்பை வேண்டி நிற்கும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களும் பிற சான்றுகளும் நம்முன் காணப்படுகின்றன.

ஆமிர் பின் ஸஈத் தனது தந்தையிடமிருந்து அறிவித்ததாக இமாம் முஸ்லிம் இவ்வாறு பதிவு செய்கிறார்:

ஒரு முறை 'அல்-ஆலியா' என்னும் பகுதியிலிருந்து வந்த இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பனூ முஆவியாக்களின் மஸ்ஜிதை தாண்டிச் செல்ல நேர்ந்தது. அப்போது அதில் நுழைந்த அவர்கள் இரண்டு 'ரக்அத்'துகள் தொழுதார்கள்; நாங்களும் அன்னாருடன் தொழுதோம். தொடர்ந்து நீண்ட பிரார்த்தனையில் ஈடுபட்ட அவர்கள் எங்களிடம் திரும்பி வந்து கூறினார்கள்: ''என் ரட்ச கனிடம் நான் மூன்று விடயங்களைக் கேட்டேன். இரண்டை எனக்குத் தந்தான்; ஒன்றைத் தரவில்லை. எனது 'உம்மத்'தினர் பஞ்சத்தினால் அழிந்து விடாதிருக்க எனது ரட்சகனிடம் பிரார்த் தித்தேன்; அதனை அவன் அங்கீகரித்தான். எனது 'உம்மத்'தினர் நீரில் மூழ்கி மரணிக்காதிருக்க அவனிடம் பிரார்த்தித்தேன்; அதனையும் எனக்கு அருளினான். அவர்கள் தங்களுக்குள் மோதிக் கொள்ளக் கூடாது என்றும் கேட்டேன்; ஆனால் அதனை அவன் ஏற்கவில்லை''.

ஆக- நபி (ஸல்) அவர்கள் அழிந்து விடக்கூடிய கடும் வரட்சியிலிருந்தும், மூழ்கடிக்கும் பிரளயத்திலிருந்தும் தமது 'உம்மத்'தினரைக் காக்குமாறு அல்லாஹ்விடம் கேட்ட போது அவன் அதனை ஏற்றுக் கொண்டதாக இதன்மூலம் நமக்குத் தெரிவித்துள்ளார்கள். அந்த வகையில், பஞ்சத்தினாலும் பெரு

வெள்ளத்தினாலும் அழிந்து விடும் அபாயம் 'உம்மா'வுக்கு இல்லை. தற்காலிகமான, பகுதியளவிலான சில பாதிப்புகள் ஏற்பட்டாலும் 'உம்மா' அவற்றினால் அழிந்து விடாது. அவ்வாறே-முஸ்லிம்களை உள்ளக முரண்பாடுகளிலிருந்து விலக்கி, சமாதான வாழ்வொன்றை ஏற்படுத்திக் கொடுக்குமாறு வேண்டிய போது அல்லாஹ் அதனை ஏற்காதது ஏன்?

இவ்விவகாரத்தில் அல்லாஹ் வைத்திருக்கும் நியாயத்திலிருந்தும், இறைத்தூதுர் (ஸல்) அதனை நமக்கு எடுத்துக் கூறியதன் பின்னணிக் காரணத்திலிருந்தும் நாம் பெறக் கூடிய புரிதலும் பயனும் என்ன?

முதல் இரு கோரிக்கைகளும் முழுமையாக முன் நிர்ணயம் செய்யப்பட்ட காரணிகளுடன் தொடர்புடையவை என்பதை நாம் அவதானிக்க முடியும். 'உம்மா'வுக்கு அவற்றில் எந்தப் பொறுப்பும் கிடையாது. அவற்றை ஏற்படுத்தவோ தடுத்து நிறுத்தவோ அதற்கு முடியாது. எனவே அவற்றினால் ஏற்படும் அழிவிலிருந்து அல்லாஹ்வின் முன் நிர்ணயம் மட்டுமே 'உம்மா'வைப் பாதுகாக்க முடியும்.

ஆனால் மூன்றாவது கோரிக்கையைப் பொறுத்த வரை, அது மக்களது செயலோடு தொடர்புடையது. அதற்கு அவர்களே பொறுப்புடையவர்கள். அதனைக் கையாளவும் அதிலிருந்து தவிர்ந்து கொள்ளவும் அவர்களால் முடியும். சகோதர வாஞ்சைக்கும் ஒற்றுமைக்குமான வழி வகைகளை நபி (ஸல்) அவர்கள் மக்களுக்கு காட்டித் தந்திருக்கிறார்கள்; பகைக்கும் பிரிவினைக்கும் இட்டுச் செல்கின்ற காரணிகள் குறித்தும் எச்சரித்துள்ளார்கள். எனவே இந்த அனைத்துக்குப் பிறகும் அவர்களுக்கு மத்தியில் பிணக்கு தோன்றுமெனில், சன்மார்க்க சட்டதிட்டங்களுக்கும் வழிகாட்டல்களுக்கும் மாறு செய்வதே அதற்குக் காரணம். எனவே, அவர்களது செயல்களால் ஏற்படும் பிரச்சினைகளை அவர்களாகவே தீர்த்துக் கொள்வது தவிர வேறு வழியில்லை. குழப்பங்களதும் மோதல்களதும் வாயில்களை அவர்கள்தான் மூட வேண்டும்.

இல்லையெனில், அல்லாஹ்வின் வரையறைகளை மீறியதால் தோன்றும் விளைவுகளை அவர்கள்தான் தாங்க வேண்டியிருக்கும்.

முஸ்லிம்கள் பரஸ்பரம் மோதிக் கொள்வதைத் தடுப்பதற்கு ஷரீஆ ஒரேயொரு வேலியை மாத்திரம் இடுவதோடு போதுமாக்கிக் கொள்ளவில்லை. பலமான நிறைய வேலிகளை அது இட்டு வைத்திருக்கிறது. எவர் அந்த வேலிகளைப் பேணி பாதுகாத்துக் கொண்டாரோ அவரை அவை பாதுகாக்கும்; எவர் அவற்றைத் தாண்டிச் செல்கிறாரோ அவர் அதன் விளைவுகளையும் தீங்கு களையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். *''உமது ரட்சகன் எவருக்கும் அநியாயம் செய்வதில்லை''. (18: 49)*

முஸ்லிம்களுக்கிடையில் பரஸ்பர மோதலும் பிரிவினையும் பிளவும் தோன்றுவதைத் தடுப்பதற்கு இஸ்லாம் ஏற்படுத்திய வலுவான அரண்களுள் ஒன்றே *''அவர்களது அனைத்து (பொது) விவகாரங்களும் அவர்களுக்கு மத்தியிலான கலந்தாலோசனை யின் அடிப்படையில்''* அமைந்திருக்க வேண்டும் என்ற கடமை யாகும். ஷூறாவானது ஷரீஆ, பகுத்தறிவு, தர்க்கம், நலன் என்பவற்றின் தீர்ப்புக்கு இட்டுச் செல்லக் கூடியது. அது ஒரு கலந்துரையாடல்; பரஸ்பரப் புரிதல்; உடன்பாடு. உரிமையுள்ள ஒவ்வொருவரும் அங்கு தனக்குரிய உரிமையை எடுத்துக் கொள் கிறார். மட்டுமன்றி, அது சான்றுகளை முன்னிறுத்தி விவாதிக் கப்படும் இடம்; பிறரை திருப்தி காணச் செய்வதற்கு ஆதாரங் களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் யத்தனம். இதற்கு மறுகிடையாகக் காணக் கூடியது அடக்குமுறையும் சுயநலமும் மட்டுமே. தந்திரம், ஆயுதம், பலப் பிரயோகம் முதலிய அனைத்து வழிகளாலும் எதிராளியை வெல்ல முயலும் மனோபாவம்தான் அங்கு இருக்கும்.

''அவர்கள் தங்களுக்குள் மோதிக் கொள்ளக் கூடாது என்றும் பிரார்த்தித்தேன்; ஆனால் அதனை அவன் அங்கீகரிக்கவில்லை!'' என்பதன் பொருள் அவர்கள் மோதிக் கொள்ள வேண்டும் என விதிக்கப்பட்டு விட்டது என்பதோ, அவர்கள் அதிலிருந்து எந்த

வகையிலும் வெளியேற முடியாது என்பதோ அல்ல. அந்த வேண்டுகோளுக்கு எந்தப் பதிலோ உத்தரவாதமோ வழங்கப் படவில்லை என்பதே அதன் பொருள். எனவே அது அவர்களது நடத்தைக்கும் செயற்பாடுகளுக்கும் ஏற்ப விடப்பட்டுள்ளது. அவர்களே அதில் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.

ஒழுங்கு படுத்தப்பட்ட முறையொன்றில் ஷூறாவை அமுல் படுத்துவது மோதல்களையும் போராட்டங்களையும் தவிர்ப்ப தற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுள் ஒன்றாக அமையும். குறிப்பாக, மோதலும் போராட்டமும் தோன்றலாம் என எதிர் பார்க்கப் படக் கூடிய இடங்களில் அது ஒழுங்கு முறையாக செயற்படுத்தப்பட வேண்டும். இக்கருத்தில்தான் நியாயவியல் அறிஞரான முஹம்மத் அல்-ஹிஜ்ஜவீ அத்-தஆலிபீ பின்வருமாறு கூறுகிறார்:

''இஸ்லாத்தில் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட ஷூறா செயற்பாடு இல்லாதிருந்ததால்தான் உமருக்குப் பின்னர் அத்தனை மோதல் களும் யுத்தங்களும் நடந்தேறின. உமரின் சிந்தனையில் இந்த உண்மை சுழன்று கொண்டிருந்ததால்தான் ஃகலீபாவைத் தெரிவு செய்வதற்கான ஷூறா சபையொன்றை ஒழுங்குபடுத்தினார் என நான் மீண்டும் கூறுகிறேன்..''.

ஸஹீஹ் முஸ்லிமில் -ஸஹீஹுல் புஹாரியில் கூட- பின்வரு மாறு அறிவிப்பொன்று உள்ளது:

கடல் அலை போலப் பொங்கியெழும் உள்நாட்டுப் போர் பற்றிக் குறிப்பிடும் நபி மொழி தொடர்பாக உமர் (றழி) சில நபித்தோழர்களிடம் வினவினார். அதற்கு ஹுதைஃபா இப்னுல் யமான் (றழி), ''அமீருல் முஃமினீனே, உங்களுக்கும் அதற்கும் இடையில் தாளிடப்பட்ட கதவொன்று இருப்பதால் அது பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை'' என்றார். ''அந்தக் கதவு உடைக்கப்படுமா அல்லது திறக்கப்படுமா?'' என உமர் வினவிய போது, ''அது உடைக்கத்தான் படும்!'' என ஹுதைஃபா

பதிலளித்தார். அப்போது உமர், ''அது மூடப்படாதிருப்பதற்கு அதுவே சிறந்தது'' எனக் கூறினார்.

கடல் போல் பொங்கியெழுந்து வர இருக்கும் உள் முரண்பாடொன்று பற்றிய நபித்துவ அறிவிப்பின் முன்னால் நாம் நிற்கிறோம். மூடிய கதவொன்று ஒரு குறிப்பிட்ட காலம் வரை அதனைத் தடுத்து நிற்கும். அந்தக் கதவு விலகி விட்டால் முஸ்லிம்களை நோக்கி அது வரும். உமர் இங்கு சாணக்கியத்தோடும் தீட்சண்யத்தோடும் தீர்க்க நோக்குடனும் கேட்கிறார்: ''கதவு உடைக்கப்படுமா அல்லது திறக்கப்படுமா?''. அதற்கு ஹுதைஃபா வின் பதில், ''அது உடைக்கவே படும்!'' என அமைகிறது. அப்போது உமர் சொல்கிறார்: ''அது -மீண்டும்- மூடப்படாது இருப்பதற்கு அதுவே சிறந்தது!''.

மூடப்பட்டிருக்கும் கதவு இயல்பான முறையில் திறக்கப் பட்டால் மீண்டும் அதே இயல்பான முறையில் மூடி விடுவது சாத்தியம். ஆனால் உடைத்து தகர்க்கப்பட்டு விட்டால், ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலாவது அது திறந்த நிலையில் இருக்கும். அதாவது, கதவு அதன் இயல்பான நிலைக்கு திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் மூடப்படும் வரை திறந்த நிலைலேயே இருக்கும். மட்டுமன்றி, பரஸ்பர மோதலின் காரணமாக கதவு உடைத்து தகர்க்கப் பட்டிருந்தால் அந்த மோதலும் பிணக்கும் தீர்க்கப்பட்டு, அவற்றுக்கான காரணங்களும் உரிய முறையில் கையாளப் படாமல் கதவைச் செப்பனிட்டு பழைய நிலைக்குக் கொண்டு வருதல் சாத்தியமாகாது.

இப்னு பத்தாலின் பின்வரும் கூற்றை அல்-ஹாஃபிழ் இப்னு ஹஜர் பதிவு செய்துள்ளார்:

''(உமர்) அவ்வாறு கூறக் காரணம், சரியாக இருக்கும் கதவையே இயல்பாக மூடுதல் வழக்கம். அது உடைந்து விட்டால் உடைந்த இடம் ஒட்டப்படும் வரை மூட முடியாது''.

ஆக- கடலின் அலை போல் பொங்கியெழும் அந்த உள்நாட்டுப் போர் (அல்-ஃபித்னா) இதுதான். பௌதீகப் பலம், மோதி

மிகைக்கும் நாட்டம் என்பவற்றின் பிரயோகமே இதற்குக் காரணமாக அமையும். அவ்வாறு பிரயோகித்தால் சட்ட பூர்வத் தன்மை என்ற கதவு தகர்ந்து அதன் அத்திவாரமும் சிதைந்து விடும்; குழப்பங்கள் பேரலையாகத் திரண்டு வரும்.

கதவுகளை மீள நிர்மாணித்து, குழப்பங்களுக்கும் அதற்குக் காரணமாய் இருப்பவர்களுக்கும் முன்னால் அவற்றைத் தாழிட்டு வைப்பதே இந்த அபாயத்திலிருந்து வெளியேறுவதற்கான மார்க்க மாக அமையும். கதவுகளும் நுழைதல் மற்றும் வெளியேறலுக் கான மார்க்கங்கங்களும் வாயிற் காவலர்களும் ஒவ்வொரு கதவுக்குமான சாவிகளும் நுழைதல், வெளியேறல், திறத்தல், மூடுதல் என்பவற்றுக்கான நியமங்களும் (அதாவது சட்டங்களும்) நம்மிடம் இருந்தால், குழப்பங்கள் அவ்வப்போது எட்டிப் பார்த்தாலும் அவை பற்றி நாம் அச்சம் கொள்ள வேண்டியிருக்காது.

ஷூறாவை நிறுவன மயப்படுத்தல், ஷூறாவை ஸ்தாபித்தல், ஷூறா நிர்வகிக்கப்படும் முறையை ஒழுங்குபடுத்தல் என்ற பிரயோகங்களின் மூலமாக பகுதியளவில் நான் கருதும் பொருள் இதுதான். அதாவது ஷூறாவுக்கென நிறுவனங்கள் அவசியம்; ஒழுங்கு விதிகள் அவசியம். இந்த இடத்தில்தான் சில கேள்விகளும் சிக்கல்களும் எழுகின்றன. அந்த வகையில்- அவற்றையும் அவற் றுக்கான பதில்களையும் குறிப்பிடுதல் அவசியம். உதாரணமாக, ‘ஷூறா செயற்பாட்டை ஒழுங்கு முறைப் படுத்துதல் என்பது உண்மையிலேயே அத்தியாவசியமான விடயமாக இருப்பின், இறைத்தூதர் (ஸல்) அந்த ஒழுங்கமைப்பை ஏன் நமக்கு இட்டுத் தரவில்லை? அது பற்றி அல்-குர்ஆனிலோ ஸுன்னாவிலோ எதுவும் இடம்பெறாதது ஏன்?’.. என ஒருவர் கேட்க முடியும். அவ்வாறே, ‘ஷூறா செயற்பாட்டுக்கு என இஸ்லாமிய ஷரீஆ எந்த ஒழுங்கையும் இட்டுத் தராத நிலையில், ஏவப்படாத ஒன்றை நாம் ஏன் செய்ய வேண்டும்? இந்தக் கட்டுப்பாடுகளும் கடினப்போக்கும் ஏன்? இவ்விடயத்தை நாம் ஏன் இயல்பாகவும், அதிகாரிகளின் தெரிவுக்கு உரியதாகவும் விடக் கூடாது?’.. என்றும் அவர் கேள்வி எழுப்ப முடியும்.

தொடர்ச்சியான இயங்கு தன்மையும் மாறும் பண்பும் கொண்ட நிறுவன மயமாக்கல் சார்ந்த அம்சங்களில் இஸ்லாம் பின்பற்றுகின்ற அணுகுமுறையே ஷூறா செயற்பாட்டிற்கென தனியான ஒழுங் கொன்றை அது இட்டுத் தராததற்குக் காரணமாகும். அதனால்தான், அறிவு தேடுமாறும் கற்குமாறும் கற்பிக்குமாறும் கட்டளையிட்ட இஸ்லாம், அதற்கென்று பிரத்தியேகமான ஒழுங்கொன்றை வரையறுக்காமல் விட்டு வைத்தது. நீதியின் அடிப்படையிலும் அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கேற்பவும் மக்களுக்கு மத்தியில் தீர்ப்புக் கூறுமாறும் ஆட்சி புரியுமாறும் கட்டளையிட்ட இஸ்லாம், அதற்கான வரையறுத்த நீதித்துறை ஒழுங்கொன்றை இட்டுத் தராததும் இதனால்தான்.

ஜிஹாத் புரியுமாறு கட்டளையிட்டாலும், அதற்கான நிறுவன ஒழுங்கொன்றை அது இட்டுத் தரவில்லை; நன்மையை ஏவி தீமையை தடுக்குமாறு நம்மைப் பணித்தாலும், அதற்கான விரிவான ஒழுங்கொன்றை அல்லது வழிமுறையொன்றை அது கடமையாக்கவில்லை; 'வக்ஃப்' என்னும் நிலையான தர்மச் சொத்துகளை ஏற்படுத்துமாறு தூண்டுதலளித்தாலும், காலா காலமாகத் திரண்டு குவியும் அத்தகைய சொத்துகளை நிர்வகிப்ப தற்கான நிறுவன ஒழுங்கொன்றை அது ஏற்படுத்தித் தரவில்லை.

ஏனெனில், நிறுவன ரீதியான சட்ட திட்டங்களும் வழிமுறை களும் சாதனங்களும் மனிதனுக்கு ஆடைகள் போன்றவை. அவை அத்தியாவசியமானவை; ஆனால் பல்வேறு உடற் பருமன்களுக்கும் அமைப்புகளுக்கும் ஏற்ப தைக்கப்பட வேண்டியவை. கால-தேச வழக்காறுகள், பல்வேறு சீதோஷ்ண நிலைகள், தேகாரோக்கிய நிலைகள், தொழிற்பாடுகள் முதலிய பல அம்சங்கள் உடை யமைப்பைத் தீர்மானிக்கும் காரணிகளாக உள்ளன.

முஸ்லிம்கள் தங்களது அனைத்து சன்மார்க்க, உலக விவ காரங்களுக்கும் ஷரீஆ ரீதியான தொழிற்பாடுகளுக்கும் தனி ஒழுங்குகளை விருத்தி செய்து கொண்ட போதிலும், ஷூறாவை மாத்திரம் வடிவத்தாலும் உள்ளடக்கத்தாலும் நலிவடைய விட்டு

விட்டனர் என்பதை இங்கு நான் கவலையோடு திரும்பத் திரும்ப கூறிக் கொள்கிறேன்.

இவ்விடயத்தை மேலும் தெளிவுபடுத்துவதற்கு ஷூறா செயற் பாட்டுடன் கல்வித் துறையை ஒப்பிட்டு ஓர் உதாரணத்தை முன்வைக்கிறேன். நிறுவன மயப் படுத்தல், ஒழுங்குபடுத்தல், தரப்படுத்தல் என்பவற்றில் உரிய வகையில் கவனயீர்ப்புப் பெற்ற ஷரீஆ ரீதியான தொழிற்பாடுகளுக்கும் கடமைப்பாடுகளுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக கல்வித் துறை அமைந்துள்ளது.

ஷூறாவைப் போலவே அறிவுத் தேடலுக்கும் தூண்டுதல் அளித்து அல்லது கட்டளையிட்டு பல அல்-குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் வந்துள்ளன. மட்டுமன்றி, இவ்விரு துறைகளிலும் நபியவர்களது வினைமை மிகுந்த நடைமுறையையும் நாம் காண்கிறோம். அதேவேளை -நிறுவன ஒழுங்கில் நோக்கினால் கூட- அன்னாரது காலத்தில் இவ்விரு துறைகளும் எளிமை யானவையாகவும் இயல்பான போக்கும் நெகிழ்வுத் தன்மையும் கொண்டவையாக இருந்திருக்கின்றன. நேர்வழி நடந்த ஃகலீபாக் களின் காலத்தில் கூட இவற்றில் பெரியளவு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லை.

எனினும்- அதன் பிறகு ஒழுங்கமைப்பிலும், நியமப்படுத்த லிலும், நிறுவன மயப் படுத்தலிலும், விரிவாக்கத்திலும், துறை வாரியான பகுப்பிலும் கல்வித்துறை இடையறாத பயணமொன்றை மேற்கொண்டு வந்திருக்கிறது. நீண்ட காலம் செல்ல முன்னரே அதற்கென நிர்வாகக் கட்டமைப்புகளும் கட்டிடங்களும் நிதி மூலங்களும் கொண்ட பல பாடசாலைகளும் பல்கலைக் கழகங் களும் தோன்றி விட்டன. மட்டுமன்றி, அவற்றுகென்று கல்வி சார் ஒழுங்குகளும் பாடத்திட்டங்களும் தரங்களும் முறைமைகளும் கூட வகுக்கப் பட்டாயிற்று. இன்று நமக்கு முன்னால் எண்ணற்ற அரச மற்றும் தனியார் பாடசாலைகளும் பல்கலைக் கழகங்களும் காணப்படுகின்றன.

கல்வித்துறையில் இன்று காணப்படுகின்ற ஒழுங்குகள், நிறு வனங்கள், பாடத்திட்டங்கள், சிறப்புத் துறைகள், சான்றிதழ்கள்,

வளங்கள், வரவு செலவுத் திட்டங்கள் முதலிய எதனையும் இறைத்தூதர் (ஸல்) மேற்கொள்ளவும் இல்லை; மேற்கொள்ளுமாறு கட்டளையிடவும் இல்லை. இருந்த போதிலும், முஸ்லிம்கள் அவற்றை விரைந்து முன்னெடுத்தனர். அறிஞர்களும் ஆட்சியாளர் களும் செல்வந்தர்களும் வறியவர்களும் அவற்றை போட்டி போட்டு மேற்கொண்டனர். இல்லையெனில், அறிவியக்கம் இன்னும் மந்த கதியிலும் மிக ஆரம்ப நிலையிலுமே இருந்திருக்கும்; இஸ்லாமிய சமூகங்களும் அரசும் இஸ்லாமிய அழைப்புப் பணியும் வேண்டி நிற்கும் தேவைகளுக்கும் எதிர் கொண்டிருக்கும் புதிய சவால்களுக்கும் உரிய வகையில் முகம் கொடுக்க முடியாது போயிருக்கும். மட்டுமன்றி, இன்று ஷூறாவுக்கு நேர்ந்திருக்கும் கதி போன்று கல்வித் துறையும் நலிந்து அழிவடையும் நிலையை எட்டியிருக்கும்.

நிறுவனம் மற்றும் நிர்வாகம் சார்ந்த இந்த அனைத்துச் செயற்பாடுகளும் ஏற்பாடுகளும் இடையறாது அபிவிருத்தியடையும் தன்மை கொண்ட வழிமுறைகளின் பாற்பட்டவையாகும். இவை மேற்கொள்ளப் படாமல் -அறிவு தேடுதல் என்ற- அடிப்படையான கடமையை உரிய வகையில் நிறைவேற்ற முடியாது. அந்த வகையில், இவை அவற்றின் இறுதி நோக்கங்களுக்கும் தொழிற் பாடுகளுக்கும் கீழ் அடங்குபவை; அந்த இறுதி நோக்கங்களின் பருமனுக்கும் நடைமுறைத் தேவைகளுக்கும் ஏற்ப பணியாற்றக் கூடியவை.

நிறுவனமயமாக்கல் சார்ந்த இந்த ஏற்பாடுகள் பற்றி இஸ்லாமிய ஷரீஆவில் குறிப்பான கட்டளை எதுவும் தெளிவாக இடம் பெற்றிராத போதும், ஒவ்வொரு துறையிலும், தொழிற்பாட்டிலும் வழிகாட்டக் கூடிய பொதுவான பல விதிகளை அது உட்பொதிந் துள்ளது. முன்னர் -குறிப்பாக இரண்டாம் அத்தியாயத்தின் மூன்று பகுதிகளிலும்- ஷூறா செயற்பாட்டை வழிநடாத்தக் கூடிய சில பொதுக் கொள்கைகளையும் நிறுவன மயமாக்கல் விதிகளையும் நாம் குறிப்பிட்டோம். அவை அல்-குர்ஆனிலிருந்தும், ஸுன்னா விலிருந்தும், நபியவர்களதும் நேர்வழி நடந்த ஃகலீபாக்களதும் நடைமுறை அனுபவத்திலிருந்தும் பெறப்பட்டவை.

இன்று நாம் ஷூறா செயற்பாட்டை கோட்பாட்டிலும் நடை முறையிலும் மீளக் கட்டியெழுப்ப முயல்கிறோம் என்ற வகையில், நமது அடிப்படைச் சித்தாந்தங்களை மீள நினைவு படுத்திக் கொண்டு அவற்றின் மீது முடியுமான அனைத்தையும் கட்டி யெழுப்புவது அசியமாகின்றது.

இஸ்லாமிய சட்டவாக்கத்தில் அங்கீகரிக்கப் பட்டுள்ள அத்தகைய சில அடிப்படைச் சித்தாந்தங்களையும் விதிகளையும் இங்கு சற்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அவ்விதிகளுள் சில வெளிப்படையாக அறியப்பட்டவை; மற்றும் சில வெளிப் படையாக அறிமுகம் அற்றவையாயினும் உள்ளார்ந்து நடை முறையில் இருப்பவை:

### 1. மக்களது புதிய வகைக் குற்றங்கள் புதிய வகைத் தீர்ப்புகளை கட்டாயப்படுத்தும்.

இவ்விதி இதே வசன அமைப்பில் ஃகலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்களால் கூறப்பட்டதாக தெரிவிக்கப் பட்டிருப்பினும், அவருக்கு முன்னரும் பின்னரும் நியாயவியல் அறிஞர்களும் ஆட்சியாளர்களும் நீதிபதிகளும் இதனை நடைமுறைப்படுத்தி யிருக்கின்றனர். சமூகத்தில் புதிய பிரச்சினைகளும் அபாயங்களும் பிறழ்வுகளும் தோன்றும் போதெல்லாம் அவற்றுக்கு உகந்த சட் டங்களாலும், அவற்றைத் தடுத்து சீர்செய்யக்கூடிய திட்டங்களாலும் அவற்றை எதிர்கொள்வது அவசியம் என்பதே இவ்விதியின் பொருளாகும்.

இவ்விதிக்கான அடிப்படையை பின்வரும் நபி வாக்கில் கண்டு கொள்ள முடிகிறது:

‘‘மக்களுக்கு அவர்களது வாதங்களுக்கேற்ப தீர்ப்பு வழங்கப் படுமாயின், சிலர் வேறு சிலரது உயிர்களையும் செல்வங்களையும் கோரத் தொடங்கி விடுவர். எனவே, குற்றம் சுமத்தப்பட்டவர் தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க சத்தியம் செய்வது கடமையாகும்’’.

இது முஸ்லிம் கிரந்தத்தில் கிதாப் அல்-அக்ழியா (தீர்ப்புகள் குறித்த அத்தியாயம்) என்ற அத்தியாயத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது. முஸ்லிம் கிரந்தத்துக்கு விளக்கவுரை வழங்கிய அந்-நவவீ மேலதிகமாக இவ்வாறு குறிப்பிடுகிறார்: அல்-பைஹகீ யினதும் பிறரதும் அறிவிப்பில், நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் வாயிலாக 'ஹஸன்' தரத்திலான அல்லது 'ஸஹீஹ்' தரத்திலான அறிவிப்பாளர் வரிசையொன்றினூடாக இவ்வாறு மேலதிகமாக இடம் பெற்றுள்ளது:

''மக்களுக்கு அவர்களது வாதங்களுக்கேற்ப தீர்ப்பு வழங்கப் படுமாயின், சிலர் வேறு சிலரது உயிர்களையும் செல்வங்களையும் கோரத் தொடங்கி விடுவர். எனவே, குற்றம் சாட்டுபவர் அதற்கான சான்றினை முன்வைப்பது கடமை; குற்றம் சாட்டப் படுபவர் அதனை மறுப்பதாயின், அக்குற்றச்சாட்டு உண்மைக்கு மாறானது என சத்தியம் செய்வது கடமை''. தொடர்ந்து இமாம் நவவீ இவ்வாறு கூறுகிறார்: ''இந்த ஹதீஸ் ஷரீஆவின் மிகப்பெரும் சட்டவிதிகளுள் ஒன்றாக உள்ளது''.

இந்த ஹதீஸிலிருந்து நாம் பெறும் சான்று யாதெனில், சிலர் வேண்டுமென்றே அடுத்தவர்களுக்கெதிராக பொய்யான வாதங் களை முன்வைக்கும் நிலை தோன்றாதிருக்குமாயின், ஒருவர் முன்வைக்கும் வாதத்தை நம்பி அவரது கோரிக்கையை நிறை வேற்றிக் கொடுப்பதே அடிப்படையாக இருந்திருக்கும். ஆனால், மனிதர்கள் பல பொய்யான வாதங்களை முன்வைக்கும் நிலையை கருத்தில் கொண்டு சான்று கோரப்படுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. இவ்வாறு சான்று கோரப் படுவதால் சிலபோது உண்மையான வாதத்தை முன்வைப்பவர் கூட -அதற்கான சான்றை முன்வைக்க முடியாமல்- தனது உரிமையை இழக்கும் சந்தர்ப்பம் நேரலாம் என்றிருந்த போதிலும், சான்று முன்வைக்கப் படுவது அடிப்படை நிபந்தனையாக ஆக்கப் பட்டுள்ளது. மக்களின் சீர்கேடும், அவர்கள் உண்மையை எப்போதும் கடைப்பிடிப்ப வர்களாக இல்லாமையுமே இந்நிபந்தனைக்கான காரணமாகியது.

ஆக - மக்களது பொய்யான வாதங்களே சான்று முன்வைக்கப் பட வேண்டும் என்ற நிபந்தனை புதிதாக ஏற்படுத்தப்பட காரண மாகியது.

இந்த நடைமுறையைப் பின்பற்றியே கைவினைஞர்கள் தாங்கள் பொறுப்பேற்கும் பணிகளுக்கான உத்தரவாதத்தை வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை நபித் தோழர்கள் எடுத்திருந்தனர். இது ஏலவே இருந்த நடைமுறைக்கு மாற்றமான தீர்மானம் மட்டுமன்றி, மனிதர்கள் அடிப்படையில் குற்றமற்றவர்கள் அல்லது நம்பிக்கைக்குரியவர்கள் என்ற எடுகோளுக்கும் மாற்றமான தீர்மானமாக அமைந்திருந்தது.

அந்த வகையில், கைவினைஞர்களது கைகளால் தொலைந்து போன பொருட்களுக்கு -அவர்களது செயலால் அது நிகழ்ந்திராத போதும்- அவர்களே உத்தரவாதம் வழங்க வேண்டுமென கட்டாயப் படுத்தப் பட்டனர். அவர்கள் மீது மக்கள் வைத்திருக்கும் நன்னம்பிக்கையை சிலர் துஷ்பிரயோகம் செய்து, தங்களிடம் கைவினைக்காக ஒப்படைக்கப்படும் பொருட்களை கபளீகரம் செய்து கொண்டு, அவை தொலைந்து விட்டதாக அல்லது திருட்டுப் போய் விட்டதாக பாசாங்கு செய்வதாகத் தெரிய வந்ததனாலேயே அவ்வாறு உத்தரவாதம் வழங்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப் பட்டனர். மட்டுமன்றி, அவர்கள் உத்தரவாதம் வழங்க வேண்டியதில்லை என்பதே பொதுவாக அறியப்பட்ட நடைமுறையாக மாறுமெனில், குறித்த பொருட்களை பேணிப் பாதுகாப்பதில் கவனயீனமாகவும் நடந்து கொள்ளத் தொடங்கி விடுவார்கள். ஆக, அவர்கள் -அல்லது அவர்களில் சிலர்- செய்த நம்பிக்கைத் துரோகமும் கவனயீனமுமே உத்தரவாதம் வழங்குதல் என்ற புதிய விதிமுறை தோன்றக் காரணமாயிற்று. இல்லையெனில் அது தோன்றியிருக்காது.

இந்த விதியுடன் ஷூறா என்ற விடயத்துக்கு நாம் இப்போது நகர்வோம். உமர் மரணித்து விட்டால் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தாம் விரும்புகின்ற ஒருவருக்கு பைஅத் செய்து

விட்டு, பிற முஸ்லிம்களையும் அத்தகைய ஒரு நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்க விரும்பும் சிலர் இருப்பது பற்றிய செய்தி எட்டிய போது உமர் மேற்கொண்ட நடவடிக்கை இங்கு ஆரம்பமாகக் குறிப்பிடு வதற்கு மிகச் சிறந்த உதாரணமாகிறது. அந்த அபாயகரமான முனைப்புக்கு முன்னால் வெறுமனே அது குறித்த தெளிவை முன்வைப்பதோடும் எச்சரிப்பதோடும் மாத்திரம் அவர் போது மாக்கிக் கொள்ளவில்லை; முஸ்லிம்களது ஆலோசனை பெறப் படாமல் மேற்கொள்ளப் படுகின்ற அந்த விசுவாசப் பிரமாணம் செல்லுபடியற்றது என தீர்ப்பளிப்பதுடன் மாத்திரம் நிறுத்திக் கொள்ளவுமில்லை. அவ்வாறு பைஅத் வழங்க முற்படுபவரும் அதனை ஏற்றுக் கொள்பவரும் கொல்லப்படுவர் எனவும் அவர் அச்சுறுத்துகிறார். இந்தத் தீர்ப்போ இது போன்ற தீர்ப்போ அல்-குர்ஆனிலோ ஸுன்னாவிலோ கிடையாது எனினும், நபித்தோழர் களுள் எவரும் அதற்கு மறுப்புக் கூறுவில்லை. இன்று வரை உமரின் அக்கூற்றுக்கு மறுப்பாக எந்த அறிஞரும் கருத்துத் தெரிவித்ததாகவும் நான் அறியவில்லை.

உமர் அந்தத் தீர்ப்புக்குச் சென்றதற்கான சான்று என்ன? ‘‘மக்களது புதிய வகைக் குற்றங்கள் புதிய வகைத் தீர்ப்புகளை கட்டாயப் படுத்தும்’’ என்ற மகத்தான விதியே அந்தத் தீர்ப்புக்கான அடிப்படை ஆகியது. ‘உம்மா’வின் உரிமையிலும் தலைவிதியிலும் இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் விளையாட நினைப்பதை விடப் பாரிய குற்றம் எது இருக்க முடியும்? எனவே அதனை தடுக்கக் கூடிய, அதற்கு நிகரான ஒரு தீர்ப்பு பிறப்பிக்கப் படுவது தவிர்க்க முடியாதது.

எதிர்பாராத விதமாக உமர் படுகொலைத் தாக்குதலுக்கு உட் பட்டிருந்த வேளையில், ஃகிலாபா தொடர்பாக தோன்றச் சாத்திய மாக இருந்த இழுபறியைத் தவிர்ப்பதற்கு நாடிய வழிமுறையும் இவ்வாறான அணுகுமுறையின் பாற்பட்டதே. பிறரால் சாடப் படவோ சந்தேகப்படவோ முடியாத பண்புகளும் தகுதிகளும் கொண்ட குறிப்பிட்ட சில நபர்களிடம் அப்பொறுப்பை அவர் ஒப்படைத்திருந்தார். அதன் மூலம் உள்முரண்பாட்டுக்கும்

மோதலுக்குமான வாயிலை விரைவாகவும் சாமர்த்தியமாகவும் ஆழ்ந்த நுணுக்கத்தோடும் மூடி விட்டார். மட்டுமன்றி, ஷூறா செயற்பாடும் பொதுமக்கள் அபிப்பிராயமும் கூட எவரும் குறை காண முடியாதளவு பேணப் பட்டிருந்தது.

மார்க்க அறிஞர்களிடமும், பிற அறிவுத் துறை சார்ந்தோரிடமும் ஆலோசனை கேட்காத அதிகாரி பதவி நீக்கப்படுவது கடமை என இப்னு அதிய்யாவும் பிறரும் கொண்டிருந்த நிலைப்பாடும் இத் தகையதே (அவரது கூற்றினை முன்னர் நாம் தந்திருக்கிறோம்). இவ்வாறு பதவி நீக்கப்படுவது கடமை (வாஜிப்) என அல்-குர்ஆனிலோ ஸுன்னாவிலோ ஏதும் கூறப்பட்டிராத போதும், அதிகாரிகளது அடக்குமுறையும் ஷூறா செயற்பாட்டை அவர்கள் புறக்கணித்தமையும் இம்முடிவுக்கு வர வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. அந்த அடக்கு முறையாலும் ஷூறாவை அவர்கள் புறக்கணித்ததாலும் தேசத்தின் மீதும் மக்களின் மீதும் மிகப் பெரும் அத்துமீறல்களும் சீர்கேடுகளும் தீமைகளும் ஏற்பட்டன.

இஸ்லாமும் முஸ்லிம்களும் அனைத்துத் தளங்களிலும் சாதித்த வெற்றிகள் எந்த விலையுமின்றி சாதிக்கப்பட்டவை அல்ல என்பது வெளிப்படையானது. ஏனெனில், அவை தேசத்தினதும் சமூகத் தினதும் இஸ்லாமிய வாழ்வின் சில பண்பு சார் அம்சங்களில் கோளாறும் குறைபாடும் தோன்றக் காரணமாகி விட்டன. முஸ்லிம்களது எண்ணிக்கை, அவர்களது பலம், செல்வங்கள், அறிவு, அனுபவம், இன-பூகோள ரீதியான நீட்சி முதலிய அனைத்திலும் எண்ணிக்கை சார்ந்த வளர்ச்சி ஏற்பட்டது என்பது உண்மைதான். ஆயினும் -மறு புறத்தில்- அவர்களது சன்மார்க்கப் பற்றிலும் விழுமியங்களிலும் குறைபாடு தோன்றத் தொடங்கியது. இப்னு தைமியா கூறுவது போல், ‘‘ஆட்சியாளர், குடிமக்கள் முதலிய அனைவரிலும் இக்குறைபாடு ஏற்பட்டது’’.

நேர்வழி நடந்த ஃகிலாபத் ஆட்சியின் இறுதிக் காலப் பகுதியிலிருந்து இக்குறைபாட்டின் துவக்கம் அவதானிக்கப் பட்டு விட்டது. அது பற்றி அலீ பின் அபூ தாலிபிடம், ‘‘அமீருல் முஃமினீனே! அபூபக்கர் குறித்தும் உமர் குறித்தும் கருத்து

முரண்படாத மக்கள், உஸ்மான் தொடர்பிலும் உங்கள் தொடர் பிலும் முரண்பாடு கொண்டது ஏன்?'' என வினவப் பட்டது. அதற்கவர் இவ்வாறு பதிலளித்தார்: ''அபூபக்கரின் குடிமக்களாக என்னையும் உஸ்மானையும் ஸஅதையும் அப்துர் ரஹ்மானையும் போன்றவர்கள்தான் இருந்தோம். ஆனால், உஸ்மானின் குடிமக்க ளாகவும் எனது குடிமக்களாகவும் உம்மைப் போன்றவர்களே இருக்கின்றனர்!''

அரேபியத் தீபகற்பம், ஷாம், ஈராக், எகிப்து, பாரசீகம், வட ஆபிரிக்கா முதலிய பிராந்தியங்களில் பரவிக் காணப்பட்ட புதிய முஸ்லிம்கள் என்ற கடலுக்குள் நபித்தோழர்களும், அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட தாபிஈன்களும் சிறுபான்மையினராக மாறி யிருந்தனர். அந்தப் புதிய கடலுக்குள்ளிருந்தே உமரைக் கொன்ற வனும், உஸ்மானைக் கொன்றவர்களும், அலீயை கொன்றவனும் வெளிவந்தனர். உள்முரண்பாட்டு நெருப்பு தோன்றுவதற்கான காரணிகளும், அதற்கான படைகளும் எரிபொருளும் கூட அதனுள்ளிருந்தே தோன்றின.

இப்புதிய சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, ஜீரணித்து, அதனையும் அதன் தாக்கங்களையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக ராட்சதப் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப் பட்டன என்பதை நான் மறுக்கவில்லை. அழைப்பு, பயிற்சி, கல்வி, சிந்தனை, அரசியல், ராணுவம், நிர்வாகம் என பல்துறைப் பிரயத்தனங்களாக அவை அமைந்திருந்தன.

எனினும் இந்த நிகழ்வுப் பெருவெளியில் ஷூறாவும் அதற்கான தர்க்க நியாயமும் தொலைந்து போயின. இந்நிலையில், அதன் முன்னைய அடைவுகள் பாதுகாக்கப் படவுமில்லை; நமது இந்த விதிக்கும் ஷரீஆவின் பிற விதிகளுக்கும் இயைபாக புதிய சூழ்நிலையை சட்டகப் படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யும் வகையில் அது ஒழுங்கு படுத்தப் படவுமில்லை.

மனிதர்களிலும், அவர்களது வாழ்விலும், அவர்களது சமூக இருப்பிலும் ஏற்படக் கூடிய பரிணாம மாற்றங்களுக்கு -குறிப்பாக

எதிர்மறையான மாற்றங்களுக்கு- பொருத்தமான இஜ்திஹாதும் சட்டங்களும் அவசியம் என்பதே இதிலிருந்து நமது சமகாலத்துக் கும் எதிர்காலத்துக்குமாக நாம் பெறக்கூடிய படிப்பினை ஆகும். ஷரீஆவின் சான்றாதாரங்களுக்கும் சட்டவாக்க விதிகளுக்கும் இறுதி நிலை நோக்கங்களுக்கும் ஏற்ப அந்தச் சட்டங்கள் பெறப்பட வேண்டும். முஸ்லிம்களது சன்மார்க்கத்தையும் நலன்களையும் பாதுகாத்து, உட்பூசல்களையும் பிறழ்வுகளையும் தடுக்கக் கூடிய அனைத்துத் திட்டங்களையும் ஒழுங்கமைப்புகளையும் நிறுவன ஏற்பாடுகளையும் மேற்கொள்வது நமக்கு அனுமதிக்கப்பட்டி ருப்பது மட்டுமன்றி, அது நமது கடமையும் கூட!

### *2. தீமைக்கு இட்டுச் செல்லும் வழிகளை அடைத்தல் (ஸத்து அல்- தரீஆ) என்ற விதி.*

இந்த விதிக்கும் இதற்கு முந்திய விதிக்கும் ஓர் ஒற்றுமையும் பின்னிப் பிணைந்த தொடர்பும் காணப்படுகிறது. 'உஸூல்' என்னும் கொள்கை வகுப்புத் துறை அறிஞர்களது மொழியில் கூறுவதாயின், இரண்டுக்குமிடையில் சில பொதுப் பண்புகளும், ஒவ்வொன்றுக்கும் என தனித்துவமான பண்புகளும் காணப் படுகின்றன எனலாம். முன்னைய விதியை விட இவ்விதி அதிக குறிப்புத் தன்மை கொண்டது. ஏனெனில், ஷரீஆவினால் அனுமதிக்கப்பட்ட ஒன்று தடுக்கப்பட்ட ஒன்றைச் செய்வதற்கான வழியாக எடுத்துக் கொள்ளப்படும் நிலைகளுடன் தொடர்பு பட்டதாக இவ்விதி உள்ளது. அதாவது, சட்டரீதியாக அனுமதிக் கப்பட்ட அல்லது ஆகுமாக்கப்பட்ட ஒன்று அதுவல்லாத வேறு நோக்கத்திற்காக உபயோகிக்கப் படுவதை இது குறிக்கிறது. ஆகுமாக்கப்பட்ட ஒன்று ஆகுமாக்கப்படாத மற்றொன்றைச் சாதிப் பதற்காக பயன்படுத்தப்பட முடியும்; அல்லது ஆகுமான செய லொன்று திட்டவட்டமான தீமையொன்றுக்கு இட்டுச் செல்ல முடியும். பிழையான நோக்கத்தினாலன்றி, பிழையான பிர யோகத்தினால் கூட அத்தகைய நிலை ஏற்படலாம்.

இவ்வாறான நிலை ஏற்படும்போது இஸ்லாமிய ஷரீஆ அங்கு தலையீடு செய்யும்; ''தீமைக்கு இட்டுச் செல்லும் வழிகளைத் தடை செய்தல்'' என்ற இவ்விதியைப் பிரயோகிக்கும். அந்த வகையில் அடிப்படையிலேயே அனுமதிக்கப்பட்ட அம்சத்தைக் கூட அது தடை செய்யும்; அதன் பிரயோகம் சரியாக அமையும் நிலை ஏற்படும் வரை அதன் சட்டபூர்வ அனுமதியை இடைநிறுத்தி வைக்கும்.

இவ்விவகாரம் தொடர்பாக கோட்பாட்டியல் (உஸூல்) ஆய் வில் இறங்கவோ, அதற்கான சான்றுகளையும் எடுத்துக் காட்டு களையும் அல்-குர்ஆனிலிருந்தும் ஸுன்னாவிலிருந்தும் திரட்ட வோ நான் முற்படவில்லை. ஏனெனில், அது அன்றும் இன்றும் உஸூல் துறை அறிஞர்கள் முழுதுமாக ஏற்றுக் கொண்ட ஒரு பணியாகும். அதன் சில உதாரணங்களை மட்டுமே இங்கு நான் குறிப்பிட உள்ளேன். பின்னர், ஷூறா விவகாரத்திலும் அதனை ஒழுங்குபடுத்துவதிலும் பாதுகாப்பதிலும் இவ்விதியின் சில பிரயோக வடிவங்களையும் குறிப்பிட உள்ளேன்.

நயவஞ்சகர்களது போலித்தனமும் சதிமுயற்சிகளும் தீங்கு களும் தெரிந்திருந்த நிலையிலும் அவர்களைக் கொல்வதிலிருந்து நபி (ஸல்) அவர்கள் தவிர்ந்து கொண்டார்கள். முஹம்மத் தனது தோழர்களையே கொன்று விடுகிறார் என்று பிரச்சாரப்படுத்தி மக்கள் இஸ்லாத்தில் நுழையாமல் அச்சமூட்டும் வழியாக எதிரிகள் அதனை ஆக்கிக் கொள்ளாதிருக்கவே அன்னார் அவ்வாறு தவிர்ந்து கொண்டார்கள். அந்த வகையில்தான், சில நயவஞ்சகர்கள் கொல்லப்பட தகுதியானவர்களாக இருந்தும் நபியவர்கள் அவர் களைக் கொல்லாது விட்டார்கள்.

படையெடுப்பின் போது அல்லது போர் முன்னரங்குகளில் அல்லது எதிரிகளின் பூமியில் வைத்து 'ஹுதூத்' தண்டனைகள் நிறைவேற்றப் படுவதையும் நபியவர்கள் தடை செய்திருந்தார்கள். தண்டனை விதியானவர்கள் தப்பியோடிச் சென்று எதிரிகளுடன் இணைந்து கொள்ள அல்லது அவர்களில் சிலர் மதம் மாறி விட

அது காரணமாகி விடலாம் என்பதனாலேயே அத்தடையை அன்னார் விதித்திருந்தார்கள்.

நபித்தோழர்கள் வேதக்காரப் பெண்களை திருமணம் செய்வதை குறிப்பிட்டதொரு சூழ்நிலையில் ஃகலீபா உமர் தடை செய்தி ருந்தமையும் இந்த வகையில்தான். முஸ்லிம் பெண்கள் மத்தியில் அச்ச நிலை ஒன்று தோன்ற அந்த அனுமதி காரணமாகி விடக் கூடாது என்பதற்காகவே உமர் அத்தடையை ஏற்படுத்தியிருந்தார்.

ஷூறா விவகாரத்திலும், 'ஸத்து அல்-தராயிஇ' என்ற விதியை முதலில் பிரயோகித்தவராகவும் உமரையே நாம் காண்கிறோம். தனது மகன் அப்துல்லாஹ் தனக்குப் பின் ஃகலீபா ஆக்கப் படுவதை அவர் நிராகரித்தமையே அப்பிரயோகமாகும். ஆலோச னைக்காகப் பிரேரிக்கப்பட்ட அறுவருடன் அப்துல்லாஹ்வும் இணைந்து கொள்ளும் ஏற்பாட்டை உமர் செய்த போதும், ஆட்சி விவகாரத்தில் அவருக்கு எந்தப் பங்கும் இருக்கக் கூடாது என்றும், அவசியமான போது அபிப்பிராயம் மட்டுமே தெரிவிக்க முடியும் என்றும் அவர் நிபந்தனை இட்டிருந்தார். ஷூறாவுக்காக பிரேரிக்கப்பட்ட அறுவர் போன்று தனது ஒன்று விட்ட சகோதரரான ஸஈத் பின் ஸெய்தும் சுவனத்துக்கு நன்மாராயம் கூறப்பட்டிருந்த போதும், அவரைக் கூட உமர் ஃகிலாபத் விவகாரத்திலிருந்து தூரமாக்கினார். தனக்குப் பின்னர் தனது உறவினர் ஒருவர் -தகுதியிருந்தும்- ஆட்சியைப் பொறுப்பேற்றால், ஃகிலாபத் என்பது அனந்தரச் சொத்தாக கொள்ளப்படுவதற்கு வழியேற்பட்டு விடும் எனவும், பெற்றோர், பிள்ளைகள், பாட்டன்மார், பேரர்கள் முதலியோருக்கிடையில் மாத்திரம் சுழல்வதாக அது மாறிவிடும் எனவும் உமர் அஞ்சியமையே அவரது இந்நடவடிக்கைக்குக் காரணமாக அமைந்தது.

எவ்வாறிருந்த போதிலும், அவர் அஞ்சியது சற்றுக் காலம் கடந்தேனும் நடந்தேறி விட்டது. அதனை விட கவலைக்குரியது யாதெனில், அவ்வாறு பரம்பரைச் சொத்தாக ஃகிலாபத் மாற்றப் படக் கூடாது என -'ஸத்து அல்-தராயிஇ' அடிப்படையிலாவது

நமக்குத் தெரிந்த வரை- எந்த அறிஞரும் தீர்ப்பு வழங்கவில்லை. அதே வேளை 'ஸத்து அல்-தராயிஇ' என்ற இவ்விதி அனைத்து நியாயவியல் முகாம்களாலும் எடுத்தாளப்பட்டிருப்பதுடன், எண்ணிறந்த ஷரீஆ சட்டங்களும் நியாயவியல் துறை இஜ்திஹாதுகளும் கூட அதிலிருந்து பெறப்பட்டுள்ளன. இப்னுல் கையிம் பின்வருமாறு கூறுமளவுக்கு அது முக்கியத்துவம் பெற்றிருந்தது: ''ஸத்து அல்-தராயிஇ என்ற பகுதி நமது வகை கூறல் பொறுப்பில் கால் பங்காகும். அது ஏவல், விலக்கல் என்ற இரு பகுதிகள் கொண்டது. ஏவல் என்பது இரு வகை: ஒன்று, தன்னளவிலேயே ஏவலாக அமையும் வகை. மற்றையது, இன்னொரு ஏவலுக்கான சாதனமாக அமையும் வகை. விலக்கலும் கூட இரு வகையானது: ஒன்று, தன்னளவில் கெட்டது என்பதால் விலக்கப் பட்டது. மற்றையது, இன்னொரு கேடான அம்சத்துக்கு வழியாக அமைவதால் விலக்கப் பட்டது. அந்த வகையில், தடுக்கப் பட்டதற்கு இட்டுச் செல்லும் வழிகளை அடைப்பது மார்க்கத்தின் கால் பங்காக மாறுகிறது''.

'ஸத்து அல்-தராயிஇ' என்ற விதியானது அரசியல் ஒழுங்கு மற்றும் அதன் நிறுவனங்கள், அதன் விவகாரங்களுக்கான திட்டமிடல் என்பவற்றின் மீது பிரயோகிக்கப் பட்டிருக்குமாயின், நமது வரலாற்றில் அரசியல் செயற்பாட்டின் மீது கட்டவிழ்க்கப்பட்ட மோசடிகள், தடைகள், குழப்பங்கள், சீர்கேடுகள், அடக்குமுறைகள் என்பவற்றின் வாயில் பெருமளவு மூடப்பட்டிருக்கும்.

மொறோக்கோவை ஆட்சி புரிந்த முவஹ்ஹிதூன்கள் பின்பற்றிய முறை பற்றி இவ்விடத்தில் குறிப்பிடுவதே நியாயமானதாகும். ஒருவர் நீதிபதிப் பொறுப்பை இரண்டு வருடங்களுக்கு அதிகமாக வகிப்பதை அவர்கள் அனுமதிக்கவில்லை. நீதிபதிப் பதவியில் நீண்ட காலம் இருப்பதால், அல்லது ஆயுள் முழுவதும் இருப்பதால் தோன்றக் கூடிய சீர்கேடுகளைத் தவிர்க்கும் முகமாகவே இவ்வாறு அவர்கள் பதவிக் காலத்தை வரையறை செய்திருந்தனர். 'ஸத்து அல்-தரீஆ' என்ற விதியை உமர் (றழி) பிரயோகித்த அதே வழியில் பிரயோகித்து இந் நடைமுறையை அவர்களும் பின்பற்றினர்.

'தாரீஃக் அல்-தவ்லதைன்' (இரு தேசங்களின் வரலாறு) என்ற நூலில் அல்-ஸர்கஷீ இவ்வாறு கூறுகிறார்: ''அன்று டியூனிசியாவை ஆண்ட முவஹ்ஹிதூன்கள் இரண்டு வருடங்களுக்கு அதிகமாக ஒருவரை நீதிபதிப் பதவியில் அமர்த்தாதவர்களாய் இருந்தனர். ஒருவர் இரு வருடங்களுக்கு அதிகமாக கவர்னர் பதவியில் அமர்த்தப்படக் கூடாது என உமர் இப்னுல் ஃகத்தாப் தனது மரண சாசனத்தில் குறிப்பிட்டிருந்ததை செயற்படுத்தும் வகையிலேயே முவஹ்ஹிதூன்கள் இவ்வழக்கத்தைப் பின்பற்றினர். நீதிபதியின் பதவிக்காலம் நீண்டு விட்டால், தனக்கென சகாக்களையும் ஆதரவாளர்களையும் தன்னைச் சூழ சேர்த்துக் கொண்டு விடுவார்; ஆனால் (ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு) பதவி நீக்கப்படுவார் என்ற நிலை காணப்படுமாயின், அவர் அகந்தை கொள்ளவோ அளவு மீறிய தன்னம்பிக்கை கொள்ளவோ இடமேற்படாது என அவர்கள் கருதினர். மேலும், இத்தகைய சூழ்நிலையில் அறிவின் அறுவடைகள் சம தரத்தில் உள்ளவர்களுக்கு மத்தியில் பரவி, வழக்குகளைக் கையாளும் பயிற்சி கொண்ட நீதிபதிகள் பெருகுவர். இதனால் நீதித்துறை பாதுகாக்கப்படும் நிலை தோன்றும். ஆனால் குறித்த பதவியை ஒரு தனி நபர் மாத்திரம் கட்டியாளும் போது, அத்துறையில் இருப்பவர்களுக்கு மத்தியில் சமத்துவம் காணப் படாது. மட்டுமன்றி, அவருக்குப் பின்னால் பதவிக்கு வருபவர் நீண்ட காலத்தின் பிறகே அப்பதவிக்குரிய செல்வாக்கைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிட்டும். குறித்த பதவியில் அறிவையும் அனுபவத்தையும் பெற வேண்டுமென்ற அபிலாஷை கொண்ட வர்கள் பெரும் பிரயத்தனத்தின் பிறகே அப்பதவிக்குரிய செல் வாக்கை அடைந்து கொள்ளும் நிலை காணப்படுமாயின் அவர்களது உள்ளங்கள் நிராசையடைந்து விடும்''.

## 3. திறந்த நிலை நலன்கள் (அல்-மஸாலிஹ் அல்-முர்ஸலா):

இது இஸ்லாமிய சட்டவாக்க அடிப்படைகளுள் முக்கியமான ஒன்று. ஷரீஆவும் அதன் சட்டங்களும் மனிதர்களது சன்மார்க்க, லௌகீக நலன்களுக்காகவே அமைக்கப் பட்டுள்ளன. அந்தச் சட் டங்கள் -ஒன்றில்- மனிதர்களுக்கு உண்மையான நலன் உள்ள வற்றைக் கொண்டு வரும்; அல்லது அவர்களுக்கு உண்மையாக தீங்கு தருபவற்றை தடை செய்யும். அந்த நலன் அல்லது தீங்கு உடனடியாக ஏற்படுவதாயினும் சரி; தாமதமாக ஏற்படுவதாயினும் சரி. இதுவே 'அல்-மஸாலிஹ் அல்-முர்ஸலா' என்ற விதி கட்டமைத்திருக்கும் சித்தாந்தம்.

இப்னுல் கையிம் (றஹ்) இதனை இவ்வாறு கூறுகின்றார்: ''இஸ்லாமிய ஷரீஆ அறிவார்ந்த நோக்கங்களின் மீதும் அடி யார்களது இம்மை-மறுமை நலன்களின் மீதும் கட்டியெழுப்பப் பட்டுள்ளது. அது முற்றிலும் நீதியானது; முற்றிலும் கிருபை கொண்டது; முற்றிலும் நலன் பயப்பது; முற்றிலும் ஞானம் பொதிந்தது. எனவே, நீதியிலிருந்து வெளியேறி அநீதியை நோக்கிச் சென்ற.. கிருபையிலிருந்து அதற்கெதிரான நிலைக்குச் சென்ற.. நலனிலிருந்து தீங்கை நோக்கிச் சென்ற.. அறிவார்ந்த தளத்திலிருந்து முட்டாள்தனத்திற்குச் சென்ற எந்த விடயமும் ஷரீஆவைச் சார்ந்த தாக இருக்க முடியாது; வலிந்த விளக்கத்தினூடாக அது ஷரீஆவினுள் நுழைக்கப் பட்டாலும் சரியே!''

இஸ்லாமிய ஷரீஆ அனைத்து நலன்களையும் விரிவாகக் குறிப்பிட்டு விளக்கவில்லை. எண்ணற்றுக் கிளை பிரியும் ஏராளமான நலன்களைப் பாதுகாப்பதற்கு அவசியமான அனைத்துச் சட்டங்களையும் அது கூறவுமில்லை. எனினும், தான் வழங்கி யிருக்கும் விரிவான கிளைச் சட்டங்களுடன் இணைந்த வகையில் பல பொதுவான சட்டங்களையும், முழுமொத்த விதிகளையும், சர்வ வியாபகமான நோக்கங்களையும் அது தந்திருக்கிறது. அவற்றிலிருந்து அவ்வப்போது புதிது புதிதாகத் தோன்றும்

*நிலைமைகளுக்கான சட்டங்கள் பெறப்பட முடியும். பின்வரும் அல்-குர்ஆன் வசனங்கள் இவ்வகை சார்ந்தனவாக கொள்ளப்படக் கூடியவை:*

*''நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும் உபகாரம் செய்யு மாறும் ஏவுகிறான்''. (16: 90)*

*''மேலும், நீங்கள் நன்மையே செய்யுங்கள்!'' (22: 77)*

*''எவர் அணுவளவாவது நன்மை செய்கிறாரோ அவர் அதனை கண்டு கொள்வார்; எவர் அணுவளவாவது தீமை செய்கிறாரோ அவர் அதனையும் கண்டு கொள்வார்.'' (99: 7-8)*

*''காலத்தின் மீது சத்தியமாக! நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான்; இறை விசுவாசம் கொண்டு, உகந்த செயல் புரிந்து, சத்தியத்தை பரஸ்பரம் உபதேசித்து, பொறுமையையும் பரஸ்பரம் உபதேசித்து வாழ்ந்தவர்களையும் தவிர!''. (அல்-அஸ்ர்)*

ஆக, அல்-மஸாலிஹ் அல்-முர்ஸலா என்ற விதி தனக்கான சட்ட பூர்வத் தன்மையையும் முக்கியத்துவத்தையும் இங்கிருந்து தான் பெற்றுக் கொள்கிறது. அந்த வகையில் எதுவெல்லாம் நலன், உரிமை, நீதி, உபகாரம் என்ற பண்பைப் பெற்றிருக்கிறதோ அது ஷரீஆ அடிப்படையில் வேண்டப்பட்டதாக மாறுகிறது. முக்கி யத்துவத்துக்கும் தேவையின் அளவுக்கும் ஏற்ப அது சிபாரிசு செய்யப்பட்ட (மன்துப்) ஒன்றாகவோ, அவசியம் வேண்டப்பட்ட (வாஜிப்) ஒன்றாகவோ அமைய முடியும்.

எவ்வாறாயினும், அல்-மஸாலிஹ் அல்-முர்ஸலா என்ற தலைப்பு கூட 'உஸூல்' துறை அறிஞர்களிடமும் சமகால ஆய் வாளர்களிடமும் பரந்த தேடலுக்கு உட்பட்டிருக்கிறது. அது தொடர்பான பல நூல்களும் எழுதப்பட்டிருக்கின்றன. அவை அனைத்தும் அல்-மஸாலிஹ் அல்-முர்ஸலா இஸ்லாமிய சட்ட வாக்கத்தில் பாரிய முக்கியத்துவமும் சான்றாதாரமும் கொண்ட தொரு பகுதி என்ற முடிவையே தருகின்றன.

இமாம் ஷாத்திபீ இவ்வாறு கூறுகிறார்:

சட்டங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்படுகின்ற அல்-மஸாலிஹ் அல்-முர்ஸலா மூன்று பண்புகளைப் பெற்றிருப்பது அவசியம்:

ஒன்று: ஷரீஆவின் இறுதி நிலை நோக்கங்களுடன் அவை பொருந்தி வர வேண்டும்; ஷரீஆவின் எந்த அடிப்படையோடும் அல்லது சட்ட வசனத்தோடும் முரண்படக் கூடாது.

இரண்டு: பகுத்தறிவால் புரிந்து கொள்ளத் தக்கவையாகவும், தர்க்க நியாயங்களுக்கு உட்பட்டவையாகவும், தர்க்க ரீதியாக சிந்திப்பவர்கள் சரிகாணத் தக்கவையாகவும் அவை அமைதல் வேண்டும். அந்த வகையில், இப்பகுதி ஷரீஆவினால் வரையறுக்கப்பட்ட வணக்க வழிபாடுகளுடன் தொடர்பற்றது.

மூன்று: அவற்றைச் செயற்படுத்துவதால் ஷரீஆவின் இறுதி நிலை நோக்கங்கள் பாதுகாக்கப்படும் நிலை காணப்படல் வேண்டும். அந்த வகையில், இத்திறந்த நிலை நலன்கள் வழிமுறைகளே அன்றி நோக்கங்கள் அல்ல...

இதன் பொருளும் சுருக்கமும் யாதெனில், நாம் சட்டங்களை உருவாக்குவதற்கு அடிப்படையாகக் கொள்கின்ற அல்-மஸாலிஹ் என்னும் நலன்கள், ஷரீஆவின் சான்றுகளாகும். அதன் இறுதி நோக்கங்களோடும் இயைந்து செல்வனவாகவும், அந்த நோக்கங்களை சாதிக்க உதவுவனவாகவும் இருக்க வேண்டும். வெறும் மனோ இச்சைக்கும், பிரமைக்கும், அடிப்படையற்ற கற்பனைக்கும் இடம் தராமல், தர்க்க அறிவால் புரிந்து ஏற்கத் தக்கனவாய் அவை அமைய வேண்டும்.

இப்பாரிய இஸ்லாமிய சட்டவாக்க அடிப்படையின் மீதே முஸ்லிம் நியாயவியல் அறிஞர்களும், ஆட்சியாளர்களும், நீதிபதிகளும் காலாகாலமாக பல்வேறு துறைகளில் எண்ணற்ற இஜ்திஹாதுகளை கட்டியெழுப்பினர்.

அபூபக்கர் (றழி) அவர்களது ஃகிலாபத்தில் அல்-குர்ஆன் ஒரே நூலாக தொகுக்கப் பட்டது இந்த விதியின் அடிப்படையில்தான். பின்னர் உஸ்மான் (றழி) அவர்களது ஆட்சிக் காலத்தில் அதிலிருந்து இஸ்லாமிய நகரங்களில் வாழ்ந்த அனைத்து முஸ்லிம்களுக்குமான நிலையான பிரதிகள் உருவாக்கப்பட்டதும் இந்த அடிப்படை யில்தான். 'அல்-முஸ்ஹஃப் அல்-உஸ்மானி' (உஸ்மானியப் பிரதி) என்று அழைக்கப்படும் இத்தொகுப்பே இன்றுவரை முஸ்லிம் உம்மாவினால் பயன்படுத்தப் பட்டு வருகிறது.

உமர் (றழி) அவர்களின் ஃகிலாபத்தின் போது வரலாற்று எழுதுகைக்கான உடன்பாடு எட்டப்பட்டதும் இந்த வகையில்தான். அப்போது சந்திர வருட ஆரம்பத்தை முஹர்ரம் மாதத்தின் முதல் தினத்திலிருந்து அமைத்துக் கொண்டனர். அவரது ஆட்சிக் காலத்திலேயே நிர்வாக அலுவலக அமைப்பும், படை வீரர் களுக்கான சம்பள அமைப்பும் ஏற்படுத்தப் பட்டன. நீதிபதி களுக்கும் பிற உத்தியோகத்தர்களுக்கும் சம்பளம் ஏற்படுத்தப் பட்டது. அறிஞர்கள், உபன்யாசகர்கள், தொழுகை நடத்துவோர் முதலியோருக்கும் கூட சன்மானங்கள் ஒழுங்கு செய்யப் பட்டன.

உண்மையில்- முஸ்லிம்கள் பெற்ற எண்ணற்ற சட்டத் தீர்ப்புகளும், நீதி-நிர்வாக ஒழுங்குகளும், பிற சமூகங்களிலிருந்து பெற்ற அனுபவங்களும் 'அல்-மஸாலிஹ் அல்-முர்ஸலா' அல்லது 'இஸ்திஸ்லாஹ்' என்ற இந்நடைமுறையையே அடிப்படையாகக் கொண்டிருந்தன.

ஆயினும், இவ்விதியின் பிரயோகத்தில் ஷூறா என்ற கோட்பாடு சிறிதளவு கூட கவனயீர்ப்பு பெறவில்லை என்பது துரதிஷ்டமானது.

ஷூறா செயற்பாட்டையும், அதன் மூலமாகக் கிட்டும் நலன் களையும், ஷூறா முறையிலான வாழ்வியலொன்றையும் சாத்தி யப்படுத்த உதவக் கூடிய அனைத்து ஏற்பாடுகளையும் சட்ட திட்டங்களையும் அன்று ஏற்படுத்த முடியுமான நிலை இருந்தது; இன்றும் அது முடியும்.

ஷூறா செயற்பாட்டுடன் தொடர்பான அனைத்தும் -இந்த வகையில்- கடமை (வாஜிப்) அல்லது விரும்பத் தக்கது (மன்தூப்) என்ற தரத்தில் நோக்கப்பட வேண்டியவையாகும். ஏனெனில், தேவை அனைத்தும் 'மஸ்லஹா முர்ஸலா' என்ற 'திறந்த நிலை நலன்'களாக அமைபவையே. ஆலோசகர்களைத் தெரிவு செய்தல், அவர்களுக்கான நிபந்தனைகளை நுணுக்கமாக வரையறை செய்தல், இந்த இரு அம்சங்களையும் குறிப்பிட்ட கால இடை வெளிகளில் மீளாய்வுக்கு உட்படுத்தல், ஷூறா செயற்பாட்டுக்கான கிரமமான கால நேரங்களைத் தீர்மானித்தல், (அறிவியல், நீதி, அரசியல், ராணுவம், நிதி முதலிய) பல்வேறு துறை சார்ந்த ஷூறா சபைகளை ஸ்தாபித்தல், முஸ்லிம் சமூகத்தின் ஆன்மீக-அரசியல் தலைவரைத் தெரிவு செய்வோர் யாவர் என தீர்மானித்தல், அவர்களது கலந்தாலோசனை அமைய வேண்டிய முறை, தலைவரைத் தெரிவு செய்யும் முறை, பதவி நீக்கும் முறை, அதற்கான நிபந்தனைகள், ஷூறா சபையின் அங்கத்தவர்கள் அந்தப் பணியின் காரணமாக சொந்த உழைப்பில் ஈடுபட முடியாத நிலை காணப்படுமாயின் அவர்களுக்கான வேதனம் முதலிய அனைத்து விவகாரங்களும் 'திறந்த நிலை நலன்கள்' என்ற இப்பகுதியினுள் அடங்குபவையே. எனவே தேவை ஏற்படும் போதெல்லாம் அவை இந்நோக்கில் அணுகப்படுவது அவசியம்.

### *4. பொது நலன் பயக்கக் கூடியவற்றை இரவல் பெறுதல்.*

இதே வசனத்தாலும் வார்த்தைப் பியோகத்தாலும் அறியப்பட்ட எந்த விதியும் ஷரீஆவில் கிடையாது. எனினும், இதன் உள்ளடக்கம் ஷரீஆ ரீதியாக சரி காணப்பட்டதாகவும், வரலாற்றிலும் சமகால யதார்த்தத்திலும் நடைமுறைப்படுத்தப் படுவதாகவும் இருந்து வருகிறது.

இறைத்தூதர் (ஸல்) அவர்களும், அன்னாரது தோழர்களும், நேர்வழி நடந்த ஃகலீபாக்களும், எல்லாக் கால முஸ்லிம்களும் இவ்விதியின் உள்ளடக்கத்தை செயற்படுத்தி இருக்கின்றனர். குறிப்பாக, அவர்களது நிறுவன ரீதியான ஒழுங்கமைப்புகளிலும்

நிர்வாக நடைமுறைகளிலும் இதனை நாம் காணலாம். முஸ்லிம்கள் தங்களுக்குப் பயன் தரக் கூடிய, தங்களது சன்மார்க்கத்துடன் முரண்படாத அனைத்தையும் பிற சமூகங்களிடமிருந்து இரவல் பெற்றிருக்கிறார்கள்.

மனிதனல்லாத படைப்புகளிலிருந்து கூட பயன் பெறுமாறுதான் அல்-குர்ஆன் நமக்கு கற்றுத் தருகிறது. நபி ஸுலைமான் (அலை) ஹுத்ஹுத் பறவையிடமிருந்து பயன் பெற்றதாகவும், அதனால் பெரும் வெற்றியையும் நன்மையையும் அடைந்து கொண்டதாகவும் அது கூறுகிறது.

*''(ஹுத்ஹுத்) கூறியது: நீங்கள் அறியாததை நான் அறிந்து கொண்டேன். 'ஸபஉ' தேசத்திலிருந்து உங்களுக்கு ஓர் உறுதியான செய்தி கொண்டு வந்திருக்கிறேன்.'' (27: 22)*

அரசியான பல்கீஸ் தனது இஸ்லாத்தை பிரகடனப்படுத்தியதும், அதன் விளைவாக அவரது அதிகாரத்திலும் ராஜயத்திலும் ஏற்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாற்றமுமே அந்த உறுதியான செய்தி.

*''என் ரட்சகனே, எனக்கு நானே அநியாயம் செய்து கொண்டேன். (இப்போது) ஸுலைமானுடன் இணைந்து அகிலங்களின் ரட்சகனான அல்லாஹ்வுக்கு அடிபணிகிறேன்'' என்று அப்பெண் கூறினாள்''. (27: 44)*

அவ்வாறே அண்டங் காக்கையிடமிருந்து ஆதமின் புதல்வன் பயன்பெற்றமை பற்றியும் அல்-குர்ஆன் நமக்கு எடுத்துக் கூறுகிறது:

*''எனினும், அவரது மனம் அவரது சகோதரரைக் கொன்று விடுமாறு தூண்டியதால் கொன்று விட்டார். அதனால் அவர் நஷ்டமே அடைந்தார். பின்னர், சகோதரரின் பிரேதத்தை எவ்வாறு அடக்கம் செய்வது என அவருக்கு காண்பிப்பதற்காக அல்லாஹ் ஒரு காக்கையை அனுப்பி வைத்தான். அது பூமியை தோண்டுவதைப் பார்த்த அவர், அந்தோ என் பரிதாபம்! என் சகோதரரின் பிரேதத்தை மறைப்பதற்கு இந்தக் காக்கையைப் போன்றாவது*

நடந்து கொள்ள இயலாதவனாகி விட்டேனா?' எனக் கூறி கைசேதப்படலானார்''. (5: 30-31)

ஹுத்ஹுத் பறவையிடமும் காக்கையிடமும் நாம் கற்றது இவ்வளவு எனில், சக மனிதனிடமிருந்து கற்கக் கூடியது எவ்வளவு? அந்த மனிதனுக்கோ அல்லாஹ் பெரும் சிந்தனா ஆற்றல்களைத் தந்திருக்கிறான்; அறிவையும் அனுபவத்தையும் அபிவிருத்தித் திறனையும் வழங்கியிருக்கிறான். மட்டுமன்றி, நபிமார்களதும் ஞானிகளதும் முதுசங்களால் செழுமையடைந்த வரலாறொன்றை அந்த மனிதன் கொண்டிருக்கிறான்.

நபியவர்களது ஸீறாவை நோக்கினால், அகழ் யுத்தம் எனப் பிரபல்யமடைந்த அஹ்ஸாப் யுத்த வேளையில், முஸ்லிம்களை வேரோடு அழிப்பதற்காக பல கோத்திரங்கள் இணைந்து மதீனாவை நோக்கி வந்தன. அப்பெரும் படையை மதீனாவில் நுழையாமல் தடுப்பதற்காக அகழி தோண்டும் யோசனை முன்வைக்கப் பட்டது. உண்மையில், இது பாரசீகர்கள் கையாண்டு வந்த வழிமுறையாகும். இது குறித்து அல்-ஹாஃபிழ் இப்னு ஹஜர் இவ்வாறு கூறுகிறார்:

''நபியவர்களது ராணுவப் படையெடுப்புகள் பற்றிய விபரங்களைப் பதிவு செய்திருப்போரது தகவலின் படி, அந்த யோசனையை முன்வைத்தவர் ஸல்மான் ஆவார். அவர் நபி (ஸல்) அவர்களிடம், 'பாரஸீகத்தில் நாங்கள் முற்றுகை இடப் பட்டால், எம்மைச் சூழ அகழி அமைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தோம்' எனக் கூறினார். எனவே மதீனாவைச் சூழ அகழி தோண்டுமாறு நபி (ஸல்) அவர்கள் கட்டளை இட்டார்கள். தாமும் அதில் ஈடுபட்டார்கள்...''

இங்கு நபியவர்கள், 'பாரஸீகர்களின் வழக்கம் நமக்குத் தேவையில்லை; நெருப்பு வணங்கிகளான அந்த மஜூஸிகளின் வழிமுறை நமக்கெதற்கு?' என்று கூறவில்லை.

தொழுகை நேரம் வந்து விட்டதை அறிவிப்பதற்கும், தொழுகையாளிகளை மஸ்ஜிதுக்கு அழைப்பதற்குமான ஒரு வழிமுறை பற்றி முஸ்லிம்கள் -இறைத்தூதர் (ஸல்) அடங்கலாக- கலந்தா

லோசனை செய்தபோது, யூதர்கள் போன்று சங்கு ஊதும் முறையை எடுத்துக் கொள்ளலாம் என்று சிலரும், கிறிஸ்தவர்களைப் போன்று மணியடிக்கும் முறையை எடுத்துக் கொள்ளலாம் என்று வேறு சிலரும் ஆலோசனை கூறினர். ஆனால் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அம்மனிதர்களை நிந்திக்கவோ கடிந்து கொள்ளவோ இல்லை. மாறாக, மிகச் சிறந்ததும் பொருத்தமானதுமான வழி முறையொன்றைக் கண்டடையும் வரை தொடர்ந்து கலந்தாலோச னையில் ஈடுபட்டார்கள். அதுவே அனைவரும் அறிந்த 'அதான்' கூறும் நடைமுறையாகும்.

எழுந்து நின்று உரை நிகழ்த்துவது தனக்குச் சிரமமாக மாறி விட்ட நிலையில், தோழர்களுடன் அது பற்றி நபி (ஸல்) அவர்கள் கலந்தாலோசனை செய்தார்கள். அப்போது 'மிம்பர்' ஒன்றை அமைக்கும் ஆலோசனையை முன் வைத்தவர்களுள் தமீம் அல் -தாரீ என்ற தோழரும் ஒருவர். ஷாம் தேசத்தில் அவ்வாறு மிம்பர் மேடைகள் பயன்படுத்தப் படுவதை அவர் கண்டிருந்தார். இது குறித்து அபூ ஹுறைறா (றழி) பின்வருமாறு விவரிக்கிறார்:

''மரக்குற்றி ஒன்றில் சாய்ந்து நின்று உரையாற்றிக் கொண்டிருந்த நபி (ஸல்) அவர்கள், 'நின்று கொண்டிருப்பது எனக்குச் சிரமமாக மாறி விட்டது!' என்று கூறினார்கள். அப்போது தமீம் அல்-தாரீ, 'நான் ஷாம் பிரதேசத்தில் பார்த்திருப்பதைப் போன்று உங்களுக்கு ஒரு மிம்பரை அமைத்துத் தரட்டுமா?' எனக் கேட்டார். நபி (ஸல்) அவர்கள் அது பற்றிக் கலந்தாலோசித்தபோது, தோழர்கள் அவ் வாறு அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை முன் வைத்தனர்''. அன்றைய நிலையில் ஷாம் தேசத்திலிருந்து இரவல் வாங்குதல் என்பதன் பொருள், ரோமர்களிடமிருந்தும் கிறிஸ்தவர்களிடமி ருந்தும் இரவல் வாங்குதலே.

புஹாரி, முஸ்லிம் கிரந்தங்களில் பின்வருமாறு பதிவு செய்யப் பட்டுள்ளது: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது சமகால ரோம, பாரசீக, அபீஸீனிய மன்னர்களுக்கு கடிதம் எழுத விரும்பிய போது, ''முத்திரை பதிக்காத எந்த மடலையும் அவர்கள் ஏற்க

மாட்டார்கள்'' என அன்னாரிடம் கூறப்பட்டது. எனவே, வெள்ளியாலான மோதிரமொன்றை நபியவர்கள் செய்து கொண்டார்கள். அதில் 'முஹம்மத் றஸூலுல்லாஹ்' என்ற முத்திரை செதுக்கப் பட்டி ருந்தது.

இப்னு அப்பாஸ் (றழி) கூறியதாக முஸ்லிமில் இவ்வாறு பதியப்பட்டுள்ளது:

''இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமக்கு அல்லாஹ்வினால் மாற்றுக் கட்டளை வழங்கப்படாத வரை வேதக்காரர்களுடன் உடன்பட்டுச் செல்வதையே விரும்பியிருந்தார்கள்''.

அப்துல் மலிக் பின் ஷுஐப் இப்னுல் லைஸ் என்பவருக்கு அப்துல்லாஹ் பின் வஹப் கூறியதாகவும், அவருக்கு அல் லைஸ் பின் ஸஅத் கூறியதாகவும், அவருக்கு மூஸா பின் அலி தனது தந்தையிடமிருந்து கூறியதாகவும் ஸஹீஹ் முஸ்லிமில் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது:

அமர் இப்னுல் ஆஸுடன் இருக்கும் நிலையில், அல்-முஸ்தவ்ரித் அல்-குறஷீ என்பவர் இவ்வாறு கூறினார்: ''மறுமை நாள் தோன்றும் போது ரோமர்கள் (கிறிஸ்தவர்கள்) பெரும்பான்மையினராக இருப்பர் என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்''. அதற்கு அம்ர், ''நீர் என்ன சொல்கிறீர்?'' என (ஆச்சர்யத்துடன்) கேட்டார். அதற்கு அல்-முஸ்தவ்ரித் கூறினார்: இறைத்தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து செவிமடுத்ததையே நான் கூறுகிறேன். அன்னார் கூறினார்கள்: ''இவ்வாறு நான் கூறக் காரணம், அவர்களிடம் காணப்படுகின்ற நான்கு பண்புகளாகும்: உள் முரண்பாடுகள் தோன்றும் போது சகிப்புடன் அதனைக் கையாள்வார்கள்; ஒரு துன்பம் நேர்ந்து விட்டால் விரைந்து அதிலிருந்து மீண்டு விடுவார்கள்; தோல்விக்குப் பிறகு விரைவில் சுதாகரித்துக் கொண்டு தாக்குவார்கள்; வறியோருக்கும் அநாதைகளுக்கும் பலவீனர்களுக்கும் அதிகம் அன்பு காட்டுவார்கள். ஐந்தாவதாகவும் அவர்களிடம் ஓர் அழகிய பண்பு உள்ளது: தங்கள் அரசர்களது அநியாயங்களை எதிர்ப்பார்கள்''.

இந்த அனைத்துப் பண்புகளும் மெச்சப்படும் வகையிலும் அவற்றை நாமும் கைக்கொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கும் வகையிலுமே இங்கு குறிப்பிடப் பட்டுள்ளன. இவற் றுள் ஐந்தாவதாகக் கூறப்பட்டுள்ள பண்பு நமது தலைப்புடன் அதிகம் நெருக்கம் கொண்டதாக உள்ளது எனலாம்.

இது தொடர்பில் நபியவர்களது ஸுன்னாவில் காணக் கிடைக்கும் மற்றோர் அழகிய செய்தி, 'உம்மு ஸர்உவின் ஹதீஸ்' என அறியப்படுகின்ற நீண்ட ஹதீஸாகும். இந்த ஹதீஸ் பற்றி நீதிபதி அய்யாழ் இவ்வாறு கூறுகிறார்: ''இது 'ஸஹீஹ்' என்பதிலும், அறிஞர்கள் இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதிலும் கருத்து வேறுபாடு இல்லை. புஹாரியும் முஸ்லிமும் அவர்களுக்குப் பின் வந்தோரும் ஸஹீஹான ஹதீஸ்களுடன் இதனை அடக்கியுள்ளனர். இந்த ஹதீஸின் சாராம்சம் இதுதான்:

'ஜாஹிலிய்யா' என்னும் மௌட்டீகக் காலத்தில் வாழ்ந்த பெண்களுள் பதினொரு பேர் ஓரிடத்தில் குழுமினர். ஒவ்வொரு பெண்ணும் தனது கனவனின் நல்ல பண்புகள் பற்றியும் தீய பண்புகள் பற்றியும் எடுத்துக் கூற வேண்டும் என உடன்பட்டனர். அனைவரும் எந்தப் பொய்யும் கலக்காமல் உள்ளதை உண்மையாகக் கூற வேண்டுமென்றும் உடன்பட்டனர். அதன்படி ஒவ்வொரு வரும் தனது கணவனைப் பற்றிக் கூறலானார். அவற்றுள் இறுதியாக வந்த பெண்ணே உம்மு ஸர்உ ஆவார். அவர் தனது கணவனின் தாராளத் தன்மை பற்றிய சுவாரசியமான அனுபவத்தை எடுத்துக் கூறியதால் அவரது பெயர் கொண்டே இந்த நபிமொழியும் அழைக்கப்பட்டது.

இந்த நீண்ட ஹதீஸின் ஓரிடத்தில் இவ்வாறு இடம்பெறுகிறது: இறைத்தூதர் (ஸல்) அன்னை ஆயிஷாவை நோக்கி, ''ஆயிஷாவே, ஸர்உவின் தந்தை ஸர்உவின் தாயுடன் இருந்ததைப் போன்று நான் உம்முடன் இருந்திருக்கிறேன்'' என்று கூறினார்கள். அதற்கு ஆயிஷா (றழி), ''எனது தந்தையும் தாயும் உங்களுக்கு அர்ப்பணம் அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் என்னுடன் ஸர்உவின் தந்தை

அவரது மனைவியுடன் நடந்து கொண்டதை விடவும் சிறந்த முறையில் நடந்து கொள்கிறீர்கள்!'' எனக் கூறினார்...

நீதிபதி அய்யாழ் இந்த ஹதீஸுக்கென தனியான விளக்கவுரை ஒன்றை ''புஃயதுர் ராஇத் லிமா தழம்மனஹு ஹதீஸு உம்மி ஸர்இ மினல் ஃபவாஇத்'' (உம்மு ஸர்உவின் ஹதீஸ் உள்ளடக்கியுள்ள பயன்கள்) என்ற பெயரில் வழங்கியுள்ளார். இந்த ஹதீஸ் பற்றி அவர் இவ்வாறு கூறுகிறார்:

''கடந்து போன சமூகங்கள் மற்றும் வாழ்ந்து மறைந்த தலைமுறைகள் பற்றிப் பேசுவதும் அவர்களை உதாரணங்களாக எடுத்துக் காட்டுவதும் ஆகுமானது என்பதையே இது உணர்த்து கிறது. ஏனெனில் அவர்களது வரலாறுகளில் அறிவுடையோருக்கும் ஆழ்ந்து சிந்திப்போருக்கும் ஆய்வாளருக்கும் படிப்பினையும் பயனும் உண்டு''.

இந்த ஹதீஸ் பற்றி மாலிகீ நியாயவியல் மரபைச் சேர்ந்த நீதி பதி அல்-முஹல்லப் பின் அபீ ஸுஃப்றா பின்வருமாறு கூறுவ தாகவும் நீதிபதி அய்யாழ் குறிப்பிடுகிறார்: ''ஒவ்வொரு சமூகத் திலும் நற்செயல் புரிவோரை முன்மாதிரியாகக் கொள்வது ஆகு மானது என்பதை இது காட்டுகிறது''. தொடர்ந்து நீதிபதி அய்யாழ் கூறுகிறார்: ''ஒவ்வொரு சமூகத்திலும் நற்செயல் புரிவோரை முன்மாதிரியாகக் கொள்வது ஆகுமானது என்ற கூற்று சரியா னதுதான்; அது ஷரீஆவுடன் முரண்படாத வரை!''

ஆக, இதுவே சரியான இஸ்லாமிய அணுகுமுறை. நன்மை புரியும் எவையும் அவரது நற்செயலில்... திறம்படச் செய்யும் எவரையும் அவரது திறம்பட்ட செயலில்... சரியாகச் செயற்படும் எவரையும் அவரது சரியான செயற்பாட்டில் நாம் முன்மாதிரியாகக் கொள்ள முடியும். அது இஸ்லாத்துடன் உடன்படுகிறதா? அதற்கு உதவியாக அமைகிறதா? முஸ்லிம்களுக்குப் பயன் அளிக்குமா? அவர்களது நலன்களைக் காக்குமா? என்பது மட்டுமே இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய அளவுகோல்.

நபித்தோழர்களும் நேர்வழி நடந்த கலீஃபாக்களும் இந்த அடிப்படையில்தான செயற்பட்டார்கள். பிற சமூகங்களிடமிருந்து அவர்கள் சங்கடமோ செயற்கைத் தனமோ இன்றி இரவல் வாங்கினார்கள்; பயன் பெற்றார்கள். இதற்கான உதாரணங்கள் ஏராளம். அவை எல்லோரும் அறிந்தவை. எனவே இதனை இன்னும் விரிவாக விவரிக்க வேண்டியதில்லை.

*பகுதி இரண்டு:*

## சீர்திருத்த - கட்டுமானக் களத்தில் அஷ்-ஷூறா

இற்றைக்குப் பல தசாப்தங்களுக்கு முன்னர் அறபு-இஸ்லாமிய பிராந்தியங்கள் புரட்சி அலைகளாலும் கோஷங்களாலும் கொந்தளித்துக் கொண்டிருந்தன. புரட்சிச் சிந்தனைகளும் புரட்சி பற்றிய கனவுகளும் முஸ்லிம் புத்திஜீவிகளின் சிந்தனையிலும் எதிர்பார்ப்புகளிலும் அபிலாஷைகளிலும் கூடாரமிட்டிருந்தன. சிலர் கம்யூனிஸப் புரட்சியை விரும்பினர்; வேறு சிலர் சோஷலிஸப் புரட்சியை விரும்பினர்; இன்னும் சிலர் குடியரசுப் புரட்சியை விரும்பினர்; மற்றும் சிலர் அரபு தேசியவாதப் புரட்சியை விரும்பினர்; இஸ்லாமியப் புரட்சியை விரும்பியோரும் ஒரு புறம் இருந்தனர். மதம், பாரம்பர்யங்கள், பிற்போக்குத் தனம் என்பவற்றுக்கு எதிராக கலாசாரப் புரட்சி மேற்கொள்ள விரும்பியோர் கூட இருந்தனர்.

சுருங்கச் சொன்னால், ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு முன்பு புரட்சித் தர்க்கமும் புரட்சிக் கோஷங்களும் புரட்சி முறைமைகளும் புரட்சிக் கலாசாரமுமே செல்வாக்குச் செலுத்தின. புரட்சிகள் நிகழ்ந்தாலும் நிகழா விட்டாலும் நமது உண்மையான சூழ்நிலைகள் அன்று தொட்டு இன்று வரை பெரிதாக எந்த விதத்திலும் மாறி விடவில்லை. ஆனால் இச்சூழ்நிலைகளை மாற்றியமைக்கவும்,

இருப்பதை விட சிறந்ததொரு நிலைக்கு அவற்றைக் கொண்டு செல்லவுமான நமது சிந்தனை மாறித்தான் போனது என்பதில் ஐயமில்லை. நிகழ்ந்திருக்கும் மாற்றத்தையும் அம்மாற்றம் சென்றி ருக்கும் திசை வழிகளையும் தேடிக் கண்டறிவது இங்கு நான் எடுத்துக் கொண்ட பணியன்று. ஆயினும்- இப்போது நாமிருக்கும் கட்டமானது புரட்சிக்கும் அதன் கோஷங்களுக்கும் வழிமுறை களுக்கும் பதிலாக, புனர் நிர்மாண சிந்தனை, அது பற்றிய கோஷங்கள், அதற்கான வழிமுறைகள் என்பவற்றால் ஆக்கிரமிக் கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை மட்டும் இங்கு பதிவு செய்து கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக- அண்மைய ஆண்டுகளில் சீர்திருத்தத்தை நோக்கிய அழைப்புகளும் கோரிக்கைகளும் கோஷங்களும் அழுத் தங்களும் அதிகரித்திருக்கின்றன. -மக்கள் திரளுடன் இசைந்து செல்லல் என்ற வகையிலாவது- சீர்திருத்தத்தை நோக்கி இன்று அனைவரும் அழைப்பு விடுக்கிறனர்; அதற்காக முயற்சிக்கின்றனர்; அதனை ஏற்படுத்தப் போவதாக வாக்குறுதி வழங்குகின்றனர்.

புனர் நிர்மாணம் என்ற விவகாரம் அண்மைக் காலத்தில் அதிகமான சொல்லாடலுக்கு உட்பட்ட அம்சங்களுள் ஒன்று. அது உள்ளிருந்து மேற்கொள்ளப்பட வேண்டியதா அல்லது வெளியி லிருந்து மேற்கொள்ளப்பட வேண்டியதா? அது இயல்பான சுய வளர்ச்சியா அல்லது வெளியிலிருந்து திணிக்கப்படும் மாதிரியா?... என்றவாறான சொல்லாடல்கள் அவை.

சீர்திருத்தத்துக்காக அண்மைக் காலமாக அகத்தே இருந்தும் புறத்தே இருந்தும் விடுக்கப் படுகின்ற அழைப்புகளின் அரசியல் சூழமைவினுள் நுழைய நான் விரும்பவில்லை. அவ்வாறே புறச் சீர்திருத்தத்தை நோக்கி அழைப்பவர்களது அல்லது (மத, தேசிய தனித் தன்மைகள் என்ற பெயரில் தங்களிடமுள்ளதை பற்றிப் பிடித்துக் கொண்டு) புறச்சீர்திருத்தத்தை மறுதலித்து விமர்சிப்ப வர்களது அரசியல்-சிந்தனா சூழமைவினுள் நுழையவும் நான் விரும்பவில்லை.

இந்த ஆய்வு ஷூறாவைப் பற்றியதாகவே அமைய வேண்டுமென விரும்புகின்றேன். எனவே அது தனது காலத்திலும் தனது சூழமைவிலும் நிகழ்பவை பற்றிய சாதகமான பார்வையைக் கொண்டிருக்கும் அதே வேளை, தனது உள்ளடக்கம், நோக்கம், தனித்துவமான பகைப்புலம் என்பவற்றிலிருந்து வெளியேறி விடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த வகையில் அது ஆரம்ப முதல் இறுதி வரை உள்ளார்ந்த சுய சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதி மட்டுமே. சற்று முன்னர் குறிப்பிட்டது போல், பிறரிடமிருந்து நலனும் பயனும் உள்ள அம்சங்களை இரவல் வாங்கும் சாத்தியமும் இங்குண்டு.

இங்கு நாம் கூறும் உள்ளார்ந்த சுய சீர்திருத்தத் திட்டம் என்பது, ஒரு தேசத்தின் பிரஜைகளால் ஏற்படுத்தப்பட்டு தேசத்தின் உள்ளிருந்து அமுல்படுத்த அவர்கள் உழைக்கும் திட்டத்தைக் குறிக்காது. ஏனெனில் அது சில போது உண்மையான உள்ளார்ந்த சுய சீரமைப்பாக இருக்கவும் முடியும்; அப்பதத்துக்கான வெறும் மொழிபெயர்ப்பாக இருக்கவும் முடியும்; அல்லது -அதிக பட்சம்- மிக மேலோட்டமான மீளமைப்பாகவும் ஒழுங்கு படுத்தலாகவும் கூட இருக்க முடியும்.

உள்ளார்ந்த சுயசீர்திருத்தம் என்பது -உண்மையில்- 'உம்மா'வின் உள்ளிருந்து தோன்றுவதாகும். அதன் நம்பிக்கைக் கோட்பாடு, அதன் கலாசாரம், நாகரிக ஆளுமை, எழுச்சி சார்ந்த தயார் நிலைகள் என்பவற்றிலிருந்து அது ஊற்றெடுக்க வேண்டும். உம்மா அதனை விசுவாசிக்க வேண்டும்; உத்வேகத்துடன் அதனோடு உறவாட வேண்டும்; அதில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ள வேண்டும். அல்லது -குறைந்த பட்சம்- இந்த அனைத்துக்குமான ஏற்பு நிலையாவது அதனிடம் இருக்க வேண்டும்.

ஷூறா செயற்பாடு என்பது அல்லாஹ்வினால் ஏவப்பட்டு, அவனது தூதரினாலும் நேர்வழி நடந்த ஃகலீபாக்களினாலும் முன்மாதிரி வழங்கப்பட்ட ஒரு செயற்பாடு என்ற வகையில், மனித உள்ளங்களில் ஆழ வேரூன்றிய சீர்திருத்த அடிப்படை

யொன்றைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. மட்டுமன்றி, தேவையான வகையில் மாற்றங்கள் செய்வதற்கும் இசைவாக்கம் செய்வதற்கும் ஏற்பு நிலை கொண்டதாக அது உள்ளது.

இந்த வகையில், இவ்வாறான சீர்திருத்தக் கொள்கையை 'உம்மா'வைக் கட்டியெழுப்புவதற்கான செயலார்ந்த பொறிமுறை யாகவும், தூது சார்ந்த எழுச்சிக்கான இயலுமைகளை இயக்கும் கருவியாகவும் ஆக்கிக் கொள்வது எவ்வாறு?

## கலந்தாலோசனைக் கலாசாரமே நமது முதல் தேவை

நபியவர்கள் காலத்திலும், நேர்வழி நடந்த ஃகலீபாக்கள் காலத்திலும் ஷூறா செயற்பாடு எவ்வளவு செறிவாக இடம் பிடித்திருந்தது என்பதை முன்னர் கண்டோம். அதன் பிறகு செயற்பாட்டு மட்டத்தில் மாத்திரமன்றி, புலமைத்துவக் கோட் பாட்டு மட்டத்திலும் கூட அதில் எவ்வாறு வீழ்ச்சியும் கோளாறும் ஏற்பட்டது என்பதையும் பார்த்தோம்.

முதலில் நாம் உயிர்ப்பிக்க வேண்டிய, சரிசெய்ய வேண்டிய, உரிய கவனம் செலுத்த வேண்டிய ஒரு விடயம் உள்ளது. அதனை நாம் கலந்தாலோசனைக் கலாசாரம் என அழைக்க முடியும். ஷூறா என்ற இத்தலைப்பு பற்றி எழுதி, பரப்புரை செய்து, தூண்டுதல் அளிக்குமாறு விடுக்கப்படும் அழைப்பானது அது பற்றி இன்னும் அதிகம் எழுதப்பட வேண்டும்... இன்னும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற உணர்வின் வெளிப்பாடே என்ப தில் ஐயமில்லை. அவ்வுணர்வு இந்த அழைப்பை முன்வைப் போரிடமும் உள்ளது; அதனை ஏற்று நடைமுறைப் படுத்து வோரிடமும் உள்ளது.

ஷூறா பற்றி இன்னும் அதிகமாக எழுதப்பட வேண்டும்; விரிவுரைகளும் கருத்தரங்குகளும் நடாத்தப்பட வேண்டும். ஒரு புறம் அதன் முக்கியத்துவம் பற்றி அறிமுகப் படுத்தப்படும் அதே வேளை, மறுபுறம் அதனைச் செயற்படுத்தாது இருப்பதனால் ஏற்படக் கூடிய இழப்புகளும் தீங்குகளும் விளக்கப்பட வேண்டும்.

கலந்தாலோசனைக் கலாசாரத்தைப் பரப்புதல் என்பதன் பொருள் இதுதான்.

ஷூறா பற்றிய இந்த அறிவூட்டல் முனைவானது தொடர்புச் சாதனங்கள், கல்வி, உபதேசம், வழிகாட்டல், உரைகள், சட்டத் தீர்ப்புகள் முதலிய அனைத்து வழிகளாலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கலந்துரையாடல் கலாசாரமானது ஷூறா செயற்பாட்டை அனைத்து சமூக விவகாரங்களிலும் துறைகளிலும் பொதுமைப் படுத்துதல் என்ற பொருளையும் தரும். மக்கள் அதனை அன்றாட வாழ்வில் பிரயோகிக்க வேண்டும்; பயில வேண்டும்; அதன் பெறுமதியையும் பெறுபேறுகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆக- ஷூறா என்பது ஆட்சியாளர்களுக்கும் தலைவர்களுக்கும் பிரத்தியேகமானதல்ல; ஃகலீபாவைத் தெரிவு செய்வதற்கு மட்டும் செயற்படுத்தப்படுவதல்ல; யுத்தங்களோடும் அரசியலோடும் மாத்திரம் மட்டுப்படுத்தப் படுவதல்ல. அது ஒரு வாழ்க்கை முறை; சிந்திப்பதற்கும் திட்டமிடுவதற்குமான வழி; பிறருடன் தொடர் பாடல் மேற்கொள்வதற்கான வகை மாதிரி.

ஷூறாவை எவராலும் -அவரது விவகாரம் பெரியதாயினும் சிறியதாயினும்... அவரது அறிவு பரந்ததாயினும் வரையறுக்கப் பட்டதாயினும்...- புறக்கணிக்க முடியாது. அவ்வாறு ஒரு மனித ரால் அதனைப் புறக்கணிக்க முடியுமென்றிருப்பின், அதற்குத் தகுதி படைத்த ஒரே நபர் மனித இனத்தின் தலைவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மட்டுமே. ஆனால், அவர்கள் கூட சிறிய, பெரிய, குறிப்பான, பொதுவான, மார்க்க, உலக விவகாரங்கள் அனைத்தி லும் ஆலோசனை கேட்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள்.

ஒரு மனிதன் தனது விவகாரங்களை நிர்வகிக்கும் தரத்துக்கு ஷூறா அவனை உயர்த்தி விடுகிறது; அவனது நலன்களை விருத்தி செய்கிறது; தீமைகளை குறைக்கிறது; தூய்மைப் படுத்துகிறது; அறிவையும் சிந்தனையையும் வளர்க்கிறது.

கணவன்-மனைவி, பெற்றார்-பிள்ளைகள் என்போருக்கிடையிலான குடும்பத் தொடர்புகளைச் சீரமைக்க ஷூறா வழி செய்கிறது; பரஸ்பர உரையாடல், புரிந்துணர்வு என்பவற்றின் மீது நெருங்கிய உறவுகளை கட்டமையச் செய்கிறது; ஒருதலைப் பட்சமான தீர்மானங்களையும், அவற்றினால் விளையும் தீமைகளையும் மனக்கசப்பையும் தடுக்கிறது; ''ஆண்கள் பெண்களை நிர்வகிப்பவர்கள்'' என்பது வெறும் எதேச்சாதிகாரமும் மேலாதிக்கமும் கட்டாயப்படுத்தலும் மட்டுமே என்ற மட்டமான புரிதலை விலக்கி, பரஸ்பர ஆலோசனையையும் புரிதலையும் திருப்தியையும் ஒத்துழைப்பையும் கொண்ட நிர்வகிப்பு அது என மாற்றியமைக்கின்றது.

ஷூறா இவ்வாறு -அல் குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் இயைபாக- தனிநபர்களது வாழ்விலும், கணவன்-மனைவி உறவிலும், பெற்றார்-பிள்ளை தொடர்பிலும் நடைமுறைச் சாத்தியமாக இருக்கும்போது, பொது விவகாரங்களுக்கும் நலன்களுக்கும் அதிக நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும் என்பது தெளிவானது. கலந்தாலோசனைக் கலாசாரம் பரப்பப் படுவதிலும் செயற்படுத்தப் படுவதிலும் முன்னோடியாக அமைய வேண்டிய பொதுத் துறைகளுள் முன்னிலை வகிப்பது, ஒழுங்கமைக்கப்பட்ட -குழு ரீதியான- இஸ்லாமியப் பிரசார செயற்பாடாகும். அந்த வகையில், பிரசாரக் குழுக்களும் அமைப்புகளும் மூன்று மட்டங்களில் முஸ்லிம் அணிகளுக்குள் கலந்தாலோசனைக் கலாசாரத்தைப் பரப்ப முடியும். அது அவற்றின் கடமையும் கூட!

*1.* முஸ்லிம் பொதுமக்கள். குறித்த விடயம் தொடர்பாக அவர்களுக்கு அழைப்பு விடுப்பதன் மூலமும் அறிவூட்டுவதன் மூலமும் இது மேற்கொள்ளப் படலாம். அனைத்து மட்டங்களிலும் உள்ள அழைப்பாளர்கள் -தனிநபர்களாகவும் குழுக்களாகவும்- எல்லா வழிமுறைகள் ஊடாகவும் இதில் பங்காற்ற முடியும்.

*2.* இவ்வமைப்புகள் தமது அங்கத்தவர்களையும் அபிமானிகளையும் ஷூறா நடத்தைக்குப் பயிற்றுவிக்க வேண்டும்; தமது

செயற்பாடுகளிலும் நிகழ்ச்சி நிரல்களிலும் பயிற்றுவிப்பு நோக்கங்களிலும் ஒன்றாக ஷூறா செயற்பாட்டை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

*3. அவை தமது கூட்டுச் செயற்பாட்டு நிறுவனங்கள், தீர்மானங்கள், முன்னெடுப்புகள், நிலைப்பாடுகள் முதலிய அனைத்திலும் ஷூறாவை நிலை நிறுத்த வேண்டும். சமகால இஸ்லாமிய அழைப்பாளர் ஒருவரது அறிவார்ந்த உபதேசம் இவ்வாறு அமைந்திருக்கிறது: ''இஸ்லாத்தின் அரசை முதலில் உங்களுக்குள் நிலை நிறுத்துங்கள்; பிறகு அது உங்கள் நிலத்தில் நிலைபெறும்''. இப்பிரசார அமைப்புகள் சீரிய இஸ்லாமிய ஆட்சியொன்றை ஏற்படுத்த விரும்புவதாயின், ஷூறா செயற்பாடும் அதன் சட்ட பூர்வத் தன்மையும் அவற்றின் பிரதான பண்புகளுள் ஒன்றாக மாற வேண்டும். அந்த வகையில், தம்மிலும் தமது அணிகளிலும் இதனை அவை முதலில் நிதர்சனப் படுத்தட்டும்!*

கலந்தாலோசிக்கும் பண்பு கொண்ட தனிநபர்களும் குழுக்களுமே ஷூறாவை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியை நோக்கிய மார்க்கமும் தாங்கு தூணும் ஆகும். *''அவர்களது அனைத்து (பொது) விவகாரங்களும் அவர்களுக்கு மத்தியிலான கலந்தாலோசனையின் அடிப்படையில் அமைந்திருக்கும்''* என்ற இறைவசனம், முஸ்லிம்கள் எந்த அரசோ ஃகிலாபத்தோ இன்றி வெறும் பிரச்சாரக் குழுவாக மாத்திரம் இருந்த போதுதான் இறங்கியது என்பதை நினைவில் கொள்வோமாக!

சிறிய சமூக அலகுகளின் மட்டத்தில் ஷூறா அடிப்படையிலான தொடர்புகளையும் நிர்வாக முறைகளையும் ஏற்படுத்திக் கொள்வது கூட கலந்தாலோசனைக் கலாச்சாரத்தின் ஒரு பகுதியே. குடிசன அலகுகள், தொழில் முறை அலகுகள் என்பவற்றை இச்சமூக அலகுகளுக்கு எடுத்துக்காட்டாக கூற முடியும். சுற்றுப் புறம், கிராமம், ஒரு குறிப்பிட்ட மஸ்ஜித் சார்ந்தோர், ஒரு குறிப்பிட்ட சந்தை, ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலை, விவசாய எல்லை முதலிய அனைத்து மட்டங்களிலும் அவற்றுக்கென்று பொதுவான

விவகாரங்களும் பிரச்சினைகளும் நலன்களும் இருப்பதால் அவை அனைத்துக்கும் கலந்தாலோசனை அவசியம்; பரஸ்பர புரிந் துணர்வும் ஷூறா அடிப்படையிலான திட்டமிடல்களும் அவசியம். இவை சம்பந்தப்பட்டவர்களுக்கு மத்தியில் நேரடியாக இடம் பெறவும் முடியும்; அவர்களது தலைவர்கள், மேற்பார்வையாளர்கள், பிரதிநிதிகள், நம்பிக்கையாளர்கள் முதலியோருக்கு ஊடாக இடம் பெறவும் முடியும்.

உதாரணமாக, மஸ்ஜித் என்பது ஒரு நிர்வாகம். அதை நிர் மாணிக்கும் கடமைப்பாடும் நிர்வகிக்கும் பொறுப்பும் அப்பிரதேச வாசிகளை அல்லது ஊர்வாசிகளைச் சாரும். அந்த வகையில், அதன் விவகாரங்கள் ''அவர்களுக்கு மத்தியிலான ஆலோசனை யின்'' படியே அமைந்திருக்கும். நபி (ஸல்) அவர்களது நடை முறையும் இதனையே காண்பிக்கிறது. மஸ்ஜிதுக்கும், அதனை அண்டியோருக்கும் அன்னியமான ஒருவர் வந்து தொழுகை நடாத்துவதற்கு முற்படுவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்தது இந்த வகையில்தான். ஏனெனில், அவ்வாறு தலைமை (இமாமத்) வகிப்பவர் குறித்த மஸ்ஜிதையும் பிரதேசத்தையும் சார்ந்தவராக இருக்க வேண்டும் என்பது அடிப்படை விதியாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ''ஒரு கூட்டத்தினரை தரிசிப்பவர் அவர் களுக்கு (தொழுகையில்) தலைமை தாங்க வேண்டாம்; அவர் களிலிருந்து ஒருவரே தலைமை தாங்கட்டும்!''.

நபித் தோழரான மாலிக் பின் ஹுவைரித் ஒரு மஸ்ஜிதுக்கு போதனைக்காகச் செல்லும்போது, மஸ்ஜிதைச் சேர்ந்தோர் தொழுகை நடாத்த அவரை முற்படுத்தினாலும் அதிலிருந்து தவிர்ந்து கொள்பவராக இருந்தார்.

அவ்வாறே ''ஒரு சமூகத்தினர் வெறுக்கும் நிலையில் அவர் களுக்கு (தொழுகையில்) தலைமை தாங்குபவரை'' இறைத்தூதர் (ஸல்) சபித்ததாகக் காட்டும் பல அறிவிப்புகள் -ஒன்றையொன்று பலப்படுத்தும் வகையில்- வந்துள்ளன.

இமாம் திர்மிதீ தனது 'அல்-ஜாமிஉ' கிரந்தத்தில் இவ்வாறு கூறுகிறார்: ''ஒருவரை ஒரு கூட்டத்தினர் வெறுத்திருக்கும் நிலையில், அவர்களுக்கு அவர் தலைமை தாங்குவதை அறிஞர்களுள் ஒரு சாரார் வெறுக்கத் தக்கதாக (மக்றூஹ்) கருதுகின்றனர். தலைமை தாங்கும் நபர் அநியாயக்காரராக இல்லாத பட்சத்தில், அந்தப் பாவம் அவரை வெறுத்தவர் மீதே விழும்''. இது குறித்து அஹ்மத், இஸ்ஹாக் ஆகியோர் கூறுவதாவது: ''வெறுப்பவர் ஒருவராக அல்லது இருவராக அல்லது மூவராக இருந்தால் அக் கூட்டத்தினருக்கு தொழுகை நடாத்துவது குற்றமில்லை; அவர்களுள் பெரும்பான்மையினர் அவரை வெறுக்காத வரை!''.

இதன் பொருள்: தலைமை தாங்குபவர் மஸ்ஜித்வாசிகள் அனைவராலும் அல்லது -குறைந்த பட்சம்- அவர்களுள் பெரும்பான்மையினரால் ஏற்றுக் கொள்ளப் பட்டிருத்தல் அவசியம். அவர்கள் விரும்பாத நிலையில் அவரை அவர்கள் மீது திணிப்பது, அவர் தானாகவே முன்வருவது கூடுமானதன்று.

இந்த வகையில்தான், எந்தவொரு மஸ்ஜிதையும் சார்ந்த வெகுஜனம் தங்களுக்கான 'இமாம்' ஒருவரைத் தெரிவு செய்யும் போது, அல்லது இருப்பவரை -அவசியமேற்படின்- மாற்றும் போது தங்களுக்கு மத்தியில் கலந்தாலோசனை செய்வது கட்டாயமாகிறது. மஸ்ஜிதுகள் மீது உத்தியோகபூர்வ அதிகாரம் கொண்டிருப்பவர்களும் மக்களுக்கு இச்சந்தர்ப்பத்தை வழங்குவது அவசியம். மையப் படுத்தப்பட்ட நியமனத்தையும் நிர்வாகத்தையும் முற்படுத்தி இந்நடைமுறையை அவர்கள் ரத்து செய்து விடாமல், அதனை ஒழுங்கமைக்கவும் அதற்குத் தூண்டுதல் அளிக்கவும் பங்காற்ற வேண்டும். ஏனெனில், இத்தகைய மையப்படுத்தப்பட்ட நியமனமும் நிர்வாகமும் பயனற்றதாகவும் முறைகேடானதாகவும் மாறிவிட்டது மட்டுமன்றி, மக்கள் மயப்படாததாகவும் கலந்தாலோசனைக்கு உட்படாததாகவும் மாறி விட்டது.

தமக்கே உரிய சிறப்புத்துறை கொண்ட பல உள்ளூர் அமைப்புகளுடனும் சங்கங்களுடனும் இன்று பல அமைச்சுகள் ஒத்து

ழைப்பை ஏற்படுத்தி வருவதைக் காண்கிறோம். (கலாசார அமைச்சு, சமூக விவகார அமைச்சு, இளைஞர் விளையாட்டுத் துறை அமைச்சு, சுகாதார அமைச்சு... போன்ற) இந்த அமைச்சு களின் செயற்பாடுகளுக்கு மேற்குறித்த உள்ளூர் அமைப்புகள் ஒத்துழைப்பு வழங்குவதுடன், அச்செயற்பாடுகளை மேற்பார்வை யும் செய்து வருகின்றன. இந்நடைமுறையுடன் இயைந்த வகை யில்தான், இஸ்லாமிய உலகில் காணப்படுகின்ற பெரும்பாலான மஸ்ஜித்களை மேற்பார்வை செய்யும் 'இஸ்லாமிய விவகாரங்கள் மற்றும் தர்மச் சொத்துகள்' தொடர்பான அமைச்சுகளும் மஸ்ஜித் விவகாரங்கள் மீது உள்ளூர் நிர்வாகத்தை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்ளூர் சங்கங்கள் அல்லது மக்கள் அமைப்புகள் மூலமாகவோ வேறு மரபு வழியான அல்லது சட்ட ரீதியான வடிவங்கள் மூலமாகவோ இந்த உள்ளூர் நிர்வாகம் மேற்கொள்ளப்பட முடியும்.

இத்தகைய நிர்வாகமும் திட்டமிடலும் மஸ்ஜித் முன்வைக்கும் தூதின் தரத்தையும் மக்களின் தரத்தையும் உயர்த்தும் என்பதில் ஐயமில்லை. அதிலும் குறிப்பாக, மஸ்ஜிதுகளை மேற்பார்வை செய்யும் அரச சார்பிலான நிறுவனங்களது அல்லது நாட்டிலுள்ள அறிஞர்கள், உபன்யாசகர்கள், இமாம்கள் முதலியோரது உதவியும் ஒத்துழைப்பும் இருந்தால் அந்த உயர்வு நிச்சயம் ஏற்படும். இந்த அனைத்தும் சேர்ந்து இறுதியில் கலந்தாலோசனைக் கலாசாரத் துக்கும் அதன் செயற்பாட்டுக்குமே உதவப் போகிறது.

அறிஞர்கள் கூட தங்களது சட்ட மற்றும் நியாயவியல் இஜ்தி ஹாதுகளின் போதும், பல்வேறு புதிய பிரச்சினைகள் தொடர்பான நிலைப்பாடுகளை எடுக்கும் போதும், பரஸ்பர கலந்துரையாட லும் கலந்தாலோசனையும் மேற்கொண்டு, முடிந்த வரை உடன் பாடொன்றை எட்ட முயல வேண்டும். இறைத்தூதர் (ஸல்) அவர்களது காலம் தொட்டு இந்நடைமுறை எவ்வளவு ஆழ வேரூன்றியிருந்தது என்பதை நாம் முன்னர் கண்டோம். நபித் தோழர்கள் மேற்கொண்ட மிக முக்கியமான... பிரபலமான கலந்துரையாடல்கள், புதிதாகத் தோன்றிய நிலைமைகள் தொடர்

பாகவும் செயற்பாடுகள் தொடர்பாகவும் முரண்பாடுகள் தொடர் பாகவும் இஜ்திஹாத் செய்யும் போதே இடம்பெற்றன. பல்வேறு காலப்பிரிவுகளில் வாழ்ந்த இஸ்லாமிய நீதிபதிகளதும் நியாய வியல் அறிஞர்களதும் நடைமுறை கூட அதுவாகத்தான் இருந்தது.

கலந்தாலோசனை அடிப்படையிலான கூட்டு இஜ்திஹாதின் அருள் நிறைந்த மீள் பிரசன்னத்தை நமது சமகாலம் கண்டு கொள்ளத் தொடங்கியிருக்கிறது என்பதையும் இங்கு பதிவு செய்யத்தான் வேண்டும். பல நியாயவியல் சபைகள் (ஜாமிஉ ஃபிக்ஹிய்யா) தோற்றம் பெற்றிருப்பது இதனை தெளிவாகக் காட்டுகிறது. இத்தகைய சில சபைகள் பல்வேறு இஸ்லாமிய பிராந்தியங்களைச் சேர்ந்த அறிஞர்களை உள்ளடக்கியிருக்கின்றன. 'இஸ்லாமிய ஒத்துழைப்பு நிறுவன'த்தின் கீழ் இயங்கும் இஸ் லாமிய நியாயவியல் மன்றம், 'றாபிதத்துல் ஆலமில் இஸ்லாமி'யின் கீழ் இயங்கும் இஸ்லாமிய நியாயவியல் மன்றம் என்பவற்றை இதற்கு எடுத்துக் காட்டாக கூறலாம். இன்னும் சில சபைகள் அந்தந்தக் கண்டங்கள் சார்ந்து நின்று செயற்படுகின்றன. தீர்ப்புக் கும் ஆய்வுக்குமான ஐரோப்பிய சபை, வட அமெரிக்காவுக்கான நியாயவியல் மன்றம் என்பன இவ்வகையினுள் அடங்கும். இவ்வாறு பல்வேறு இஸ்லாமிய பிராந்தியங்களில் நியாயவியல் சபைகளும் ஃபத்வா அமைப்புகளும் காணப்படுகின்றன.

இவை மெச்சத்தக்க சிறந்த தோற்றப்பாடுதான். ஆயினும், எண் ணிக்கையிலும் பிரதிநிதித்துவ ஆற்றலிலும் நம்பகத் தன்மையிலும் ஆக்கத் திறனிலும் தங்களது குரலையும் தீர்ப்புகளையும் நிலைப் பாடுகளையும் பொதுமக்களுக்கு எட்டச் செய்வதிலும் இவை இன்னும் வரையறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன.

கலந்தாலோசனைப் பண்பும் நம்பகத் தன்மையும் வினைத் திறனும் கொண்ட அறிவியல் அமைப்புகள் முஸ்லிம் பொதுமக்கள் மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் ஏற்படுத்தப் படுவது அவசியம். அதுவே இஸ்லாமிய சிந்தனையையும் இஸ்லாமிய நியாயவியலையும் -குறிப்பாக நியாயவியல் சட்டத் தீர்ப்புத்

துறையையும்- வியாபித்து நிற்கின்ற குழப்ப நிலையிலிருந்தும் ஒழுங்கீனத்திலிருந்தும் நம்மை வெளியில் கொண்டு வரும்.

நினைத்தவாறெல்லாம் சன்மார்க்கம் பற்றிப் பேசுவதையும், மார்க்கத்தின் பெயரால் தீர்ப்பு சொல்ல முற்படுவதையும் நம்மால் தடுக்க முடியாது; 'சம்பந்தப்பட்ட அதிகாரிகள்' வரைந்தளிக்கும் விதிமுறைகளுக்கேற்ப 'வேண்டுகோள்' அடிப்படையில் மார்க்கத் தீர்ப்பு வெளியிடுவோரையும் நம்மால் தடுக்க முடியாது. அவ் வாறே, இன்று பல்வேறு தீர்ப்புகளை வெளியிட்டு உலகமெங்கும் குழப்பங்களாலும் போர் நெருப்பாலும் மக்களைக் கருக வைத்துக் கொண்டிருப்போரையும் நம்மால் தடுத்து நிறுத்த முடியாது. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த முற்படுவது பயனுள்ள தீர்வாகவும் அமையாது.

உண்மைத் தன்மையும் அறிவியல் பலமும் உள்ளதைக் கொண்டு இடைவெளியை நிரப்புவதுமே இதற்கெல்லாம் தீர்வாக அமைய முடியும். நன்மதிப்பும் நம்பிக்கையும் ஆதார பூர்வமாக தம் முடிவுகளை முன்வைக்கும் திராணியும் கொண்டவர்களால் அந்த இடைவெளி நிரப்பப்பட வேண்டும். தகைமையும் சுயாதீனப் பண்பும் ஒன்றிணைந்த கூட்டு இஜ்திஹாத் மற்றும் கூட்டுத் தீர்ப்பு என்பவற்றினூடாகவே இது அதியுயர் வடிவத்தில் நிதர்சனமாக முடியும். இவ்வாறு கூட்டு இஜ்திஹாத் பரவலாக மேற்கொள்ளப் படும் நிலை தோன்றினாலும், தனி நபர் இஜ்திஹாத் ரத்துச் செய்யப் படவோ அதன் சட்டபூர்வத் தன்மை இல்லாதொழிக்கப் படவோ அதன் அவசியப்பாடும் பயனும் குறைக்கப்படவோ போவதில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

சுருங்கக் கூறின், ஷூறா என்பது பொதுவான கலாசாரமாகவும் நடத்தையாகவும் இருக்க வேண்டும். அது சட்டமாகவும் நிறுவன ஒழுங்காகவும் அமைவதற்கு முன்பு, ஒழுக்கமாகவும் விழுமிய மாகவும் அமைதல் வேண்டும். ஷூறா தொடர்பான சட்டங்களும் ஒழுக்கங்களும் வெற்றியடைவது அல்லது தோல்வியடைவது அவற்றின் கீழாகவும் சூழமைவிலும் இடம்பிடித்திருக்கின்ற

கலந்துரையாடல் கலாசாரத்தின் அளவிலேயே தங்கியுள்ளது. அந்தக் கலாசாரமே சட்டங்களுக்கும் ஒழுங்குகளுக்கும் அத்திவார மாக அமைய வேண்டும்; அவற்றுக்கு ஊட்டமளித்துப் பலப்படுத்த வேண்டும்; அவை மீறப்படாமல் பாதுகாக்க வேண்டும். இக் கலாசாரம் பொதுவாக சமூகத்திலும் அதன் விவகாரங்களை நிர்வகிப்பதிலும் வினைத்திறனுடன் வியாபித்திருக்கும் நிலை தோன்றுமாயின், அப்போது நாம் தயக்கமின்றி முன்சென்று அரச மட்டத்திலும் அதன் நிறுவனங்களிலும் திணைக்களங்களிலும் ஷூறா செயற்பாட்டை ஸ்தாபிக்கவும் ஒழுங்கமைக்கவும் முடியும்.

**ஷூறா செயற்பாட்டை ஒழுங்கமைத்தல்:**

ஷூறா செயற்பாட்டை ஆள்கின்ற சில பொதுவான கொள் கைகளையும் விதிகளையும் முன்னர் விளக்கினேன். ஷூறா செயற்பாட்டுக்கென விரிவான-வரையறுக்கப்பட்ட ஒழுங்கொன்று ஏற்படுத்தப் படாததால், அது புறக்கணிப்புக்கு அல்லது அவ்வப் போதைய மனநிலைக்கேற்ப இங்குமங்கும் சிதறிய வகையில் கைக்கொள்ளப்படும் நிலைக்கு -வரலாற்றில்- உட்பட்டதையும் விளக்கினேன். இப்பாரிய கோளாறை நிவர்த்திப்பதற்கான முற் பணியாக -முன்சென்ற பகுதியில்- ஷூறா செயற்பாட்டை நிறுவன ரீதியாக ஒழுங்கமைக்க உதவக் கூடிய இஸ்லாமிய சட்டவாக்க விதிகள் சிலவற்றையும் விளக்கினேன்.

இந்த அனைத்தினதும் ஒளியில் நான் கூறுவது இதுதான்:

ஷூறா செயற்பாட்டுக்கென விரிவான... கட்டாயமான ஒழுங்கு கள் பின்பற்றப்படாமல் ஷூறாவின் உண்மையான பயனும், சீர்திருத்தம், கட்டுமானம், எழுச்சி என்பவற்றுக்கான சாதனமாக அதனைக் கொள்வதும் ஒரு போதும் கைகூடப் போவதில்லை. மட்டுமன்றி, இந்த ஒழுங்குகள் தேவை ஏற்படும் போது மீள் பரிசீலனையையும் திருத்தத்தையும் ஏற்கும் நிலையில் அமைவ தும் அவசியம். எனினும் இதற்கெல்லாம் முன்பதாக, இந்த ஒழுங்குகள் உருவாக்கப்படுவதும் நடைமுறைப்படுத்தப்படு வதும் மிக அவசியம். எழுந்தமானமான நடவடிக்கைகளுக்கும்

அகஸ்மாத்தான முன்னெடுப்புகளுக்கும் விவகாரங்கள் விட்டு வைக்கப்படக் கூடாது.

அல்லாஹ் தனது படைப்புகளில் ஏற்படுத்தியிருக்கும் நியதியை இதில் நாம் பின்பற்ற வேண்டும்:

*''அவன் ஒவ்வொன்றையும் படைத்து, அதற்கான அளவு பிரமாணத்தையும் நிர்ணயித்தான்''. (25: 2)*

*''ஒவ்வொன்றுக்கும் அல்லாஹ் ஒரு பிரமாணத்தை நிர்ணயித்து வைத்திருக்கிறான்''. (65: 3)*

*''ஒவ்வொன்றுக்கும் அவனிடம் ஓர் அளவுப் பிரமாணம் உண்டு''. (13: 8)*

அவ்வாறே- அல்லாஹ் தனது சட்டங்களில் ஆக்கி வைத்திருக்கும் நியதிகளையும் நாம் பின்பற்றுவது அவசியம். அந்த வகையில், பிரதான வணக்கங்கள் அனைத்தும் எவ்வளவு நுணுக்கமாகவும் கச்சிதமாகவும் அமைக்கப்பட்டுள்ளன என்பதை கவனித்தீர்களா? அவற்றின் அளவுகள், நேரங்கள், முறைமைகள், நிபந்தனைகள், அவை ஏற்கப்படுவதை தடுப்பவைகள் முதலிய அனைத்திலும் இந்த நுணுக்கத்தை நீங்கள் கவனிக்கலாம். இக்கடமைகள் இத்தகைய விரிவான விளக்கங்களோ ஒழுங்கமைப்போ இன்றி மிகச் சுருக்கமான முறையில் ஏவப்பட்டிருக்குமாயின், மயக்கத் துக்கும் குழப்பத்துக்கும் புறக்கணிப்புக்கும் உட்பட்டிருக்கும்.

எனினும், ஷூறா செயற்பாடு தொடர்பாக இத்தகைய விரிவான விளக்கமோ ஒழுங்கமைப்போ ஷரீஆ வசனங்களில் இடம்பெற வில்லை என்பதை நாமறிவோம். அதற்கான நியாயம் என்ன என்பதையும் முன்னர் பார்த்தோம். ஷூறா என்பது மாறும் தன்மை கொண்ட விவகாரங்களோடும் நிலைமைகளோடும் தொடர்பு டையது. வகை, பருமன், உரிய நபர்கள், நோக்கம், சூழமைவு போன்ற மாறிகளுடன் தொடர்புடையது அது. எனவே, மாற்றங் களுக்கும் துறைகளுக்கும் இயைபாக இயங்கும் தன்மை கொண்ட ஒழுங்குகளே அதற்கு ஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால், வணக்க

வழிபாடுகள் இதற்கு மாற்றமானவை. அவை மாறா விவகா ரங்களோடும் நிலைமைகளோடும் தொடர்புபட்டவை. அவற்றுக் கென்று நிலையான தொழிற்பாடுகளும் நோக்கங்களும் உண்டு. ''நான் தொழுவதைப் பார்த்து அதே போன்று தொழுங்கள்!'' என இறைத்துதர் (ஸல்) கூறினார்கள். ''உங்கள் (ஹஜ், உம்றா) கிரியை களை என்னிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள்!'' என்றும் அன்னார் கூறினார்கள். ஆனால், 'நான் கலந்தாலோசிப்பது போன்று நீங்க ளும் கலந்தாலோசியுங்கள்' என்றோ, 'உங்களது கலந்தாலோச னைக்கான ஒழுங்கை என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்' என்றோ அன்னார் கூறவில்லை. மாறாக, 'உங்கள் விவகாரங்களை திட்டமிட்டு நிர்வகியுங்கள்; உங்களது ஷூறா செயற்பாட்டை உங்களுக்குப் பொருத்தமான வகையில் ஒழுங்கமைத்துக் கொள் ளுங்கள்!' எனக் கூறுவது போன்று அன்னாரது நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

ஷூறாவை ஒழுங்கமைப்பதற்கு நமக்கு முன்னால் பல தெரிவு களும் மாதிரிகளும் அனுபவங்களும் உள்ளன. அவை நமது இஸ் லாமிய முதுசத்திலிருந்து பெறப்பட்டவையாயினும் சரி; பொது வாக மனித இன முதுசத்திலிருந்து பெறப்பட்டவையாயினும் சரி! அவ்வாறே- நமக்கென்று ஷரீஆ அளவுகோல்களும் உண்டு; பகுத்தறிவு அளவுகோல்களும் உண்டு.

ஆக, இத்துறை மிக விசாலமானது; செழுமையும் நெகிழ்வுத் தன்மையும் கொண்டது. இந்த விசாலமான பரப்பினுள் நின்று கொண்டு அளவீடு செய்ய முடியும்; ஒப்பீடு மேற்கொள்ள முடியும்; சரியானதாக.. அல்லது ஒப்பீட்டளவில் சரியானதாக.. அல்லது சரியானதற்கும் பயனுக்கும் நெருக்கமானதாக.. தவறுக்கும் தீமைக் கும் தூரமானதாக உள்ளது என நாம் காணும் முடிவை ஏற்றுச் செயற்படுத்த முடியும்.

இந்த உண்மையை மனதில் கொண்ட வகையில், வரை யறுக்கப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட ஆலோசனை அமைப்புகள் அல்லது சபைகள் ஏற்படுத்தப் படுவது அவசியம்.

இந்த அங்கத்தவர்களை நியமிப்பதும் அங்கீகரிப்பதும் மாற்றுவதும் ஏற்கனவே உடன்பாடு காணப்பட்ட நிறுவன ரீதியான சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே இடம்பெறல் வேண்டும். இந்த அமைப்புகள் பல்வேறு துறைகளுக்கும் தரங்களுக்கும் சிறப்புத் தேர்ச்சிகளுக்கும் ஏற்ப பல்வகைப் பட்டிருக்க முடியும். தேசத் தலைமை மற்றும் அதன் நேரடிப் பணிகள் தொடக்கம் அரசின் கீழுள்ள அல்லது சமூகத்தில் இயங்குகின்ற மிகச் சிறிய நிர்வாக அலகுகள் மற்றும் துறைசார் நிறுவனங்கள் வரை இந்த ஆலோ சனை அமைப்புகள் செயற்பட வாய்ப்புண்டு.

ஒவ்வாரு ஷூறா அமைப்புக்குமென பிரத்தியேக ஒழுங்கொன்று காணப்படுவதும் இதன் பாற்பட்டதே. அந்த ஒழுங்கு பிற அமைப்புகளின் ஒழுங்குகளோடு சில இடங்களில் உடன்படவும், மற்றும் சில இடங்களில் முரண்படவும் முடியும். இது இயல் பானதுதான்.

எனினும், அனைத்து அமைப்புகளுக்கும் பொதுவான சில விடயங்கள் காணப்படுவது அவசியம். அமைப்பின் அதிகார எல்லைகளையும் சிறப்புத் துறைகளையும் வரையறுத்தல், அமைப்பு கூட்டப்படும் காலங்களை வரையறுத்தல், அதன் அதிகார மற்றும் சிறப்புத் துறை எல்லைகளில் அது எடுக்கும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல் கட்டாயமாக்கப்படல், முழுமையான உடன்பாடு எட்டப்படுவது சிரமமாகும் பட்சத்தில் பெரும்பான்மை அடிப்படையில் தீர்மானங்களை எடுத்தல், பெரும்பான்மை என்ற கொள்கை சில நிபந்தனைகளாலும் நியமங் களாலும் கட்டுப்படுத்தப்படல் (உதாரணமாக சில சூழ்நிலைக்கு பெரும்பான்மைக் கொள்கையிலிருந்து விலக்களித்தல், அல்லது குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் பெரும்பான்மை என்பதற்கு ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தை நிர்ணயித்தல்)... என்பன போன்ற விடயங்கள் எல்லா ஷூறா அமைப்புகளுக்கும் பொதுவான அம்சங்களாக அமைய முடியும்.

பொதுமக்களுடன் விரிந்தளவில் கலந்தாலோசனை மேற்கொள் வது தொடர்பான கொள்கையை -ஷூறா செயற்பாட்டில்- ஒழுங்கு

படுத்தப் படவும் செயற்படுத்தப் படவும் வேண்டிய மற்றோர் அம்சமாகக் குறிப்பிடலாம். அது விஷேட தொகுதிகள் மட்டத்தி லாயினும் சரி; முழு சமூக மட்டத்திலாயினும் சரி. சமூகத்திலுள்ள வளர்ந்த அங்கத்தவர்களது தொகைக்கு அல்லது அவர்களில் ஒரு பிரிவினரது தொகைக்கு ஏற்பவும்... பிரச்சினையின் வகை, அதில் சம்பந்தப்பட்டவர்கள், கலந்தாலோசனையை விரிவாக்கவும் பொதுமைப்படுத்தவும் முடியுமான அளவு என்பவற்றுக்கு ஏற்ப வும்... இக்கொள்கை நடைமுறைப் படுத்தப் படலாம்.

கலந்தாலோசனைச் செயற்பாடுகள் சில நிலைமைகளில் 'உம்மா' என்ற பரந்த அளவிலும், மற்றும் சில நிலைமைகளில் ஒரு குறிப்பிட்ட பிராந்திய அல்லது பல பிராந்தியங்கள் மட்டத் திலும் மேற்கொள்ளப் படலாம் என்ற பொருளை இது தருகிறது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சில பிரச்சினைகளின்போது, முடிந்த வரையில் எல்லா முஸ்லிம்களிடமும் ஆலோசனை கேட்டி ருப்பதை முன்னர் குறிப்பிட்டோம். ''மனிதர்களே, எனக்கு ஆலோசனை கூறுங்கள்!'' எனக் கேட்கும் வழக்கம் அன்னாரிடம் இருந்தது. மதீனாவில் பனீ ஸாஇதா மண்டபத்தில் நிகழ்ந்த ஷூறா செயற்பாட்டையும், அதன் விளைவாக அபூபக்கர் (றழி) ஃகலீபா வாக நியமிக்கப் பட்டமையையும் கூட நோக்கினோம். அந்த நிகழ்வில், சமூகமளிக்க முடிந்த அனைவரும் சமூகமளித்திருந்தனர்; கருத்துக் கூற விரும்பிய அனைவரும் கருத்துக் கூறினர். பிறகு ஃகிலாபத் பொறுப்பு அலீ (றழி), உஸ்மான் (றழி) ஆகிய இருவருள் யாருக்கு வழங்கப் படுவது என்ற விவகாரத்தில் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் மேற்கொண்ட நடவடிக்கையையும் கவனித்தோம். இருவருள் ஒருவரைத் தேர்ந்தெடுக்க விரும்பிய அவர், முஸ்லிம் களுக்கு மத்தியில் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பை ஒத்த நடவடிக்கையை மேற்கொண்டார்; பெண்கள், சிறுவர்கள், பயணி கள் என அனைவரிடமும் முடிந்த வரை ஆலோசனை கேட்டார். ஷூறா என்பது -சில விவகாரங்களில்- அதிக பட்சம் சாத்தியமான எல்லைக்கு விரிவு படுத்தப்பட முடியும் என்பதையே இவை அனைத்தும் காண்பிக்கின்றன. 'முடியுமான அதிகபட்ச எல்லை'

என்பதைக் குறைப்பதும் கூட்டுவதும் அவ்வப்போதுள்ள சூழமைவுகளும் சாத்தியமான சாதனங்களும்தான் என்பது தெரிந்ததே. பேரறிஞர் முஹம்மத் அத்-தாஹிர் பின் ஆஷூர் பின்வரும் கூற்றினூடாக குறிப்பது இதனைத்தான்: ''முழு உம்மாவும் உடன்பாடு காண்பது -பெரும்பாலும்- கடினமானது என்பதால்தான் உம்மாவிலுள்ள பெரும்பான்மையினரது உடன்பாடும் திருப்தியும் போதுமானது என குறிக்கப்பட்டது''.

அன்று சாதனங்களும் சூழ்நிலைகளும் போதியளவு வாய்ப்பாக அமையாததால்தான் 'அல்-ஹல் வல்-அக்த்' பணிக்குரியோரைத் தெரிவு செய்வதில் குறிப்பிட்ட சில எல்லைகளோடும் வடிவங்களோடும் மட்டுப்பட்டிருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது எனவும் அவர் கருதுகிறார்: ''நன்னம்பிக்கை, நல்லறிவு, சீரிய உபதேசம் முதலிய பண்புகளால் முழு 'உம்மா'விலும் அவர்கள் பெற்றிருந்த பிரபல்யமே போதுமாகக் கொள்ளப் பட்டிருந்தது. இந்த வகையில், மக்களது விவகாரங்கள் மற்றும் நலன்கள் தொடர்பாக அவர்கள் எடுத்த தீர்மானங்களுக்கு பெரும்பான்மை மக்கள் கட்டுப்பட்டிருந்தனர். -பிராந்தியங்கள் மிகத் தூரமாக அமைந்திருந்ததாலும், அஞ்சல் சேவைகள் மிகத் தாமதமாக இடம் பெற்றதாலும்- 'உம்மா'வின் அங்கத்தவர்கள் பரஸ்பர உடன்பாடு எட்டுவதற்கும், ஒன்று சேர்ந்து விவகாரங்களை மீளாய்வு செய்வதற்குமான சாதனங்கள் மிகக் கடினமானவையாகக் காணப் பட்டதுதான் இதற்குக் காரணம் எனலாம்''.

ஆக- பின்னர் சாதனங்களிலும் சூழ்நிலைகளிலும் ஏற்பட்ட வளர்ச்சியும் இலகுத் தன்மையும் ஷூறாவின் பரப்பை விஸ்தரிப்பதற்கும் இன்னும் அதனை நுணுக்கமாக அமைப்பதற்கும் நியமப் படுத்துவதற்கும் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும் என்பதே இதன் பொருளாகும். அதே வேளை, ஒவ்வொரு ஆலோசனை செயற்பாடும் எவ்வளவு தூரம் முக்கியமானது? அதன் தேவையின் அளவு என்ன? அதனால் எதிர்பார்க்கப்படும் பயன்கள் என்ன?... என்ற விடயங்களும் கவனத்தில் கொள்ளப்படுவது அவசியம்.

## இரவல் பெறலும் பொருந்தும் தன்மையும்

அரசியல்-நிர்வாக ஒழுங்குகளில், குறிப்பாக பொது விவகாரங்களை திட்டமிட்டு நடாத்திச் செல்வதற்கு பொறுப்பான நிறுவனங்களை வடிவமைப்பதில் நவீன காலம் பாரிய முன்னேற்றங்களையும் செறிவான அனுபவங்களையும் கண்டிருக்கிறது. எனினும் இந்த முன்னேற்றங்களும் அனுபவங்களும் நிறுவன மாதிரிகளும் -மொத்தத்தில்- 'ஜனநாயக ஒழுங்கு' என்ற பெயரிலேயே இடம் பெற்றிருக்கின்றன; இடம்பெற்றும் வருகின்றன.

'நலனும் பயனும் தரும் விடயங்களை பிறரிடமிருந்து இரவல் பெறுதல்' ஷரீஆவினால் அங்கீகரிக்கப் பட்டதே என்பதை முன்னைய ஆய்வில் விளக்கியுள்ளேன். அது ஓர் அடிப்படையான இஸ்லாமிய அணுகுமுறை என்பதையும், நபியவர்களதும் நேர்வழி நடந்த ஃகலீபாக்களதும் நடைமுறைகளுள் ஒன்று என்பதையும் அங்கு விளக்கினேன்.

அந்த வகையில், தற்காலத்தில் நாம் -அவ்வாறே இனியும்- நம்மைச் சூழவும் பிறரிடமும் எத்தகைய நிறுவன ஒழுங்குகளும் மாதிரிகளும் இருக்கின்றன என்பதையும், அவற்றின் விளைவும் பயனும் என்ன என்பதையும் ஆராய்ந்து பார்ப்பது அவசியம். அவற்றுள் தத்தெடுப்பதற்குப் பொருத்தமும் பயனும் கொண்டதாக உறுதிப்படுத்தப்படும் அம்சங்களை அதிகளவோ சிறிதளவோ எடுத்துக் கொள்வதும் அவசியம். அவை ஜனநாயக வழிமுறைகள் அல்லது ஜனநாயக அணுகுமுறை அல்லது ஜனநாயக இரவல் என எந்தப் பெயரில் அழைக்கப் பட்டாலும் சரி. ஏனெனில், நமக்குத் தேவையானது பெயருக்குரிய பொருட்களே அன்றி பெயர்களல்ல; அர்த்தங்களே அன்றி பதங்களல்ல; உள்ளடக்கமன்றி கலைச் சொற்களல்ல; நோக்கமும் கருவுமே அன்றி வெளித்தோற்றமும் சாதனங்களும் அல்ல. இப்னுல் கையிம் (றஹ்) கூறுகிறார்: ''வார்த்தைகளிலும் செயல்களிலும் கவனத்தில் கொள்ள வேண்டியவை அவற்றின் நோக்கங்களும் அர்த்தங்களுமே''.

ஜனநாயக ஒழுங்குகளை அல்லது ஜனநாயகத்தை -திருத்தி யமைத்து- எடுத்துக் கொள்ளல் என்பது அறிவை எங்கிருந்தாலும் எடுத்துக் கொள்ளல் என்ற வகையைச் சார்ந்தது. அது நேர்வழி யிலான இஸ்லாமிய ஷரீஆ நடைமுறையின் பாற்பட்டதும் கூட. இஸ்லாமிய ஷரீஆ நடைமுறை (அஸ்-ஸியாஸா அஷ்-ஷறஇய்யா) என்பது -இப்னு அகீல் கூறுவது போல்- ''இறைத்தூதர் (ஸல்) அவர்களால் சட்டமாக்கப்படா விட்டாலும்.. வேத வெளிப்பாட்டி னால் குறிப்பிடப்படா விட்டாலும்.. சரியானதன் பால் மக்களை நெருங்கச் செய்து சீர்கேட்டிலிருந்து தூரமாக்கும் செயல்கள்'' ஆகும்.

ஜனநாயக அனுபவங்களிலிருந்தும் ஒழுங்குகளிலிருந்தும் இரவல் பெறுவது சட்டபூர்வமானது என்பதும், அதில் பயனும் நன்மையும் உண்டு என்பதும் நிரூபணமாகி விட்ட பிறகு, ஜன நாயகம் என்ற அதே பெயரைப் பயன்படுத்துவதா அல்லது விட்டு விடுவதா என்பது பரந்த அபிப்பிராய பேதத்துக்கு உட்பட்ட ஒன்றாகும். அந்த வகையில், அதே பெயரைப் பயன்படுத்தினாலும் வேறு பெயரைப் பயன்படுத்தினாலும் தவறேதுமில்லை. எனினும் சில பதப் பிரயோகங்கள் கொண்டிருக்கும் பலமான பொருள் வெளிப்பாட்டு ஆற்றலினாலும், அவற்றின் பரந்த புழக்கத்தினாலும் அவற்றையே தொடர்ந்து பயன்படுத்துவது பயனுள்ளதாக அமைய முடியும். பரஸ்பர தொடர்பாடலையும் புரிதலையும் இலகுவாக வும் பரந்தளவிலும் ஏற்படுத்த அவை உதவும். இந்த வகையில்தான் அல்-குர்ஆனும் ஸுன்னாவும் சில பதங்களையும் கலைச் சொற் களையும் அப்படியே பயன்படுத்தியுள்ளன. 'அல்-கிஸ்த்' மற்றும் 'அல்-கிஸ்தாஸ்' ஆகிய பிரயோகங்களை இதற்கு உதாரணமாகக் கூற முடியும்.

மிக நுணுக்கமான -சாத்தியமான- வழிமுறைகளால் எட்டப்படும் அதி உயர்ந்த தரத்திலான நீதியைக் குறிக்க இப்பதங்கள் பிர யோகிக்கப்பட்டன. இமாம் அல்-புஹாரி தனது ஸஹீஹ் கிரந்தத் தின் இறுதி அத்தியாயமாகிய ''மறுமை நாளில் மிக நீதியான தராசு களை (அல்மவாஸீன் அல் கிஸ்த்) நாம் ஏற்படுத்துவோம் என்ற

இறைவசனம் பற்றியும், மனிதர்களின் செயல்களும் வார்த்தைகளும் நிறுக்கப்படும் என்பது பற்றியுமான அத்தியாயம்'' என்ற தலைப்பின் கீழ் இவ்வாறு கூறுகிறார்: ''முஜாஹிதின் கூற்றுப்படி, 'அல்-கிஸ்தாஸ்' என்பது ரோம மொழியில் நீதியைக் குறிப்பதாகும்... அது 'அல்-கிஸ்த்' எனவும் அழைக்கப்படுகிறது...''

நீதிபதி அய்யாழ் கூறியதாக அல்-ஹாஃபிழ் இப்னு ஹஜர் இவ்வாறு கூறுகிறார்: ''அல்-கிஸ்தாஸ் என்பது மிக நீதியான தராசாகும்''.

அல்-கிஸ்தாஸ் என்பது ரோமச் சொல்லான ''ஜஸ்டிஸ்'' என்பதன் அறபு மொழி உச்சரிப்பே.

ஆக, 'அல்-மவாஸீன் அல்-தகீகா' (நுணுக்கமான தராசுகள்) அல்லது 'அல்மவாஸீன் அல்-கிஸ்த்' (நீதியான தராசுகள்) அல்லது 'அல்-கிஸ்தாஸ் அல்-முஸ்தகீம்' (நேரான நீதித் தராசு) என்ற எந்தப் பெயராயினும், அது நீதிக்கான குறியீடாகவும் அடையாளமாகவும் அதனை அடையும் சாதனமாகவும் மாறி விட்டது. அல்-குர்ஆன் கூட அதே ரோமப் பதத்தைப் பயன்படுத்தியே தனது கருத்தை வெளியிட்டுள்ளது. இதே போன்றுதான், ஜனநாயகம் என்ற பதமும் இன்று அடக்குமுறை, ஏகபோக உரிமை என்பவற்றை ஒழிப்பதற்கான குறியீடாக மாறியுள்ளது. மக்களது விவகாரங்களை திட்டமிட்டு நிர்வகிப்பதிலும், அவர்களது ஆட்சியாளர்களையும் பிரதிநிதிகளையும் தெரிவு செய்வதிலும் -தீர்க்கமான நியமங்களுக்கு அமைவாக- அம்மக்களே பங்கு கொள்வதற்கான குறியீடாகவும் அது மாறியுள்ளது. நீதி, சமத்துவம் முதலிய கொள்கைகள் அந்த ஒழுங்குகளில் -குறைந்தபட்சம்- முடியுமான அளவிலாவது பேணப்பட்டிருக்கும். எனவே, ஜனநாயம் என்ற பதம் மூலமாக அல்லது அதிலிருந்து பிறந்த சில பதங்கள் மூலமாக, ஷூறாவினூடாக நாம் கொண்டுள்ள சில நோக்கங்களை வெளிப்படுத்துவதற்கும் ஷூறாவை நிறுவனமயப் படுத்துவதற்கும் தடையேதும் இல்லை. மட்டுமன்றி, அது பயனுள்ளதும் கூட! இங்கு ஷூறா என்ற பதத்தை ரத்துச் செய்யாமலும், அதன் முன்னுரிமையைக்

குறைத்து விடாமலும் இதனை நாம் சாதிக்க முடியும். நீதியைக் குறிப்பதற்கு அல்-கிஸ்த், அல்-கிஸ்தாஸ் ஆகிய பதங்களை அல்-குர்ஆன் பயன்படுத்தினாலும், 'அல்-அத்ல்' என்ற பதத்தை விட்டு விடவோ அதன் பிரயோகத்தைக் குறைக்கவோ இல்லை என்பது இதற்கு எடுத்துக் காட்டாகிறது.

அல்-கிஸ்தாஸ் (அதாவது சரியாக அளவிடும் தராசு) என்பது மனிதத் தொடர்புகளிலும் உரிமைகளிலும் சச்சரவுகளிலும் நீதியை நிலை நாட்டுவதற்கான சாதனமாக இருப்பது போலவே, ஜன நாயகம் என்பது -அதன் அடிப்படைச் சித்தாந்தத்திலும் நோக்கத் திலும்- நீதி, சமத்துவம் என்பவற்றை ஏற்படுத்துவதற்கும், அநியாயத்தையும் அடக்குமுறையையும் தடுப்பதற்கும், பொது விவகாரங்களைத் திட்டமிட்டு நிர்வகிப்பதற்குமான சாதனமாக உள்ளது.

சாதனங்கள், அளவுகோல்கள், வழிமுறைகள் என்பன தமக்குரிய சட்டபூர்வத் தன்மையையும் அந்தஸ்தையும் முக்கியத்துவத்தை யும் அவை சாதிக்கும் பெறுபேறுகளிலிருந்தே பெற்றுக் கொள் கின்றன. இமாம் இப்னுல் கையிம் கூறுகிறார்: ''மனிதர்கள் 'அல்-கிஸ்த்' என்பதை அடைந்து கொள்ள வேண்டும் என்பதற் காகவே அல்லாஹ் தனது தூதர்களை அனுப்பினான்; வேதங் களையும் இறக்கினான். அந்த நீதியின் மீதே வானங்களும் பூமியும் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. எங்கு சத்தியத்தின் அடையாளங்களும் பகுத்தறிவின் சான்றுகளும் -எவ்வழியிலேனும்- தென்படுமோ, அங்கு அல்லாஹ்வின் சட்டமும் சன்மார்க்கமும் திருப்தியும் கட்டளையும் இருக்கும். நீதியின் பாதைகளையும் சான்றுகளையும் அடையாளங்களையும் அல்லாஹ் ஒரேயொரு வடிவத்தில் வரையறுத்து விட்டு, அதனை விடப் பலமாகவும் தெளிவாகவும் உள்ள பிற வடிவங்களை ரத்துச் செய்யவில்லை. சத்தியத்தையும் நியாயத்தையும் நிலை நிறுத்தி, நீதியின் பால் மக்களை வழி நடாத்துவதே அவனது நோக்கம் என்பதை அவன் விதித்திருக்கும் வழிமுறைகளூடாக தெளிவு படுத்தியுள்ளான். எனவே, எந்த வழிமுறை சத்தியம் வெளிக் கொணரப்படவும் நீதி அறியப்படவும்

உதவுகிறதோ, அந்த வழிமுறையிலேயே தீர்ப்புகள் பெறப்பட வேண்டும். வழிமுறைகள் என்பவை வெறும் காரணங்களும் சாத னங்களும் மட்டுமே. அவை தம்மளவில் நோக்கமாக மாறுவ தில்லை. அவற்றினூடாக நாடப்படும் இறுதி இலக்குகள் எட்டப் பட வேண்டும். எனினும் அல்லாஹ் நமக்கு வரைந்தளித்துள்ள வழிமுறைகளினூடாக அவற்றின் பின்னாலுள்ள காரணங்களை நோக்கி கவனயீர்ப்புச் செய்கின்றான்...''.

ஜனநாயக அனுபவங்களிலிருந்தும் ஒழுங்குகளிலிருந்தும் பயன் பெற நாம் தீர்மானிக்கும்போது, ''ஜனநாயகத்தை மொத்தமாக எடுத்துக் கொள்ளுங்கள்; அல்லது விட்டு விடுங்கள்'' என்றோ, ''ஜனநாயகத்தை அதன் குறைபாடுகளுடன் சேர்த்தே ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்றோ, ''இந்த ஜனநாயக மாதிரியை அச்சொட்டாக எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றோ, ''மேற்கு ஜன நாயகத்தை அதன் இனிப்போடும் கசப்போடும் ஏற்றுக் கொள் ளுங்கள்'' என்றோ எவரும் நமக்குக் கூற முடியாது. அவ்வாறு எவராவது கூறினால் கூறி விட்டுப் போகட்டும்; ஏனெனில்-விரும்பியதை ஏற்றுக் கொள்ளவும், விரும்பியதை விட்டு விடவும், விரும்பியதை விரும்பியவாறு மாற்றியமைக்கவும் நமக்கு முடியும்.

ஜனநாயகம் என்ற கொள்கைளை தூக்கிச் சுமப்பவர்கள் கூட, ''நாம் கண்டதில் மிகச் சிறந்தது இது'' என்றும், ''நாம் சென்றடைந்த மிகச் சிறந்த முடிவு இது'' என்றும்தான் அது பற்றிக் கூறுகிறார்கள். சிலர் அதனை ''தீமைகளில் மிகச் சிறந்தது'' என்றும், ''சர்வாதிகார ஆட்சிகளுக்கு அடுத்த நிலையிலுள்ள மிக மோசமான ஆட்சி யொழுங்கு'' என்றும் வர்ணிக்கின்றனர். அதாவது, அது குறைந்த தீமை கொண்ட ஒழுங்கு என்பது அவர்களது கருத்து.

இத்தகைய கூற்றுகள் ஜனநாயகத்தில் குறைபாடுகளும் ஆபத்து களும் உள்ளன என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள மையை காண்பிக்கின்றன. குறிப்பாக, கோட்பாட்டு ஜனநாயத்தி லிருந்து அல்லது கற்பனாவாத ஜனநாயகத்திலிருந்து யதார்த்தமான ஜனநாயகத்தை நோக்கி நாம் நகரும் போது இந்நிலையை நிதர்ச னமாகக் காண்கிறோம்.

ஜனநாயகம் பூகோள மயமாக்கப்படும் யுகத்தில் வாழ்வதும், ஜனநாயகத்தை அல்லது அதிலிருந்து சில பகுதிகளை எடுத்துக் கொள்வதும் சமகால முஸ்லிம்களாகிய நமக்கு முன்நிர்ணயம் செய்யப்பட்ட ஒன்றாக இருக்குமெனில்... அந்த ஜனநாயகத்தைச் சீரமைத்து, தரமுயர்த்தி, அதன் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதும் கூட நமக்கு விதிக்கப்பட்ட நிர்ணயமாக ஏன் இருக்கக் கூடாது?

நம் பால் ஜனநாயகம் கொண்டிருக்கும் தேவையானது ஜன நாயகத்தின் பால் நாம் கொண்டிருக்கும் தேவையை விட எவ் வகையிலும் குறைந்ததல்ல. இன்னும் சொல்லப் போனால், அது நம் பால் கொண்டிருக்கும் தேவையே அதிகமானது. ஏனெனில், வெறும் அமைப்பு ரீதியான, செயற்பாட்டு வடிவிலான அனுப வங்களும் இரவல்களும் மட்டுமே ஜனநாயகத்திடமிருந்து நமக்குத் தேவையானவை. ஆனால், ஜனநாயகத்தின் கட்டமைப்பிலுள்ள அபாயங்களுக்கும் உள்ளார்ந்த நோய்களுக்கும் சிகிச்சையளிப்பதற்கு நாம் தேவை.

சர்வதேச அளவில் நடைமுறைப்படுத்தப் படுகின்ற ஜனநாய கத்துக்கு சிகிச்சையளிக்க இன்று நமக்குச் சக்தியில்லை என்றி ருந்தாலும் கூட, இஸ்லாமிய நாடுகளின் மட்டத்தில் அதனைச் செய்வது, அல்லது ஆரம்பித்து வைப்பது, அல்லது அதில் பங்க ளிப்புச் செய்வது நமக்குச் சாத்தியமே. ஜனநாயக அனுபவங்களின் மீது ஏற்றப்படும் இஸ்லாமியப் பங்களிப்பாக அது அமைய முடியும். சர்வதேச மட்டத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்து வதற்கான ஆரம்பப் பங்களிப்பாகவும் அது அமையும்.

ஜனநாயகம் இன்று அனுபவிக்கும் மிகப் பெரும் இடர்களுள் ஒன்றாக பண நாயகர்கள் அதன் மீது கொண்டிருக்கும் மேலாண் மையைக் குறிப்பிடலாம். அரசியல் இயந்திரத்தின் மீதான அவர் களது ஆதிக்கத்துடன் இது ஆரம்பிக்கிறது. அதன் கீழ் வழி நடாத்தப்படும் அனைத்து நிறுவனங்களும் இதில் உள்ளடங்கும். அடுத்ததாக, பெரும் அரசியல் கட்சிகளை ஸ்தாபிப்பதிலும் அதற்கு நிதி வழங்குவதிலும் அவர்களது ஆதிக்கம் தோன்றுகிறது. பெரும்

செலவுகளைக் கொண்ட அவற்றின் தேர்தல் பிரசாரங்களுக்கான செலவுகளை சட்டபூர்வமாகவும், சட்டபூர்வமற்ற முறையிலும் இவர்களே வழங்குகிறார்கள். பாரிய தொடர்பூடகங்களை இவர்கள் உடமையாக வைத்திருப்பதுடன், தாம் விரும்பியோருக்குச் சார் பாகவும் விரும்பாதோருக்கு எதிராகவும் அவற்றை வழிநடத்து கிறார்கள். இப்படித்தான் -இறுதியில்- ஒரு சிறுபான்மையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பாராளுமன்றப் பெரும்பான்மைக்கு அல்லது பெரும்பான்மை அரசாங்கம் என்ற பெயர் தாங்கிய சிறுபான்மை அரசாங்கம் ஒன்றுக்கு நாம் இட்டுச் செல்லப்படுகிறோம்.

உண்மைகளை சட்டபூர்வத் தன்மையோடும், ஜனநாயகம் என்ற பெயராலும் புரட்டிப் போடும் இம்மோசமான நிலைக்கு சிகிச் சையே கிடையாது என்று சொல்வதற்கில்லை. விடயங்கள் உண் மைத் தன்மையோடும் வினைமையோடும் அணுகப்படுமாயின் இதற்குப் பல தீர்வுகள் உண்டு. முதலாளித்துவம் குறைந்த செல் வாக்குடன் காணப்படும் -முதலாளித்துவப் பொருளாதார முறை சாராத- நாடுகளில் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு அல்லது சிகிச்சையளிப்பதற்கு அதிக சாத்தியத் தன்மைகள் உண்டு.

மேலும், இஸ்லாமிய நாடுகளில் அறிஞர்களும் அழைப்பாளர் களும் சன்மார்க்கத் தலைவர்களும் உள்ளூர் கோத்திரத் தலைவர் களும் பொதுவாக இன்னும் பலத்த செல்வாக்குடையோராகவே உள்ளனர். இது பல்வேறு சிறப்புகளையும் சாதகத் தன்மைகளையும் கொண்ட ஒரு யதார்த்தமாகும். ஏனெனில் இது புறத்தே இருந்து கட்டுப்படுத்தப்படும் ஜனநாயகத்தை விட அதிக உண்மைத் தன்மையுடைய இயல்பான வடிவமொன்றில் சமூகத் தலைமை களை வெளிக் கொணர்கிறது. இந்த யதார்த்தம் உரிய வகையில் கவனத்தில் கொள்ளப்பட்டு ஒழுங்குபடுத்தப் படுமாயின், அல்லது சட்டபூர்வமான வகையில் அரசியல் ஒழுங்குடனும் தேர்தல் ஒழுங்குடனும் இணைக்கப்படுமாயின் பண நாயகர்களின் அதி காரத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் சமநிலைப் படுத்துவதற்குமான செல்வாக்குள்ள கூறாக அது அமையும். உரிமையுள்ள ஒவ்வொரு வருக்கும் அவரது உரிமையை வழங்குவதாகவும், கனதி கொண்ட

வர்களுக்கு உரிய கனதியை வழங்குவதாகவும், சமூகத்தை பிரதி நிதித்துவப் படுத்துவதிலும் அதன் நிலைப்பாட்டை வெளிப்படுத் துவதிலும் உண்மையான வடிவங்களை நடைமுறைப் படுத்து வதாகவும் கூட இச்செயற்பாடு அமையும். இவை அளவீடு சார்ந்த கோட்பாட்டு ஜனநாயகத்தின் அத்தியாவசிய அம்சங்களும் கூட.

அவ்வாறே இஸ்லாமிய சமூகங்களில் மனிதத் தயாரிப்பை மேற்கொள்கின்ற (கல்வி, பயிற்றுவிப்பு, வழிகாட்டல் சார்ந்த) நிறுவனங்களோடும் பொதுக் கருத்தை வடிவமைக்கும் நிறுவனங் களோடும் பண பலத்தால் அதிகம் தாக்கமடையாத பல தரப்புகள் சம்பந்தப்படுகின்றன. மஸ்ஜிதுகள், இஸ்லாமிய அழைப்புக் குழுக்கள் மற்றும் நிறுவனங்கள், ஸூஃபி தரீக்காக்கள், சன்மார்க்க கல்வி நிறுவனங்கள் என்பவற்றை இவற்றுக்கு எடுத்துக் காட்டாக குறிப்பிடலாம். இவற்றையும் கூட பண பலத்தையும் செல்வாக் கையும் கட்டுப்படுத்தி, தேவையான சமநிலையை ஏற்படுத்துகின்ற மற்றொரு காரணியாகக் கொள்ள முடியும்.

தேர்தல் பிரசாரங்களையும் அவற்றை இயக்குகின்ற ராட்சத செல்வங்களையும் சமாளிப்பதற்கு வீண் விரயம், ஆடம்பரம், ஊதாரித்தனம் என்பவற்றுக்கு எதிரான இஸ்லாமியக் கலாசாரத் தினை பற்றுறுதியோடு நாம் பரப்ப வேண்டும். மட்டுமன்றி, விளம்பர ரீதியான தேர்தல் பிரச்சாரங்கள் என்ற கருத்தாக்கமே அடிப்படையிலிருந்து மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். அவற்றின் உள்ளடக்கம், வழிமுறை, அவற்றுக்கு நிதியீட்டப்படும் முறை, செலவிடப்படும் தொகை முதலிய அனைத்தும் இந்த மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இஸ்லாம் வீண் விரயத்தையும் ஆடம்பரத்தையும் முட்டாள் தனமானதாகவும் ஷெய்த்தானின் செயல்களாகவும் கருதி தடை செய்திருப்பது போலவே பொய், திரிபு, மோசடி, புறம், அவதூறு, வதந்திகளைப் பரப்புதல், போலிக் குற்றச்சாட்டுகள் என்பவற்றையும் தடை செய்துள்ளது. சுய புகழ்ச்சியாலும் பெருமையாலும் ஒரு மனிதன் தன்னைத்தானே மேன்மைப்படுத்திக் கொள்வதை -அது உண்மை யாயினும் பொய்யாயினும்- இஸ்லாம் இகழ்ந்துரைக்கின்றது. தாம்

செய்யாததைச் செய்ததாக புகழப்பட விரும்புவோரையும் அது வெறுக்கிறது.

எனவே, இஸ்லாமிய சமூகங்களிலும் இஸ்லாமிய வட்டாரங்களிலும் இஸ்லாமிய செயற்பாட்டிலும் இப்பெறுமானங்களும் சட்டங்களும் செயற்படுத்தப் படுவதும் உயர்த்திப் பிடிக்கப்படுவதும் அவசியம். மோசமான எதிர்ப் பெறுமானங்களின் பிரளயத்துக்கு முன்னால் இப்பெறுமானங்களை நாம் பாதுகாக்க வேண்டும்; கடுமையான நிலைப்பாட்டுடன் அவற்றைப் பின்பற்ற வேண்டும்.

ஜனநாயகம் எல்லா விதமான இடம்பாடுகளுக்கும் வழியைத் திறந்து விடுவது அதன் மற்றொரு தொந்தரவான அம்சம் எனலாம். அது -குறைந்த பட்சம் கொள்கையளவிலாவது- எதனையும் ஏற்படுத்தக் கூடியது; எதனையும் மாற்றியமைக்கக் கூடியது. 'மக்கள் இறையாண்மை' என்பது தரும் பொருளும் இதுதான். 'மக்கள் தம்மைத் தாமே ஆள்தல்' என்பதே ஜனநாயத்தின் முதன்மைப் பொருளாகும்.

சில இஸ்லாமிய எழுத்தாளர்களது கருத்துப்படி, -ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமான- இந்தக் கூறே முஸ்லிம்களாகிய நம்மை ஷரீஆ சட்டங்களை -பகுதியளவிலோ மொத்தமாகவோ- ரத்துச் செய்யும் நிலைக்கு இட்டுச் செல்ல வாய்ப்பிருக்கிறது!

இக்கருத்து தொடர்பாக நான் கூற விரும்புவது இதுதான்: இப்பிரச்சினையானது வெறும் கோட்பாட்டளவிலான -கற்பனையான- ஒன்றே தவிர யதார்த்த வாழ்வில் இடம்பெறக் கூடியதல்ல. ஏனெனில், இன்று வரை இஸ்லாமிய நாடுகளில் ஷரீஆ சட்டங்கள் ரத்து செய்யப் பட்டிருப்பது சர்வாதிகாரப் பண்பினாலும் சர்வாதிகார வழிமுறையாலுமே அன்றி, ஜனநாயகப் பண்பினாலும் ஜனநாயக வழிமுறைகளாலும் அல்ல. அத்தகைய மாற்றங்களுள் சில அந்நிய ஆக்கிரமிப்பால் மேற்கொள்ளப்பட்டன; மற்றும் சில அன்னிய அழுத்தங்களுக்கு உட்பட்டு நமது ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப் பட்டன; ஆட்சியாளர்களது சர்வாதிகார நாட்டத்தினாலும் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. எது எவ்வாறாயினும், ஜனநாயகத்துக்கு அங்கு எந்த சம்பந்தமும் இருக்கவில்லை.

முஸ்லிம் வெகுஜனங்கள் அல்லது முஸ்லிம்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் -பொதுவாகவே- சன்மார்க்கத்துக்கும் அதன் ஷரீஆவுக்கும் அப்பாற்பட்ட ஒன்றுக்காக இதுவரை வாக்களித்த தில்லை; வாக்களிக்கும் சாத்தியமும் இல்லை. அதிலும் குறிப்பாக, ஷரீஆவுக்கு எதிரானது என்று தெளிவாக அறியப்பட்ட ஒன்றுக்குச் சார்பாக அவர்கள் வாக்களிப்பார்கள் என ஒரு போதும் எதிர்பார்க்க முடியாது. சில முஸ்லிம் சமூகங்களுக்கு தமது கருத்தை சுயாதீன மாக வெளிப்படுத்தும் வாய்ப்பு அளிக்கப்பட்ட எல்லா சந்தர்ப் பங்களிலும், இஸ்லாத்தையும் அதன் சட்டங்களையும் நோக்கிய மனச்சாய்வையே அவை தொடர்ந்து வெளிப்படுத்தி இருக்கின்றன.

எனினும், மேற்சொன்ன அச்சங்களுள் ஏதாவதொன்று உண்மை யாகவே நிகழ்ந்து விட்டதென ஓர் எடுகோளுக்காகவேனும் வைத் துக் கொள்வோம். அந்த வகையில், ஏதாவது பிராந்தியத்தில் வாழும் பெரும்பான்மை முஸ்லிம்கள் உண்மையான ஜனநாயக நடைமுறை மூலமாக இஸ்லாத்துக்கு முரணான அல்லது புறம்பான ஒன்றைத் தெரிவு செய்து விட்டார்கள் என்றே வைத்துக் கொள் வோம். இந்நிலையில் குற்றம் காணப்பட வேண்டியது ஜனநாயகமா அல்லது அங்கு நிலவும் யதார்த்தமான சூழமைவா? உண்மையில் இங்கு நமக்கு பிரச்சினையைக் கொண்டு வந்தது ஜனநாயகமல்ல. உள்ளிருந்த பிரச்சினையொன்றை வெளிக் கொண்டு வந்தது மட்டுமே இங்கு ஜனநாயகம் செய்த வேலை. அதற்காக நாம் ஜனநாயகத்துக்கு நன்றி செலுத்தவும் அதனை இன்னும் இறுகப் பற்றிக் கொள்ளவும் வேண்டுமே தவிர, அதனை நிராகரிக்கவும் குற்றம் சாட்டவும் எந்த நியாயமும் இல்லை.

ஏனெனில், மக்கள் தங்களது உளக் கிடக்கைகளை சுதந்திரமாக வெளியிட -ஜனநாயகம் என்ற பெயரிலோ வேறு பெயரிலோ- வாய்ப்பு வழங்கப்படும் போது, அவர்களது உண்மை நிலையை அறியும் சந்தர்ப்பம் நமக்குக் கிட்டுகிறது. உண்மை வெளிக் கொண்டு வரப்படுவதையும் அறியப்படுவதையும் எவரால்தான் எதிர்க்க முடியும்?

அவ்வாறு நிகழ்ந்து விட்டால் கூட, கவலைக்குரிய அந்த யதார்த்தத்துக்கு உண்மையை புறக்கணிப்பதால் அல்லது அதி லிருந்து விரண்டோடி விடுவதனால் தீர்வு கண்டு விட முடியாது; சட்டங்கள் பிறப்பிப்பதனால் அல்லது இருக்கும் சட்டங்களை ரத்துச் செய்வதனால் கூட தீர்வு காண முடியாது. அழைத்தல், விளக்குதல், அறிவூட்டல், பயிற்றுவித்தல், கற்பித்தல், உரையாடு தல், திருப்தியான தெளிவுகளை வழங்குதல் என்பவற்றின் மூலமே அந்தத் தீர்வு பெறப்பட முடியும். ஆக, சிகிச்சை என்பது அழைப்புப் பணியிலும் திருப்தி தரும் தெளிவுகளிலும் தங்கியிருக்குமே அன்றி தடை செய்வதிலும் நிர்ப்பந்திப்பதிலும் அல்ல. மக்களை இறை நம்பிக்கையாளர்களாக மாற்றுவதற்கு அவர்களை நிர்ப்பந்திப்பதா? அல்லது திருப்தியளிக்கும் தெளிவுகளை வழங்குவதா?

மக்களின் உள்ளங்களிலிருந்து பிறக்காத இஸ்லாமிய அர சொன்றை அவர்கள் மீது திணிப்பதோ, அவர்கள் வெறுக்கும் சட் டங்களை அவர்கள் மீது நடைமுறைப் படுத்துவதோ இஸ்லாம் அல்ல; இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் நலன் பயக்கக் கூடியதும் அல்ல!

இங்கு நான் மனிதர்களுள் ஒரு சிறு தொகையினர் பற்றி அல்லது புறநடையாக இருக்கக் கூடியோர் பற்றிப் பேசவில்லை. அவர்களுள் பெரும்பான்மையினர் பற்றியும் பொதுவாகவுமே பேசுகிறேன்.

மட்டுமன்றி, இஸ்லாத்தின் ஷரீஆ சட்டங்கள் -முதல் நிலையில்- விசுவாசத்தின் மீதும் திருப்தியின் மீதும் கட்டெழுபவை. அவை மக்கள் விரும்பினாலும் வெறுத்தாலும் அவர்கள் மீது அமுலாக்கப் படுகின்ற வெறும் அரசாங்கச் சட்டங்களல்ல. அல்லாஹ்வின் சட் டத்தை ஒருவர் மனப்பூர்வமாக ஏற்காமல் வெறுத்திருப்பாராயின் -அதனை அவர் அமுல்படுத்தினாலும்- இறை நிராகரிப்பாளராக அல்லது நயவஞ்சகராகவே கருதப்படுவார்.

முஸ்லிம்களுக்கு மத்தியில் இஸ்லாமிய அரசொன்றின் நிழலில் வாழ்கின்ற வேதக்காரர்களைக் கூட -அவர்கள் தத்தமது மதங்களைப் பின்பற்றுவோராய் இருக்கும் பட்சத்தில்- இஸ்லாத்தின் சட்டங்

களையோ முஸ்லிம் ஆட்சியாளர்களின் தீர்ப்புகளையோ நாடி வர வேண்டுமென அல்லாஹ் கட்டாயப் படுத்தவில்லை. முஸ்லிம் ஆட்சியாளர்கள் இஸ்லாமிய ஷரீஆவைக் கொண்டே அம்மக்களை ஆள வேண்டும் என்றும் அவன் பணிக்கவில்லை. இவ்விவகாரம் இரு தரப்புகளதும் தெளிவுக்கு உரியதாகவே விடப்பட்டுள்ளது. அவர்களால் ஏதும் அநியாயம் அல்லது அத்துமீறல் அல்லது பொதுவான சீர்கேடு இடம்பெறும் போது மாத்திரமே அதனை இல்லாதொழிக்க அல்லது மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பது கடமையாக மாறுகிறது. அவ்வாறன்றி, அவர்களுக்கு மத்தியில் தோன்றும் மத, சிவில், சமூகப் பிணக்குகளைப் பொறுத்த வரையில், அவை அவர்களுக்கும் அவர்களது மதத்துக்கும் மதத் தலைவர்களுக்குமே விடப்படும். அல்லாஹ் கூறுகின்றான்:

*‘‘(நபியே!) அவர்கள் உம்மை நாடி வந்தால் அவர்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்குவீராக; அல்லது புறக்கணித்து விடுவீராக! நீர் புறக்கணித்து விட்டாலும் அவர்களால் உமக்கு எந்தத் தீங்கும் செய்து விட முடியாது. (எனினும்) அவர்களுக்கு நீர் தீர்ப்பளிப்ப தாயின் நீதியாகவே தீர்ப்பளிப்பீராக! நிச்சயமாக அல்லாஹ் நீதி யாளர்களை நேசிக்கிறான்’’. (5: 42)*

ஆக - சட்டங்களும் தீர்ப்புகளும் இறை விசுவாசம், திருப்தி முதலிய கூறுகளை இழந்து விட்டால் சன்மார்க்க ரீதியான பெறு மானத்தையும், பரிமாணத்தையும் இழந்து விடும். நமது முதல் தரமானதும் அடிப்படையானதுமான அக்கறை சன்மார்க்கத்தின் மீதும் அதனால் ஏற்படும் உலக-மறுமை விளைவுகளின் மீதும் இருக்குமாயின், நமது உண்மையான கவலை நோயைப் பற்றி இருக்க வேண்டுமே தவிர நோயின் அறிகுறி பற்றியல்ல. அந்த வகையில், பெரும்பான்மை மக்கள் இஸ்லாத்துக்கு மாற்றமான ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் மனச்சாய்வைக் கொண்டிருப்பார்களா யின் அது நோயின் அறிகுறியும் விளைவும் மாத்திரமே. எனவே, உண்மையில் கவலையூட்டுவதாகவும் தொந்தரவானதாகவும் அமைய வேண்டியது மக்கள் தாம் உணர்வதையும் சிந்திப்பதை

யும் உள்ளவாறே வெளிப்படுத்தினார்கள் என்பதல்ல; அதற்குப் பின்னாலுள்ள சிந்தனா, கலாசார, உளவியல் நிலையே உண்மையில் நமக்குக் கவலையை ஏற்படுத்த வேண்டும். அத்தகைய நிலை யொன்று தோன்றுமாயின், அது கோளாறை இனங் காண்பதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் கிட்டுகின்ற சந்தர்ப்பமாக கொள்ளப்பட வேண்டுமே தவிர, உண்மையை மூடி மறைத்து நோய் இன்னும் முற்றுவதற்கு இடமளிக்கும் வகையிலான பிடிவாதத்துக்கு இட்டுச் செல்லக் கூடாது. கோளாறும் அதற்கான காரணங்களும் சீர் செய் யப்படுமாயின், ஜனநாயகத்தின் மூலமாகத் தொலைந்து போனது அதே ஜனநாயகத்தின் மூலமாக மீண்டும் நம்மை வந்து சேரும். அப்போது நாம் கோளாறை இனங்கண்டு தீர்த்து வைத்த வெற்றியாளர்களாக இருப்போம். *''அதுவே மிகத் தெளிவான வெற்றியாகும்''. (45: 30)*

இன்னொரு விடயத்தையும் நாம் மறந்து விடக் கூடாது. அதாவது, எல்லா ஜனநாயக நாடுகளிலும் அவற்றின் அடிப்படை களதும் தனிப் பண்புகளதும் மாறா அம்சங்களும் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தக்கூடிய யாப்புசார் விதிகளும் பாரம்பரியங்களும் காணப் படுகின்றன. அவற்றை மீறவோ கட்டுடைக்கவோ ஜன நாயகத்துக்கு அல்லது அதன் சூழமைவு சார் பெறுபேறுகளுக்கு இடமளிக்கப்படுவதில்லை. மட்டுமன்றி, இவ்விதிகளுடனும் பாரம்பர்யங்களுடனும் இயைந்து செல்வது ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்பாகவும் கருதப்படுகின்றது. ஏனெனில் இவை சமூகத்தின் விருப்பத்தைப் பிரதிநிதித்துவம் செய்பவையாகவும், அதன் அடையாளத்தையும் இருப்பையும் உத்தரவாதப் படுத்து பவையாகவும் உள்ளன.

இஸ்லாமிய நாடுகள் -இந்த வகையில்- இஸ்லாத்துக்கு முர ணான அனைத்தும் செல்லுபடியற்றவை என்றும் நடைமுறைப் படுத்தத் தகாதவை என்றும் -சன்மார்க்க ரீதியிலும் ஜனநாயக ரீதியிலும்- தமது யாப்புகளில் உறுதிப்படுத்த வேண்டும். பிறகு அந்த அடிப்படையின் மீது தமது ஜனநாயகச் செயற்பாடுகளை

அவை தொடர முடியும். மக்களின் தெரிவாகவும் அவர்களது நம்பிக்கையையும் மனச்சாய்வையும் பிரதிபலிப்பதாகவும் இஸ்லாமே உள்ளது என்ற வகையில், ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு முரணான எதுவும் நிகழ இங்கு வாய்ப்பில்லை.

எது எவ்வாறிருப்பினும், -இத்தகைய முற்காப்பு உத்தரவாதம் யாப்பு ரீதியாக வழங்கப் பட்டாலும் வழங்கப்படா விட்டாலும்- மக்களது சன்மார்க்க உணர்வைப் பாதுகாப்பதும் அவர்களது மதக் கலாசாரத்தைப் பலப்படுத்துவதுமே மிகச் சிறந்த உத்தரவாதமாக அமையும்; மக்கள் தமது மார்க்கத்தின் மீதும் ஷரீஆவின் மீதும் நிர்ப்பந்தமாக அன்றி விசுவாசத்தோடும் திருப்தியோடும் பற்றுறுதி கொள்வதே மிக உயர்ந்த காப்புறுதியாக அமையும்.

முடிவுரை

# ஷூறாவின் மூலமாக மட்டுமல்ல...

## ஷூறாவின் மூலமாக மட்டுமல்ல...

இந்த ஆய்வு ஆரம்ப முதல் இறுதி வரை இஸ்லாமிய வாழ்வின் அனைத்துத் துறைகளிலும், மட்டங்களிலும், விவகாரங்களிலும் ஷூரா பெறும் முக்கியத்துவத்தை விளக்க முயன்றுள்ளமை அதன் பிரதான பண்புகளில் ஒன்றெனலாம். ஷூறாவை ஒரு வாழ்க்கை முறையாக எடுத்துக் கொள்ளும் கடமைப்பாடு அனைவருக்கும் உள்ளது என்பதையும், அவர்களது வழிகாட்டலுக்கும், அவர்களது நலன்களைப் பாதுகாப்பதற்குமான பெரும் மூலாதாரமொன்றை அது பிரதிநிதித்துவம் செய்கின்றது என்பதையும் இந்த ஆய்வு விளக்குகிறது.

இக்கருத்தாக்கம் இங்கு போதியளவிலும் நியாய பூர்வமாகவும் -குறைந்தபட்சம் கோட்பாட்டு, அறிவியல் தளத்திலேனும்- எடுத் துரைக்கப் பட்டுள்ளது எனவும், ஷூறாவின் சீர்திருத்தத் தொழிற் பாடு பற்றியும் அதனை சாத்தியப்படுத்துவதை நோக்கிச் செல்வது எவ்வாறு என்பது பற்றியும் இறுதியாக இந்த ஆய்வில் விளக்கப் பட்டுள்ளது என நம்புகிறோம்.

ஷூறா என்பது சன்மார்க்கத்தில் ஒரு பகுதி; ஷரீஆவில் ஒரு பகுதி; ஒருங்கிணைந்த இஸ்லாமியச் சட்டகத்தினுள் ஒரு பாகம். இச்சட்டகத்தின் எல்லாப் பாகங்களும் பகுதி சார் ஒழுங்குகளும் செயற்படுத்தப்படாமல், அது தனது இலக்குகளை பரிபூரணமாக எய்த முடியாது. அவ்வாறே அதன் ஏதாவதொரு பாகத்தில் ஏற்படும்

கோளாறு பிற பாகங்களின் வினைத்திறனிலும் பாதகமாகவே எதிர்வினை ஆற்றும்.

ஷூறா அதன் சட்டகத்திற்கு அமைவாகவும், அதன் நோக்கங்களை சாத்தியப் படுத்துவதற்குப் பொருத்தமான சூழமைவிலும் செயற்படுத்தப்படும் போது தோன்றும் விளைவு, ஷூறாவுக்கு எதிர்மறையான அல்லது அதற்குத் தடையாக உள்ள சூழமைவில் செயற்படுத்தப்படும்போது தோன்றும் விளைவிலிருந்து வேறு பட்டதாகவே அமையும்.

ஷூறா செயற்பாட்டின் போதும் -அதை விட முக்கியமாக- ஜனநாயக செயற்பாட்டின் போதும் விழுமியங்களும் நற்பண்புசார் நியமங்களும் எவ்வளவு தூரம் அவசியமானவை என்பது பற்றி முன்னர் நாம் பேசியிருப்பதை இங்கே எடுத்துக் காட்டாக குறிப் பிடலாம். ஜனநாயக செயற்பாட்டையும் பொது வாழ்வையும் விழுமியப் படுத்துவதன் அவசியப்பாடு குறித்து இன்று சில அரசியல் கனவான்கள் பேசி வருகின்றனர். இங்கு நான் கூறுவது இதுதான்:

பொதுவாழ்வை விழுமியப் படுத்தல் என்பது, தனிப்பட்ட வாழ்வை விழுமியப் படுத்துவதிலிருந்து வேறுபடுத்த முடியாதது; விழுமியப்படுத்தல் செயற்பாடு அதற்குப் பொருத்தமானதும் அதற்கு உதவக் கூடியதுமான அறிவூட்டல் செயற்பாட்டிலிருந்து வேறுபடுத்த முடியாதது. பண்படுத்தல் இல்லாத அறிவூட்டல் ஏறக்குறைய வீணான செயலாகவும் கேலிக் கூத்தாகவுமே சென்று முடியும். இதைத்தான் முன்னோர், ''இறையச்சம் அற்ற அறிவு பாலையில் தெரியும் கானல்'' என்றனர்.

ஷூறா ஒழுங்கொன்றை நிறுவுதில் நாம் வெற்றி கண்டால் கூட, உயர்ந்த விழுமியங்களால் பண்படாத, கட்டுக்கோப்பற்ற ஒரு சூழமைவில் அந்த ஒழுங்கைப் பிரயோகிப்போமாயின்.. வெகு தொலைவு செல்ல முன்னரே அது அதிகார இழுபறிக்கும் சூழ்ச்சி களுக்கும் குதர்க்க வாதங்களுக்குமான கருவியாக மாறி விடும். இந் நிலையில்- 'ஆலோசனை தரும் ஷூறா', 'கட்டுப்படுத்தும் ஷூறா'

ஆகிய வகைகளோடு 'வேதனை தரும் ஷூறா' என மூன்றாவ தாகவும் ஒரு வகையை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கும். சச்சரவுகளையும் மனக்கசப்புகளையும் மட்டுமே அது உற்பவிக் கும். மட்டுமின்றி, ஷூராவும் அது சார்ந்த நிறுவனங்களும் தனிப்பட்ட லாபங்களுக்கும் அடைவுகளுக்கும் கூட வழியாகக் கொள்ளப்பட முடியும். அப்போது ஒரு குறிப்பிட்ட கட்சியின் அல்லது குழுவின் அல்லது குடும்பத்தின் அல்லது நபரின் நலனுக்காக -அரசியல் சார்ந்த அல்லது சாராத- ஒப்பந்தங்களுக்கும் கூட்டமைப்புகளுக்கும் அணிகளுக்குமான வளமான ஆடுகளமாக வும் அது மாற முடியும். அவ்வாறே அடக்குமுறை, அடிமைத்துவம், சதி விளையாட்டு என்பவற்றுக்கான சாதனமாகவும் திரையாகவும் கூட அது கொள்ளப்பட வாய்ப்புண்டு.

ஃபிர்அவ்னும் அவனது மேட்டுக் குடிப் பரிவாரமும் தங்களது அத்து மீறல்கள் மற்றும் விஷமச் செயல்கள் பற்றிக் கூட தங்க ளுக்குள் கலந்தாலோசனை நடத்தியுள்ளதாக அல்-குர்ஆன் சில இடங்களில் கூறியிருக்கிறது.

*''ஃபிர்அவ்னின் சமூகத்தைச் சேர்ந்த பிரதானிகள் (மூஸாவை சுட்டிக்காட்டி) 'நிச்சயமாக இவர் திறமையான சூனியக்காரர்தான்!' எனக் கூறினர். (அப்போது ஃபிர்அவ்ன்) 'இவர் உங்களை உங்கள் தேசத்திலிருந்து வெளியேற்றவே விரும்புகிறார். எனவே நீங்கள் (இது பற்றி) என்ன ஆலோசனை கூறப் போகிறீர்கள்?' எனக் கேட்டான். அதற்கு அவர்கள் கூறினர்: இவரையும் இவரது சகோதரரையும் சிறிது தவணை விட்டு வைத்து, (சூனியக்காரர்களை) பல நகரங்களிலும் திரட்டி வரக் கூடியோரை அனுப்பி வைப்பீராக; அவர்கள் அறிவு வல்லமை கொண்ட சூனியக்காரர்களையெல்லாம் உம்மிடம் கொண்டு வருவார்கள்''. (7: 109-112)*

மற்றோர் இடத்தில் இவ்வாறு இடம்பெறுகிறது:

*''(ஃபிர்அவ்ன்) தன்னைச் சூழ இருந்த பிரதானிகளை நோக்கிக் கூறினான்: நிச்சயமாக இவர் திறமை மிக்க ஒரு சூனியக்காரரே. தனது சூனியத்தின் மூலமாக உங்கள் தேசத்திலிருந்து உங்களை*

*வெளியேற்றி விட இவர் விரும்புகிறார். எனவே நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?'' (26: 34-35)*

நபி யூஸுஃபின் சகோதரர்கள் கூட கலந்தாலோசனை செய்தனர்; ஆனால் சதித்திட்டம் தீட்டும் நோக்குடன் அதனைச் செய்தனர். அல்லாஹ் கூறுகின்றான்:

*''(உண்மையை அறியும் நோக்குடன்) கேள்வி கேட்போருக்கு யூஸுஃபினதும் அவரது சகோதரர்களினதும் வரலாற்றில் பல அத்தாட்சிகள் உண்டு. (அவரது சகோதரர்கள்) இவ்வாறு பேசிக் கொண்டனர்: நாம் பலம் மிக்க கூட்டமாக இருந்தும் யூஸுஃபும் அவரது சகோதரருமே நமது தந்தைக்கு அதிகம் நேசத்துக்குரியவர்களாய் இருக்கின்றனர். நிச்சயமாக நமது தந்தை பகிரங்கமான தவறையே செய்து கொண்டிருக்கிறார். யூஸுபைக் கொன்று விடுங்கள்; அல்லது (தொலைவான) ஓரிடத்தில் வீசி வீடுங்கள். (அப்போதுதான்) உங்கள் தந்தையின் கவனம் உங்கள் பக்கம் மாத்திரம் இருக்கும். அதன் பிறகு நீங்கள் நல்ல மனிதர்காளாக மாறிவிட முடியும். (அவ்வேளை) அவர்களுள் ஒருவர், 'யூஸுபைக் கொல்லாதீர்கள்; அவரை நீங்கள் ஏதாவது செய்தே தீர வேண்டும் என விரும்பினால் ஓர் ஆழமான கிணற்றில் போட்டு விடுங்கள்; (அவ்வழியால் செல்லும்) பயணிகள் யாராவது அவரை எடுத்துக் கொள்ளக் கூடும்' என ஆலோசனை கூறினார். (பிறகு தங்கள் தந்தையிடம் வந்த அவர்கள்,) 'எங்கள் தந்தையே, யூஸுஃபின் விடயத்தில் எங்கள் மீது நீங்கள் ஏன் நம்பிக்கை வைப்பதில்லை? நிச்சயமாக நாங்கள் அவருக்கு நல்லதையே விரும்புகின்றோம். நாளை அவரை எங்களோடு அனுப்பி வையுங்கள்; (காட்டில் எங்களுடன்) ஓடியாடி விளையாடட்டும். நிச்சயமாக நாங்கள் அவரைப் பாதுகாப்போம்' எனக் கூறினர். அதற்கு யஃகூப் கூறினார்: 'அவரை நீங்கள் அழைத்துச் செல்வது நிச்சயமாக என்னை கவலையில் ஆழ்த்தும். நீங்கள் அவரைக் கவனியாதிருக்கும் வேளை ஓநாய் பிடித்துத் தின்று விடுமோ என நான் அஞ்சுகிறேன்'. அதற்கவர்கள், 'நாங்கள் பலமான கூட்டமாக இருந்தும் அவரை*

*ஓநாய் சாப்பிட்டு விடுமாயின் நிச்சயமாக நாம் நஷ்டவாளிகளே!' எனக் கூறினர். பின்னர் அவர்கள் அவரை அழைத்துச் சென்று ஆழ்ந்த கிணற்றில் தள்ளி விட ஒருமித்து முடிவு செய்த போது, 'அவர்களது இச்செயல் பற்றி (ஒரு நாள்) அவர்களே உணராதிருக் கும் போது நீர் எடுத்துக் கூறுவீர்' என நாம் அவருக்கு வஹி அறிவித்தோம்''. (12: 7-15)*

ஆக நல்ல ஷூறாவை நல்ல எண்ணமும் பண்பட்ட நடத்தை யும் கொண்ட நன்மக்களே மேற்கொள்ள முடியும். இச்செயற் பாட்டுக்கு ஊட்டம் அளித்து, பலப்படுத்தி, பாதுகாப்பு வழங்கக் கூடிய ஒரு சமூக-கலாசார சூழமைவு கிட்டும் அளவுக்கேற்பவே அது வெற்றி பெறவும், விளைவு தரவும், பலமடையவும், தொடர்ந்து செல்லவும் முடியும். ஷூறாவை நிலை நாட்டுவது முக்கியமானதொரு விடயம்தான். ஆனால் அது தொடர்ந்து நடைபெறுவதும், அதன் உண்மையான நோக்கம் நிறைவேறுவதும் அதனை விட முக்கியமானது.

ஷூறா செயற்பாடு -அது போன்றே- சுதந்திரமான சூழலில்தான் வெற்றியடையவும் தொடர்ந்து நிகழவும் முடியும். மனச்சாட்சியின் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் முதலிய அனைத்தும் அங்கு காணப்பட வேண்டும்.

சுதந்திரமான சூழலில்தான் மனிதர்கள் சுதந்திரமாக சிந்திப்பர்; அச்சமோ தளைகளோ மனத் தடையோ, எச்சரிக்கை உணர்வோ இன்றி கருத்துக் கூறுவர். இந்த அனைத்தும் முதல் நிலையில் தேவையுடையோராய் இருப்போர் ஷூறா செயற்பாட்டில் ஈடுபடு பவர்களே.

உண்மையான சுதந்திரம் இன்றி ஷூறா செயற்பாடு முழுமை பெற முடியாது; முழுமை பெற்றாலும் தொடர்ந்து நிலைபெற முடியாது. தொடர்ந்து நிகழ்ந்தாலும் அது அதுவாக இருக்காது. வெறும் பெயர்களும் வடிவங்களும் உத்தியோக பூர்வ நிகழ்வுகளும் மட்டுமே அங்கு எஞ்சியிருக்கும்!

ஆனால் சுதந்திரமானதொரு சூழலில், -ஆலோசனை சபைகளில் அங்கம் வகிக்கா விட்டாலும்- அனைவரும் ஷூறா செயற்பாட்டில் பங்கு கொள்வர். ஏனெனில் ஷூறா என்பது இதோபதேசம் (நஸீஹா) வழங்கும் செயல். அது ''அல்லாஹ்வுக்காகவும், அவனது வேதத்துக்காகவும், அவனது தூதருக்காகவும், முஸ்லிம் தலைவர்களுக்காகவும், பொதுமக்களுக்காகவும்'' வழங்கப்படுவது அவசியம். ஜரீர் (றழி) பின்வருமாறு கூறுகிறார்: ''தொழுகையை நிலைநாட்டுவதாகவும், ஸகாத் கொடுப்பதாகவும், அனைத்து முஸ்லிம்களுக்கும் இதோபதேசம் வழங்குவதாகவும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு நான் விசுவாசப் பிரமாணம் வழங்கினேன்''.

இங்குதான் அறிஞர்கள், புலமையாளர்கள், சிந்தனையாளர்கள், கருத்துரைப்பவர்கள் ஆகியோரது தனிச்சிறப்பான பங்களிப்பு முன்னிலை பெறுகிறது. இவர்கள் அனைவரும் -வேண்டப்பட்டாலும் வேண்டப்படா விட்டாலும்- தங்களது ஆலோசனைகளையும் உபதேசங்களையும் வழங்க வேண்டியவர்கள். இவர்கள் ஷூறா செயற்பாட்டில் உத்தியோகபூர்வமாக ஈடுபடுவோருக்கு உதவியாகவும் பக்க பலமாகவும் அமையக் கூடியவர்கள். அந்த வகையில் அனைத்து அதிகாரிகளுக்கும் பொறுப்பாளர்களுக்கும் பொது மக்களுக்கும் சமூகத்துக்கும் மறைமுகமான -உத்தியோகப் பற்றற்ற- ஆலோசகர்களாக இவர்கள் இருப்பர்.

இந்த ஆய்வையும் அதன் முடிவுரையையும் இஸ்லாத்தின் முதல் தலைமுறையிலிருந்து பெறப்பட்ட மாதிரி ஒன்றுடன் நிறைவு செய்கிறேன். ஆலோசனைச் செயற்பாட்டிற்கும், ஆலோசனை கேட்பவருக்குமான உதாரணம் அது. முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும், அவர்களுக்கு இதய சுத்தியுடன் உபதேசம் புரியும் அறிஞர்களுக்குமான உதாரணம் அது. கலீஃபா உமருடனும் அவரது ஆலோசனை சபை அங்கத்தவர் ஒருவருடனும் அந்த சம்பவம் தொடர்புபடுகிறது. இப்னு அப்பாஸ் அதனை பின்வருமாறு விபரிக்கிறார்:

ஒரு முறை உயைனா பின் ஹிஸ்ன் பின் ஹுதைஃபா என்பவர் தனது சகோதரனின் மகனான, அல்-ஹுர் பின் கைஸிடம் வந்து தங்கியிருந்தார். அல்-ஹுர் பின் கைஸ் உமருக்கு நெருக்கமான வர்களுள் ஒருவராக இருந்தார். முதியவர்களும் இளைஞர்களும் அடங்கிய அறிஞர் குழாமே (அல்-குர்ராஉ) உமரின் ஆலோசனை சபை உறுப்பினர்களாக இருந்தனர். எனவே உயைனா தனது சகோதரரின் மகனிடம், ''என் சகோதரனின் மகனே! உனக்கு இந்த ஆட்சியாளரிடம் நல்ல கௌரவம் இருக்கிறது. எனவே அவரைப் பார்ப்பதற்கு எனக்கு அனுமதி பெற்றுத் தா!'' என கேட்டுக் கொண்டார். அதற்கவர் ''உமக்காக நான் அனுமதி கேட்கிறேன்'' எனப் பதிலளித்தார். பின்னர் அல்-ஹுர் உயைனாவுக்காக அனுமதி கேட்டபோது உமரும் அனுமதி வழங்கினார். அதன் பிரகாரம் உமரின் சபையில் நுழைந்த உயைனா, ''ஃகத்தாபின் மகனே! அல்லாஹ்வின் மீதாணையாக! நீர் எம்முடன் தாராளத் தன்மையுடன் நடந்து கொள்ளவில்லை; எமக்கு மத்தியில் நீதமாக ஆட்சி புரியவும் இல்லை!'' எனக் கூறினார். இதனைக் கேட்டு வெகுண் டெழுந்த உமர், உயைனாவை அடிக்கப் பார்த்தார். அப்போது அல்-ஹுர் இவ்வாறு கூறினார்: ''அமீருல் முஃமினீனே! நிச்சயமாக அல்லாஹ் தனது நபியை நோக்கி இப்படிக் கூறுகிறான்: ''நீர் மன்னிப்பையே எடுத்துக் கொள்வீராக; நன்மையை எடுத்துக் கொள்வீராக; அறிவிலிகளைப் புறக்கணித்து விடுவீராக!'' நிச்சய மாக இந்த மனிதர் ஒரு அறிவிலியே''.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த இறை வசனத்தைக் கேட்ட உமர் அதற்கப்பால் நகரவில்லை. அல்லாஹ்வின் வேதத்தை முழுமையாக மதித்து நடப்பவராக அவர் இருந்தார்.

நமது பேசுபொருள் தொடர்பாக இந்த நிகழ்வு ஏராளமான பாடங்களையும் படிப்பினைகளையும் சுமந்திருக்கிறது:

1. அறிவு, கருணை கலந்த பொறுமை, அதிகாரிகளுக்கு இதோபதேசம் வழங்குதல் முதலியன ஒரு சிறந்த ஆலோச கரின் பண்புகளாகும்.

2. ஆட்சியாளருக்கு ஆலோசகராகவும் நெருக்கமானவராகவும் இருப்போர் மக்களுக்கு உதவி புரிபவர்களாக இருக்க வேண் டும். மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துபவர்களாக அவர்கள் இருக்க வேண்டுமே தவிர தொடர்பைத் துண்டிப்பவர்களாக இருக்கக் கூடாது.

3. பொதுமக்களது தவறுகளுக்கும் பிழையான அணுகு முறை களுக்கும் நியாயம் காண்பவராகவும் நியாயமாக அவற் றைத் தீர்த்து வைப்பவராகவும் ஆலோசகர் இருக்கும் அதே வேளை, ஆட்சியாளர் வெகுண்டெழுந்து அவர்களைத் தண்டித்து விடாமல் மன்னித்து விடும்படி தூண்ட வேண்டும்.

4. மன்னிப்பும் பழிவாங்காமையும் பொதுமக்கள் தங்கள் முறையீடுகளையும் அவதானங்களையும் விமர்சனங்களை யும் உபதேசங்களையும் அச்சமின்றி முன்வைக்கத் தூண்டு தலளிக்கும். மட்டுமின்றி, தகாத செயற்பாடு நல்ல செயற் பாடு மூலமாக எதிர் கொள்ளப்படும் போது வலிமை குறைந்து அகன்று விடும்.

5. *''நிச்சயமாக, நல்லவை கெட்டவற்றைப் போக்கி விடும்''. (11: 114)* மக்களை -சிலபோது நயமற்ற முறையிலேனும்- சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் நடந்து கொள்ளத் தூண்டு வது, உளநோயும் நயவஞ்சகத் தனமும் கொண்டி ருக்கத் தூண்டுவதை விட சிறந்தது.

6. உமர் (றழி) தனக்கென ஆலோசனை சபைகளைக் கொண் டிருந்தார். அவற்றில் அறிவார்ந்த முதியவர்களும் இளைஞர் களும் அங்கத்தவர்களாக இருந்தனர்.

7. உமர்(றழி) இதய சுத்தியுடன் உபதேசிக்கக்கூடியவர்களையே தன்னைச் சூழ நெருக்கமாக வைத்திருந்தார்.

8. ஆட்சியாளர் தனது ஆலோசகர்களதும் உபதேசகர்களதும் இதோபதேசங்களை எவ்விதத் தயக்கமோ பெருமை

உணர்வோ இன்றி ஏற்றுக் கொள்வார்; குறிப்பாக அவை அல்லாஹ்வுக்காக... அல்லாஹ்வின் வேதத்திலிருந்தும் வரும்போது!

அல்லாஹ் அவர்கள் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக! அவர்களது அறிவாலும் செயலாலும் அணுகு முறையாலும் நமக்குப் பயனளிப்பானாக !

ஆமீன்!

புகழனைத்தும் அகிலங்களின் ரட்சகனான அல்லாஹ்வுக்கே!



மொரோக்கோவின் முஹம்மத் அல் காமிஸ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் ஈட்டிக் கொண்டுள்ள ஷெய்க் அஹ்மத் அல் றைஸூனி அவர்கள் அல் தஜ்தீத் பத்திரிகையின் ஆசிரியர்; மொரோக்கோ ஜம்இய்யத்துல் உலமா நிறுவனத்தின் உறுப்பினர். அல் மகாஸித் குறித்து பல நூல்களை அறபு மொழியில் வெளியிட்டுள்ள அன்னார், முஹம்மத் அல் காமிஸ் பல்கலைக்கழகத்தில் உஸூல் அல் பிக்ஹ், மகாஸித் அல் ஷரீஆ துறைகளின் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றியத்தின் (International Union of Muslim Scholars - IUMS) தலைவர்.

ISBN 978-955-8398-25-8

*Fuzin Texts*
23/3 Market Road,
Dharga Town - 12090,
Sri Lanka.

International Institute of Islamic Thought